வெளியீடு 6-6-1992 issued 6-6-1992

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, அக்டோபர் 3, 1991 - தொகுதி 13 - எண்: 1
Thursday the 3rd October, 1991 - Volume 13 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

422

# தமிழ்நாடு சட்ட மன்றம்
# பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

தொகுதி-13 எண்-1

3.10.1981

~~வெளியீடு-6.6.1992~~

V2 11,31 N91
N91.13.1
11607

161607

## உள்ளடக்கம்.

3—10—1991

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் vii-x
Personnel of the Government of Tamil nadu xi-xii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் xiv-xvi

தமிழ்நாடு சட்டமன்ற பேரவைப் உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. வினாக்கள் - விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 2–36

2. கவன ஈர்ப்பு—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் மேற்கு ஆரணி வட்டார கிளையின் தமிழ்நாடு கூட்டணி ஆசிரியர்கள் கோரிக்கையின் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து. 36–40

(ஆ) 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் நாள் சென்னை டி.பி. சத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் ஒரு வீட்டின் பகுதிகள் இடிந்து போனது மற்றும் மற்ற குடியிருப்புகள் சீர்கேடான நிலையில் உள்ளதை சீர்செய்வது குறித்து. 40–42

3. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு. 42–43

4. அறிவிப்புகள்—

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ.) 43

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ.) 44

பக்கங்கள்

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ.) — 45

(ஈ) விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ.) — 46

(உ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவு, 1991. (ஆ.இ.) — 47

(ஊ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ.) — 105

(எ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ.) — 145

5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 43–44

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 44-45

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 45–46

(ஈ) விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. — 46–47

(உ) மதுவிலக்கு (திருத்த), சட்டமுன்வடிவு, 1991. — 47–48

(ஊ) பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 48

(எ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. — 49



பக்கங்கள்

(ஏ) டாக்டர் எம்.ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 49–50

(ஐ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 50–51

(ஒ) நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 51

(ஓ) வக்பு (இசுலாமிய அறக்கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமன) சட்டமுன்வடிவு, 1991. — 52

அரசினர் தீர்மானம்—

பேரவை விதி 33-ஐத் தளர்த்துதல். — 52–53

அரசினர் தனித் தீர்மானம்—

இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவையும் அதற்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளையும் திரும்பப் பெறவும் இந்திய நாட்டின் கடற்கரை எல்லைப் பகுதியுடன் அவைகளை மீண்டும் சேர்க்கவும் எல்லாவிதமான உடனடி நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மைய அரசு மேற்கொள்ள வேண்டுமெனக் கோருதல். — 53–103

1. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா — 53–57, 98–103
2. திரு. சோ. பாலகிருஷ்ணன் — 57–61
3. திரு. மு. தென்னவன் — 61–65
4. டாக்டர் தே. குமாரதாஸ் — 65–71
5. திரு. ஜி. பழனிசாமி — 71–73
6. திரு. எஸ். ஆண்டித் தேவர் — 73–74
7. திரு. நா. சா. பழனிசாமி — 74–76
8. திரு. ச. இராமச்சந்திரன் — 76–83

| | பக்கங்கள் |
|---|---|
| *9. பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) | 83-87 |
| 10. திரு. செ. கு. தமிழரசன் | 87-92 |
| 11. திரு. வே. தம்புசாமி | 45-94 |
| 12. திரு எஸ். வி. சண்முகம் | 95-97 |

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

| | |
|---|---|
| (அ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. | 104-129 |
| 1. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 104-107 |
| 2. டாக்டர் தே. குமாரதாஸ் | 107-108 |
| 3. திரு. ச. இராமச்சந்திரன் | 113-116 |
| 4. திரு. மா. சுந்தரதாஸ் | 116-120 |
| 5. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா | 98-103, 120-128 |
| (ஆ) ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. | 130-144 |
| 1. திரு. எஸ். ஆர். ஜெயராமன் | 130-131 |
| 2. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் | 131-133 |
| 3. திரு. எஸ். எஸ். ராமசுப்பு | 133-135 |
| 4. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா | 136-139-141 |
| (இ) நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. | 141-145 |
| 1. திரு. சி. ஞானசேகரன் | 142 |
| 2. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி | 143-144 |

| | பக்கங்கள் |
|---|---|
| (ஈ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. | 145-195 |
| *1. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 144-149, 180-199 |
| 2. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் | 149-161 |
| 3. திரு. ஜி. பழனிசாமி | 162-171 |
| 4. திரு. ஜி. விசுவநாதன் | 171-174 |
| 5. திரு. நா. சா. பழனிசாமி | 174-177 |
| 6. திரு. வே. தம்புசாமி | 177-179 |
| (உ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. | |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 195-197 |
| (ஊ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. | |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 198-199 |
| (எ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுன்வடிவு, 1991. | 200-225 |
| 1. மாண்புமிகு திரு. க. இராசாராம் | 200,215-225 |
| 2. திரு. கி. செல்வராஜ் | 200-202 |
| 3. திரு. ஜி. பழனிசாமி | 203 |
| 4. திரு. வே. தம்புசாமி | 204-207 |
| *5. திரு. ஆர். சிங்காரம் | 207-209 |
| 6. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 209-215 |

பக்கங்கள்

(ஏ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 227-230

1. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் — 226,227-229
2. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் — 226-227

(ஐ) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. — 230-232

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் — 230,231

(ஒ) வேளாண் விளை பொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991. — 232-239

*1. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் — 232,236-237
2. திரு. வி. தண்டாயுதபாணி. — 233-235

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 239-240



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்-திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், வணிக வரிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம்.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்— அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

| | |
|---|---|
| 4. வருவாய்த் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளி நாடுவாழ் இந்தியர்கள், அகதி கள், வெளியேற்றப்பட்டவர் கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு. |
| 5. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளை யாட்டு மற்றும் இளைஞர் நலம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல் பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. உணவு-கூட்டுறவுத் .. துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலை வாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள். |
| 7. தொழிலாளர் நலத் .. துறை அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் கெ. அரங்க நாயகம் : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப் புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்து சாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணு வியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |



| | |
|---|---|
| 9. போக்குவரத்துத் .. துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. ஏ. செங் கோட்டையன் : போக்கு வரத்து, அரசுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக் கூர்திகள் சட்டம், துறை முகங்கள். |
| 10. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: கைத்தறி மற்றும் நெச வாலைகள். |
| 11. பொதுப்பணித் .. துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப் பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட் பட), நெடுஞ்சாலைகள், மின் சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி. |
| 12. உள்ளாட்சித் .. துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. அழகு திரு நாவுக்கரசு : நகராட்சி நிர் வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப் புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 13. வேளாண்மைத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ் ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை மற்றும் சர்க்கரை. |
| 14. வீட்டு வசதி நகர்ப்.. புற வளர்ச்சித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம், நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |
| 15. ஊரகத் தொழில் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில் கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |

16. சமூக நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள் சீர்திருத்த நிர்வாகம்.

• ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

18. வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், மீனளம், வனங்கள் மற்றும் சின்கோனா.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU—THIRU BHISHMA NARAIN SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. **The Hon. Selvi J. JAYALALITHA :** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Commercial Taxes, Prohibition and Excise, Molasses, Backward Classes, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals.

2. Minister for Finance .. **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN:** Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. **The Hon. Thiru. K. A. KRISHNASAMY :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt relief including Legislation on Money lending , Chits and Registration of Companies.

4. Minister for Revenue .. **The Hon. Thiru S. D. SOMASUNDARAM :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan and Passports.

5. Minister for Education .. **The Hon. Thiru ERAAMA VEERAPPAN:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Tamil Development and Tamil Culture, Archaeology and Welfare of Ex-Servicemen.

6. Minister for Food and Co-operation .. **The Hon. Thiru K. RAJARAM :** Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

7. Minister for Labour .. **The Hon. Dr. C. ARANGANAYAGAM :** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

8. Minister for Health .. **The Hon. Thiru S. MUTHUSAMY :** Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control.

9. Minister for Transport .. **The Hon. Thiru K. A. SENGOTTAYAN :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. Minister for Handlooms and Textiles. .. **The Hon. Thiru E. MADHUSUDHANAN :** Handlooms and Textiles.

11. Minister for Public Works. .. **The Hon. Thiru S. KANNAPPAN :** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development.

12. Minister for Local Administration. .. **The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural indebtedness.

13. Minister for Agriculture. .. **The Hon. Thiru KU. PA. KRISHNAN :** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture and Sugar.

14. Minister for Housing and Urban Development .. **The Hon. Thiru T. M. SELVAGANAPATHI :** Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning-Urban Development, Madras Metropolitan Development Authority and Urban and Rural Water Supply.



15. Minister for Rural Industries. .. **The Hon. Thiru MOHAMED ASIF :** Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

16. Minister for Social Welfare. .. **The Hon. Tmt. R. INDIRA KUMARI :** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. .. **The Hon. Thiru M. ANANDAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

18. Minister for Forests and Fisheries. .. **The Hon. Thiru D. JAYAKUMAR :** Animal Husbandry, Milk, Dairy Development, Fisheries, Forests and Cinchona.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. அர்ச்சுனன்
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திருமதி ரமணி நல்லதம்பி
4. டாக்டர் தே. குமாரதாஸ்

### செயலாளர்

திரு. செ. க. ஜானகிராமன்



## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே. .. பி.ஏ., பி.எல்., | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ. .. பி.ஏ., பி.ஜி.எல்., | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ. .. பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர். (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ. .. பி.காம்., | துணைச் செயலாளர். (பதிப்பாளர்). |
| சந்திரசேகரன், திரு. ஆர். .. பி.ஏ., | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி. .. பி.எஸ்.சி., பி.எல்., | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ... பி.எல்.டி.பி. & பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. எஸ். .. பி.எஸ்.சி., | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சி. .. பி.காம்., | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ. . பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி. .. .. பி.எஸ்.சி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி, வி. நா. .. .. பி.ஏ., | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே. .. .. பி.எஸ்.சி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| சாயிநாதன், திரு. கி. .. .. பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி .. | சார்புச் செயலாளர். |

| | | |
|---|---|---|
| 17. | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.). |
| 18. | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 19. | இந்திர குமாரி, திருமதி, இரா. | நாட்ராம்பள்ளி. |
| 20. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர். |
| 21. | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம். |
| 22. | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 23. | இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம். |
| 24. | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை. |
| 26. | இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம். |
| 27. | இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | இளையாங்குடி. |
| 28. | இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | கம்பம். |
| 29. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ் எஸ். ஆர். | சாத்தூர். |
| 30. | இராமச்சந்திரன், திரு ச. | பண்ருட்டி. |
| 31 | இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். | செஞ்சி. |
| 32 | இராமநாதன், திரு இராம. | கும்பகோணம். |



| | | |
|---|---|---|
| 33. | இராஜமன்னார், திரு. ரு.சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. | இராஜன்பாபு (எ) தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி. |
| 35. | இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 36. | இராமவீரப்பன், திரு. | காங்கேயம். |
| 37. | இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.). |
| 38. | இளம் வழுதி, திரு. | எழும்பூர் (செ. வ.). |
| 39. | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.). |
| 40. | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 41. | ஏகாம்பர ரெட்டி, திரு. ஏ. | பள்ளிப்பட்டு. |
| 42. | கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர். |
| 43. | கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை. |
| 44. | கந்தசாமி, திரு. கா. | தலைவாசல் (செ.வ.). |
| 45. | கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.). |
| 46. | கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு. |
| 47. | கலைச்செல்வி, திருமதி, கே.எம். | காட்பாடி. |
| 48. | கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி. |
| 49. | கற்பகம் இளங்கோ, பேராசிரியர் திருமதி. | காரைக்குடி. |
| 50. | கனகவல்லி, திருமதி, என். சி. | விளாத்திகுளம். |
| 51. | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர். |
| 52. | காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர். |
| 53. | காளன், திரு. ஜி. | வில்லிவாக்கம். |
| 54. | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.). |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி<br>பி.எஸ்.ஸ, பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| முடிகோபதி, திரு. நா. .. ....<br>எம்.ஏ., | சார்புச் செயலாளர். |
| முனீர் உன்னிசா, திருமதி .. ..<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி. .. ..<br>டி.ஆர்.எஸ்., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி. ..<br>பி.ஏ., | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை. ..<br>எம்.ஏ., | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ. ..<br>பி.ஏ., | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி.சி. .. .. | தலைமை நிருபர். |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி);

### பெயர்களும் தொகுதிகளும்.

| | |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். .. | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பி. .. | அரூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை. |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். .. | மதுரை கிழக்கு. |
| 5. அம்மாமுத்து பிள்ளை, ..<br>டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. .. .. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. .. .. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம்<br>(செ.வ.). |
| 12. அன்பழகன், திரு. எஸ். .. | நாமக்கல் (செ.வ.). |
| 13. ஆசைமணி. திரு. எஸ். .. | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. மெ .. | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச.. | திருச்சிராப்பள்ளி-1. |

53—341—C

| | | |
|---|---|---|
| 55. | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு. |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம். |
| 57. | கிருஷ்ணன், திரு. கு. ப. .. | ஸ்ரீரங்கம். |
| 58. | கிருஷ்ணன், திரு. சி. .. .. | ஓமலூர். |
| 59. | குப்பன், திரு. க. ... .. | திருவொற்றியூர். |
| 60. | குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம். |
| 61. | குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர். |
| 62. | குழந்தைவேலு, திரு. சி. .. | குளத்தூர் (செ.வ.). |
| 63. | கோடிமாரி, திரு. ஆர். .. | நாகப்பட்டினம். |
| 64. | கோபால கிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 65. | கோபால், திரு. க. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 66. | கோவிந்தராஜலு, திரு. மா. | ரிஷிவந்தியம். |
| 67. | சக்குபாய், திருமதி, ஆர். .. | கும்மிடிப்பூண்டி. |
| 68. | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர். |
| 69. | சஞ்சய் ராமசாமி, திரு. .. | விருதுநகர். |
| 70. | சண்முகநாதன், திரு. எஸ். .. | ஆலங்குடி. |
| 71. | சண்முகம், திரு. எஸ். வி. .. | மதுரை மேற்கு. |
| 72. | சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 73. | சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 74. | சம்பத், திரு. எ. .. .. | வாணியம்பாடி. |
| 75. | சரஸ்வதி, திருமதி, அ. தி. .. | சத்தியமங்கலம். |
| 76. | சரஸ்வதி, திருமதி, ப. .. | கபிலர்மலை. |



| | (1) | (2) |
|---|---|---|
| 78. | சாத்தையா, திரு. டி. .. | இராஜபாளையம் (செ.வ.). |
| 79. | சாவித்திரி அம்மாள் திருமதி, ஆர். | முகையூர். |
| 80. | சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி. |
| 81. | சிங்காரம், திரு. கே. .. | மொரப்பூர். |
| 82. | சிங்கை கோவிந்தராசு, திரு... | சிங்காநெல்லூர். |
| 83. | சியாமளா, திருமதி. ரெ. .. | கோவில்பட்டி. |
| 84. | சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி. |
| 85. | சிவபதி, திரு. என். ஆர். .. | தொட்டியம். |
| 86. | சின்னசாமி, திரு. மா. .. | கரூர். |
| 87. | சின்னசாமி, திரு. கா. .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88. | சின்னசாமி, திரு. வி. கே. .. | பவானிசாகர். |
| 89. | சின்னப்பன், திரு. கே. கே .. | ஜெயங்கொண்டம் |
| 90. | சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. .. | அவினாசி (செ.வ.) |
| 91. | சீனிவாசன், திரு. ஆ. கு. .. | பெரணமல்லூர். |
| 92. | சீனிவாசன், திரு. கு. .. | மன்னார்குடி. |
| 93. | சுதர்சனம், திரு. டி. .. | பூந்தமல்லி. |
| 94. | சுந்தரசாமி, திரு. எம். .. | கலசப்பாக்கம். |
| 95. | சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு. |
| 96. | சுந்தரம், திரு. எம். கே. .. | தண்டராம்பட்டு. |
| 97. | சுந்தரராஜ், டாக்டர் ச. .. | பரமக்குடி (செ.வ.). |
| 98. | சுந்தரவேல், திரு. ஏ. கே. சி... | திருப்பத்தூர். |

99. சுந்தராம்பாள், திருமதி, செ. — மேட்டூர்.
100. சுப்பிரமணியன், திரு. வ. மு. — மானாமதுரை (செ.வ.).
101. சுப்பிரமணியன், திரு. வி. என். — பெருந்துறை.
102. சுப்பிரமணியன், திரு. வீ. — கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. பழனி (செ.வ.).
104. சுலோசனா, செல்வி எல். .. மேட்டுப்பாளையம்
105. சுவாமிநாதன், திரு. சி. .. புதுக்கோட்டை.
106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. கோபிசெட்டிபாளையம்.
107. செல்லக்குமார், டாக்டர் அ. — அண்ணா நகர்.
108. செல்லசாமி, திரு. ஏ. டி... — ஒட்டன்சத்திரம்.
109. செல்லத்துரை, திரு. ஆ. .. திருச்செந்தூர்.
110. செல்வகணபதி, திரு டி. எம். — திருச்செங்கோடு.
111. செல்வராசன், திரு. அ. .. துறைமுகம்.
112. செல்வராஜ், திரு. கே. .. கோயம்புத்தூர் மேற்கு.
113. செழியன், திரு. தா. .. பெரம்பலூர் (செ.வ.).
114. சேகர், டாக்டர் எம். பி. .. பெரம்பூர் (செ.வ.).
115. சேகர், திரு. எம். ஜி .. பாலக்கோடு
116. சொக்கலிங்கம், திரு. பி. .. மதுராந்தகம்.
117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. — தஞ்சாவூர்.
118. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்.
119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்.
120. தங்கமுத்து, திரு. கு. .. திருவோணம்.
121. தங்கராஜ், திரு. ஆர். .. ஆண்டிமடம்.



122. தங்கவேல், திரு. எம். .. முசிறி.
123. தண்டாயுதபாணி, திரு. வி. — குடியாத்தம்.
124. தமிழரசன், திரு. செ. கு. .. வந்தவாசி (செ.வ.).
125. தமிழரசு, திரு. இவ. .. ஆத்தூர்.
126. தம்புசாமி, திரு. வே. .. திருவாரூர் (செ.வ.).
127. தருமலிங்கம், திரு. கி. .. அணைக்கட்டு.
128. தர்மலிங்கம், திரு. பே. .. பாளையங்கோட்டை.
129. தவசி, திரு. கே. .. .. ஆண்டிப்பட்டி.
130. தனபால், திரு. ம. .. திருப்போரூர் (செ.வ.).
131. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்.
132. தாமோதரன், திரு. சி. .. நெல்லிக்குப்பம்.
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி.
134. துரை, திரு. எஸ். எம். .. ஆத்தூர்.
135. துரைமுருகன், திரு. கு. சு. — பல்லடம்.
136. துரை ராமசாமி, திரு. .. வெள்ளக்கோவில்.
137. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி.
138. தென்னவன், திரு. மு. .. இராமநாதபுரம்.
139. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு.
140. தேனி பன்னீர்செல்வம், திரு. — போடிநாயக்கனூர்
141. நடேசன், திரு. இரா. .. திருவட்டாறு.
142. நடேசன், திரு. மு. .. சேலம்-2.
143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. — நாங்குநேரி.
144. நாகூர் மீரான், திரு. எஸ் .. கடையநல்லூர்
145. நிர்மலா, செல்வி பி. .. திண்டுக்கல்.

| | | |
|---|---|---|
| 146. | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.). |
| 148. | பட்டாபிராமன், திரு. கா.ப. | காஞ்சிபுரம். |
| 149. | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150. | பரமசிவம், திரு. ஆர். பி. .. | சின்னசேலம். |
| 151. | பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான். |
| 152. | பலராமன், திரு. உ. .. | பூங்கா நகர். |
| 153. | பழனிசாமி, திரு. இரா. .. | தாரமங்கலம். |
| 154. | பழனிசாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 155. | பழனிசாமி, திரு. நா. சா. | இணைத்துக்கடவு. |
| 156. | பழனிசாமி, திரு. வெ. .. | திருப்பூர். |
| 157. | பழனிசாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. | பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. | பன்னீர்செல்வம், திரு. சா. .. | திண்டிவனம். |
| 161. | பன்னீர்செல்வம், திரு. ஜெ... | திருநாவலூர். |
| 162. | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |
| 163. | பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை. |
| 164. | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. | பாலசுப்பிரமணியன், திரு. கே. | பட்டுக்கோட்டை. |



| | | |
|---|---|---|
| 168. | பாலன், திரு. எம். கே. .. | சைதாப்பேட்டை. |
| 169. | பாலையா, திரு. ஆ. .. | குளச்சல். |
| 170. | பியாட்ரிக்ஸ்டிசோசா டாக்டர்(திருமதி) | நியமனம் |
| 171. | பீட்டர் அல்போன்ஸ், திரு. சுஸ். | தென்காசி. |
| 172. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. .. | சேரன்மகாதேவி. |
| 173. | புரட்சிமணி, திரு. ச. .. | மங்களூர் (செ.வ.). |
| 174. | புருஷோத்தமன், டாக்டர் வெ... | பெண்ணாகரம். |
| 175. | பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார். |
| 176. | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 177. | பெரிய வீரன், திரு. எம். .. | பெரியகுளம். |
| 178. | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு.(ம.ப.). |
| 179. | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 180. | பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி. |
| 181. | பொன்னுசாமி, திரு. பெ. .. | தருமபுரி |
| 182. | பொன்னுவேலு, திரு. எ. தா. | வரகூர் (செ.வ.). |
| 183. | போளூர் வரதன், திரு. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. | மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. .. | அரியலூர். |
| 185. | மணிமேகலை, திருமதி. வி.ஜீ. | அருப்புக்கோட்டை. |
| 186. | மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை. |
| 187. | மதுசூதனன், திரு. இ. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. | மரியமுல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி. |

| | | |
|---|---|---|
| 189. | மல்லிகா, செல்வி கோ. .. | புவனகிரி. |
| 190. | மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர். |
| 191. | மாணிக்கம், திரு. சி. .. | ஈரோடு. |
| 192. | மாலா, டாக்டர் (செல்வி) ஜி. ஆர். .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 193. | முகமது ஆசிப், திரு. .. | திருவல்லிக்கேணி. |
| 194. | முத்துசாமி, திரு. சு. .. | பவானி. |
| 195. | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 196. | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை. |
| 197. | முருகையா பாண்டியன், திரு. ஆர். .. | அம்பாசமுத்திரம். |
| 198. | முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர். |
| 199. | முன்வெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி. |
| 200. | முனுசாமி, திரு. கா. பூ. .. | காவேரிப்பட்டினம். |
| 201. | மூர்த்தி, திரு. து. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 202. | மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில். |
| 203. | ரகுபதி, திரு. செ. .. | திருமயம். |
| 204. | ரங்கநாதன், திரு. ப. .. | புரசைவாக்கம். |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர். |
| 206. | ரத்தினவேல், திரு. த. .. | திருவெறும்பூர். |
| 207. | ரமணி நல்லதம்பி, திருமதி. | ராதாபுரம். |
| 208. | ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. | தூத்துக்குடி. |
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. .. | பொன்னேரி. (செ.வ.) |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. .. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. | ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம். |



| | | |
|---|---|---|
| 212. | ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 213. | ராஜு, திரு. கே. ஆர். .. | கூடலூர். |
| 214. | ராஜு, திரு. கே. பி. .. | பேரூர். |
| 215. | ராஜேந்திரன் திரு. என். ஆர். | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 216. | லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 217. | லாரன்ஸ், திரு. கு. .. | பத்மநாபபுரம். |
| 218. | லோகாம்பாள், திருமதி. ஜெ. | லால்குடி. |
| 219. | வரதராஜன், திரு. செ. து. .. | செங்கல்பட்டு. |
| 220. | விசுவநாதன், திரு. ஜி. .. | ஆற்காடு. |
| 221. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.). |
| 222. | வெங்கடராமரெட்டி, திரு. மு. | தளி. |
| 223. | வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். .. | கடலூர். |
| 224. | வேடியப்பன், திரு. தா. .. | போளூர். |
| 225. | வேணுகோபால், திரு. என்.ஜி. | ராணிப்பேட்டை. |
| 226. | வேலையா, திரு. டி. .. | திருநெல்வேலி. |
| 227. | ஜனார்த்தனன், திரு. தே. | விழுப்புரம். |
| 228. | ஜானகிராமன், திரு. கோ. .. | மேல்மலையனூர். |
| 229. | ஜீனத் ஷெர்புதீன், திருமதி. | சேப்பாக்கம். |
| 230. | ஜெயகுமார், திரு. எஸ். .. | தியாகராய நகர். |
| 231. | ஜெயகுமார், திரு. டி. .. | ராயபுரம். |
| 232. | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1. |

233. ஜெயலலிதா, செல்வி ஜெ. .. பர்கூர்.

234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர். .. ஆரணி.

235. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. வால்பாறை (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### 1991 அக்டோபர் 3, வியாழக்கிழமை

### புரட்டாசி 17, பிரஜோற்பத்தி - திருவள்ளுவர் ஆண்டு 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு ."

செயலுக்கு உரிய கருவியும் ஏற்ற காலமும் செய்யும் வகையும் செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லது நல்லரசு ஆகும்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள்.
வினா எண். 133 திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு
சட்டத்துறை அமைச்சர்.

133.— வழக்கறிஞர் நல்வாழ்வு நிதி.

*350—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா :

(அ) வழக்கறிஞர் நல்வாழ்வு நிதி என்று அரசு ஏற்
படுத்திய, வழக்கறிஞர்கள் இறந்தால் நிதி உதவி வழங்கும்
திட்டம் சரிவர இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் செம்மைப்படுத்தி, வழக்
கறிஞர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்துக்கு ஒரு இலட்சம்
ரூபாய் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1987 ஆம் ஆண்டு வழக்குரைஞர் நல்வாழ்வு
நிதிச் சட்டம் Advocate's Welfare Act கொண்டு வரப்பட்டது.
நிர்வாகக் காரணங்களின் அடிப்படையில் சட்டக் கருத்து
பரிசீலனை காரணமாக 16—7—1990 முதல் உறுப்பினர்
களைச் சேர்க்கும் பணி துவங்கி தொடர்ந்து நடைபெற்று
வருகிற இத்தருணத்தில் திட்டம் சரிவர இயங்கவில்லை என்பது
ஏற்புடையதல்ல.

(ஆ) வழக்குரைஞர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்
திற்கு ரூ. 1 இலட்சம் வழங்கும் திட்டம் பற்றிய கருத்துரு
அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வழக்கறிஞர் தொழில் இப்போது நசிந்து போய்,
இப்போது விலைவாசி ஏறினாலும் வழக்கறிஞர்களுடைய ஃபீஸ்,
ஏறுவதில்லை. போட்டா போட்டியின் காரணமாக ஃபீஸ்
குறைந்துகொண்டே போகிறது. மஃபசலில் இருக்கக்கூடிய
வழக்கறிஞர்கள் ஒரு நாளைக்கு முப்பது ரூபாய், நாற்பது



ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத அவல நிலை ஆங்காங்கே
இருந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் வழக்கறிஞர்கள்
நல நிதிச் சட்டம், 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டிருந்
தாலும், 16-7-1990 முதல் அமுலுக்கு வந்து ஆங்காங்கே உறுப்
பினர்களைச் சேர்க்கும் பணி தீவிரமாக நடந்துவருவதாக
அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக முதற்கண்
என் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின்படி
ரூ. 30,000 கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு
இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் வழக்கறிஞர்களுடைய
நிலையை உணர்ந்து ஆவன செய்வதாக அமையும். ஆகவே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்க
மறுபரிசீலனை செய்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது
மாதிரி அரசு இந்தத் திட்டத்தை அமல் செய்துள்ளது. குறிப்பாக
அக்டோபர் திங்கள் முதல் அரசு செலவில் ஒரு ரூபாய் பெறுமான
முள்ள 15 இலட்சம் முத்திரைகள் அரசு அச்சகத்தில் அச்சிடப்
பெற்று வழக்கறிஞர்கள் குழுமத்திற்கு, பார் கவுன்சில் ஆஃப்
தமிழ்நாடு மூலமாக ஆங்காங்கே, வேலூர் போன்ற பார்
கவுன்சில்களுக்கு அனுப்பியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்
சார்ந்துள்ள வேலூர் பார் கவுன்சில் மூலமாக எத்தனை
உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வேலூரிலே பார் அசோசியேஷன் ஒன்றும், அதுபோல
அட்வகேட் அசோசியேஷன் ஒன்றும், இரண்டு அசோசியேஷன்
கள் இருக்கின்றன. ஓரளவிற்கு இரண்டு அசோசியேஷனிலும்
கிட்டத்தட்ட இப்போது 200 வரையில் பதிவு செய்து கொண்டிருக்
கிறோம். கூடிய விரைவிலே முடித்துவிடுவோம். ஏற்கனவே
கடைசி தேதி முடிந்துவிட்டது என்று, 'எக்ஸ்டென்ஷன்' கேட்
டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் அட்வகேட் வெல்ஃபேர்
பண்டுக்காக ஒரு ரூபாய் வக்காலத்துக்கு என்று வசூலிக்கிறார்கள்.
அதை இரண்டு ரூபாயாக மாற்றி ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்க
......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நேரிடையாக ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்குப்
பதில் சொல்லிவிட்டு பிறகு நீங்கள் இன்னொரு கேள்வியைக்
கேட்கலாம். முதல் கேள்வியிலேயே அதிக நேரம் பேசினீர்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய வினாவிற்கு இணங்க நாங்கள் முழு முயற்சி எடுத்து உறுப்பினர் களைச் சேர்த்திருக்கிறோம், கூடிய வரையில் நாங்கள் இன்னும் முனைப்போடு செயல்படுவோம் என்று தெரிவித்துக்கொள்கி றேன். ஆகவே வழக்கறிஞர்கள் மீது பரிவு கொண்டு, எங்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், வழக்கறிஞர் என்ற முறையில் எங்களுக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்க கண்டிப்பாக அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய அந்த உணர்வுகளை மையமாக வைத்துத்தான் மாண்பு மிகு புரட்சித் தலைவியின் அரசு இன்றைக்கு அதே ' அட்வகேட் வெல்ஃபேர் ஆக்ட் '-டிலே இரண்டு திருத்தங்களைக் கொண்டுவர இருக்கிறது. ஒன்று, ஒரு ரூபாயை இரண்டு ரூபாயாக ஆக்குவது. தமிழகத்திலே இருக்கிற 25,000 வழக்கறிஞர்களையும் இதிலே உறுப்பினர்களாக ஆக்குவது என்ற திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அப்போது இந்த ஒரு இலட்சம் ரூபாய் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தொழிலுக்கு வரும் இளம் வழக்கறிஞர் களுக்கு அரசு உதவித் தொகை வழங்கும் கருத்துரு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துரு தற் போது அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும் கூறிய கருத்துக்களில் நான் மாறுபடுகிறேன். வழக்கறிஞர்கள் இறந்தால் இப்போது 10,000 ரூபாய் தருகிறார்கள். அந்தத் திட்டம் இப்போது அமலில் இருக் கிறது. அதை ஒரு இலட்சம் ரூபாயாக மாற்றிக் கொடுக்கப் படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். மேலும் இந்த க்ஷேமநல நிதிக்கு வக்காலத்து ஃபார்முக்கு ஒரு ரூபாய் வாங்குவதை இரண்டு ரூபாயாக உயர்த்தி



னால் அந்த க்ஷேமநல நிதிக்கு வாய்ப்பாக இருக்கும். எனவே அந்தத் தொகையையும் அதிகப்படுத்திக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். ஒரு ரூபாயை இரண்டு ரூபாயாக ஆக்குவ தற்கும்—25 ஆயிரம் வழக்கறிஞர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்—அனைவரையும் இந்தச் சட்டத்திற்கு உட்படுத்த வும் விரைவில் சட்டத் திருத்தத்தை இந்த அரசு கொண்டுவர இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெறும் வழக்கறிஞர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு குரூப் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவந்து அரசு உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து எதுவும் அரசின் கையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசுப்பிரமணியன்.

திரு. சு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பக்கத்து மாநிலங்களான கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஏற்கெனவே அமலில் இருக்கின்ற திட்டத்தை பயன்படுத்தி, நம்முடைய சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அமலுக்குக் கொண்டுவந்து இதுவரையிலே 5 ஆயிரம் ரூபாய் தான் அந்த நிதியிலிருந்து கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். 10 ஆயிரம் ரூபாய் என்று சொல்வது தவறு. 5 ஆயிரம் தான் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். கேரளா விலே, ஆந்திராவிலே 50 ஆயிரம் வரையிலே கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அதைப் பின்பற்றி நம்முடைய அரசு கொடுக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலேதான் வழக்கறிஞர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்

அதிலுள்ள குறைகளைப் போக்கி அதனை நிறைவான சட்டம் ஆக்குவதற்காக விரைவில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிற காலத்தில் நிச்சயமாக வழக்கறிஞர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு உண்டாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 134' டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

134— பெண்ணாகரத்தில் நீதிமன்றம்.

*1057. டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெண்ணாகரத்தில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒவ்வொரு வருவாய் வட்டந்தோறும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளது. பெண்ணாகரத்தில் ஒரு குற்ற வியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டமும் அச்செயற் குறிப்பில் அடங்கும்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எப்போது உயர்நீதி மன்றத்தினுடைய ஒப்புதல் கிடைக்கும் ? எந்த நிதி ஆண்டிலே இது வருவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன என்ற நிலையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி இருக்கிறோம். அவ்வப்போது அவர்களுக்கு நினைவுபடுத்தி இருக்கிறோம். துரிதப்படுத்தி விரைவிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோம்.



டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு 5 காவல் நிலையங்கள் உள்ளன. 2,000 வழக்குகள் அதிகமாக வருடத்திற்கு வருகின்ற நிலையில் உள்ளது. 36 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பாலக்கோடு செல்ல வேண்டி இருக்கிறது ; 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிருஷ்ண கிரிக்கு செல்ல வேண்டி இருக்கிறது ; 30 கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள தர்மபுரிக்கு செல்ல வேண்டி இருக்கிறது. இதனால் அர சுக்கு பண விரயமும், காவலர்களின் நேர விரையமும், அப்பாவிப் பொதுமக்களுக்கு பல்வேறு இடையூறுகளும் ஏற்படுகின்றன. இது மிகவும் பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியிலே காட்டு விரப்பன் மாயாவி அவர்களுடைய சந்தனக் கட்டை வழக்குகள் மற்றும் சிவில், கிரிமினல் வழக்குகள் மற்றும் கொள்ளை வழிப்பறி, கொலை வழக்குகள் மற்றும் கள்ளச்சாராய வழக்குகள் அதிகமாக நடைபெறுகின்ற இந்தத் தொகுதியிலே அவசியம் ஒரு கோர்ட் தேவைப்படுகின்ற காரணத்தினால் அரசு துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அரசு தாலுகா தோறும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து ஒரு பாலிஸ் டெசிஷன் எடுத்து இருக்கிறது. அதன்படி ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம்— அதாவது இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் இருக்க வேண்டுமென்று கொள்கை அடிப்படையில் அங்கே அதைக் கொணர அரசு பரிசீலிக்கும் என்ற உறுதியை அளிக்கிறேன். அதன் அடிப்படையில் ஒவ்வொரு வட்டந்தோறும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க கருத்துருவை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட் டிருக்கிறார். இது குறித்து கருத்துரு சென்னை உயர்நீதிமன்றத் திடமிருந்து வந்த பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலனை செய்து தக்கன செய்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரத்திற்கு ஒருமுறை என்ற விதத்தில் பெண்ணாகரத் தில் குற்றவியல் அமரும் நீதிமன்றம் ஒன்று கூடுகிறது. அதனை வாரத்திற்கு இரண்டு நாட்கள் என்ற முறையில் கொண்டுவர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனை பரிசீலிக்கப்படும்.

[1991 அக்டோபர் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 135, திரு. இரா. நடேசன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

135— **திருவட்டாறில் நடுவர் நீதிமன்றம்.**

*1407. திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறில் ஒரு நடுவர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென பொதுமக்களிடமிருந்தோ, வழக்கறிஞர் சங்கத்திடமிருந்தோ, அல்லது கன்னியாகுமரி மாவட்ட தலைமை குற்றவியல் நீதிபதியிடமிருந்தோ கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. அப்படி பெறப்பட்டால் நிதி நிலைக்கேற்ப அதனை பரிசீலனை செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதியிலிருந்து கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைய பெட்டிஷன்ஸ் கொடுத்திருந்தோம். ஏனென்றால், திருவட்டார் தொகுதியில் உள்ள மக்கள் எல்லாம் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் அப்பர் கோதையாறிலிருந்து 80 கிலோ மீட்டர் வந்து தான் தக்கலை, குழித்துறை ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல், பக்கத்தில் உள்ள பேச்சிப்பாறை போன்ற பகுதிகள் வனப்பிரதேசமாக இருப்பதால் அருள்கூர்ந்து இந்தப் புரட்சித் தலைவி அவர்களின் நீதியான ஆட்சிக்காலத்திலாவது திருவட்டார் தொகுதி மக்களின் நன்மையைக் கருதி, திருவட்டாறில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நடேசன் அவர்களுடைய இந்த யோசனையையே மக்களுடைய யோசனையாக ஏற்றுக்கொண்டு திருவட்டாறில் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை விரைவில் அமைக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கையெடுக்கும்.



1991 அக்டோபர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 136, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

**மாநில சட்ட உதவிக்குழு.**

136—

*1607. திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில சட்ட உதவிக் குழுத்தலைவர் கௌரவ முறையில் பதவி வகிக்கிறாரா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் தலைவருக்கு (Chairman) வழங்கப்படும் கட்டணம் மற்றும் வசதிகள் பற்றிய விவரங்கள் வருமாறு—

(1) தலைமையிடத்தில் பணியாற்றும்பொழுது, முழு நாளுக்கான தொகுப்புக் கட்டணம். ரூ. 50.00 அரை நாளுக்கான தொகுப்புக் கட்டணம். ரூ. 30.00, அலுவலகத்திற்கு வருவதற்கு ஊர்திப்படி. ரூ. 60.00.

(2) வெளியூர்களுக்கு பணி நிமித்தம் செல்லும்பொழுது பணியிலுள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு வழங்குவது போன்ற பயணப்படி வழங்கப்படுகிறது.

(3) ஆலோசனைக் குழு தலைவரது இல்லத்திற்கு ஒரு பணியாளர் மற்றும் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு அவர்களுக்கு சேரும் தொகை எவ்வளவு ? டெலிபோன்ஸ் எல்லாம் ஃபிக்சடாக இருக்கிறதா? அல்லது இத்தனை கால் என்று வைக்கப்பட்டிருக்கிறதா? ஆகவே மொத்தமாக ஒரு வருடத்தில் செலவாகும் தொகை எவ்வளவு? யார் யார் எல்லாம் அதிலே சேர்மனாக இருக்கிறார்கள் ? வைஸ் சேர்மன் யார் ? என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45 [1991 அக்டோபர் 3

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவினுடைய மாண்புமிகு
ராக முன்னாள் நீதிபதி ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி தலைவ
அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். ரெட்டியார்
வரையில் என்ன செலவாயிற்று என்ற அவர்களைப் பொறுத்த
தற்போது இல்லை. உங்களுக்கு விவரம் என் கையில்
நாட்களில் அளிக்கிறேன். விவரம் சேகரித்து ஒன்றிரண்டு
சித் தலைவி அவர்களின் அரசு ஆனால், மாண்புமிகு முதல்வர் புரட்
இந்த சட்ட உதவிக் குழுவிற்காக இன்றைக்கு 70 இலட்சம் ரூபாய்
அதன் மூலமாக பல பணிகள்— நல்கியிருக்கிறது. ஆகவே,
அரசியல் சட்டத்தின் 39-ஏ இன்றைக்கு ஸ்டேட் எய்ட் என்று
நிச்சயமாக நீதியை வழங்கவேண்டுமென்று ஆர்ட்டிகள்படி ஒரு அரசாங்கம்
பிளில்' சொல்வதன் காரணமாக அது 'டைரக்டிவ் பிரின்சி
ரூபாய் — மாண்புமிகு முதல்வர் அமைக்கப்பட்டு 70 இலட்சம்
ஆட்சிக் காலத்தில் தான் 1986-ஆம் புரட்சித் தலைவர் அவர்கள்
பட்டது. அப்போது 2 லட்சம் ஆண்டில் இது தொடங்கப்
பட்டது. இன்று மாண்புமிகு ரூபாய் மட்டுமே கொடுக்கப்
கள் 70 லட்சம் ரூபாயை அதற்காக முதல்வர் புரட்சித் தலைவி அவர்
செய்து, ஏழைகளுக்கு நீதி கிடைக்க ஒதுக்கி, இந்தக் காரியத்தைச்
தட்டும் ஒலி) — எப்படி உணவு முக்கியமோ, வேண்டும் என்று (மேசையை
இருப்பிடம் முக்கியமோ, அதைப்போல உடை முக்கியமோ
நல்வாழ்வு அரசு செய்து கொடுக்க ,இவைகள் எல்லாம் ஒரு
அதுபோல நீதியும் ஏழைகளுக்குக் வேண்டிய வெல்ஃபேர் ஸ்கீம்ஸ்
காக— மாண்புமிகு முதல்வர் புரட்சித் கொடுக்க வேண்டும் என்பதற்
ரூபாயை 6 ஆண்டுகளுக்குள்ளாக, தலைவி அவர்கள் 70 லட்சம்
இன்றைக்கு 1991-ல் 70 லட்சம் 1986-ல் 2 லட்சம் ரூபாய்,
அறிக்கையில் ஒதுக்கி, அந்த ரூபாயை இந்த ஆண்டு நிதிநிலை
என்று, ' எய்டு டு புவர் ' ஏழைகளுக்கு நீதி கொடுக்க வேண்டும்
கிறார்கள். இதனுடைய என்ற வகையில் இன்று கொடுத்திருக்
கிறார்கள். சீப் ஜஸ்டிஸ் தலைவராக கவர்னர் அவர்கள் இருக்
ஆனந்த் அவர்கள் அதனுடைய ஆப் மெட்ராஸ் ஹைகோர்ட் டாக்டர்
லா மினிஸ்டர் என்ற வகையில் பேட்ரனாக இருக்கிறார்கள்.
இருக்கிறேன். அதைப்போல நானும் அதனுடைய பேட்ரனாக
செக்ரட்டரி போன்றவர்கள், அரசிலே இன்றைக்கு பைனான்ஸ்
மக்கள், அதிலே உறுப்பினர்களாக மற்ற மற்ற அதிகாரிகள், பொது
சொசைட்டியாக இருந்து, தன்னிச்சையாக இருந்து, அது ஒரு ரெஜிஸ்டட்
திரமாக ஏழைகளுக்கு நீதி கொடுக்க சுயேட்சையாக, சுதந்
எண்ணத்தோடு செயல்பட்டு வருகின்ற வேண்டும் என்ற நல்ல
ஒரு அமைப்பாகும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக இவ்வளவு தொகையை கொடுத்ததற்காக நம்முடைய அரசுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இதிலே வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பது



தெரியுமா? வழக்கறிஞர்கள், சீனியர் அட்வகேட்ஸ் கூட இந்தக் குழுவிலே சேர்க்கப்படுவார்களா? அதேபோல் மாவட்டந்தோறும் இருக்கிற இத்தகைய குழுவிலே வழக்கறிஞர்களைச் சேர்த்து, செயல்பட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இலவச சட்ட உதவிகளையும், நம்முடைய வழக்கறிஞர்கள் ஒவ்வொரு மையத்திலேயும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஓரளவிற்குப் போதுமான ஊதியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்த ஆலோசனைக் குழுவில், 35 சட்ட உதவி மையங்கள், 147 சட்ட ஆலோசனை மையங்கள், 76 இணக்க ஏற்பாட்டு மையங்கள், 25 மகளிர் ஆலோசனை மையங்கள் ஆகியவை இருப்பதுடன், 18 மாவட்டக் குழுக்களும், 88 வட்டக் குழுக்களும் என்ற வகையிலே ' இன்ப்ராஸ்டரக்சர் ' இருக்கிறது. இதிலே வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நல்ல மனம் படைத்த வழக்கறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நேற்றைக்குக் கூட சைதாப்பேட்டையிலே இந்தக் குழு நடைபெற்றது. இரண்டு நாட்களுக்கு முன்பு, செங்கற்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள, செங்கற்பட்டில் நடைபெற்றது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் கலந்து கொண்டார்கள். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு இலவச சட்ட உதவித் திட்டம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே நடைபெற்று வருகிறது. குஜராத்திற்கு அடுத்து, தமிழ்நாட்டிலேதான் அதிக அளவிற்கு மக்கள் நீதிமன்றங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இடையிலே இரண்டு ஆண்டுகள் ஒரு இருண்ட ஆட்சி ஏற்பட்டுவிட்ட காரணத்தால் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய திட்டம் சற்று ஓய்ந்து இருந்தது. இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே நிமிர்ந்து நிற்கிறது. இனி நல்ல வகையிலே செயல்படும் என்பதையும், ஏழைகளுக்கு துரிதமாக நீதியைக் கொண்டு செல்ல இந்த அமைப்பு பயன்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற காலங்களில் 2 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த காலகட்டத்தில் கூட, இந்த இலவச சட்ட உதவிக் குழுவினர் பல்வேறு பிக்னிக் சென்டர்களுக்கு செல்வதையும், உல்லாசப் பயணம் மேற்கொள்வதையும் அவர்கள் தங்களுடைய தலையாய கடமையாகக் கொண்டிருந்தார்கள்.

ஆண்டினுடைய கடைசியிலே இப்படிப்பட்ட உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு இருந்தார்கள். இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருக்கிற நேரத்தில், பழைய இலவச சட்ட உதவித் திட்டத்தை மறுபரிசீலனை செய்து புதிய வலுவான நாட்டுமக்களுக்கு சிறந்த முறையில் பயன்படும் வகையில் ஒரு திட்டத்தை இந்த அரசு வகுக்குமா, என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது செயல்படாமல் இல்லை. இதுவரையில் 10 லட்சம் வழக்குகளை அது தீர்த்திருக்கிறது. குறிப்பாக மோட்டார் வாகன விபத்து வழக்குகள் இருக்கின்றன அல்லவா, அந்த வழக்குகளிலே முழுக் கவனம் செலுத்தி 10 லட்சம் வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. அதன் காரணமாக மோட்டார் விபத்திலே பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்கள், சாமானிய மக்களுக்கு 26 கோடி ரூபாய் தொகையை நிவாரணமாக அது பெற்றுக் கொடுத்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, சில குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகளை எல்லாம் கண்காணித்து அவைகளை எல்லாம் நிறைவாக்கி, இதை ஒரு வலுவான படைக்கலனாக ஆக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

முற்பகல் 9.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித்தேவர்

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட ஆலோசகர்கள் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறார்கள். குறைந்த ஊதியம் கொடுப்பதால் புதிய வழக்கறிஞர்கள் செல்கிறார்கள். ஏழைகளுக்கு நீதி பெற்றுத்தருவதிலே அவர்கள் அக்கறை செலுத்துவதில்லை. பெரிய வழக்கறிஞர்கள் வருவதில்லை. காரணம், அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுப்பதில்லை. கட்டாயமாக சில பெரிய வழக்கறிஞர்கள் அதற்கு வரவேண்டும். வழக்குகளை வாதாடவேண்டுமென்கிற அளவிற்கு நிதி ஒதுக்கி கொடுத்து ஏழைகளுக்கு அந்த வழக்கிலே நியாயம் கிடைக்கின்ற அளவிற்கு வாதாடுகின்ற பெரிய வழக்கறிஞர்களை அதிலே நியமிப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
ஆண்டித்தேவர் அவர்கள் சொல்வதுபோல் குறைந்த அளவு
ஊதியம் கொடுக்கின்ற காரணத்தினாலே சில வழக்கறிஞர்
கள் போதுமான அளவிற்கு திறமை இல்லாதவர்கள் வருகி
றார்கள். எனவே சரியாக வழக்குகள் நடைபெறவில்லை
என்ற விவரங்களும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்
கின்றன. எனவே வழக்கறிஞர்களுக்கு தகுதியின் அடிப்படை
யில் திறமையின் அடிப்படையில் ஆற்றலின் அடிப்படையில்
அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்க முயற்சி எடுத்து
மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் சொன்னதுபோல்
இதை உண்மையான ஒரு திட்டமாக ஆக்குவதற்கு அரசு
முயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. தா. பொன்னு
வேலு.

திரு. எ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் கடந்த காலத்தி
லிருந்து, சேர் போன்ற 'பர்னிச்சர்' இல்லை. அதை இப்
போது நம்முடைய புரட்சித் தலைவியினுடைய....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னுவேலு,
இதற்கு நீங்கள் தனிக் கேள்வி போடவும், இது இலவச
சட்ட உதவியைப் பற்றிய கேள்வி. திரு. சி. ஞானசேகரன்

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. இப்போது வழக்கறிஞர்கள் எல்லாம் வேலை
யில்லாது இருக்கின்ற காரணத்தால், இலவச சட்ட ஆலோசனை
மையங்களில் எல்லாம் ஏற்கெனவே அந்த கோர்ட்டுகளில்
வேலை செய்த ரிடையர் ஆன கிளார்க்குகளையே இப்போது
அவர்களை அந்த இடங்களிலே ஆபீசர்களாகப் போடுகி
றார்கள். அதைத் தவிர்த்து இளம் வழக்கறிஞர்களை அந்தப்
பணியிலே அமர்த்த அரசு ஆவன செய்யுமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 137.

திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு கல்வியமைச்சர்.

வாழ்க்கை கிராமத்தில் கிளை நூலகம்.

137—

*1078—திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றி
யம், வாழ்க்கை கிராமத்தில் ஒரு கிளை நூலகம் துவங்க
அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

(அ), மற்றும் (ஆ): தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்
படி, 5,000 மக்கட்தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில்
தான் கிளை நூலகங்கள் திறக்க இயலும். வாழ்க்கை
என்ற இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 5,000-க்கும்
குறைவாகும். இங்கு கிளை நூலகம் திறக்க இயலாது.
எனவே அதற்குப் பதிலாக ஒரு பகுதி நேர நூலகம்
14—7—1991 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் சட்ட மன்ற உறுப்பினரான உடனேயே
இந்தக் கேள்வியைப் போட்டேன். கிளை நூலகம் அனுமதிக்க
பட்டு, அந்த நூலகத்தை நானே திறந்து வைத்திருக்கிறேன்.
அதற்கு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும்
பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 138.

திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வியமைச்சர்.

பெண்ணாடம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி.

138—

*1289—திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில்
பெண்ணாடம் நகரில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும்
திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே.

தற்போது இல்லை.



திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லை என்று
கூறியுள்ளார்கள். எனது மங்களூர் தொகுதி மூன்று
ஒன்றியங்களைக் கொண்ட மிகப் பெரிய தொகுதியாகும்.
மிகப் பெரிய தொகுதியான இந்தத் தொகுதி வறட்சியான
தொகுதியாகும். எனது தொகுதியிலே இதுவரை எந்த
தொழில்நுட்பக் கல்லூரியோ, கலைக் கல்லூரிகளோ இல்லை.
ஆதலால் எனது தொகுதியில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி
யைத் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது தொழில்
பயிலகங்கள் அரசு தரப்பிலே 24-ம் அரசின் உதவிபெறு
கிற தனியார் பொறுப்பிலே 34-ம் சுய நிதியில் அரசி
னுடைய நிதியையே பெறாமல் தனியார் நடத்துகின்ற
அமைப்புகள் 73-ம் ஆக 131 தொழில்நுட்பப் பயிலகங்கள்
இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இந்தத்
தொகுதியை ஒட்டி சிதம்பரத்தில், விழுப்புரத்தில், பண்ருட்டி
யில் பல்வேறு தொழில் நுட்ப பயிலகங்கள் நடைபெற்று
வருகின்றன. குறிப்பாக நம்முடைய மாண்புமிகு புரட்சி
தலைவர் அவர்கள் ஆட்சியிலேதான் நம்முடைய மாணவர்
களுக்கு தொழில் நுட்ப பயிற்சியிலே அதிக வாய்ப்புகளும்
கல்வியும் வழங்க வேண்டும் என்ற உள்ளத்தோடு தனியார்
துறையிலே இந்தத் தொழில் நுட்ப பயிலகங்கள் கல்லூரி
கள் தொடங்க வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்து
இப்போது மிகப் பெரிய வளர்ச்சியை தமிழகம் இந்தத்
துறையிலே பெற்றிருக்கிறது. அப்படி தொடங்கிய காலத்
தில் இதன்மீது சில குற்றங்குறைகளை குறித்து சில குறை
பாடுகளை பொதுமக்களிடத்திலேயிருந்து எழுந்ததை ஒட்டி,
டாக்டர் வி. சி. குழந்தைசாமி, அவர்கள் தலைமையிலே
இந்த தேவைகளைப் பற்றி பரிசீலிக்கவும் இதிலே செய்ய வேண்
டிய சீர்திருத்தத்தைப் பற்றி ஆய்ந்து அறிவுரை
கூறவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக்
குழு எல்லா நலன்களையும் ஆராய்ந்தது. 7-வது
ஐந்தாவது திட்டக் காலத்திற்குள் 1991 ஆம் ஆண்டு வரை
தமிழகத்தில் இப்போதுள்ள தொழில் நுட்ப பயிலகங்கள்
கல்லூரிகள் போதும். அது பற்றி மறுபரிசிலனை செய்ய
வேண்டுமானால் 8-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 1992-
ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி பரிசீலித்து எங்கே
தேவையோ அங்கே வழங்கலாம் என்று பரிந்துரைகளை
செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை ஒட்டித்தான்

முற்பகல் 9.55

இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் இந்த ஆண்டு தொழில் நுட்ப பயிலகங்கள் அல்லது தொழில் நுட்ப கல்லூரிகள் உடனடியாக வழங்க வேண்டாம் என்று முடிவு எடுத்து அடுத்த ஆண்டு பரிசீலித்து, எந்தப் பகுதியில் எது தேவையோ அதை ஆராய்ந்து தன்னுடைய நிதிநிலைக்கு ஏற்ப அரசு தொடங்க முடியுமா இல்லையானால் வசதி உள்ள நல்ல நிர்வாக திறன் மிக்க வியாபார நோக்கம் இல்லாமல் நல்ல உணர்வோடு சமுதாயத்திற்கு சேவை செய்கிறோம் என்ற உணர்வோடு அமைப்புகள் வருமேயானால் அப்படிப்பட்ட தனியாருக்கு வழங்கலாம் என்பதை பரிசீலிக்கலாம் என்று ஆணை இட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 139. திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் ஊழியர்களை நிரந்தரம் செய்தல்.**

139—

* 1187—**திரு. கே. ஏ. மனோகரன் :**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் தினக் கூலி அடிப்படையில் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் நிரந்தரம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கே. ஏ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் நடக்கும் இந்தப் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே தினக் கூலி அடிப்படையில் வேலை செய்கின்ற நபர்கள் இருக்கிற காரணத்தாலே ஊழல்கள் நிறைய ஏற்படுகிறது. நிறைய புகார்கள் வருகின்றன. ஆகவே அதை களையும் வண்ணம் அரசு மறு பரிசீலனை செய்து இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு விற்பனையாளர் அவருக்கு உதவியாளர் என்று நியமிக்கிறோம். அதிகமான மக்கள் தங்களுக்கு தேவைப்படுகிற பொருட்களை வாங்க நியாய விலைக் கடைகளை அடைகிற நேரத்தில் முதல் பத்து நாட்கள் அல்லது 15 நாட்களுக்கு மாதத்திற்கு 100 ரூபாய்க்கு மேல் போகாமல் ஒருவரை நியமிக்கிறோம். அவர்கள் தற்காலிகமான வேலைக்குத்தான் நியமிக்கப்படுகிறார்கள். மூன்றாவது ஆளை நிரந்தரமாக நியமிப்பது என்பது கடினமான காரியம்.

**திரு. கே. ஏ. மனோகரன் :** அவர்களுக்கு கொடுக்கிற கூலியை உயர்த்திக் கொடுக்கவாவது அரசுக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் ஏதும் அரசிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். பி. பரமசிவம்.

**திரு. ஆர். பி. பரமசிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறை மூலம் நியாயவிலைக் கடைகளில் பணி செய்கிற விற்பனையாளர்களுடைய வேலை பளுவிற்கும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, பொன்னி அமுதம் போன்ற அங்காடிகளில், நியாயவிலைக் கடைகளில் பணி செய்கின்ற பணியாளர்களின் வேலை பளுவிற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதே நேரத்தில் சம்பளத்தை குறைவாக வாங்குகிறார்கள். இந்த கூட்டுறவுத் துறை மூலம் விற்பனை உள்ள கடைகளில். இந்த சம்பள வித்தியாசத்தை சரி செய்ய முடியுமா என்பதோடு அந்த வேலை பளுவையும் குறைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை பளு அதிகம் இருப்பதாக நாம் கருத முடியாது. ஏனென்றால் ஆயிரம் கார்டுகளுக்குள்ளாகத்தான் ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் இரண்டு பேர்கள் போட்டிருக்கிறோம். அதோடு அவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகிறார்கள். இதிலேயே குறைகள் நடப்பதாக அடிக்கடி புகார்கள் வருகிறது. அவற்றையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. தற்போது

சம்பளத்தைப் பொறுத்தவரையில் நிரந்தரமாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறவர்களுடைய சம்பள விகிதங்களை அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. முனிவெங்கடப்பன்.

**திரு. கே. முனிவெங்கடப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் பணி செய்யும் பணியாளர்களுக்கு சென்ற தி.மு.க. அரசில் தொழிலாளர் சட்டம் 1௪(3) அக்ரிமெண்ட் பிரகாரம்—லேபர் ஆக்டிலே அக்ரிமெண்ட் போட்டு ஏறக்குறைய 250 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவர்கள் இன்றைய சில நியாய விலைக் கடைகளில் 950 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு கடையில் 250 ரூபாய் வாங்குகிறார்கள். அடுத்த கடையில் 950 ரூபாய் வரையில் வாங்குகிறார்கள். இந்த வித்தியாசத்தை சரி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல இதனை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சில பேர் நூறு ரூபாய்க்குக்கூட சம்பளத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.............

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலி தினசரி அநேகமாக 10 ரூபாய் வரையிலே தருகிறார்கள். அது 100 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு செய்யப்படும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, 240 நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று ஒரு சட்ட நிர்ணயம் வைத்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில், அதுவும் கூட்டுறவு உணவு விநியோகம் செய்யக்கூடிய இடங்களில் எல்லாம் 10 கிலோ சீனி என்று சொன்னால் வீட்டிலே போய் அளக்கும் போது 8 கிலோ தான் இருக்கிறது. 20 கிலோ அரிசி என்று சொன்னால் வீட்டிலே போய் அளக்கும் போது 16 கிலோ தான் இருக்கிறது. இந்த அரிசி குறைவுக்கு



என்ன காரணம் என்று மீண்டும் போய் அவர்களிடத்திலே கேட்டால் அவ்வளவுதான் என்று சொல்லி அந்த ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களை விரட்டி விடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அங்கே இருப்பவர்களுக்கு ஜாஸ்தி சம்பளம் இல்லாதது ஒன்று. இன்னொன்று அவர்கள் நிரந்தரமாகாமல் இருப்பது என்பதையாவது அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கிறார்களா? அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. மண்ணெண்ணெய் விநியோகம் அநேகமாக முதல் வாரத்திலேயே முடிந்து விடுகிறது. அந்த மண்ணெண்ணெயை ஊற்றுவதற்காகத்தான் மூன்றாவது ஆள் ஒருவரை வைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்தக் காரியத்தை செய்கிறார்கள். இந்த எடை குறைப்பு என்பது பல இடங்களில் நடக்கிறது. அநேகமாக கிராமங்களிலே இல்லை. நகரங்களிலே தான் இருக்கிறது. (குறுக்கீடு) கிராமங்களுக்கு நான் இன்னும் போகவில்லை. போனால் அதையும் பார்த்துவிட்டு வந்துவிடுவேன். ஆக இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். எனவே சம்பளம் கொடுத்தால் மட்டும் அது குறைந்துவிடுமா என்பது மனப்பான்மையைப் பொறுத்ததே தவிர நல்ல சம்பளம் வாங்குபவர்களிடத்திலும் அதே தகராறு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு.கே.கே. சின்னப்பன்.

**திரு. கே. கே. சின்னப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நியாயவிலைக்கடைகளில் அதாவது அவர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பதால் தினந்தோறும் அவர்கள் விற்பனை செய்யக்கூடிய பொருளானது பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெருமானம் உள்ளது; அவற்றை விற்பனை செய்யும்போது அவர்கள் அடிக்கடி அந்த விற்பனை பணத்தை எடுத்துக்கொண்டு சென்று விடுகிறார்கள். இதனால் அரசுக்கு அதிகப்படியான இழப்புகள் ஏற்படுகின்றது. இதைப் போக்குகின்ற வகையில், கடைகளுக்கு ஒருவரையாவது நிரந்தரம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கு ஏற்கெனவே இரண்டு பேர்கள் நிரந்தரமாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சில எடைக் குறைவு பற்றி கூட மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். சர்க்கரையை ப்ளாஸ்டிக் பையிலே போட்டு சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ரிட்சார்த்தமாக கொடுக்கலாமா என்று அரசு கருதிக்கொண்டி

ருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் எடைக் குறைவு இருக்கக்கூடாது என்று விரும்புகிறார்கள். ஏனென்றால் குறிப்பாக எடைக்குறைப்பிலே எல்லாம் தாய்மார்கள் அநேகமாக ஏமாற்றப்படுகிறார்கள். அதிலே ஏழைத்தாய்மார்கள் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற எண்ணம் என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். ஆகவே பல்வேறு காரியங்களிலே, முறையாக படிப்படியாக காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். அதிலே பிளாஸ்டிக் பை போடுகின்றபோது 20 காசு, 25 காசு அதிகமானால் அதைப்பற்றிய கூக்குரல்தான் அதிகமாக வந்துவிடுகிறது. நான் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். பிளாஸ்டிக் பைகளிலே போட்டு கொடுத்தால் அவர்களுக்கு ஒழுங்காகப் போய் சேரும். நான் பார்த்து பரிசோதனை செய்த 10 கடைகளில் கால் கிலோ வரையில் சர்க்கரையை எடுத்துவிடுகிறார்கள். கால் கிலோ அநேகமாக 1¼ ரூபாய் ஆகிறது. அதற்காக 25 பைசா ப்ளாஸ்டிக் பைக்காக ஏற்றினால், பாதகம் இல்லை என்று சொன்னால், நல்லபடியாக எல்லோருக்கும் எடை குறையாமல் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 10.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் குறைவாக இருந்தாலும் இப்போது இருக்கிற நிதிநிலையினுடைய சிரமத்தின்படி 2 பேர்கள் பணியாற்றுகிறார்கள். 2 பேர்களுக்கும் அங்கே அதிகமான வேலை கிடையாது. ஆகவே அவர்களில் ஒருவரை மட்டும் சம்பளத்தில் வைத்துக்கொண்டு 2 பேருக்கும் கொடுக்கிற கூலியை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு இன்னொருவருக்கு வேறு வேலை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 2 பேர் இருக்க 3-வது ஒரு ஆளை தற்காலிகமாக வைக்க வேண்டிய சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. அதிலே 3-வது எடுக்கிற தற்காலிகமான ஆள் எப்படியோ ஒரு மாதம் முழுவதும் அங்கேயே இருக்கிறார். ஏன் இருக்கிறார் என்பதைத்தான் இப்போது ஆராய்ந்து கொண்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. பாப்பா சுந்தரம்.



திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த ஊழியர்கள் விநியோகிக்கும் போது எடை குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஊழியர்களைக் கேட்கும்போது மேலே இருந்து வரும் போதே 100 கிலோ மூட்டை என்றால் 100 கிலோவை அவர்கள் எங்களிடத்தில் ஒப்படைப்பது இல்லை என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொல்லுகிறார்கள். நானே சில இடங்களில் நேரில் பார்க்கும் போது சில இடங்களில் லாரிகளில் மூட்டைகளை ஏற்றிச் செல்லும்போது அந்த லாரிகளிலிருந்து அரிசி, சர்க்கரை கொட்டிக்கொண்டு செல்வதைக் கூட அவர்கள் சரியாக செம்மையாக கவனிக்காமல் அந்த மூட்டை அளவை சரியாக அவர்கள் ஒப்படைக்காத காரணத்தால் தான் குறைவு என்று சொல்லுகிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடங்குகளிலிருந்து சரக்குகள் போகும் போது 3 கிலோ, 4 கிலோ குறைந்து விடுகிறது என்ற குற்றச்சாட்டு சில இடங்களிலிருந்து வந்தது. ஆகவே, கிடங்குகளில் அவைகள் எடை போட வேண்டும் என்பதையும், [illegible] என யாராவது ஒரு அதிகாரி போய் நேரடிக் கடைகளில் இருக்கிற சரக்கை எடுத்து எடை போட்டால் அந்த எடை சரியாக இருக்கவேண்டும் என்பதையும் கண்காணிப்பதற்கு தற்போது ஏற்பாடுகள் [illegible]. ஆகவே, அப்படிப்பட்ட குறைபாடுகள் [illegible] கடைகளில், நியாய விலைக் கடைகளில் வருவதற்கு நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு நியாய விலைக்கடைகளில் தினக்கூலி அடிப்படையில் இருப்பவர்களை நிரந்தரமாக்குவதற்கு இல்லை என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு முக்கியமாக அரிசி சப்ளை செய்கின்ற நவீன அரிசி ஆலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அந்த இடங்களிலே ஏறக்குறைய 2 ஆயிரம் மக்களுக்கு மேலே 15 ஆண்டு காலமாக வேலை செய்கிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கி அரசு கொடுக்கின்ற சலுகைகள் அத்தனையையும் அவர்களுக்குக் கொடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதைப்பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்விப் போட்டால் பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 140, திரு டி. சுதர்சனம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

பின்னி தொழிற்சாலையை திறக்க முயற்சி.

*140-

*1012— திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள பின்னி தொழிற்சாலையைத் திறப்பதற்காக அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பின்னி ஆலையை மூட ஆலை நிர்வாகம் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25(0)ன் அனுமதி கோரியது. ஆலையை மூட அனுமதி மறுத்து தொழிலாளர் ஆணையர் 8—2—1991-ல் ஆணை பிறப்பித்தார். இத்தகைய ஆணையை எதிர்த்து நிர்வாகம் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் அனுமதித்து 27—9—1991 ஆம் தேதியிட்ட தனது தீர்ப்பில் தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் மறுபடியும் விசாரித்து ஆணை பிறப்பிக்குமாறு தொழிலாளர் ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பி. அண்டு சி. மில்லை மூடுவதற்கு தொழில்துறை ஆணையரே மனு செய்ததாக பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. தமிழக அரசு தொழிலாளர்களுக்கு நன்மை செய்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 400 ரூபாய் அவர்களுக்கு அளித்து இருக்கிறார்கள். இந்த நிலையில் தொழில் துறை ஆணையர் அவர்கள் எந்த அடிப்படையில் அவ்வாறு மனு செய்தார் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் ஆணையர் மனு செய்யவில்லை. நிர்வாகம் ஆலையை மூட அனுமதியை



கோரியது தொழிலாளர் ஆணையரிடத்தில். தொழிலாளர் ஆணையர் அனுமதி மறுத்தார். அதை எதிர்த்து நிர்வாகம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கில் மறுபடியும் விசாரிக்குமாறு தொழிலாளர் நல ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

•

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பிலே கூட பங்குதாரர்களை எல்லாம் கலந்து ஆலோசிக்கவில்லை. இன்னும் பல காரணங்களால் அந்த வழக்கை தள்ளுபடி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் காலக் கெடுக் கொடுத்து அதை விசாரிக்குமாறு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கால நிர்ணயம் செய்து இந்த காலத்திற்குள்ளாக இந்த மில்லைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியார் துறையைச் சார்ந்த ஆலையாகும், ஆக ஆலையை நடத்துவதும், நடத்தாமல் இருப்பதும் ஆன முக்கிய பொறுப்பு, அந்த நிர்வாகத்திற்கு இருக்கிறது. நாம் தொழிலாளர் நலத்தைக் காப்பதற்காக, ஆலை தொடர்ந்து நடக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் கோர்ட்டிலே போய், மேலும் தாமதப்படுத்துகிற அளவுக்கு உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். இது குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு பேசும்போதுகூட, மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிற அந்த நிதி நிறுவனங்களினுடைய சார்பாக, டைரக்டர்களே தான் போர்டிலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்துதான் இதுமாதிரியான ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். மறுபடியும் அவர்களிடத்திலேபோய் கேட்க வேண்டியது சரியல்ல என்று அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது குறித்து கருத்து சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு நாம் தலைவணங்க வேண்டும். அந்த முறையிலே தொழிலாளர் நல ஆணையாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கிடையிலே, நாம் நிதி நிறுவனங்களோடு பேசவும், சர்க்கார்

கரப்பிலே ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு என்ன உதவி செய்ய முடியும்; என்ன உதவியை கேட்கிறார்கள் என்பது பற்றிப் பேசவும் அதிகாரிகளோடு பேசி நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு : பின்னியைப் பற்றிய கேள்வி. கோயம்புத்தூருக்கு போய்விடக்கூடாது.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிய தொழிற்சாலைகளை திறக்க எடுக்கும் நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அவையில் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவிப்பேன், தனிக் கேள்வி போடட்டும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. செல்வராஜ். கேள்வி, பின்னியைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

திரு. கி. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை மூடுவதற்குக் காரணமே [illegible] மாற்றப்பட்ட [illegible] அந்த இயந்திரங்களை மாற்றி புதிய [illegible] அவர்கள் [illegible] சிறப்பாக [illegible] அவர்களை அழைத்துப் பேசி, நவீன [illegible] செய்து கொடுத்தால், நிச்சயம் அந்த [illegible] வசதியாக இருக்கும் [illegible] அவர்கள் ஆலை நிர்வாகத்தினரை அழைத்து [illegible] வாங்க ஏற்பாடுசெய்து கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் ஆலை நிர்வாகம் செய்திருக்கிறது. ஆனால் இப்போதுள்ள பிரச்சினை, பின்னி ஆலையை நடத்துவதற்கு, ஆலையின் [illegible] பிரிவுக்குத் தேவையான தண்ணீர் வசதி [illegible] என்றும், அதனால் இலாபகரமாக இயங்க முடியவில்லை என்றும், குறைவான உற்பத்தி இருக்கிறது என்றும், தொடர்ந்து ஏற்பட்டு வரும் நஷ்டம் காரணமாகவும் அவர்கள் ஆலையை மூடவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆக, அந்த [illegible] இங்கே நடத்தாமல், புனரமைக்க மாற்றினால் தான் அந்த ஆலையை லாபகரமாகக் கொண்டுவரமுடியும் என்று அவர்கள் சொல்லித்தான், இந்த



மாதிரியான ஒரு நடவடிக்கையில் நிர்வாகம் ஈடுபட்டிருக்கிறது. மற்றபடி, நவீனப்படுத்துவதற்கான முயற்சிகளை அவர்கள் தனியாக மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கடன் வசதியைப் பெறவும், அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்னி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இதை எப்படியாவது மூடவேண்டுமென்ற நிலையில்தான் அவர்கள் இந்த முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் இந்த முயற்சியை முதன்முதலாகத் துவங்கிய ஆலை, இந்த தமிழ்நாட்டிலே முதன்முதலாகத் துவங்கிய ஆலை என்பதால் நம்முடைய அரசுக்குக் கெட்டபெயர் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தின் அடிப்படையிலே நம்முடைய அரசு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து, இந்த ஆலையை எப்படியாவது திறப்பதற்கு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி ரூபாய்க்கு மேலே, இதிலே முதலீடு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள், தினமும் ஏற்பட்டு வருகிற நஷ்டத்தையும் அவர்கள் ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். அதைப் பார்க்கிறபோது, அவர்கள் ஆலையை நடத்துவதற்காகத்தான் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறதே தவிர, அவர்கள் மூடுவதற்காக இத்தனையையும் செய்து கொண்டிருப்பதாக சந்தேகிக்க இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 141, டாக்டர் ச. சுந்தரராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

கைத்தறி நெசவாளர்களுக்கு E.S.I. மருத்துவ வசதி.

*141 – 1730—டாக்டர் ச. சுந்தரராஜ் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கைத்தறி நெசவாளர்களுக்கு E. S. I. மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித்திட்டம் செயற்படுத்தப் படுகின்ற பகுதிகளில் 20-ம் அதற்கு மேலும் தொழிலாளர்கள் உள்ள கைத்தறி நெசவு நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

2. எல்லா கைத்தறி நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தை செயற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனை யில் இல்லை.

முற்பகல் 10.15

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு கைத்தறி நெசவாளர்கள் இறந்தால் ரூ. 10,000 லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல் லாமல். மாதந்தோறும் ரூ. 250, பத்தாண்டுகளுக்கு அந்தக் கைத்தறி நெசவாளர்கள் இறந்தால், கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், Savings Security திட்டத்தின்கீழ் ஆறு சதவீதம் அவர்களுடைய கூலியைப் பிடித்தம் செய்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. வேலை செய்தாலும், வேலை செய்யாவிட்டாலும் மாதந் தோறும் இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் வைத்தியம் பெறத் தகுதியுடைய தொழிலாளர்களுக்கு, கூட்டுறவுத்துறையில் அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு அந்தத் திட்டத்தைச் சேர்த்து இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் மருத்துவம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நிரம்பிய பகுதிகளைத் தனியாகப் பிரித்து, அந்தப் பகுதிகளிலே இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தை நாம் அமலுக்குக் கொண்டு வந்திருக்கி றோம். அப்படி அந்தப் பகுதியிலே இருக்கிற நெசவாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் 20-ம் 20-க்கும் மேற்பட்டவர்கள் அங்கே இருப்பார்களானால் அவர்களுக்கும் அந்தப்பயன் கிடைக்கும்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பரமக்குடித் தொகுதியிலே கிட்டத் தட்ட 45-க்கு மேற்பட்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் என்னுடைய மாவட்டத்தில் ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவமனை கூட இல்லை. அந்தக் கைத்தறி நெசவாளர்கள் பெரும்பாலும் (occupational disease) என்று சொல்லப்படுகிற (T.B.) போன்ற ஒரு சில வியாதிகளினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் கைத்தறி நெசவாளர்கள் அந்த வியாதியினால் அதிகப்படி யாகத் துன்பப்படுகிறார்கள் என்று உணர்ந்து, அவர்களுக்கு



நல்ல திட்டங்களை எடுக்கின்ற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வெகுவாக வைத்திய வசதி செய்து கொள்வதற்காக இப்பகுதியில், குறிப் பாக இராமநாதபுரம் மாவட்டத்தில், கைத்தறி நெசவாளர்கள் அதிகப்படியாக இருக்கின்ற பரமக்குடித் தொகுதியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லாத பகுதியாக இருப்பதனால், அங்கே தனியாக மருத்துவமனையை அமைத்து, அவர்களுக்குச் சிறப்பான திட்டத்தின் கீழ் வைத்திய வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ.எஸ்.ஐ. திட்டம் என்பது நெசவுத் தொழிலாளர் என்று தனியாக பார்த்து அமல்படுத்துவது இல்லை. பொதுவாக, தொழிலாளர் நிரம்பிய பகுதியில் அமல்படுத்துகிறோம். அந்தப் பகுதியிலே இருக்கிற நெச வாளர்களுக்கும் அதனுடைய பயன் கிடைக்கும். அவர்கள் வேலை செய்கின்ற நிறுவனங்களில் 20-ம், 20-க்கும் மேற் பட்டவர்கள் இருக்க வேண்டும். மின்சாரத்தைப் பயன் படுத்துகின்ற தொழிற்சாலையாக இருந்தால், 10-ம் 10-க்கும் மேலே இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ் வருகின்றன. அதிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் இதன் கீழ் பயன் கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை போல் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு வர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இ.எஸ்.ஐ. சட்டம் எந்த எந்தப் பகுதியிலே அமலுக்கு வந்திருக்கிறது என்று பார்த்தால் 77 மையங்களில் கொண்டு வந்திருக்கிறோம். அதிலே பரமக் குடிக்கும் கொண்டுவர முடியுமா என்பதை இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் பீடித் தொழிலாளர் கள் அதிகமாக இருக்கும் எங்கள் பகுதியிலே ஒரு சிறிய மருத்துவமனையாக உள்ளது. ஆனால், அதில் மருந்துகள் எல்லாம் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. அதைப்போல, டாக்டர்கள் சரியாக வந்து சரியான நேரத்தில் மக்களுக்குச் சிகிச்சை அளிக்காமல் இருக்கின்றார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : இது குறித்து விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 142, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

போக்குவரத்துக் கழகப் பணிமனை.

142—

*40-142— திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், திசையன்விளையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கான பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் திசையன் விளையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைக்கான பணி கைவிடப்பட்டுள்ளது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தப் பணிமனைக்கான இடம் பஞ்சாயத்தில் இருந்து தரப்பட்டிருந்தும் அது ஏன் கைவிடப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் 10 பேருந்துகள்தான் இயக்க முடியும் என்ற சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. 25 பேருந்துகளை இயக்கினால்தான் ஒரு பணிமனை துவங்கப்படும். ஆகவே, அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, திசையன்விளையிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்துகளை இயக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அது ஒரு வியாபாரத் தலமாக இருக்கிறது. பல்வேறு கிராமங்களை இணைக்கின்ற ஒரு தலமாக இருக்கின்ற காரணத்தாலே நிறையப்பேருந்துகள் இயக்க வாய்ப்புகள் உள்ளன. ஆகவே, அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்ய எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்திருக்கிற குறிப்பின் அடிப்படையில் அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 143, திரு. இரா. தாமரைக்கனி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



கோவிந்தநல்லூருக்கு பேருந்து வசதி.

*143—

199.— திரு. இரா. தாமரைக்கனி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம், கோவிந்தநல்லூருக்குப் பேருந்து வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 144, திரு ம. தனபால், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

முள்ளிப்பாக்கம் ஏரியைச் சீர்செய்தல்.

144—

*226— திரு. ம. தனபால் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்போரூர் ஒன்றியம், முள்ளிப்பாக்கம் ஏரியில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது சீர் செய்யப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருப்போரூர் ஒன்றியம், முள்ளிப்பாக்கம் ஏரியில் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடைப்பைச் சரி செய்ய ஏறத்தாழ ரூ. 27,000 என்ற அளவில் கரை ஒன்று போடப்பட்டது. அதற்குப் பின்னாலே நிரந்தரமாக அதைச் சீர் செய்வதற்கு ரூ. 1.33 இலட்சம் என்ற அளவிலே பணிகள் தொடங்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1991 அக்டோபர் 3

முற்பகல் 10.20

**திரு. ம. தனபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியினுடைய சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கி றேன். அந்தப் பணி மழைக்காலக் கூட்டத் தொடருக்கு முன் பாக முடிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் மாதத்திற் குள்ளாக அந்தப் பணி முடிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா. 145. திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**ஊத்துமலையில் துணை மின்நிலயம்.**

145—
*486—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலையில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே;

(அ) ஆம்.

(ஆ) 1992-93ஆம் ஆண்டில் பணிகள் துவங்கும்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துமலைப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சொல்லி விளம்பரங்கள் எல்லாம் செய்தார்கள். ஆனால் அப்போது கிடப்பில் போட்டுவிட்டார் இப்போது ஆம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர் கள் சொல்லியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அதே சமயத்தில் இந்தப் பகுதியில் சுமார் 33 பகுதிகளில் உள்ள கிராமங்களில் விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள்



1991 அக்டோபர் 3]

இருக்கிறார்கள். பம்ப் செட்களுக்கு எல்லாம் மின்சாரம் ரெகுலேட் செய்து கொடுக்கப்படாததன் காரணத்தால் அந்தப் பம்ப் செட்களில் காயில் தீய்ந்து போய்விடுகிற காரணத்தால் அவர்கள் மிகவும் துன்பப்படக்கூடிய நிலை யில் இருக்கிறார்கள். ஆதலால் இந்த ஊத்துமலை சப் ஸ்டேஷனை மிகத் துரிதமாக ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீக்கிரமாக ஆவன செய்வார்களா என்பதை• நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டங்களை எல்லாம் இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சிறப்பாகச் செயலாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட் டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படை யில் இந்த ஊத்துமலைப் பகுதியில் 66-11 என்கிற கிலோவாட் அளவுக்கு ரூ. 77.75 இலட்சம் செலவில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கிற திட்டம் இன்றைக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே அது விரைவில் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் ஏராளமான காலனி வீடுகள் உள்ளன. அதாவது அரிசன! மக்களுக்குக் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கிற நிலையில்—இது பொதுவான கேள்விதான், இது தமிழகம் முழுவதற்கும் பொருந்தும்— அந்தக் காலனி வீடுகள் காட்டுப் பகுதியில் வருகிற காரணத்தால்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணை மின் நிலையம் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். எனவே இதிலே காலனி வீடுகள் பற்றிக் கேட்பது........

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** பேரவைத் தலைவர்அவர்களே, காலனி வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவது பற்றிக் கேட்கிறேன். மின்சாரம் அந்த வீடுகளுக்கு முதலாவதாகவே வழங்கப்படாத தால் பல ஆண்டுகாலமாகவே காட்டுப் பகுதியில் அவை இருக்கின்ற நிலையில் அதாவது அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போதே முதலாவதாகவே மின்சாரத்தை வழங்கு வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, காலனி வீடுகளைப்
பொறுத்தமட்டில் உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதில்
இந்த அரசு முனைப்பாக இருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கூறுகிற பகுதியில் அந்த மாதிரி புகார்கள் ஏதும் இருந்தால்
அதை எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால்
உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 146.
டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை
அமைச்சர்.

**வால்பறை மலைப்பகுதி ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டுதல்.**

146—
*1036—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) National Water Development Agency மூலமாக
வால்பாறை மலைப்பகுதியிலிருந்து கேரளாவிற்கு செல்லுகின்ற
சிறுசிறு ஆறுகளில் அணைக்கட்டுகள் கட்டி கீழ்ப்பகுதியிலுள்ள
கோவை மாவட்ட மக்களுக்கு குடி நீருக்கும் விவசாயத்திற்கும்
பயன்படும் வகையில் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே;

(அ) மற்றும் (ஆ): அவ்வாறான திட்டங்கள் ஏதும்
இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எதிலும் புரட்சி, எதிலும் புதுமை, அதுவே நம்
கோட்பாடு என்று என்போன்ற புதிய சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு அறிவுரை வழங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு
தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்
களுடைய ஆட்சியிலே இதுபோன்ற பயன் உள்ள நல்ல
திட்டங்களை அரசு கொண்டுவரவேண்டும் என்ற வகையில்
தான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கிறேன். ஆகவே
ஆனைமலையாறு என்ற ஆறு வீணாகக் கேரளாவுக்குச் செல்கிறது.
எனவே, அந்த ஆற்றின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று





கோவை மாவட்டத்தில் உள்ள பல உறுப்பினர்கள் கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை அமல்
படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு
ஒப்பந்தத்தின் கீழ் கீழ்வால்பாறைப் பகுதியில் கேரளாவுக்குச்
செல்கிற மேல்நீராறு, கீழ்நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம்
துணைக்கடவு, பெருவாரிப் பள்ளம் ஆகிய இடங்களில்
குறுக்கே அணை கட்டி ஏற்கெனவே நாம் பாசனம் செய்து
வருகிறோம். புதிதாக அணை கட்டுவதற்காகத்தான் இன்
றைக்கு மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விட
வேண்டும் என்று ஒரு கோரிக்கையைப் புரட்சித் தலைவி
அவர்கள் நம்முடைய அரசிலேயிருந்து வைத்திருக்கிறார்கள்.
நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி என்ற அந்த
தேசிய நீர்வள குழுமம் இன்றைக்கு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.
அதற்கான செயற்குறிப்பு மத்திய அரசிடத்திலே இருக்கிறது.
ஆகவே அந்த திட்டம் கேரள அரசினுடைய ஒப்புதலோடு செய்ய
படவேண்டிய திட்டம். அதற்கான முயற்சிகளிலே இந்த அரசு
இறங்கி இருக்கிறது. கேரள அரசோடு உரிய நேரத்திலே பேசி
மத்திய அரசினுடைய உதவியோடு இந்த திட்டங்கள் செயலாக்
கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10.25

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆனைமலை ஆற்றில் அணை கட்டுவதற்கு நேஷனல்
வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி மூலமாக சுமார் 300 கோடி
ரூபாய் செலவில் நீராறு, நல்லாறு என்ற திட்டத்தைத் தீட்டி
மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு மூலமாக அனுப்பப்பட்டுள்ள
தாகவும், டெல்லியிலே உள்ள டைரக்டர்கள்
ஒன்பது பேர் கொண்ட அந்த குழுவில் ஒவ்வொரு டைரக்டரும்
ஒவ்வொரு 'கொர்ரி'-ஐ போட்டு திருப்பி அனுப்பி விடுவதாகவும்
தெரியவருகிறது. இதை அரசு அறியுமா? இதை சீர்படுத்தி
இந்தத் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய
தகவல்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்
கிறேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றவுடனே, நம்முடைய
இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய உத்தரவின்பேரில்
நம்முடைய பொதுப்பணித்துறைச் செயலர் அவர்கள்கூட
டெல்லிக்குச் சென்ற நேரத்தில் அந்த நேஷனல் வாட்டர்

டெவலப்மெண்ட் ஏஜென்சி என்று சொல்லப்படுகின்ற தேசிய
நீர்வளக் குழுமத்தினுடைய செயற்குறிப்புகளை எல்லாம் நாம்
இன்றைக்கு குறிப்பெடுத்து பரிசீலனை செய்து
கொண்டிருக்கிறோம். இந்த திட்டமானது நம் அண்டை
மாநிலத்துடன் சேர்ந்து நாம் செயல்படுத்த வேண்டிய
திட்டமாக இருக்கின்ற காரணத்தினாலே இந்த நடவடிக்கைகளை
நாம் மேற்கொள்கிற நேரத்தில் கேரள மாநிலத்தோடு
பேசி இந்தத் திட்டம் மத்திய அரசின் உதவியோடு செய
லாற்ற வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே, அதிலே
ஏதேனும் குறைபாடுகள் இருக்குமேயானால் இந்த அரசு
உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து மத்திய அரசோடு தொடர்பு
கொண்டு அதற்கான முனைப்பான நடவடிக்கைகளில் இறங்
கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த தேசிய நீர்வள குழுமம் தமிழகத்தைப்
பொறுத்த மட்டில் எந்தெந்த பகுதியில் எத்தனை திட்டங்கள்
நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்ற
அறிக்கையை தந்திருக்கின்றார்களா? இதுமற்ற மாநிலங்க
ளோடு சேர்ந்து சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்
எனும்போது, அந்தந்த மாநிலங்களுக்கும் அது வலியுறுத்தப்
பட்டுள்ளதா? இது மத்திய அரசுக்கும் அனுப்பி அதற்கான
தகுந்த ஆதாரங்கள் பெற்று இந்த தேசிய நீர்வள குழுமம்
கொடுத்திருக்கின்ற அடிப்படையிலே ஏதாவது திட்டங்கள் இது
வரையில் நிறைவேற்றப்பட்டு உள்ளனவா என்பதை அறிய
விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இங்கே, கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி
கேரளத்திற்கு செல்கின்ற வால்பாறை மலைப்பகுதியிலே இருந்து
வருகின்ற தண்ணீரை திருப்பி விடுகின்றது பற்றியதுதான்.
இவர் மொத்தமாக அந்த நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட்
ஏஜென்சி எடுக்கின்ற திட்டங்களைப் பற்றி கேட்டிருக்
கின்றார்கள். ஆகவே அதைப்பற்றி அவர் தனியாகக் கேள்வி
போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலே இந்த
புரட்சித் தலைவியின் ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளாக
இல்லாத அளவிலே பரம்பிக்குளம் ஆளியாற்றில் தண்ணீர்
நிறைய இருந்தும் கூட, அந்த பரம்பிக்குளம்.....





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வேறு, பரம்பிக்
குளம்-ஆளியாறு பற்றி கேட்டால் அவர் பதில் சொல்லமுடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இல்லை, இல்லை,
ஆனைமலைப் பகுதி பக்கம்தான்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, அந்த பரம்பிக்குளம் மீது தண்ணீரை எடுத்து
வருகின்ற காண்டூர் கேனாலுடைய அளவு மிகவும் குறைவாக
இருப்பதால், திருமூர்த்தி மலைக்கு தண்ணீர் வர முடிவதில்லை
அதற்காக இந்த நல்லாறிலே வால்பாறை பகுதியில்
உற்பத்தியாகின்ற அந்த நல்லாற்றிலே ஒரு அணையைக்
கட்டினால் திருமூர்த்தி மலைக்கு தண்ணீரைக் கொண்டு
வருவதற்கு வேறு வழி ஏற்படுத்தப்படும். அப்படி ஏற்படுத்து
கின்றபோது, இந்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில்
4 மண்டலங்களாக பிரிகின்ற அரசின் யோசனைக்கு ஏற்ப,
அது 90 ஆயிரம் ஏக்கர்களுக்கு அதிகமாக தண்ணீர் பாயக்
கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது.

எனவே அந்த நல்லாறு திட்டத்தை வால்பாறை பகுதியிலே
இருக்கின்ற நல்லாற்றிலேயிருந்து தண்ணீரை நேரடியாகவே
திருமூர்த்தி மலைக்குத் திருப்பி விடுவதற்கு விரைவாக நட
வடிக்கையை எடுத்தால் பரம்பிக்குளம் பாசன விவசாயிகள்
அனைவருக்குமே அது பயனுள்ளதாக இருக்கும். அது
சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து விரைவிலே
முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாற்றின் குறுக்கே
அணை கட்டி திருமூர்த்தி மலைக்கு கொண்டு வருகின்ற
திட்டம் நம்முடைய விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடிய
திட்டமாக இருக்குமேயானால் உடனடியாக இந்த அரசு
அதை ஆய்வு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 147. திரு.
ம. சின்னசாமி. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித்துறை அமைச்சர்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

147—
*248—திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

[1991 அக்டோபர் 3

(அ) திருச்சி மாவட்டம், க. பரமத்தி, அரவக்குறிச்சி
ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமங்களுக்கு காவிரி ஆற்றி
லிருந்து குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம என்ல, பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்
பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் க. பரமத்தி ஒன்றியத்தி
லிருந்து 327 குடியிருப்புகளும், அரவாக்குறிச்சி ஒன்றியத்தி
லிருந்து 229 குடியிருப்புகளும். கரூர் ஒன்றியத்திலிருந்து 8 குடி
யிருப்புகளும் மற்றும் அரவாக்குறிச்சி பள்ளப்பட்டி ஆகிய இரு
பேரூராட்சிகளும் பயன்பெறும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள்
நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்
கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

(அ) திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம் மேற்கு
ஆரணி வட்டாரக் கிளையின் தமிழ்நாடு கூட்டணி ஆசிரியர்கள்
கோரிக்கையின் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கி
யத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். டாக்டர்
ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.



1991 அக்டோபர் 3]

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, " திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்
டம் மேற்கு ஆரணி வட்டார கிளையின் தமிழ்நாடு கூட்டணி
ஆசிரியர்கள் கோரிக்கையின் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்
காதது குறித்து " மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை அவையிலே வைக்கப்
பட்டுள்ளது.

### அறிக்கை.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், மேற்கு ஆரணி
உதவிக் கல்வி அலுவலகத்தில், உதவிக் கல்வி அலுவலரும்,
தலைமை எழுத்தரும் தங்கள் பணிகளைச் சரிவரச் செய்யாத
தால் ஆசிரியர்களில் சிலருக்கு தங்கள் குறைகள் நிவர்த்திக்கப்பட
வில்லை என்று கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்தனர்.
இது தொடர்பாக 7-7-1991 அன்று ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள்,
அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் நேரில் பேசி
ஆசிரியர்களின் கோரிக்கைகளைக் களைய அறிவுறுத்தி மாவட்டக்
கல்வி அலுவலர் முன் சமசரம் ஏற்படுத்தப்பட்டது. அதன்
பின்னரும் மாவட்டக் கல்வி அலுவலர் அறிவுரைகள் செயல்படுத்த
படாததாலும், தலைமை எழுத்தர் மீது புகார் பெறப்பட்ட
தாலும் அன்னாரை வேறு ஊருக்கு மாற்றி 8-8-1991ல் உத்தர
விடப்பட்டது. ஆனால் தலைமை எழுத்தர் திரு. ஜகன் மோகன்
இந்த மாறுதல் உத்தரவுக்கு எதிராக நிர்வாக தீர்ப்பாயத்தில்
தடையுத்தரவு பெற்றுள்ளார். உதவிக் கல்வி அலுவலரும் மருத்
துவ விடுப்பில் சென்றுள்ளார். ஆசிரியர்கள் குறிப்பிட்டபடி
13-9-1991 அன்று போராட்டம் நடத்தியுள்ளனர். எனவே,
ஆசிரியர்களின் குறைகளை களைய வேறொரு உதவிக் கல்வி
அலுவலரை நியமிக்கவும், தலைமை எழுத்தர் பெற்றுள்ள தடை
யுத்தரவை நீக்கி மாறுதல் உத்தரவை (Transfer Orders)
அமல்படுத்தவும் பள்ளிக்கல்வி இயக்குநரால் தக்க நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 8-9-1991 அன்று மேற்கு ஆரணி வட்டாரக்
கிளையிலே தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி ஆசிரியர்கள் எல்லாம்
ஒன்று சேர்ந்து, அவர்களுடைய பொதுக் குழுவிலே ஒரு தீர்மா
னத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை
களைப் பலமுறை மாவட்டக் கல்வி அதிகாரியிடத்திலும், முதன்
மைக் கல்வி அதிகாரி, வேலூர் அவர்களிடத்திலும், தெரிவிக்கப்
பட்டும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது குறித்து,
13-9-1991 அன்று நடுக்குப்பம் என்ற கிராமத்திலே இருக்கிற
கங்கையம்மனுக்கு அபிஷேகம் செய்து, பம்பை உடுக்கையுடனே
ஊர்வலமாக சென்று மேற்கு ஆரணி ஒன்றியத்திலே இருக்கிற
உதவிக் கல்வி அலுவலர் முன்பாக, லஞ்சப் பேய்களை ஓட்ட
வேண்டும் என்கிற ஒரு புதிய ஆர்ப்பாட்டத்தை பம்பை, உடுக்கை,
வேப்பிலையுடன் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற ஒரு
நூதனமான முறையில் இதை செய்திருக்கிறார்கள். அதிலே
அவர்களுடைய கோரிக்கையான 1-6-1988 முதல் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெய்சன் ஜேக்கப்,
நீங்கள் முழுவதையும் படிக்கத் தேவையில்லை. அமைச்சர்
கொடுத்திருக்கிற அறிக்கையின் மீது கேள்வி கேட்க வேண்டும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : கேள்விதான் கேட்கிறேன்.
1-6-1988 முதல் 31-5-1989 முடிய அவர்களுக்குச் சேர வேண்டிய
நிலுவைத் தொகை அவர்களுடைய சேமிப்புக் கணக்கிலே சேர்க்
கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை, ஆசிரி
யர் கூட்டணியைச் சார்ந்தவர்கள், அவர்களுக்குள்ள மனக்குறை
களை அல்லது நிவர்த்திக்க வேண்டிய சில குறைகளை எல்லாம்
கல்வித் துறையினுடைய அதிகாரிகளுக்குக் கொண்டு சென்றிருக்
கிறார்கள். 7-7-1991 அன்று ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளோடு
பேசி, அவைகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்படும் என்று தெரிவித்ததற்குப் பிறகு, 8-8-1991ல்
இவர்கள் சில குறிப்பிட்ட அதிகாரிகளின் மீது குற்றம் சுமத்திய
தால் அவர்கள் மீது சில தவறுகளைச் சுமத்தி, அவர்கள் பொறுப்
பற்றவர்களாக இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னதை
யொட்டி, சிலரை மாற்றுவதற்கு ஆணைப்பிறப்பித்திருக்கிறார்கள்.
அப்படி மாற்றப்பட்ட ஒரு அலுவலர், நிர்வாக தீர்ப்பாயத்திற்கு
சென்று தன்னை மாற்றியது தவறு என்று அதற்குத் தடையாணை
பெற்றுவிட்டார். அதைப்போல உதவிக் கல்வி அதிகாரியின்



மீதும் சில குறைகள் சுட்டிக் காட்டப்பட்டதை யொட்டி, அவர்
வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே, ஆசிரியர்கள்,
ஏதோ ஒன்றிரண்டு குறைகளை அந்த மாவட்டக் கல்வி அதிகாரி
அலுவலகத்திற்கு உட்பட்ட குறைகளை எடுத்துச் சொல்லியிருக்
கிறார்களா என்று பார்த்தால், அவர்கள் அரசிடத்தில் தெரிவிக்க
வேண்டிய பொதுவான கொள்கைப் பிரச்சினைகள் சம்பந்தப்
பட்ட குறைகளை எல்லாம் சேர்த்து, 17 கோரிக்கைகளை வைத்
திருக்கிறார்கள். இதற்கும் அங்கே இருக்கிற அந்த நிர்வாக
அதிகாரிகளுக்கும் இதிலே பெரும்பாலானவற்றிற்கு தொடர்பு
இல்லை. அதிலே குறிப்பாக 5-வது, 6-வது கோரிக்கைகளான
ஒப்படை விடுப்பு அனுமதி, மருத்துவ விடுப்பு அனுமதி ஆகிய
இரண்டு குறிப்பிட்ட பிரச்சினைகள் தான் அந்த அதிகாரிகள்
நேரடியாக தொடர்பு கொண்டிருக்கிற குறைபாடுகள். இன்னும்
அவர்கள் லஞ்சத்தை ஒழிப்பதற்காக காளிக் கோயிலுக்குப் போய்
பூசை செய்துவிட்டு, ஏதோ புதிய முறையில் போராட்டம்
தொடங்க வந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறை
யினால் லஞ்சம் ஒழிந்துவிடும் என்று நமக்குத் தெரியுமானால்
எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட முறைகளை மேற்கொள்ள
லாம். ஏனென்றால் ஆசிரியர்களே இந்த முறையைக் கற்றுத்
தருகிறார்கள் என்னும்போது, அவர்களிடத்திலே இருந்து
தெரிந்துகொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்கு நான் உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
ஆசிரியர்கள் ஏதோ தங்களுடைய பெயர்கள் வெளியிலே வர
வேண்டும் என்பதற்காக சில முயற்சிகளைக் கையாண்டிருக்கிறார்
கள் என்று தெரிகிறதே தவிர, உண்மையாக தங்களுக்குள்ள
குறைகளைப் போக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரி
களோடு உட்கார்ந்து பேசி, நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பிறகும்
அவர்கள் இப்படி ஆர்ப்பாட்டத்திலே ஈடுபட வேண்டிய அவசிய
மில்லை. என்றாலும் அவர்களுடைய குறைகள் பரிசீலனைக்கு
எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்கள் சுட்டிக் காட்டிய
அந்த அதிகாரிகள், தவறு இழைத்தவர்கள் உடனடியாக மாற்றப்
பட்டிருக்கிறார்கள். இன்னும் குறிப்பாக குற்றத்தைச் சுட்டிக்
காட்டியதால் சிலர்மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட
இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கைகளிலே, தேர்வு
நிலை ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை வழங்கப்படவில்லை என்பதை
ஒரு முக்கியமான கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள்.
அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதைத்தான் முன்னாலேயே குறிப்பிட்டேன்.

இவை அரசாங்கம் கொள்கை முடிவாக எடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகள். இவை, ஒரு சாதாரண டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர் அல்லது அசிஸ்டெண்ட் எஜுகேஷனல் ஆபீசரால் எடுக்கப்படுகிற முடிவுகள் அல்ல. ஆகவேதான் இந்தப் பிரச்சினைகள் அரசாங்கத்தினிடத்திலே பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில இருக்கிற பிரச்சினைகள். இவற்றுக்கு உடனடியாக நாம் பதில் சொல்ல முடியாது. தக்க நேரத்திலே அதை ஆய்வு செய்து, முடிவுகள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் நாள் சென்னை டி.பி. சத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் ஒரு வீட்டின் பகுதிகள் இடிந்து போனது மற்றும் மற்ற குடியிருப்புகள் சீர்கேடான நிலையில் உள்ளதைச் சீர்செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு மா. சுந்தரதாஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1991-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் நாள் சென்னை டி.பி. சத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் ஒரு வீட்டின் பகுதிகள் இடிந்துபோனது மற்றும் மற்ற குடியிருப்புகள் சீர்கேடான நிலையில் உள்ளதைச் சீர் செய்வது குறித்துச்" மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை.

தாண்டவராய சத்திர குடிசைப்பகுதி மாற்று வாரிய திட்டப் பகுதியில் 1971ம் வருடம் கட்டப்பட்ட ஒரு குடியிருப்பின் பின்புற கான்கிரீட் தளத்தின் ஒரு பகுதி அதனுள் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் நாளடைவில் துருப்பிடித்ததால் சேதமடைந்து





8-9-1991 அன்று பழுதடைந்து விழுந்தது. ஏற்கெனவே இரு
வருடங்களுக்கு முன் அப்பகுதியில் பூசு வேலை செய்யப்பட்டது.
தற்போது அப்பகுதியில் பழுது பார்க்கும் பணி விரைவாக நடை
பெற்று வருகிறது. இக்கட்டிட வடிவமைப்பில் கழிவறைக்குச்
செல்வதற்காக போடப்பட்ட பின்புற முகப்பை (balcony) எடுத்து
விட்டு குடியிருப்பினுள்ளேயே அமைந்துள்ள குளியலறைப்
பாதையைக் கழிவறைக்கும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில்
தற்போது பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது.
இவ்வாறு செய்வதால் பல வருடங்களுக்கு முன்பே போடப்பட்ட
பழுதுபட்ட தொங்கு முகப்புகள் தவிர்க்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அந்தப் பகுதியிலே ஒரு வீடு இடிந்து 4 பேர்கள்
இறந்து போனார்கள். மீண்டும் அந்தப் பகுதியில் ரிப்பேர் செய்வ
தாக அமைச்சரவர்களின் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அத்தகைய பகுதிகள் மிக மோசமாக இருந்தால் அவற்றை இடித்
துக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ? மேலும் இத்தகைய
சம்பவங்கள் நடக்கும்போது அந்தக் காண்ட்ராக்டரும், என்ஜினி
யரும்தான் பொறுப்பு என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து,
அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு
கிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்
பட்ட வாரிய திட்டப் பகுதியில் இந்தக் கட்டிடம் 1971 ஆம்
ஆண்டு கட்டப்பட்டது. சில இரும்புக் கம்பிகள் நாளடைவில்
துருப்பிடித்த காரணத்தால், அங்கே பழுதடைந்து சிறிது சேதம்
ஏற்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் முறையாகச் சரி
செய்வதற்கு அங்கு பொறியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, சீர்
செய்யப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட
நிகழ்வுகள் மேலும் நடைபெறாமல் இருப்பதற்கு அரசு தீவிர
முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய குடிசை மாற்று
வாரிய கட்டிடங்கள் எல்லாம் இந்தமாதிரித்தான் இருக்கும்
நிலைமை இருக்கிறது. இதை எல்லாம் அரசு உணர்ந்து, அந்தப்
பகுதிகளில் எல்லாம் உண்மையிலேயே அந்த வீடுகள் சரியாக
இருக்கிறதா என்று பார்க்க ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினை

ஏற்கனவே அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. கூடிய விரைவிலே அனைத்துக் சட்டிடப் பகுதிகளும் சீர்மைக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் 1991-92 ஆம் ஆண்டுக்கான பதினெட்டாவது, பத்தொன்பதாவது, இருபதாவது மற்றும் இருபத்தொன்றாவது அறிக்கைகளை அளிப்பார்.

முற்பகல் 10-40

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நமக்குக் கொடுத்த தெம்பாலும், ஆசியாலும் பொது நிறுவனங்கள் குழுவின் மாண்புமிகு உறுப்பினர்களின் நல்லாதரவுடனும், குழு அலுவலர்களின் உண்மையான ஒத்துழைப்புடனும் குழுவின் 18, 19, 20 மற்றும் 21-வது அறிக்கையை இன்று இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

இந்தியத்தணிக்கைத் துறைத் தலைவரின் 1983-84 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) தமிழ்நாடு மின்சார வாரியம் எரிபொருள் சிக்கனம் தொடர்பான பத்திகள் குறித்த குழுவின் 18-வது அறிக்கை ;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்) எண் 4/1989, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை தொடர்பான பத்தி குறித்த குழுவின் 19-வது அறிக்கை ;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) எண். 4/1989 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை தொடர்பான பத்தி மீதான குழுவின் 20-வது அறிக்கை; மற்றும்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) எண். 4/1989, தொழில் துறை, தொழில் முதலீட்டு நிறுவனங்களின் கடன், வசூல் செயல்பாடு தொடர்பான பத்திகளின் மீதான குழுவின் 21-வது அறிக்கை, ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர் அவர்கள் அறிக்கை வாசிப்பதற்கு முன்னால் நான் குறிப்பிட்ட சில வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன.

## 4. அறிவிப்புகள்.

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்தல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, பேரவையில் அறிமுகம் செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது:

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம். ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம்திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர், ' ஆம் ' என்க. (ஆம்).

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன் வடிவு, 1991 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி.

(ஈ) விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10.45

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(உ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்விற்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி.

(உ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச்சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



(எ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஐ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஒ) நகர் - ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்டமுன் வடிவு., 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர் - ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்ட முன்வடிவு. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஓ) வக்பு (இசுலாமிய அறக் கட்டளை) வாரியம்
(தனி அலுவலர் நியமன) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு வக்பு (இசுலாமிய அறக்கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமன) சட்ட முன்வடிவு. மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்பு (இசுலாமிய அறக் கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமன) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 33-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம் அறிமுகம் செய்தல். அரசினர் தீர்மானத்தை பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும் '' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவையும் அதற்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளையும் திரும்பப் பெறவும், இந்திய நாட்டின் கடற்கரை எல்லைப் பகுதியுடன் அவைகளை மீண்டும் சேர்க்கவும் எல்லாவிதமான உடனடி நடவடிக்கைகளை யும் முயற்சிகளையும் மைய அரசு மேற்கொள்ள வேண்டுமெனக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் முக்கிய பிரச்சினையாகிய கச்சத் தீவு குறித்த பொருள் பற்றி இன்று இப்பேரவையில் நான் ஒரு முக்கிய தீர்மானத்தை முன்மொழிய விழைகிறேன்.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களையும் இப்பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பரம்பரை பரம்பரையாக ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் நமது அப்பாவி மீனவர்களுக்கு இந்திய கடலின் எல்லை இதுதான் என்று அவர்கள் வழக்கத்தில் அறிந்து உள்ளனரே அன்றி, அதனைத் திட்டவட்டமாக அவர்களின் பயணத்தின்பொழுது கோடிட்டுக் காட்டி உணர்த்த இயலாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர். இதனை எவரும் எதிர்பார்க்கவும் முடியாது. இவ்வகை

யாக ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் அப்பாவி மீன
வர்கள் சில சமயங்களில் இந்திய எல்லையை தற்செயலாகத்
தாண்டினார்கள் என்பதற்காக அவர்கள் மிகவும் கடுமை
யாகவும் கொடுமையாகவும் 
இலங்கை கடற்படை, தண்டிக்கப்படுகின்றனர்.
நாட்டின் மீது படை எல்லையைத் தாண்டுபவர்கள் தங்கள்
நாட்டிற்குத் எடுப்பவர்கள் அல்ல என்பதும் தங்கள்
நன்கு தெளிவாகத் இங்கு விளைவிப்பவர்களும் அல்ல என்பதும்
உணர்ச்சியுடன் தெரிந்து இருந்தாலும், ஒருவித வெறுப்பு
கின்றனர்; அந்த அப்பாவி மீனவர்களைச் சுட்டுத் தள்ளு
கின்றனர்; அவர்களின் படகுகளை மூழ்கடிக்கச் செய்
சென்று சேதப்படுத்துகின்றனர்; அவர்களைப் பிடித்துச்
எல்லாம் துன்புறுத்துகின்றனர். இந்த இன்னல்களுக்கு
காலமாக காரணம் நமது மீனவர்களுக்கு ஆண்டாண்டு
மீன்பிடி கச்சத்தீவில் இருந்துவந்த மீன்பிடிக்கும் உரிமை,
பட்டதும், வலைகளை உலர்த்தும் உரிமையாகக் குறைக்கப்
கொண்ட மைய அரசு இலங்கை அரசுடன் ஏற்படுத்திக்
வர்கள் உடன்படிக்கைகளும்தான் ஆகும். தமிழக மீன
மீன்பிடி இன்று உள்ள உடன்பாட்டின்படிக்கூட தங்களது
யாத நிலை வலைகளை கச்சத்தீவில் உலர்த்தச் செல்ல முடி
படையினர் ஏற்பட்டுள்ளது. இதனை இலங்கை கடற்
அத்துமீறிய தடுக்கின்றனர். இலங்கை கடற்படையின்
மதித்து நடக்க செயல்களாலும் அவர்கள் உடன்படிக்கையை
கொண்ணாத் மறுப்பதாலும் தமிழக மீனவர்கள் தாங்
இது மிகவும் துன்பத்தை நித்தம் சந்தித்து வருகின்றனர்.
கால கட்டங்களில் வருந்தத்தக்க நிலைமை ஆகும். பல்வேறு
மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற நம்
வீழ்த்தப்பட்டார்கள் கச்சத்தீவின் அருகில் சென்றபோது, ஒன்று சுட்டு
கொண்டு அல்லது கைதிகளாக இலங்கைக்கு
நமக்குக் செல்லப்பட்டார்கள் என்ற அவல செய்திகள்
எல்லாம் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. இவற்றுக்கு
கருதியே ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக்
தீவினைத் சென்ற சுதந்திரநாள் விழாவின்பொழுது கச்சத்
சார்பில் திரும்பவும் மீட்க வேண்டும் என்பதை அரசின்
மிகத் தெரிவித்து இருந்தேன். அரசின் இம்முடிவை
தரத் தெளிவாகத் தெரிவித்து இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்
கீழ்க்கண்ட தீர்வு காண வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு
தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

முற்பகல் 10-55

### தீர்மானம்.

" தொன்று தொட்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை,
இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில்
கடற்கரைகளில் வாழ்ந்து வந்த தமிழ்நாட்டு மீனவர்கள்



இலங்கைக்கும் இந்திய நாட்டிற்கும் நடுவில் உள்ள கடலில், குறிப்பாக கச்சத்தீவின் அருகில், மீன்பிடித்து அன்றாட ஜீவனத்தை நடத்தி வந்ததும், வருவதும் வரலாற்று உண்மையாகும். 1974 மற்றும் 1976-இல் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் இந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள கடலில் அந்தந்த நாடுகளின் எல்லையையும், உரிமைகளையும் வரையறுத் துள்ளன. குறிப்பாக, 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் படி இரு நாடுகளும் பாரம்பரியமாகத் தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்கிற அடிப்படை கருத்துக்களும் சேர்க் கப்பட்டிருந்தன. அந்த அடிப்படையிலே தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் கச்சத்தீவுக்கு அருகில் உள்ள கடலில் தொடர்ந்து மீன் பிடித்துத் தங்களுடைய ஜீவனத்தை நடத்த முற்பட்டனர். ஆனால், இந்த ஒப்பந்தத்தின் அடிப் படையில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு மாறாக, இலங்கை கடற்படையினர், குறிப்பாக இலங்கை கப்பற் படையினர், தமிழக மீனவர்கள் தங்களுடைய வழக்கப்படி கடலில் மீன் பிடிக்க முயலும் பொழுதெல்லாம் அவர் களைத் தாக்கியும் துன்புறுத்தியும் அவர்களுடைய வலைகளை அறுத்தும், அவர்களுடைய விசைப்படகுகளைக் கைப் பற்றியும் படகுகளைக் கொளுத்தியும், மூழ்கடித்தும், தமிழக மீனவர்களை பலவிதமான வழிகளில் இன்னல்களுக்கு ஆளாக்கி வருகின்றனர். இதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை அவ்வப்போது தமிழ் நாடு அரசு மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந் துள்ளது.

அண்மையில் இலங்கை கடற்படையினர் தமிழக மீன வர்கள் மீது தாக்குதலை அதிகப்படுத்தியுள்ளனர். அவர் களுடைய விசைப்படகுகளை கைப்பற்றி வைத்துக் கொண் டுள்ளனர். தாக்குதலின் உச்ச கட்டமாக தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, மீனவர்களைக் காயப்படுத்தியுள்ளனர். கச்சத்தீவின் அருகில் இவர்கள் மீன் பிடித்தார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக இக் கொடுமைகள் யாவும் நடந்துள்ளன.

1983-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முடிய இலங்கை கப்பற்படையினர் தமிழக மீன வர்கள் மீது தாக்குதல் நடத்திய நிகழ்ச்சிகள் 236 ஆகும். 303 படகுகள் தாக்கப்பட்டிருக்கின்றன. 486 மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். 51 படகுகள் நாசமாக்கப் பட்டுவிட்டன. 135 மீனவர்கள் தாக்குதலுக்குட்பட்டு

காயமடைந்துள்ளனர். 50-க்கும் மேற்பட்ட மீனவர்கள்
மரணம் அடைந்துள்ளனர். 57 மீனவர்கள் துப்பாக்கிச்
சூட்டினால் காயமடைந்துள்ளனர். இலங்கை கப்பற்படை
65 மீனவர்களின் விசைப்படகுகளைக் கைப்பற்றியும், 205
மீனவர்களைக் கைதும் செய்துள்ளனர். குறிப்பாக இவ்
வாண்டு இந்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை அதிகமாகி
யுள்ளது.

தமிழக மீனவர்கள் மீது ஒருவித காரணமுமில்லாமல்
இலங்கை கப்பற்படையினர் இப்படித் தாக்குதல் நடத்தி
துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களுக்கு பலவித
இன்னல்களைத் தொடர்ந்து செய்து வருவதை தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.
இந்தக் கண்டனத்தை மைய அரசின் மூலமாக இலங்கை
அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறது.

மைய அரசும் தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற
தாக்குதல்களை இலங்கை கப்பற்படையினர் நடத்தி
வருவதைக் கண்டித்தும், இதுபோன்ற சம்பவங்கள் இனி
மேல் நடக்காமல் பார்த்துக் கொள்வது இலங்கை அரசின்
பொறுப்பாகும் என்றும் இலங்கை அரசை வற்புறுத்த
வேண்டுமென்றும் மைய அரசை தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவை கேட்டுக் கொள்கிறது.

இலங்கை கப்பற்படையினரால் கொல்லப்பட்ட இந்திய
மீனவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசிடமிருந்து
நஷ்ட ஈட்டினை மைய அரசு பெற்றுத்தர வேண்டும்
என்றும்; இலங்கை கப்பற்படையின் தாக்குதலால் பாதிக்கப்
பட்டு உடைமைகளை இழந்த தமிழக மீனவர்களுக்கு
போதுமான நஷ்ட ஈட்டினை இலங்கை அரசிடம் வற்புறுத்தி
மைய அரசு பெற்றுத்தர வேண்டுமெனவும், தமிழக மீன
வர்கள் அமைதியான வாழ்க்கை நடத்திடத் தேவையான
சுமுகமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமெனவும்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இதன் மூலம் மைய
அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இந்தப் பிரச்சினைக்கெல்லாம் அடிப்படையாக அமைந்
துள்ள காரணம், 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை
இலங்கை அரசு மீறி நடந்ததும், வழங்கப்பட்டுள்ள உரிமை
களின்படி தமிழக மீனவர்களுக்கு அவர்களுடைய பரம்பரை
யான அனுபோக உரிமை பறிக்கப்பட்டதும்தான்.



முற்பகல் 11-00

எனவே, இந்தப் பிரச்சினைக்கு உடனடி முடிவு காணப்
படவேண்டும் என்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விரும்புகின்றது. மேலும் ஏற்கனவே தமிழ்நாடு அரசு
முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டின் பிரதம அமைச்சர்
அவர்களுக்கு இது குறித்து எழுதிய கடிதத்தில் கேட்டுக்
கொண்டபடி, இந்திய அரசு இலங்கை அரசுடன்
தொடர்பு கொண்டு கச்சத் தீவையும் அதற்கு அருகிலுள்ள
கடற்கரைப் பகுதிகளையும் திரும்பப் பெறவும், இந்திய
நாட்டின் கடற்கரை எல்லைப் பகுதியுடன் அவைகளை
மீண்டும் சேர்க்கவும், எல்லாவித உடனடி நடவடிக்கை
களையும், முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மைய அரசைக் கேட்டுக்
கொள்கிறது''. (மேசையைத் தட்டும் ஒலி.)

தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவும், அவர்கள் ஆண்
டாண்டுக் காலமாய் உரிமையோடு மீன் பிடித்துவந்த கச்ச
தீவுப் பகுதியில் அதே உரிமையோடு சென்று மீன்பிடித்து
அச்சமின்றித் திரும்பி வரவும், அவசர அவசியமான, நட
வடிக்கையான இத்தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்
பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவிப்ப
தோடு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தர
வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொண்டு அமை
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் தொடங்கு
கிறது. ஒருமுகமாக நிறைவேற்றக்கூடிய இத்தீர்மானத்தில்
மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து அவரவர்
களுடைய கட்சிப் பிரச்சினைகளை இதில் இழுத்துவிடாமல்
பேசுகிற சுமுகமான விவாதத்திற்கு இடம்
அளிக்கும் என்று கருதுகிறேன். எனவே, அவ்வகையில்
விவாதத்தில் கலந்துகொள்கிற உறுப்பினர்கள் பேசுமாறு
கேட்டுக் கொள்கிறேன். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய
பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத்தீவுப் பிரச்சினை
என்பது, தமிழகத்திற்கு, அதிலும் குறிப்பாக எங்களுடைய
இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மிகமிக முக்கியமான ஒரு
பிரச்சினையாகும். இராமநாதபுரம் மாவட்டம், புதுக்
கோட்டை மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் போன்ற

மாவட்டங்களில் இருப்பவர்கள் இலங்கையோடு நெருங்கிய
தொடர்பு உடையவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல்,
நாள்தோறும் உறவு வைத்துக்கொள்கின்ற அளவிற்கு பல
தொடர்புகள் உள்ள பகுதியாகும். நம்முடைய இராமநாத
புரம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள்.

அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள்
சொன்னது போல, கச்சத்தீவு என்பது தமிழகத்தோடு
நெருங்கிய ஒரு பகுதி என்பதில் எந்தவிதமான சந்தேகமும்
கிடையாது. கச்சத் தீவுப் பகுதிக்கு ஒரு காலத்தில், தமி
ழகத்தோடு, தமிழகம்-இலங்கை என்று வித்தியாசம்
இல்லாமல் வெள்ளையர்கள் இந்தியா-இலங்கையை ஆண்டு
கொண்டிருந்த நேரத்தில், எந்த வேறுபாடும் இல்லாமல்,
நம்முடைய மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். சுதந்
திரம் வந்தபிறகு தான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம்
எழுந்தன. 1971-க்குப் பிறகு இந்தியா ஒரு வல்லரசு நாடு
என்கிற ஒரு சூழ்நிலை உருவாகிய காலத்திலேதான், இந்தக்
கச்சத் தீவு பிரச்சினை என்பது ஒரு பெரிய பிரச்சினையாக
உருவெடுத்தது.

கச்சத்தீவு இலங்கையில் இல்லாவிட்டால், இந்தியா ஒரு
காலத்தில் இலங்கையையே அபகரித்துவிடும் என்றெல்லாம்
வாதாடியவர்கள் உண்டு. அதன் காரணமாக, நம்முடைய
அன்னை இந்திரா காந்தி அவர்கள், இந்தியாவிற்கு, வெளி
நாடுகளிலிருந்து குறிப்பாக, அமெரிக்கா போன்ற வல்லரசு
களிடமிருந்து ஆபத்து வரக்கூடாது என்பதற்காக இலங்கை
அரசோடு பேசி, ஆள் நடமாட்டம் இல்லாத இந்தக் கச்சத்
தீவு பகுதியை, அவர்களுக்குக் கொடுப்பதில் நமக்கு எந்த
விதமான பாதிப்பும் வராது என்று நினைத்து, அன்று
இருந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி
அவர்களோடு கலந்து பேசி, கச்சத் தீவினை இலங்கை
அரசுக்கு ஒப்படைத்தார்கள். அப்படி ஒப்படைத்த நேரத்தில்
கச்சத் தீவினால் நமக்கு ஏற்படுகிற நன்மைகள் அனைத்
தையும் மிக வலிவாகப் பெற்றிருக்கிறோம் என்பதற்கு
பல ஆதாரங்கள் இருக்கின்றன. கச்சத் தீவில் நம்முடைய
மீனவர்கள் தாராளமாக சென்று மீன் பிடிக்கலாம். வலை
களை உலர்த்தலாம். அதற்கு எந்தவிதமான விசாவும்
தேவையில்லை. கச்சத் தீவில் ஒரு அந்தோணியார் கோவில்
இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு நம்முடைய பக்தர்கள்
ஆண்டுதோறும் மார்ச் மாதம் நடைபெறுகின்ற அந்தக்
திருவிழாவிற்கு தாராளமாகச் செல்லலாம் என்றும், அதற்கும்
எந்தவிதமான விசாவும் இலங்கை அரசிடமிருந்து பெற
வேண்டியதில்லை என்றும் மிகத் தெளிவாக இருக்கிறது.



முற்பகல் 11-05

அதே போல் கச்சத் தீவிற்கு கப்பல்கள் மூலமாகவும்,
வேறு படகுகள் மூலமாகவும் செல்வதற்கும் தடையில்லை
என்பதற்கான ஆதாரங்களும் நம்மிடையே ஏராளமாக
இருக்கின்றன. இந்தக் கச்சத் தீவு ஒப்பந்தம் ஏற்பட்டது
1974 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் தேதி. அதில்
நம்முடைய பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி
அவர்களும்; அன்றைய இலங்கைப் பிரதமர் அவர்களும்
கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதில் ஆர்ட்டிகிள் 5, 6
என்று இரு ஆர்ட்டிகிள் இருக்கின்றன. அவற்றில் நான்
மேலே சொன்ன கருத்துக்கள் அத்தனையும் மிகத் தெளி
வாக இருக்கின்றன. கச்சத் தீவு பகுதி என்பது அந்த ஆள்
நடமாட்டம் இல்லாத பகுதி ஒன்று தான் அவர்களுக்குக்
கொடுக்கப்பட்டதே தவிர, மற்ற அனைத்து உரிமைகளும்
நமக்கு உண்டு என்கின்ற வகையிலேதான் அது இருந்திருக்
கிறது. ஆனால் பிறகு 1976 ஆம் ஆண்டு 23—3—1976
அன்று இலங்கை அரசினுடைய வெளிநாட்டு செயலாளரும்,
இந்திய அரசினுடைய வெளிநாட்டுச் செயலாளரும் சேர்ந்து
இன்னொரு அக்ரிமெண்டு போட்டிருக்கிறார்கள். அதிலே
அவர்களுக்கு இந்த எல்லையை நிர்ணயித்திருக்கிறார்கள்.
எல்லை என்பதை அவர்கள் மிகத் தெளிவாக, விவரமாக
சொல்லாததன் காரணமாக சில குழப்பங்கள் நம்முடைய
அதிகாரிகளுக்கே ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும்கூட,
1983 ஆம் ஆண்டு வரை இந்தப் பிரச்சினையில் எந்த
விதமான விவகாரமும் ஏற்படவில்லை. நம்முடைய மீனவர்
கள் தாராளமாக சென்று மீன் பிடித்து எல்லா உரிமை
களோடும் வந்து கொண்டிருந்தார்கள். 1983 ஆம் ஆண்டிற்குப்
பிறகு தான் இந்தப் பிரச்சினை எல்லாம் வந்திருக்கிறது.
அப்போது இலங்கை அரசு என்ன செய்தார்கள் என்று
சொன்னால், 1976 ஆம் ஆண்டு செயலாளர்களுக்கு மத்தி
யில் ஏற்பட்ட அந்தப் பிரச்சினையை பெரியதாக்கி
எல்லையைத் தாண்டி நீங்கள் வரக் கூடாது, கச்சத் தீவு
எங்களுடைய எல்லை என்று குதர்க்கம் பேசத் தொடங்கி
னார்கள். அதிலே நமக்கு ஒரு பெரிய துரதிருஷ்டமான
செயல் என்னவென்று சொன்னால், நம்முடைய மத்திய
அரசில் இருக்கின்ற வெளிநாட்டுத் துறை அரசு அதிகாரிகள்
கூட சிலர்—ஒரு வேளை அவர்களுக்கு ஆங்கில அறிவு
குறைவோ என்னமோ தெரியாது. நம்முடைய
அன்னை இந்திரா காந்தி அவர்கள் போட்ட அந்த அக்ரி
மெண்டில் எல்லை தாண்டக் கூடாது என்றிருக்கிறது என்று
சொல்லி— நம்முடைய கடற்படை அதிகாரிகளுக்கு அவர்கள்
உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நம்முடைய
கடற்படை அதிகாரிகள் நம்முடைய மீனவர்களை அங்கே
சென்றால் நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு தரமாட்டோம்
என்று மீனவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்
காரணமாகத்தான் அங்கே பிரச்சினைகள் எல்லாம் உருவாகி
இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் மிகுந்த கவனத்தோடு மிக அருமையான தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதிலே எனது கோரிக்கை என்னவென்று சொன்னால், கடைசியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது, இந்தத் தீர்மானத்தை அதாவது நம்முடைய அக்ரிமெண்டையே ரத்து செய்து திரும்பப் பெறவேண்டுமென்று • மட்டும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று நம்முடைய மத்திய அரசு இதில் தலையிடுமானால், உலகத்தில் பல பிரச்சினைகள் நமக்கு ஏற்படக் கூடும். நம்முடைய மத்திய அரசு பல நாடுகளோடு ஒப்பந்தங்கள் செய்திருக்கிறது. கச்சிரன் பகுதி என்பதற்கு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அதேபோன்று பெரு என்கின்ற பகுதிக்கு பங்களா தேஷோடு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். பர்மாவோடு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இப்படி ஏராளமான ஒப்பந்தங்கள் மத்திய அரசு செய்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் எந்தவிதமான தவறும் கிடையாது. ஆனால் நம்முடைய அரசு அதிகாரிகள் அதைப் புரிந்து கொண்டு செயல்படுத்தாதது தான் காரணம் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. நம்முடைய மத்திய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் ஏப்ரல் மாதம் 1985 ஆம் ஆண்டு 10 ஆம் தேதியன்று பாராளுமன்றத்தில் மிக விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சின் ஒரு பகுதியை, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதியோடு நான் இங்கே படிக்க விரும்புகிறேன். 'There is another agreement. The first agreement was signed by the Prime Minister. Another agreement, at the level of Secretaries, was entered into on 23rd March 1976. It is this agreement which has caused some misapprehension about the legal position. I think it is the erroneous understanding of this agreement, by perhaps some officers of the Ministry of External Affairs, which has given rise to all kinds of complications. The agreement says that the IBL.... " Here, IBL means Indian Border Line.

"...which has been drawn for the Palk Strait will be extended to the Gulf of Mannar which is in the south and to the Bay of Bengal which is in the North and the East. Kindly visualise the map. The Bay of Bengal is in the north and the east; the Gulf of Mannar is in the south and the west; and the Palk Strait is in between. The IBL was drawn for the Palk Strait and the IBL was to be extended to the Gulf of Mannar and the Bay of Bengal. This agreement has no Clause corresponding to Articles 5 and 6. In fact, I would go to the extent of saying that it is a matter which is to be enquired into as to why there was no clause corresponding to Articles 5 and 6 when at the level of Secretaries a supplemental agreement was entered into. It was to supplement an earlier agreement signed between the two Prime Ministers. Any way,



the second agreement did not supersede the first agreement. I want this to be made clear that the second agreement is supplemental to the first agreement. It did not supersede the first one. It could not have superseded the first agreement. It was only an extension of the International boundary line.

•

முற்பகல் 11-10

அதோடு அவர் என்ன சொல்லுகிறார் என்று சொன்னால் நம்முடைய அதிகாரிகளுடைய கவனக் குறைவின் காரணமாகத் தான் இந்தச் சூழ்நிலைகளெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. 'What is IBL? It is not a fence; it is not a wall; it is not a curtain. It is National line. How is the poor fisherman to know whether he is crossing the line or not? The Coast Guard Patrols the area for two hours in the morning and two hours in the evening and thus they berth the shore of Rameswarm. What about others or what about other hours? Who will protect them during the night? Therefore I plead that we have to protect our fishermen in every way.' என்று நம்முடைய மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் 1985 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் பேசும்போது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த 1974 ஆம் ஆண்டு தீர்மானத்தை நம்முடைய அதிகாரிகள் தான் குழப்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர, தீர்மானம் மிகத் தெளிவாகத்தான் இருக்கிறது. ஆகவே தீர்மானத்தை வலியுறுத்தி அதைச் செம்மையாக நடத்துகின்ற வகையில், நம்முடைய மத்திய அரசை வலியுறுத்துகின்ற வகையிலே, தீர்மானத்தை திருத்தி அனுப்புமாறு கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவர்களுக்கு ஜெருசலம் புனிதத் தலம், முகம்மதியர்களுக்கு மெக்கா புனிதஸ்தலம், எங்களுக்கு புனிதஸ்தலம் காவல் தெய்வம் புரட்சித் தலைவி தான் என்று கருதுகிற தமிழக மீனவர்களின் நலன் கருதி, அவர்களுடைய தொழில் பாதுகாப்பு கருதி, அவர்களின் பாதுகாப்பிற்காக இன்றைய தினம் தமிழகத்தின் காவல் தெய்வம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த தீர்மானத்தை மீனவர்களின் சார்பாக, எனது தொகுதி மக்களின் சார்பாக வரவேற்று சில கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

சிப்பிகளை சிந்திச் சிரிக்கும் சின்னஞ்சிறு தீவாக விளங்கிக் கொண்டிருக்கிற கச்சத் தீவு இராமாயண காலத்திலிருந்து இராமநாதபுரம் இராஜா ஆண்ட காலம் வரை, கற்காலத்திலிருந்து கருணாநிதி 1974-ல் முதலமைச்சராக இருந்த காலம் வரை கச்சத் தீவு தமிழகத்தின் அங்கமாக, இந்திய துணைக் கண்டத்திற்கு சொந்தமாக இருந்து வந்திருக்கிறது. அந்தக் கச்சத் தீவை நாம் இன்று இழந்திருக்கிறோம். கற்பழிக்கப்பட்ட பெண்ணொருத்தி தான் கற்பழிக்கப்பட்டதைப் பற்றி கவலைப்படாமல், எனக்கு பத்து ரூபாய் கிடைத்ததே என்று பெருமைப்படுவது போல, கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது நம்முடைய உரிமை பறிபோகிறதே என்று கவலைப்படாமல், நமக்கு சொந்தமான மண்ணை இழக்கின்றோமே என்று வேதனைப்படாமல், அரசியல் ஆதாயத்திற்காக, முதலமைச்சராக தான் நீடித்து இருக்க வேண்டும் என்பதற்காக கச்சத் தீவை தாரை வார்த்து விட்டார்கள். அதனுடைய பயனை இன்றைக்கு நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு மீனவர்கள் மீன் பிடிக்க முடியவில்லை. மீனவர்கள் கடத்தப்படுகிறார்கள். மீனவர்கள் சுட்டுக் கொல்லப் படுகிறார்கள். அவர்களுடைய விசைப்படகுகள் கடத்தப்படுகின்றன.

முற்பகல் 11-15

அவர்களுடைய வலைகள் இன்றைக்கு கடத்தப்படுகின்றன. அறுத்து எறியப்படுகிறது. இப்படிப்பட்ட கொடூரமான, கொடுமையான சம்பவங்கள் எல்லாம் தொடர்ந்து ஏழாண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்தக் கொடுமைக்கு காரணமாக இருந்த, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, கருணாநிதி அதைப்பற்றி அக்கறைப்படவில்லை. பாராண்ட இனம், நாடாண்ட இனம், கங்கையை வென்றவர்கள் நாம், கடாரத்தை வென்றவர்கள் நாம், களம் பல கண்டவர்கள் நாம் என்றெல்லாம் வீரம் பேசிய கருணாநிதி அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த போது நமக்குச் சொந்தமான மண்ணை இழந்துவிட்டார். இன்றைக்கு மீண்டும் பெற வேண்டும் என்பதற்காக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு துணிச்சலோடு கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்ற வைராக்கியத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

ஆனால் அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள் மீனவர்களைப் பற்றி கவலைப்படாமல் அவர்களுக்கு தொழில் பாதுகாப்பு இருக்காதே என்று வேதனைப்படாமல்



அன்றைக்கு வாய்மூடி இருந்தார்கள். ஆனால் இன்றைக்குச் சொல்கிறார்கள், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கச்சத் தீவை மீட்பேன் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகு சொல்கிறார்கள், கானல் நீரிலே மீன் பிடிக்க முடியுமா? காகிதப் பூவிலே தேன் எடுக்க முடியுமா? புரட்சித் தலைவியால் கச்சத் தீவை மீட்க முடியுமா? என்று கேட்கிறார்கள். நான் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கிலாந்துக்கு கடத்தப்பட்ட ஆண்டவனையே மீட்டு வந்தவர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதுமாத்திரமல்ல, அண்மையிலே 21 மீனவர்கள்—கடத்தப்பட்ட மீனவர்கள்—இலங்கையிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அத்தகைய ஆற்றல் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு உண்டு. இரண்டு ஆண்டுக் காலம் கருணாநிதி முதலமைச்சராக இருந்தாரே, மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்களே, அதற்காக வருத்தப்பட்டதுண்டா? மீனவர்கள் கடத்தப்படுகிறார்களே என்று வேதனைப்பட்டதுண்டா? மீனவர்கள் கடத்தப்பட்டபோது, கடத்தப்பட்ட மீனவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கு கருணாநிதி நடவடிக்கை எடுத்தது உண்டா? இல்லை. ஆனால் தமிழர் நலன் கருதி, மீனவர் நலன் கருதி, மீனவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும், மீனவர்களை பாதுகாக்க வேண்டும் என்கிற உணர்விலே மீனவ நண்பனாக இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கச்சத் தீவு பல நூறு ஆண்டுக் காலமாக நம்முடைய இராமநாதபுரம் ராஜாவுக்குச் சொந்தமாக இருந்தது. 1974 வரை நிலப் பதிவேடுகளில் கச்சத் தீவு உரிமை இராமநாதபுரம் ஜமீன் சமஸ்தானம் பெயரிலே பதிவாகியிருக்கிறது. இன்றைக்கு தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையிலே கடல் பகுதி இருக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் அது நிலப்பகுதியாகத்தான் இருந்தது. 1480 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலிலே கடல் கொந்தளிப்பிலே இன்றைக்கு அது நீர்ப் பகுதியாக மாறியிருக்கிறது. தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலே 17 திட்டுக்கள் உள்ளன. அதிலே தலைமன்னாருக்கு அருகே உள்ள கொல்லுக்காரன்பட்டி திட்டு என்ற ஒன்றைத் தவிர 16 திட்டுக்கள் இராமநாதபுரம் ராஜாவுக்குச் சொந்தம். கச்சத் தீவிலே சாய வேர்களை எடுத்துக்கொள்ளும் உரிமையை இராமநாதபுரம் ராஜா 2—7—1980-ல் முத்துசாமிபிள்ளை, மாப்பிள்ளை மரக்காயர், முகமது அப்துல் காதர் ஆகியோருக்கு

வழங்கியுள்ளார்கள். இந்த
சார் பதிவாளர் அலுவலகத்திலே ஒப்பந்தம் பாம்பன்
மாத்திரமல்ல, கச்சத் தீவிலே பதிவாகியுள்ளது. அது
எடுக்க இராமநாதபுரம் ராஜா சங்கு குளிக்க, முத்து
விட்டுள்ளார். அதுமாத்திரமல்ல. 1913-லே குத்தகைக்கு
உரிமையை 1803-ல் வெள்ளைக்காரர்கள் நில வரி வசூலிக்கும்
ராணிக்கு வழங்கியிருக்கிறார்கள். இராமநாதபுரம்
லாந்து ராணி விக்டோரியா, 1857-ல் ஆண்ட இங்கி
சமஸ்தானத்திற்கு சொந்தமானது கச்சத் தீவு இராமநாதபுரம்
யுள்ளார்கள். கச்சத் தீவில் என்று பிரகடனப்படுத்தி
இன்றைக்கும் இருக்கிறது. அந்தோணியார் கோவில்
திருவாடானை தாலுக்காவைச் அந்தக் கோவிலைக் கட்டியவர்கள்
சார்ந்த சீனிக்கருப்பன் சேர்ந்த நம்புதாழையை
அந்த அளவிலே இன்றைக்கு படையாச்சி என்பவர். ஆகவே
சொந்தம். கச்சத் தீவால் கச்சத் தீவு நமக்குத் தான்
கிடைக்கிறது. சேது நமக்கு அந்நியச் செலாவணி
நமக்கு கச்சத் தீவு கால்வாய்த் திட்டம் நிறைவேற-
கைக்கு சொந்தமாக சொந்தமாகி இருக்க வேண்டும் இலங்
அமைக்கக் கூடாது இருந்தால் இந்தியா கால்வாயை
வாதாடக் கூடும். என்று இன்றைக்கு இலங்கை அரசு
இலங்கைத் துறைமுகம் சேது கால்வாய் ஏற்படுத்தப்பட்டால்
இலங்கை அரசு அதற்காக வெறிச்சோடிப் போய்விடும். ஆகவே
கப்பல் போக்குவரத்து, அஞ்சுகிறது. ஆகவே மீன் பிடிப்பு
உரிமை மட்டுமல்ல ; யாத்திரை போன்ற பற்பல
திட்ட செயல்பாடு, நாட்டுப் பாதுகாப்பு சேது சமுத்திர
காரணங்களுக்காக கச்சத் எண்ணை வளம் ஆகிய முக்கிய
வேண்டும். பாக்ஜலசந்தியில் தீவை நாம் திரும்பப் பெற
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பெட்ரோலியம் இருப்பது
காப்புக் கருதி மட்டுமல்ல, ஆகவே, இன்றைக்கு
மல்ல, இன்றைக்கு கச்சத் மீனவர்கள் நலனுக்காக மட்டு
பட்டால் மத்திய அரசுக்கும் தீவு நமக்கு சொந்தமாக்கப்
அந்நியச் செலாவணி கிடைக்கும்.

முற்பகல் 11-20

ஆகவே அதற்காக கச்சத்தீவை மீட்க வேண்டிய கால
கட்டத்தில் இன்றைக்கு இருக்கிறோம். ஆனால் கச்சத்தீவு
நமக்குச் சொந்தம். கச்சத்தீவை மீட்கிற தீர்மானத்தினை
இங்கே நிறைவேற்றுவதின் மூலம் கச்சத்தீவை மீட்டால்
மீனவர்கள் நிம்மதியாக, பாதுகாப்பாக மீன் பிடிக்க முடியும்
மீனவர்கள் பாதுகாப்பாக உயிர் வாழ முடியும். அவர்
கள் தங்களுடைய தொழிலைச் செய்ய முடியும். அதற்காக
கச்சத்தீவை மீட்கிற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.
ஆனால் இன்றைக்கு இந்தத் தீர்மானத்திலே கட்சி பார்க்க
வேண்டாம் என்று நான் தெளிவோடு சொல்லிக்கொள்கிறேன்.



நம்முடைய சென்னை மாநகரம் யாருக்குச் சொந்தம்
என்ற பிரச்சினை வந்தபோது அது ஆந்திராவுக்குச்
சொந்தமா ? அல்லது தமிழ்நாட்டுக்குச் சொந்தமா என்ற
பிரச்சினை வந்தபோது அன்றைக்கு காங்கிரஸ் கட்சியில்
மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி
இருந்தாலும் சென்னை தமிழ்நாட்டுக்குத்தான் சொந்தம்
என்று சொல்லி நான் போராடுவேன், சென்னையை தமிழ்
நாட்டுக்குத் தரவில்லை என்று சொன்னால் நானே போராடு
வதற்கு தலைமை தாங்குவேன் என்று கட்சி வேறுபாடு
இன்றி அன்றைக்கு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் செயல்
பட்டார்கள். நமக்கு சென்னை வந்தது. ஆகவே, கச்சத்
தீவுப் பிரச்சினையிலே 1974 ஆம் ஆண்டில் பிரதமராக
இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருந்தார்கள் என்ப
தற்காக அந்த ஒப்பந்தத்தை இன்று நிறைவேற்ற வேண்டும்
என்று சொல்லுகிறபோது காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு
நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இதிலே கட்சி
வேறுபாடு பார்க்காதீர்கள். கச்சத்தீவை மீட்கிற இந்தத்
தீர்மானத்திற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைப்புத் தர
வேண்டும் என்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன் மீனவர்கள் சார்பாக.

அதுமட்டுமல்ல, இன்னும் ஒன்றையும் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். வங்கத்திலே முதலமைச்சராக காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவர் இருந்தார். பாகிஸ்தானுக்கு அன்
றைக்கு பெஷாவரை கொடுத்தபோது, வங்கத்திலே
இருந்த அந்த காங்கிரஸ் முதலமைச்சர் மத்தியில் காங்கிரஸ்
ஆட்சி இருந்தாலும் பெஷாவரை விட்டுக் கொடுக்கக்
கூடாது பாகிஸ்தானுக்கு என்று சொல்லி, குடியரசு நாளை
துக்க நாளாகக் கொண்டாடினார்கள். குடியரசு தினத்
தன்று கருப்புக் கொடியை ஏற்றினார்கள். ஆகவே, இந்த
உணர்விலே தமிழகத்தின் நலன் கருதி ; மீனவர்கள் நலன்
கருதி ; மீனவர்கள் பாதுகாப்பு கருதி, இந்தியாவின் பாது
காப்புக் கருதி, கச்சத்தீவை மீட்கிற இத்தீர்மானத்தைக்
கொண்டு வந்திருக்கிற நம்முடைய இதய தெய்வம் மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டி பாதம்
தொட்டு வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமார
தாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக முதலமைச்சர்
அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை நான்
ஆதரித்துப் பேசுகின்ற சூழ்நிலையில் உங்கள் முன்னால் சில
கருத்துக்களை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கச்சத்தீவுப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், 1962
ஆம் ஆண்டு சைனாவுடன் நாம் போர் தொடுத்தபோது
இந்திய நாட்டினுடைய வரைப்படத்தின் அளவு குறைந்ததை

நீங்கள் மறந்து இருக்க மாட்டீர்கள். அதேபோல் காங்கிரஸ் கட்சியினுடைய கொடைத்தன்மையின் அடிப்படையில் இங்கே இருந்த கச்சத்தீவை தாரை வார்த்து இருக்கிறார்கள். இப்படியாக நம்முடைய இந்திய நாட்டினுடைய எல்லைப் பகுதிகளை காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சியின்போது சுருக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் குறிப்பாக எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள்; அவர்களுடைய தொழிலைச் செய்ய முடியாமல் எவ்வளவு சிரமத்திற்கு ஆட்படுகிறார்கள், எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவையிலே இருக்கிற அனைத்துத் தரப்பினரும் ஒரு மனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த உணர்வின் அடிப்படையில் அனைவரும் பேச வேண்டுமென்று நீங்கள் ஏற்கனவே கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். முதல் வார்த்தையையே இங்கே நம் நண்பர் என்ன ஆரம்பிக்கிறார் என்பதை நீங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து இது தொடருமேயானால் அவருக்கு பிரச்சினை இல்லை. ஜனதா தளம் எப்போது வந்தது. யாருக்கும் தெரியாது. அவருக்கு மூதாதையர்கள் யார் என்பதை தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். ஜனதா கட்சி சில காலம் இருந்திருக்கிறது; அதற்கு முன்னால் அவர் இருந்த கட்சியினுடைய நிலை என்ன என்பது அவருக்கு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே பிரச்சினையை ஆரம்பித்து வைக்க வேண்டாம்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** தலைவர் அவர்களே, அவர் பொறுப்பு ஏற்க முடியுமா? என்னுடைய கட்சியின் சார்பில் நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டு என்னால் பேச முடியும். ஒவ்வொரு கட்டத்திலும் ஏன் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியும். அவர் அதேபோல் சொல்ல முடியுமா? ஜனதா தளத்தினுடைய அன்றைய நிலை என்னவென்று சொல்ல முடியுமா? ஏன் அன்று கச்சத்தீவை தர வேண்டிய நிலை ஏற்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள்.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் யுத்தம் நடைபெற்றதற்குப் பின்னாலே உலகம் முழுவதும் நம்மை சந்தேகக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தார்கள். இந்தியா ஒரு





வல்லரசாக முயற்சிக்கிறது. இந்தியா அந்தப் பிராந்தியத்தில் ஒரு மூத்த சகோதரனைப் போல நடந்து கொள்ள எத்தனிக்கிறது. அத்தனை பேருக்கும் கட்டுப்பாடுகளை விதிக்கவும் இந்தியா முன்வருகிறது என்று குற்றம் சுமத்தினார்கள். அதுவும் குறிப்பாக 1974 ஆம் ஆண்டு போக்ரனிலே நாம் அணு சோதனை நடத்தியபோது நாம் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் இது ஆக்கப்பணிகளுக்காக, அமைதிக் காலத்திலே ஆக்கப் பணிகளுக்காக நடத்தப்படுகின்ற சோதனையே தவிர நிச்சயமாக நாடு பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்திலே நடத்தப்படுகின்ற சோதனை அல்ல என்று எடுத்துச் சொன்னாலும் அவர்கள் எல்லாம் ஒப்புக்கொள்ளவில்லை.

முற்பகல் 11-25

அதோடு இல்லாமல், நம்முடைய மூதாதையர்கள் அன்றைய தினம், அதே ஆண்டிலே, 'ரான் ஆப் கச்' பிரச்சினை வந்தபோது, அந்தப் பிரச்சினையிலே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியவில்லை. எனவே, சர்வதேசக் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்வோம் என்று சொல்லி, இந்திரா காந்தி அவர்கள், அந்த 'ரான் ஆப் கச்' பிரச்சினையை, சர்வதேசக் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அதிலே, தீர்ப்பு நமக்கு சாதகமாக அமையவில்லை; பாதகமாக அமைந்தது. 'ரான் ஆப் கச்' பாகிஸ்தானுக்குச் சொந்தம் என்று கோர்ட் அன்றைய தினம் சொல்லிவிட்டது. இது, நம்முடைய பாராளுமன்றத்திலே, மக்களவையிலே, இருந்த உறுப்பினர்கள் பலருக்குத் தெரியும். பிரச்சினை எழுப்பினார்கள். ஏன் இதை சர்வதேசக் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும்? இது ஒரு சின்ன பகுதி; இந்தப் பகுதியை பற்றி தீர்வு காண்பதற்கு சர்வதேசக் கோர்ட்டுக்குப் போக வேண்டுமா? இங்கேயே பேசி தீர்வு கண்டிருக்க முடியாதா என்று இவர்களுடைய மூதாதையர்கள்தான் அன்றைய தினம் பாராளுமன்றத்திலே பிரச்சினை எழுப்பினார்கள். அந்த அடிப்படையிலே, கச்சத்தீவுப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான நிலை வர வேண்டுமென்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அண்டை நாட்டோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தையின் போது, அந்தத் தீவைப் பொறுத்தவரையில் 200 ஏக்கர் பரப்புள்ள தீவு அல்லது 250 ஏக்கர் பரப்புள்ள தீவு அந்தத் தீவில் யாரும் குடியிருக்கவில்லை குடியிருப்பதற்கு வாசம் செய்வதற்கு அந்தத் தீவிலே குடிநீர் கிடையாது அங்கே 'வெஜிடேஷன்' கிடையாது ஏதோ பேருக்கு சில புதர்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே தவிர, 'there is no vegetation' அப்படி இருக்கிற ஒரு தீவினால், ஒரு பெரிய பிரச்சினை எழ வேண்டாம், நாம் வல்லரசாக எத்தனிக்கிறோம் என்கிற குற்றச்சாட்டு நம் மீது வர வேண்டாம் என்று அன்றைய தினம் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதோடு இல்லாமல், சோவியத்

யூனியன் நமக்கு நண்பன் என்ற முறையிலே ஆலோசனை வழங்கினார்கள். 'சாட்டலைட்'டிலிருந்து நாங்கள் பார்த்த வகையிலே, கச்சத் தீவினாலே உங்களுக்கு எந்தப் பயனும் இல்லை ; அதற்கு பதிலாக நீங்கள் கடல் எல்லைகளைத் தெளிவாக வகுத்துச் கொள்வீர்களானால், சில நற்பலன்கள் கிடைக்கும் என்று அன்றே சொன்னதாக ஒரு செய்தி. அதை முதல்வர் கருணாநிதியை அழைத்து, அவரிடத்திலே சொன்னதாகவும், திரு. கருணாநிதியினுடைய நேர்முக உதவியாளரும் அதைப் பற்றி ஒரு புத்தகமாக எழுதி, அது புத்தகமாக வெளிவந்திருக்கிறது. அங்கே எண்ணெய் வளம் இல்லாமல் இருக்கிறது. உங்களுக்கு அதுதான் தேவையென்பதால், கச்சத் தீவு பிரச்சினையை பெரிதுபடுத்திக் கொள்ள வேண்டாம் என்று சொன்னதன் காரணமாக, கருணாநிதியிடம் இரண்டுமுறை கலந்தாலோசிக்கப் பட்டதற்குப் பின்னாலே, பிரச்சினை பெரிதாக வேண்டாம் என்று பாரத, இலங்கை பிரதமர்கள் மத்தியிலே ஏற்பட்ட ஒப்பந்தம்தான் அந்த ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நாம் அங்கே மீன் பிடிக்கச் செல்லலாம் ; அங்கே இளைப்பாறச் செல்லலாம் ; கோவிலுக்கு—தேவாலயத்திற்கு வணங்குவதற்குக் செல்லலாம் ; அதற்கு 'விசா' தேவையில்லை என்றெல்லாம் தெளிவாக இருக்கிறது. இவற்றிற்கும் மேலாக கனி வளங்கள் கிடைக்குமேயானால், கனி வளங்களை முழுவதுமாக இலங்கை எடுத்துக் கொள்ள முடியாது. நம்மோடு 'ஜாயின்ட் வெஞ்ச்சர்'—நம்மோடு சேர்ந்துதான், அவர்கள் செய்ய வேண்டுமென்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குழப்பம் எப்படி வருகிறது என்று சொன்னால், திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியபடி, 1976 ஆம் ஆண்டிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் விரிவாகப் போக வேண்டாம் ; அவருக்கு ஒரு விளக்கம் சொன்னீர்கள் அது போதும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : முடித்து விடுகிறேன்.... அந்த ஒப்பந்தத்திலே குளறுபடிகள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை நாம் பார்க்க வேண்டும். முதலமைச்சர் கேட்டுக் கொள்வதைப் போல, நிச்சயமாக மத்திய அரசாங்கத்தைக் கேட்கலாம் ; ஒப்பந்தத்திலே குளறுபடி இருக்கிறதா, தவறு இருக்கிறதா, அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டுக் கொள்வதில் எந்தவிதத் தவறும் கிடையாது. அதை நான் முன்பே சொல்லிவிட்டேன். அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். அதற்காக, இதை ஆரம்பிக்கும்





போதே. அவர் இப்படி ஆரம்பித்துப் பேசினால், நிச்சயமாக ஒரு சுமுகமான முடிவு வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோதும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோதும், அவர்கள் குறிப்பிட்ட சில விவரங்களுக்கு இப்போதே விளக்கம் அளிப்பது நல்லது என கருதுகிறேன். இல்லையென்றால், இனி பேசவிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூட, அதே தவறான கருத்தை மீண்டும் எடுத்துச் சொல்லக் கூடும்.]

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, 1976-லே ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் ஐ.பி.எல். அது 'இந்தியன் பார்டர் லைன்' அல்ல ; 'இன்டர்நேஷனல் பவுண்டரி லைன்'. அந்த 'இன்டர்நேஷனல் பவுண்டரி லைன்' எது என்பதைக் குறிக்கும் ஒப்பந்தம் தான் 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம். ஆனால், அந்த ஒப்பந்தத்தில் இந்த பவுண்டரி லைனை' தாண்டக் கூடாது என்ற விதி இல்லை ; அந்த 'கண்டிஷன்' அந்த ஒப்பந்தத்தில் இல்லை. ஆனால், மத்திய அரசின் 'எக்ஸ்டெர்னல் அஃபேர்ஸ்' அதிகாரிகள் சில பேர், இந்த ஒப்பந்தத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, அவர்களாக சில 'எக்ஸிக்யூடிவ் ஆர்டர்ஸ்' 'பாஸ்' செய்திருக்கிறார்கள். அவை இந்திய அரசாங்கம் பாஸ் செய்த ஆணைகள். இதற்கும், ஒப்பந்தத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அதேசமயம், முன்பு 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம், முன்பு 1974 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தை, எந்தவகையிலும் 'சூபர்சீட்' செய்யவில்லை என்பது உண்மையே எனவே, இந்த 1974 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தில், என்னென்ன உரிமைகள் நம் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளனவோ, அவையெல்லாம் இன்றுகூட நடைமுறையிலே உள்ள அந்த ஒப்பந்தத்தின்படி, மதிக்கப்படவில்லை என்பதுதான் இன்று நாம் எடுத்துச் சொல்லும் குறைபாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமாரதாஸ், உங்களுடைய கருத்தை மட்டும் சொன்னால் நன்றாக இருக்கும் ; வரலாறு வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை ; வரலாற்றைச் சொல்லி, சொன்னால்தான் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கச்சத் தீவு வரலாற்
றைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : கச்சத் தீவு பற்றிதான்.
கச்சத் தீவு விவகாரமாக 1956-ல் பாராளுமன்றத்திலே சர்ச்சை
வந்திருக்கிறது. இலங்கை, அதனுடைய கடற்படைத்தளத்தைக்
கச்சத் தீவிலே அமைத்திருக்கிறது. இதை ( Withdraw)
பண்ண வேண்டுமென்று சொல்லி நமது பாராளுமன்றத்திலே
அன்றைய தினம் உறுப்பினர்கள் எல்லாம் குரல் கொடுத்திருக்
கின்றார்கள். அந்த நேரத்திலே கூட அன்றைய பிரதமராக
இருந்த மரியாதைக்குரிய நேரு அவர்கள் என்ன சொல்லியிருக்
கின்றார்கள் என்று சொன்னால், புதிய செய்திகள் இந்த
விவகாரம் குறித்து இந்திய அரசுக்கு வரவில்லை என்றும்,
கச்சத் தீவைப்பற்றிக் குறிப்பேடுகளில் அறிந்து கொண்டிருக்கி
றோம் என்றும், இந்தச் சிறிய தீவைப் பற்றி இரு நாடுகளும்
போராடும் என்ற கேள்விக்கு இடமில்லை என்று சொல்லியும்
இந்தியாவின் தன்மானம் இந்தப் பிரச்சினையில் கலக்கவில்லை
என்றும் 1956-லே சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால்
அன்றைய தினத்திலிருந்தே கச்சத் தீவை அவர்களுக்கு
கொடுத்துவிடலாம் என்கிற எண்ணத்தின் அடிப்படையில்தான்
இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிய வருகிறது.
ஆக, கச்சத் தீவை அவர்களுக்கு--இடத்தைப் பொறுத்தவரை
தான் பெரிதாகத் தெரியவில்லை அல்லாமல்
கொடுத்துவிட வேண்டும் என்கிற எண்ணம் இங்கே உள்ள
மீனவ சகோதரர்கள் அங்கே மீன் பிடிக்கின்ற நேரத்திலே
வருகின்ற இன்னல்கள், அங்கே கோயிலில் வழிபடச் செல்லு
கின்ற நேரத்திலே வருகின்ற இன்னல்கள், இவைகளை
யெல்லாம் அவர்கள் கருத்திலே கொள்ளவில்லை. ஆக, இந்த
ஒப்பந்தத்தின் அடிப்படையில் இவர்கள் கொடுத்து இருக்க
கூடாது. கொடுத்துவிட்டார்கள். இந்த நேரத்திலே கூட,
சுதந்திர தினத்தன்று, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்கள் பேசுகின்றபோது, இந்தக் கச்சத் தீவை மீட்டு
இந்தியத் திருநாட்டினுடைய மீனவர்கள் நிம்மதியாக வாழ்
கின்ற விதத்தில் அதைச் சேர்க்கவும் வேண்டும் என்று குரல்
கொடுத்ததோடு மட்டுமல்லாமல், தேவைப்பட்டால் போராடி
யும் கச்சத் தீவை மீட்டுத் தருவோம் என்று சொல்லி இருக்கி
றார்கள். ஆனால், இரண்டு தினங்களுக்குப் பின்னாலே
நம்முடைய இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்கள்
கொடுத்த மறுப்புச் செய்தியும் பத்திரிக்கையிலே வந்திருக்கிறது.
அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால்
'இது ஒரு சர்வதேசப் பிரச்சினை' எனவே இதில் 'நாங்கள்
தலையிட்டு, கொடுத்ததை மீண்டும் எடுப்பது என்பது பிரச்சினைக்
குரிய விஷயம் என்று சொல்லியிருக்கிறார்கள்.
ஆகவே,
இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் இது மிக முக்கி



தேவையான ஒன்று, இதில் எந்தவிதமான தொய்வுகள் வந்தா
லும், முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், மத்திய
அரசிடம் கேட்டு, போராடி, வாதாடி, அந்தக் கச்சத்
தீவினை மீண்டும் பெற்றுத்தந்த பெருமையை தமிழக முதல்வர்
அவர்கள் பெறுகின்ற விதத்தில் உங்களுடைய பணிகளைத்
தொடரவேண்டும் என்று சொல்லி, தமிழகத்தில் இருக்கின்ற
மீனவர்கள் படுகொலை செய்யப்படாமல் தடுக்கவும், அவர்
கள் பாதுகாப்பைப் பெறவேண்டுமென்ற விதத்திலும்,
இலங்கையினுடைய கடற்படையின் மிரட்டலுக்கும்,
உருட்டலுக்கும் நமது மீனவர்கள் பலியாகாமல் இருக்கின்ற
விதத்திலும் அந்தக் கச்சத் தீவை மீட்டுத் தருவதற்கு நீங்கள்
எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் எங்களுடைய முழு
ஆதரவும், ஆசியும் இருக்கும் என்று சொல்லி, இந்தத்
தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற 'கச்சத் தீவைத் திரும்ப மீட்போம்' என்கிற தீர்மானத்தின் மீது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகிறேன். கச்சத் தீவைப் பொறுத்த மட்டில் ஏற்கெனவே இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கிற அந்த ஒப்பந்தத்தை, 1974, 1976 ஆம் ஆண்டுகளில் கொண்டு வந்த அந்த ஒப்பந்தத்தைத் திரும்பப் பெறவும் கச்சத் தீவைப் பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கக்கூடிய ஒரு தீர்மானம் நம்முடைய சட்டமன்றத்திலே இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுபடுத்தியது போல் இராமநாதபுரம் ஜமீனுக்கு சொந்தமான அந்தக் கச்சத் தீவு தொடர்ந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் இலங்கையிலே இருக்கக்கூடிய மீனவர்கள் இவர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கிற சச்சரவுகளின் பேரில் மீண்டும் தமிழ்நாட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு, ஓய்வு எடுப்பதற்கு, வலைகளை உலர்த்துவதற்கு ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தம் மிக அவசியமானது. ஆனால், அதற்குப் பின்னால் அந்த ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பிறகு இன்றைய தினம் தமிழ்நாட்டினுடைய மீனவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற துன்ப, துயரங்கள் எவ்வளவு என்பதை நம்முடைய முதலமைச்சர் நினைவுபடுத்தியது போன்று, தொடர்ந்து, மீனவர்களைக் கடத்திச் செல்வது. அவர்களுடைய வலைகளை பறித்துச் செல்வது, படகுகளைச் சுட்டு வீழ்த்துவது, மீனவர்களைக் கொன்று படகுகளில் திரும்ப அனுப்புகின்ற அந்த கொடுமையான

நிகழ்ச்சிகள் இவை யாவும் தொடர்ந்து நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்தநேரங்களில் தமிழ்
நாட்டில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் தமிழ்
டைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாட்டிலு
தொடர்ந்து எடுத்துச் சொன்னதன்பேரில் நாடாளுமன்றத்திலே
யிருந்த மாண்புமிகு மரியாதைக்குரிய திருமதி இந்திராகாந்தி
அம்மையார் அவர்கள் இலங்கை அரசோடு பிரதமரா
பேச்சுவார்த்தை நடத்தியும்கூட இலங்கை தொடர்ந்து
அதைக் கட்டுப்படுத்தவில்லை; இரா[illegible]வமும்
கட்டுப்படுத்தவில்லை. எனவே அந்த அரசும் அதைக்
இப்படிப்பட்ட தொந்தரவுகள் தொடர்ந்து மீனவர்களுக்கு
கின்றன. இப்படி நம்முடைய ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்
நாட்டுக்கும் தொடர்ந்து இந்தியாவுக்கும், தமிழ்
கிறது. ஆனால் தொந்தரவு ஏற்பட்டுக்கொண்டிருக்
யில் பல ஆண்டுகள் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரை
தீவைப் பொறுத்த வரையில் ஆகிவிட்டிருந்த போதிலும் கூட கச்சத்
ஒப்பந்தத்தை தொடர்ந்து ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற
இடைப்பட்ட காலங்களில் அமல்படுத்துவதற்காக அதாவது
லிருந்து 1991 ஆம் ஆண்டு வரை அதாவது 1983 ஆம் ஆண்டி
களை எல்லாம் நம்முடைய நடந்திருக்கின்ற சம்பவங்
நாடாளுமன்றத்திலே எடுத்துச் நாடாளுமன்ற உறுப்பினர்கள்
உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சொல்லி, நமக்கு இருக்கிற
முயற்சி எடுக்கவேண்டும். தமிழ்நாடு அரசு

முற்பகல் 11-35

ஏனென்றால் இன்றைக்கு இருக்கக்கூடிய
நாம் பெறுவதற்கு எடுக்கிற முயற்சி அந்த கச்சத்தீவை
னையை உருவாக்கிடக்கூடாத புதிய ஒரு சர்வதேசபிரச்சி
கடமையும் நம்முடைய அளவுக்கு பாதுகாக்கவேண்டிய
கச்சத்தீவை, தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு இருக்கிறது. காரணம்
அமைப்பதற்கான இலங்கை அரசு இராணுவ
கிறது. முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு மையமாக
இதில் அதே போன்று மத்திய அரசைப் பொறுத்தமட்டில் வரு
அரசு எந்த ஒரு தட்டிக்கழிப்பும் இல்லாமல், இலங்கை
உரிய முயற்சிகளை அதை இராணுவ மையமாக மாற்றாமல்
அரசை எடுக்க நம்முடைய தமிழ்நாடு அரசு இருக்க
அதேபோன்று வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய
அவர்கள் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர்
யில் நாம் கொண்டுவந்திருக்கிற இந்த தீர்மானத்தின் அடிப்படை
இறுதியாக அத்தனையையும் வரவேற்றிருந்த போதிலும் கூட
பிட்டிருக்கிற அந்த 47-வது பாராவில் அவர்கள் குறிப்
வேண்டும். விஷயத்தை இன்றைக்கு மறுபரிசீலனை செய்ய
புதிய ஏனென்றால் இதன்மூலம் இன்றைக்கு ஒரு
நிதானத்தோடு, பிரச்சினையை நாம் உருவாக்கிவிடக்கூடாது. மிக
கையாளவேண்டும். ஜாக்கிரதையோடு இந்தப் பிரச்சினையைக்
காரணம் இலங்கைக்கும், இலங்கையில்



இருக்கக்கூடிய தமிழர்களுக்கும், நமக்கும் இருக்கிற அந்தப் பிரச்சினைகள் அதாவது இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்களுக்காக இருக்கிற பிரச்சினைகளில் சரியான தீர்வு காணாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகையினால் ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீண்டும் அமல்படுத்துகிற வகையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தில் அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக எனது கருத்தினையும் நான் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

கச்சத்தீவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் 1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் நடந்த போது எங்களது இயக்கத்தின் சார்பில் இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் மூக்கையாத்தேவர் அவர்கள் அந்த ஒப்பந்தம் தவறு. கச்சத்தீவு இந்தியாவோடுதான் இருக்கவேண்டும்; அது இராமநாதபுரம் சேதுபதி அவர்களுக்குச் சொந்தமான இடம் அதைத் தாரைவார்த்துக் கொடுப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கடுமையாக நாடாளுமன்றத்திலே பேசி இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து எங்களுடைய இயக்கம் வலியுறுத்தி வருகிறது. இன்றும் தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தில் பேசுகிற போது நான் ஒன்றினைச் சொல்லாமல் இருக்க முடியாது. அன்றைக்கு தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் எனக்குத் தெரியாமலே கொடுத்துவிட்டார்கள் என்று பேசி இருக்கிறார். அதுவும் மதுரை கூட்டத்தில். அது சம்பந்தமாக இன்றைக்கு அவருடைய இயக்கத்தில் இருக்கிற திரு. ஆலடி அருணா அவர்கள் கருணாநிதியைக் குற்றம் சாட்டி ''அவர் முனைப்பான நடவடிக்கை எடுக்கவில்லை; மத்திய அரசுக்கு எடுத்துக்கூறவில்லை; ஆகவேதான், கச்சத்தீவு தானமாகக் கொடுக்கப்பட்டுவிட்டது'' என்ற குற்றச்சாட்டுகளை இப்போது அவரோடு இருக்கிற திரு. ஆலடி அருணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அன்றைக்கு தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள் முனைப்பாக இந்தப் பிரச்சினையை

எடுத்துக்கொள்ளவில்லை. அருமைச் சகோதரர் திரு. தென்னவன் அவர்கள் சொன்னதுபோன்று சென்னை மாநிலம் பிரிக்கப்படுகிறபோது சென்னை ஆந்திராவுக்கா, தமிழ் நாட்டிற்கா என்ற பிரச்சினை வந்தபோது அன்றைக்கு இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி இருந்தாலும், சென்னையைத் தமிழகத்திற்கு கொடுக்காவிட்டால் தானே தலைமையேற்று போராடுவேன் என்று சொன்னார்கள்.

*முற்பகல் 11-40*

அதே போன்று கச்சத்தீவின் பிரச்சினையின் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த சபையிலே பேசியிருக்கிறோம். அந்த பகுதி மீனவர்கள் படுகிற அவல நிலை அவர்களின் பல்வேறு போட்கள் இலங்கை அரசாலே பறிமுதல் செய்யப் பட்டிருக்கின்றன. வலைகளை அறுத்து சென்று விடுகிறார்கள். நம்முடைய மீனவர்கள் பிடித்தமீனை கொள்ளை அடித்துச்சென்று விடுகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப் போல, பலமீனவர்கள் உயிர்களை இழந்திருக்கிறோம். தொடர்ந்து இந்த பிரச்சினை இருப்பதைவிட கச்சத் தீவு தமிழகத்திற்குத்தான் வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த தீர்மானத்தை நான் வழிமொழிகின்றபோது அவர்கள் இதற்கு முன்னதாகவே பேசி இருக்கின்றார்கள். அதற்காக போராடவும் தயார் என்று சொல்லி இருக்கின்றார்கள். அப்படி ஒரு போராட்டம் நடைபெற்றால் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே தமிழக முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாக நின்று கச்சத் தீவை பெறுவதற்கு அவர்கள் எந்த முயற்சி எடுத்துக்கொண்டாலும் அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று அதை ஆதரித்து நான் விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கச்சத் தீவை தமிழ்நாட்டுக்கு மீட்டுத் தருகின்ற இந்த தீர்மானத்தை கொண்டு வந்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்று அதை ஆதரித்து உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துகளை முன் வைக்க விரும்புகிறேன்.

'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து குமரிகோடும் கொடுங்கடல் கொள்ள' என்று தொல்காப்பியர் காலத்திலே யிருந்து குமரிமுனைக்கு தெற்கே இருக்கிற நிலப்பகுதிகள் தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக இருக்கின்ற வரலாறு அனைவரும் இலக்கிய பூர்வமாகவும் வரலாற்று ரீதியாகவும் அறிந்த ஒன்று.





அந்த கச்சத் தீவு எந்த அளவுக்கு நம்முடைய தமிழ்நாட்டிடிற்கு உரிமை பெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள் பல சான்றுகளோடு எடுத்துச் சொன்னார்கள். மீண்டும் மீண்டும் அதையே எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற வகையில் இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகங்களுடைய ஆட்சி தொடர்ந்து வந்திருக்கின்ற சூழ்நிலையிலே திராவிட இனத்தினுடைய பாதுகாவலன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற, தமிழ் கலாச்சாரம், தமிழ் மண், தமிழர் உரிமை என்று அதற்கெல்லாம் ஒட்டுமொத்த குத்தகை எடுத்துக்கொண்டிருப்பதுபோல பேசிக்கொண்டிருக்கின்ற கலைஞர் கருணாநிதியினுடைய ஆட்சிக் காலத்திலே அந்த கச்சத் தீவு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் என்ற முறையிலே அதற்கு நான் கண்டனம் தெரிவித்துக்கொண்டு, இந்த தமிழர் நலனைக் காப்பாற்றுவதற்காகத்தான் ஆட்சிக்கு வந்தேன் என்றுசொல்லிக் கொண்டிருப்பவர்கள் இலங்கைக்கு கச்சத் தீவை இந்தியஅரசாங்கம் தாரை வார்த்து கொடுத்த நேரத்திலே மத்திய அரசாங்கத்தை ஆளுகின்ற ஒரு கட்சிக்குத் தான் கூட்டணியாக இருக்கிறோம் உறுதுணையாக இருக்கிறோம் என்ற காரணத்தினால் உரிமைக்குக் குரல் கொடுப்போம் உறவுக்குக் கை கொடுப்போம் என்று சொன்னவர்கள் விட்டுக் கொடுத்து உரிமையைக் கேட்க ஊமையாக இருப்போம், உறவைக் காப்பாற்ற சரணாகதி அடைவோம் என்ற முறையிலே தான் அவர்கள் அன்று நடந்திருக்கின்றார்கள். அந்த வகையிலே கச்சத் தீவை மட்டுமல்ல, இதே போல காவிரிப் பிரச்சினையிலே கூட அன்று உச்ச நீதிமன்றத்திற்கு தமிழ்நாட்டினுடைய நலனைக் காப்பாற்றுவதற்காகச் சென்றவர்கள் மத்திய அரசாங்கம் அன்று தோழமையோடு இருந்தது என்ற ஒரே காரணத்திற்காக அந்த உச்ச நீதிமன்றத்திலே தொடுத்த வழக்கையும் வாபஸ் பெற்றார்கள். தமிழ்நாட்டினுடைய நலனை மற்ற மாநிலங்களோடு பெறுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அதனுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டது. ஒரு தமிழ் நிலத்தை இன்னொரு நாட்டிற்கு தாரை வார்த்துக் கொடுக்கின்ற நேரத்திலே நம்முடைய உரிமையைத் தட்டிக் கேட்காமல் இருந்திருக்கிறார்கள். அப்படி அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பிறகு இன்று புரட்சித் தலைவி அவர்கள், எந்தக் கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியாக இருந்த காலத்திலே தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுத்தார்களோ, அதே அரசோடு இன்று கூட்டணியாக இருக்கின்ற காலத்திலே புரட்சித் தலைவி அவர்கள் காவிரிப் பிரச்சினையிலும் சரி கச்சத் தீவு பிரச்சினையிலும் சரி, உறவு என்பது வேறு, உரிமை என்பது வேறு என்ற முறையிலே தமிழ்நாட்டினுடைய உரிமையைக் காப்பதற்காக உறவைப் பற்றிப் பொருட்படுத்தாமல், கொள்கையை, தமிழ்நாட்டைக் காக்கவேண்டும், தமிழ்நாட்டினுடைய உரிமையைக் காக்க வேண்டும், தமிழ் இனத்தினுடைய பண்பாட்டைக் காக்க வேண்டும் என்ற முறையில் அந்த உறவைக்

பொருட்படுத்தாமல், இன்றைக்கு உரிமைக்கு குரல் கொடுத்துக்
கொண்டிருக்கின்றார். அந்த உரிமைக் குரலுக்கு இந்த உழவர்
உழைப்பாளர் கட்சி உறுதுணையாகவும் நிற்கும், அதற்கு எந்த
போராட்டத்திற்கும் ஆதரவாகவும் நிற்கும் என்று கூறி விடை
பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டினுடைய நலன்களைப் பொறுத்தவரை
யில் அல்லது பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், எவ்வளவு
தான் நியாயம் இருந்தாலும், எவ்வளவு தான் எடுத்துச் சொன்ன
லும், அதை இந்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை என்பதுதான்
வரலாறு. அதற்கு மேலும் ஒரு எடுத்துக் காட்டாக இந்த கச்சத்
தீவு பிரச்சினை அமைந்துள்ளது. கச்சத்தீவு பிரச்சினை பற்றிய
பேச்சு வருகிறபோது எல்லாம் அங்கே யார் வசிக்கிறார்கள் ?
அது வெறும் தீவு தானே, கொடுத்துவிடலாமே என்று இந்திய
அரசிலே உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் பனிமலையான இமயமலையில்
(Siachen glacier) சியாட்சன் கிலாசியர், பாகிஸ்தானுக்கும்
இந்தியாவுக்கும் இடையே இருக்கக்கூடிய வெறும் பனிமலையை
பாகிஸ்தானுக்குத் தர மாட்டோம் என்று அங்கே உயிரைக்
கொடுத்துப் போராடுகிறார்கள். அதோடு மட்டுமல்ல, பிஜியிலே
இருக்கிற இந்தியர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன,
என்றால் இந்திய அரசினர் பதறுகிறார்கள். ஆனால், 5, 6 தலை
முறைகளுக்கு முன்னால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தோட்ட
தொழிலாளர்களாக சென்றவர்களுடைய உரிமைகள் பறிக்கப்
படுகிறபோது, அவர்களுடைய குடியுரிமைகள் பறிக்கப்படும்
போது, அது தப்பு அவர்கள் அங்கே தான் இருக்க வேண்டும்
என்று சொல்லி வற்புறுத்துவதற்குப் பதிலாக இலங்கைத் தமிழர்
களை நாங்கள் திருப்பி எடுத்துக் கொள்கிறோம் என்று கையெழுத்
துப் போடுகின்றனர் இந்திய அரசினர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி
மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் குறிப்
பிட்டார்கள். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி ஐக்கிய



நாடுகள் சபையிலே எடுத்துரைக்க அன்றைய தினம் மாண்புமிகு
அமைச்சராக இருந்த திரு. இராமச்சந்திரன் அவர்களை திரு.
ராஜீவ் காந்தி அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அப்போதும்
இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அவருடைய கவனத்தில் இருந்
திருக்கும் என்று நினைக்கிறேன். அன்றைய தினமே இந்தப்
பிரச்சினைகளை இங்கேயும், திரு. ராஜீவ் காந்தி அவர்களிடத்தி
லேயும், அதற்குப் பிறகு தனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்ட ஐக்கிய
நாடுகள் சபையிலேயும் எடுத்துரைத்து பரிகாரம் காண முயற்சித்
திருக்கலாம். முயற்சித்தாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை
வர் அவர்களுக்கே கூட இந்திய அரசிலோ அல்லது அவர்களது
கட்சியினுடைய தலைமையகத்திலோ என்ன நடக்கிறது என்
பதை தெரிவித்ததில்லை. ஒருவேளை அவர்களே கூட புறக்
கணிக்கிறார்களோ என்று தான் சந்தேகப்படுகிறேன். அது,
தமிழ்நாடு மட்டுமல்ல. இங்கே தமிழ்நாடு சார்பாக இருக்கக்
கூடிய எதிர்க் கட்சித் தலைவரை கூட புறக்கணிக்கிறார்களோ
என்று எனக்கு சந்தேகம் வருகிறது. ஏன் என்றால் இரண்டு
தினங்களுக்கு முன்னால் கூட நடந்தது நமக்குத் தெரியும். மண்டல்
குழு தீர்மானத்தை நாம் நிறைவேற்றினோம். அப்போது
மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ' ஏழ்மையைப்
பற்றி வரையறை எல்லாம் போட்டுவிட்டார்கள் ' என்று சொன்
னார். ஆயிரம் இடத்திலே 270 இடங்கள் பிற்படுத்தப்பட்டவர்
களுக்கு என்றால், 250 இடம் அல்ல, 270 இடங்களும் அவர்களுக்
குத் தான் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் உச்ச நீதிமன்
றத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்திய அரசாங்
கம் பொருளாதார வரையறையைப் பற்றி நாங்கள் இன்னும்
முடிவு செய்யவில்லை என்று . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இது எதற்காக என்று சொன்னால்,
Chief Minister should be consulted என்று சொல்லியிருக்
கிறார்கள். முதலமைச்சர்களிடத்திலே கலந்து பேசி இதைப்
பற்றி, எந்த வரையறை என்று முடிவு செய்வோம் என்று
சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கச்சத் தீவு பற்றி மட்டும்
சொல்லுங்கள். வேறு பிரச்சினைகளுக்குப் போக வேண்டாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : அன்றையதினம் அவர்கள் பேசிய
போது 270 இடங்களிலே 250 இடங்களை வைத்து, மீதி
இடங்களும் அவர்களுக்குத்தான் உண்டு என்று அவர்களே முடிவு

எடுத்து சொன்னார்கள். ஆனால் முடிவு எடுக்கப்படவில்லை. இனிமேல் முதல் மந்திரிகளை வைத்து பேசி தான் முடிவு எடுக்கப் போகிறார்கள். ஆகவே, டெல்லியில் காங்கிரசில் நடக்கிற....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மெம்பர் உதாரணத் திற்கு சொல்லியிருக்கலாம் அதிலே விவாதத்திற்குரிய,கொள் கைக்குரிய, பிரச்சினை இருக்காது. தயவு செய்து மண்டல் குழு வுக்கு போக வேண்டாம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் குறுக்கிட வேண்டிய அவசியத்தை உருவாக்க வேண்டாம் என்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்னது, பொருளாதார அடிப் படை என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும். உதாரணமாக தமிழ் நாட்டில் அன்றையதினம் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் வருமானம் 9 ஆயிரம்என்று நிர்ணயிக்கப்பட்டது. அதுபோல இன்றையதினம் நிர்ணயிக்கப்படவில்லை. அதைத் தான் சுப்ரீம் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். மற்றபடி தெளி வாகவே பிரதம மந்திரி அவர்கள் பேட்டியிலே சொல்லியிருக் கிறார்கள். நிரப்பப்பட வேண்டிய இடங்கள் அனைத்திற்கும் பின் தங்கிய சமுதாய மக்களிலே இருந்துதான் நிரப்பப் படுமே தவிர, அதிலே மாறுதல் இல்லை என்று முன்பே தெளிவாக தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மண்டல் குழுவிற்குப் போக வேண்டாம். இது கச்சத் தீவு பிரச்சினை. கச்சத் தீவு பிரச்சினையிலேகூட நீங்கள் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றிப் பேசியபோதுகூட, தொடர் புடைய பிரச்சினை என்று அனுமதித்தேன். அது எல்லாம் வேண்டாம். கச்சத் தீவு பற்றிப் பேசுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகச் சொல்லவில்லை. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் இதையெல்லாம் சொல்லியிருக்க லாமே என்று கேட்டார்கள். காங்கிரஸ் கட்சியிலே இருக்கக் கூடிய, இந்த நாட்டை ஆளக்கூடிய காங்கிரஸ் கட்சியிலே இருக்கக் கூடிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கே டெல்லியிலே என்ன நடக்கிறது என்று தெரியாமல், இங்கே நம்மைப் போட்டு குழப்பு



கிறாரே, அப்படி இருக்கும்போது என்னைப் போய் சொல்லச் சொல்கிறாரே, அதிலே என்ன நியாயம் இருக்கிறதென்றுதான் நான் கேட்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் தெளிவாக ஒவ்வொரு பிரச்சினையையும் அவர்கள் எழுப்புகிறபோது, நான் என்னுடைய நிலையை, எங்களுடைய கட்சியினுடைய நிலையைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எனவே '' குழப்புகிறார் '' என்று சொல்கிற வார்த்தையிலே பொருள் இருக்கிறதா, அந்தச் சொல்லை அனுமதிக்கிறீர்களா, அது முறையா என்று நான் அறிய விரும்புகிறேன். தொடர்ந்து இதுபோல் பேசுவது முறை யாக இருக்காது. அவர் சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் நானும் எழுந்து நின்று பதில் சொல்ல வேண்டியிருக்கும். நான் தெளிவாக என்னுடைய நிலையை, எங்களுடைய கட்சியின் நிலையைத் தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் குழப்புகிறார் என்று சொல்லியதற்கு, எந்தக் குழப்பமும் இல்லை என்று ஆணித் தரமாகச் சொல்லியிருப்பது அவைக் குறிப்பிலே இருக்கிறது. நீங்கள் கச்சத் தீவு பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேரும் இப்படிப் பேசினால் எப்படி ? கச்சத்தீவு அங்கே நிற்கிறது, இராமேஸ்வரத்தைத் தாண்டி. கச்சத் தீவு பற்றிப் பேசுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, குழப்பத்தை அவர்கள் நீக்குவதற்கு குறுக்கிடுவதை நான் வரவேற் கிறேன். ஏனென்றால் குழம்பியவன் தெளிவு பெறுவது நல்லது தானே. நாட்டு மக்களும் குழம்பி இருக்கிறார்கள். நேற்றைய தினம்கூட ஒன்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. திரு. சீதாராம் கேசரி அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கச்சத் தீவுக்குப் போங்கள். கட்சிப் பிரச்சினைகளை எல்லாம் இங்கே பேசினால் நேரம் போதாது.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அங்கே கடல் வளத்தில் எண்ணெய் வளம் இருக்கிறது, ஆகவே அந்த எண்ணெய்வளத்தை இரண்டு பேரும் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லி, அன்றைக்கு அதை தாரை வார்த் துக் கொடுத்தார்கள். 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்போது அதுதான் நடந்தது. அங்கே எண்ணெய் வளமும் இல்லை, ஒன்றுமில்லை. இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலை என்னவென் றால், மீன் பிடிக்க நம்முடைய மீனவர்கள் போனால், மீனவர் களைப்பிடிக்க இலங்கை அரசாங்கம் வந்துவிடுகிறது. ஆக, மீன் பிடிக்கப் போனவர்களை நாம் மீட்பதுதான் பெரிய வேலையாக

வும் பிரச்சினையாகவும் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு ஒப்பந்
தம் போட்டுக் கொடுத்தால் அந்தத் தீவைக் கேட்கவே கூடாதா?
இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, ஜப்பான் நாட்டின்
வடபுறத்தில் இருக்கக்கூடிய கோரைல் ஐலண்ட்ஸ்-ஐ ரஷ்யா
எடுத்துக் கொண்டது. ஆனால் இன்றைய தினம் ஜப்பான்
நாட்டினிடத்திலே இவர்கள் கடன் கேட்கப் போகிறார்கள்.
எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்கிறார்கள்.
தீவை கொடுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். எங்கள்
அதில் ஒன்றும் தப்பு இல்லை. ஒப்பந்தம் போட்டதை மாற்றவே
முடியாதா ? 1940-ம் ஆண்டு ஜெர்மனியும், ரஷ்யாவும் ஒப்பந்தம்
போட்டுக்கொண்டு பால்டிக் தீவுகளை ஹிட்லர் அன்றையதினம்
ஸ்டாலினுக்குக் கொடுத்துவிட்டார். அதுதான் ரிப்பன்டிராப் -
மாலட்டோவ் ஒப்பந்தம். இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தை
ஏற்கமாட்டோம் என்று சொல்லி, அந்த 3 தீவுகளும் சுதந்திர
நாடுகளாகிவிட்டன.

நான் ஐ.நா. சபைக்குப் போனபோது 157 நாடுகள்தான்
ஐ.நா.சபையில் இருந்தன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் கூட சொன்னார்கள். ஆனால் என்னை ஐ.நா. சபைக்கு
அனுப்பியது அன்னை இந்திரா காந்தி அவர்கள், ராஜீவ் காந்தி
அவர்கள் அல்ல. அவருக்குத் தெரியாது, பாவம். அதனால்
அவரைப் போய் சொல்லக்கூடாது. ஆனால் இன்றைக்கு 166
நாடுகள் உறுப்பினர்களாகி இருக்கின்றன.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே,
Point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாங்கள் யாரும் இப்போது ஒப்பந்தத்தை
வாபஸ் வாங்கக்கூடாது என்று சொல்லவில்லை. எங்களுடைய
நிலை அதுவல்ல. என்ன சொல்கிறோமென்றால் ஒவ்வொரு
காலத்தின் தேவைகளுக்கேற்ப சில ஒப்பந்தங்கள் அவ்வப்போது
நிறைவேற்றப்படுகின்றன. அந்தக் காலத்தின் தேவை முடிந்த
பிறகு, புதிய சம்பவங்கள், புதிய சூழ்நிலைகள் உருவாகின்றபோது
நாம் எடுத்த முடிவுகளையே மறுபரிசீலனை செய்ய வேண்டிய
அரசியல் நிர்பந்தங்கள், சமூக நிர்பந்தங்கள், அதோடு
Considerations about the changes in the political atmosphere
throughout the world. இதையெல்லாம் பார்த்துத்தான்
ஒப்பந்தங்களை மாற்ற வேண்டுமென்று நினைக்கிறோம்.
ஆகவே, இப்போதுள்ள சூழ்நிலைகள் குறித்து நாம் பேச
வேண்டுமே தவிர, இதை ஒரு பொருட்டாக வைத்துக்கொண்டு
காங்கிரஸ் கட்சியை இடித்துப் பேச வேண்டிய அவசியமில்லை.
நான் ஒருபடி அதிகமாகக் கேட்கிறேன். திரு. கருணாநிதி



அவர்களையும் அழைத்து, ஆலோசித்துதானே இந்த முடிவை எடுத்தார்கள், அப்போது அமைச்சரவையிலே நீங்கள் இருந்தீர்களே, அதை எதிர்த்து ராஜினாமா பண்ணி இருக்கலாமே ; (மேசையைத் தட்டும் ஒலி) எனவே ஒட்டுமொத்தமாக தமிழக நலன் குறித்து முக்கியமான ஒரு வரலாற்றுப் புகழ் மிக்க தீர்மானத்தின்மீது விவாதிக்கிறபோது தமிழகத்தைப் பற்றி கவலைப்பட்டு, அந்த நோக்கில் பேச வேண்டுமே தவிர, சந்தடி சாக்கில் இடித்துப் பார்ப்பது, குத்திப் பார்ப்பது, புண்ணாக்கிப் பார்ப்பது என்று நாம் குறுகிய அரசியல் நோக்கத்தில் வந்துவிட்டோம் என்று சொன்னால் இந்த அவையினுடைய பொன்னான நேரத்தை வீணாக்குவதோடு மட்டுமல்லாமல், நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற மிகப் பெரிய பிரச்சினையின் கௌரவம் குறைந்துவிடுமென்று சொல்லி இதை நாங்கள் ஒன்றும் வாபஸ் வாங்கக்கூடாது என்று சொல்லவில்லை. இப்போதுள்ள காலத்தின் தேவைகளுக்கேற்ப இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்குமானால் காங்கிரஸ் கட்சி அதை பரிசீலிக்கத் தயாராக இருக்கிறதென்பதுதான் எங்களது நிலை.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அரசியல் பிரச்சினைகளுக்குள் போகவேண்டாம் . . . .

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எங்கேயுமே போகவில்லை. அவர்கள் தான் செல்கிறார்கள் . . . . . இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன்... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ், உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் உங்களை ஒன்றும் சொல்லவில்லையே, உட்காருங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ரொம்ப நல்ல கருத்தைச் சொல்கிறார். காலம் மாறுகிறது, அந்த மாறுதலுக்கேற்ப உலகம் மாறுகிறது. ஆகவே இந்த ஒப்பந்தத்தை மாற்றுவதில் தவறு இல்லை என்று சொல்லிகிறார். அதைத்தான் நானும் சொல்கிறேன். அதை, காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா ? அவர் எழுந்து நமக்கு மட்டும் தெரிவிப்பது என்ன நியாயம் என்பது என்னுடைய முதல் கேள்வி. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். தயவு செய்து . . . . அவர் சொல்லட்டும்.

THIRU. S. RAMACHANDRAN : I am not yielding.

HON. SPEAKER ; He is not at all yielding. அவர் பேசி முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன்.

THIRU. S. R. BALASUBRAMONIYAN : Sir, Point of order.

HON. SPEAKER : He is on Point of order.

HON. SPEAKER : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்

THIRU S. R. BALASUBRAMONIYAN : There is no question of yielding. I am on Point of order.

தொடர்ந்து பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்ற நோக்கிலே பேசினால் நாங்கள் குறுக்கிட மாட்டோம். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னது கூட நம்முடைய உரிமைகளை பெறுவதற்காக முதலமைச்சர் எழுப்புகிற உரிமைப் பிரச்சினையில் எங்களுடைய துணை இருக்கும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்ல, நிதிநிலை அறிக்கையின்போது நான் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் இங்கேதான் அமர்ந்திருந்தார்கள என்று நினைக்கிறேன். அப்போதே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். முதலிலே நம்முடைய உரிமைகளை மீட்டுத்தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் கேட்போம். அந்த உரிமைகள் வழங்குவதற்கு இலங்கை அரசு மறுக்குமானால் அந்தத் தீவை மீட்டுத் தரும்படி கேட்பதில் தவறு இல்லை என்பதை நான் அப்போதே தெளிவுபடுத்தியிருக்கிறேன். அதுதான் எங்களது நிலை. திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் அதையேதான் சொன்னார்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அடுத்தபடியாக இன்னொன்றும் சொன்னார். நீங்கள் கருணாநிதி அமைச்சரவையிலேதானே அப்போது இருந்தீர்கள் ஏன் ராஜினாமா செய்திருக்கக் கூடாது என்று. இந்திய அரசோடு ஒவ்வொரு காரியத்திற்கும் போய் தமிழ்நாடு அரசு முட்டுகிறபோதும், மோதுகிற போதும், நியாயத்லைத எடுத்துச் சொல்கிறபோதும், அது கிடைக்காத போதும்—நான் நிர்வாக அனுபவத்தில் இருந்ததால் தெரியும் —தினமும் ராஜினாமா செய்யவேண்டும். அந்த மாதிரிக் கொடுமைகள். ஆகவே அதற்கு மட்டும்தானா? இப்போது நிலக்கரி ஆஸ்திரிரேலியாவிலிருந்து கொண்டுவரவேண்டுமென்று நாம் சொன்னால் கொடுக்கிறார்களா அல்லது நாளைக்கு காட்கில் ஃபார்முலாவை ரிலைவஸ் பண்ணுவோம் என்றால் ஒத்துக்கொள்வார்களா ? எத்தனைக்குத்தான் ராஜிநாமா பண்ண வேண்டுமென்பது தெரியவில்லையே. ஆகவேதான், எல்லாவற்றுக்கும் சேர்த்து, நாம் நம்முடைய உரிமைகளைப் பெறுகின்ற வகையிலே அனைத்து தமிழ்நாட்டு மக்களும் ஒன்று சேர்ந்து அந்த உரிமைகளைப் பெறவேண்டுமென்பதுதான் எங்களுடைய உறுதியான நிலை. நாம் கேட்கிற நிலையில் இருக்கிறோம். அவர்கள் ஒன்றும் அதைக் கேட்பதும் இல்லை, கொடுப்பதும் இல்லை. புறககணிக்கத்தான் செய்கிறார்கள். அதைத்தான் நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னேன். இங்கே இருக்கிற



காங்கிரஸ்காரர்கள் தமிழ்நாட்டு மக்களுக்காக நீங்கள் எடுத்து வாதாடவேண்டுமே தவிர, எங்களோடு சண்டைக்கு வருவதில் என்ன நியாயம் என்று கேட்டு, இது உரிமையைப் பெறுகின்ற தீர்மானமாக இருப்பதால் இதை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள்.

+பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. கச்சத்தீவை மீட்கவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்த போது. அதற்கு மறுப்புக் கொடுக்கிற வகையில் ஒருசிலர் பத்திரிகையில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள் தெரிவித்தார்கள். முன்பு ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு கிடப்பில் போட்ட இந்தக் கச்சத்தீவுப் பிரச்சினையை தமிழ் சமுதாயத்திற்கு ஆறாத வடுக்களை உருவாக்கி வைத்து விட்டு சென்ற அவர்கள் மீண்டும் எதிர்ப்பதற்கு யோக்கியதை இல்லை என்பதை தமிழகம் உணர்ந்திருக்கிறது. ஆனால் கனிவு தெளிவு, துணிவு என்ற அடிப்படையில் அண்ணாவின் வழியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிச்சயமாக இந்த கச்சத் தீவுப் பிரச்சினையிலே வெற்றி பெறுவார்கள்.

நண்பகல் 12-00

" வெண்திங்களில் வெய்யில் வேண்டினும், வெஞ் ஞாயிறிக் குளிர் வேண்டினும் வேண்டியது முடிக்கும் ஆற்றலை' என்று ஒரு சோழனைப் பார்த்துப் பாடினான் புலவன். அப்படிப்பட்ட ஆற்றலைப் பெற்ற மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கச்சத் தீவை மீட்டே தீருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). திரு. கருணாநிதி அவர்களிடத்திலேயிருந்து தமிழக மக்களை மீட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்குக் கச்சத் தீவை மீட்பது பெரிய காரியமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). கச்சத் தீவு சாதாரண தீவாக இருக்கலாம், மிகக் குறுகிய தீவாக இருக்கலாம், சிறிய தீவாக இருக்கலாம். ஆனால் அதை தாரை வார்த்துக் கொடுத்துவிட்ட காரணத்தால், கடலின் அடிப் பரப்பை நாம் இழந்திருக்கிறோம், கடற்கரையைச் சார்ந்த மணல் நிலப்பரப்பை இழந்திருக்கிறோம், கனிவளத்தை இழந்திருக்கிறோம், கடலில் உயிரினவள பாதுகாப்பை நாம்

இழந்திருக்கிறோம், கடலின் மேலே வான் வெளியை நாம் இழந்
திருக்கிறோம். இதுதான் உண்மை. இப்படி உண்மைகள் மறைக்கப்
பட்டுள்ளன. மாண்புமிகு வெளியிவகாரத் துறை
அமைச்சர் அவர்கள் ராஜ்ய சபையில் பேசியதை, மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நான் ஏற்கெனவே
அனுமதி பெற்றுக் கொண்ட வகையில் இங்கே படித்துக்காட்ட
விரும்புகிறேன்.

" இது வருங்காலத்தில், இந்த வரலாற்று முக்கியத்துவம்
வாய்ந்த தண்ணீரில் இத்தகைய பிரச்சினையை மேலும் வளர
விடாமல் நீக்குவதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேலே
கூறிய அடிப்படையில் இந்திய மீனவர்களும், யாத்திரிகர்களும்,
கச்சத் தீவுக்குப் போ வருவதற்குள்ள, இதுவரை பெற்றிருந்த
உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள். எனவே போக்கு
வரத்து அனுமதி ஆவணங்களையோ அல்லது விசா போன்ற
வற்றையோ வேண்டுமென ஸ்ரீலங்கா கோர முடியாது.
ஸ்ரீலங்கா, இந்திய கப்பல்கள் இதுவரை பாரம்
பரியமாக அனுபவித்து வந்த எல்லா உரிமைகளையும்
தொடர்ந்து அனுபவிப்பார்கள்.
என்னென்ன உரிமைகள் இப்படி
இருந்து வந்ததோ
— நம்முடைய படகுகள் அந்தப் பக்கத்திலே செல்வதற்கும்,
அந்தப் பக்கத்திலேயிருந்து இந்தப் பக்கம் வருவதற்கும் கச்சத்
தீவு பயன்படுத்தப்படும் என்று அந்த உரிமைகள் பாதுகாக்கப்
பட்டிருக்கின்றன என்பது இந்த ஒப்பந்தத்தில் ஏற்பட்டிருக்கின்றது.
நமக்கு எவ்வித ஒட்டும் உறவும் இல்லாத வகையில்
கச்சத் தீவை அவர்களுக்குக் கொடுத்துவிட்டதாகக் கூறுவதற்கு
இடமே கிடையாது" என்று மாண்புமிகு சுவரண்சிங் அவர்கள்
அங்கே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இன்றைய நிலை
மையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பாக் ஜலசந்தியிலே, அதன் அடிப்படையிலே சேதுசமுத்திரத்
திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நீண்ட நாட்களாக
கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். கச்சத்
தீவை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, சேதுசமுத்திரத்திட்டத்தை
நாம் எப்படி செயல்படுத்த முடியும் என்பதை தமிழக அரசு
எடுத்துச் சொல்லுகிற இந்த நேரத்தில் மத்திய அரசு இதைப்
பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே சேதுசமுத்திரத்
திட்டம் வரவேண்டும் என்றால் கச்சத்தீவு இந்திய அரசின்
ஆளுகைக்குள்ளே வந்தாக வேண்டும். கச்சத் தீவு பிரச்சினை



முடிந்துவிட்ட விவகாரம். எனவே, மீண்டும் அதை பரிசிலனை
செய்வது சாத்தியமா என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருப்
பவர்களுக்கு நான் சொல்வேன் — முடிவு என்பது அந்த முடிவின்
நியாயத்தைப் பொறுத்தது மட்டுமல்ல, சொல்பவர்களின்
துணிவையும் பொறுத்திருக்கிறது. நாம் சொல்லுகிற விதத்திலே
சொன்னால், இந்த கச்சத் தீவுப் பிரச்சினைக்கு மீண்டும் உயி
ரோட்டம் கொடுக்க முடியும். எனவே இதிலே மத்திய அரசு
மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று தமிழக அரசு கேட்பது
நியாயம், அவசியம் என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் மனதார எண்ணு
கிறேன். கச்சத்தீவு பிரச்சினையிலே 1974 ஆம் ஆண்டு கருணாநிதி
அரசு தனது வாதங்களை, நியாயங்களை, வரலாற்றுச்
சான்றுகளை, குறிப்புரைகளை மத்திய அரசுக்கு முறையாகவும்,
ஒழுங்காகவும் எடுத்துவைக்கத் தவறிவிட்டது என்பது நிரூபிக்
கப்பட்டிருக்கிறது. அதிலும் தமிழக மக்களின் எண்ணம் இந்தப்
பிரச்சினையிலே உணர்ச்சிப் பிழம்பாக இருக்கிறது என்பதை
மத்திய அரசுக்கு எடுத்துத்தெரிவிக்க கருணாநிதி தவறிவிட்டார்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
குறிப்பிட்டார்கள். ஆந்திர மாநிலம் பிரிந்த நேரத்திலே சென்னை
வேண்டும் என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் போர்த்தனத்
தோடு ஒரு மடல் எழுதி பெற்றதையும் அதே போல வங்கத்தின்
ஒரு பகுதியாக இருந்த பெருபாரியை பாகிஸ்தானுக்குக் கொடுத்த
போது மத்திய அரசை எதிர்த்து, காங்கிரஸ் ஆண்ட மத்திய
அரசை எதிர்த்து— வங்கத்தின் காங்கிரஸ் அரசே வழக்குத்
தொடர்ந்ததையும், துக்க தினமாக சுதந்திர நாளைப் பிரகடனப்
படுத்தியதையும் இங்கே சொன்னார்கள். இதுபோன்றதொரு
நிலைமையை அன்றைக்கு கருணாநிதி அவர்கள் எடுத்திருந்தால்
கச்சத் தீவு பிரச்சினையில் இவ்வளவு பெரிய பரிதாபகரமான
முடிவு ஏற்பட்டிருக்காது.

கச்சத் தீவு பிரச்சினையில் நியாயங்களை எடுத்து வைத்த
போது தங்களுடைய ஆயுதங்களை கூர்மையாகத்தீட்டி செயல்பட
வில்லை. போர்த்தன்மைக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ள
வில்லை, தனது கடமையைச் செய்ய தவறிவிட்டார் கருணாநிதி
என்பதை இந்த மன்றத்திலே நான் பகிரங்கமாக எடுத்துச் சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன். "கச்சத் தீவு ஒப்பந்தம் ஏற்பட்டது
என்பதை நான் பத்திரிகைகளில் பார்த்துத் தான் தெரிந்து
கொண்டேன். என்னிடம் ஒரு வார்த்தைக் கூட கேட்கவில்லை,
இந்தப் பிரச்சினையைப் பற்றி என்னுடைய கவனத்திற்குக்
கொண்டுவரவில்லை" என்று ஒரு முழு பூசணிக்காயை சோற்றில்
மறைக்கப் பார்த்தார் கருணாநிதி. மதுரையிலே பொதுக்

கூட்டத்திலே பேசினார் ; திருச்சியிலே தந்தை பெரியார் அவர்கள் நூல் வெளியீட்டு விழாவிலே பேசினார் ; பாபனாசத்திலே பேசி இருக்கிறார். 21—8—1974 சட்டமன்ற இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது. குறிப்பிலே, அவர்கள் சொல்லுகிறார், " பிரதமர் என்னை அழைத்து ஒரு வார்த்தை கேட்கவில்லை என்று சொல்லி கருணாநிதி என்னை அழைத்துக் கேட்கவில்லை. நான் இருக்கிறேன். அவர்களைச் சந்தித்து கச்சத்தீவு பற்றி தான் பிரதமர் கிடையில் செயலாளர் பேசினார். இதைப்போல சொன்னேன். அதற் செய்துகொள்ளப் போகிறோம் என்று சொல்லவில்லை." ஒப்பந்தம் கருணாநிதி அவர்களுக்கு இங்கே சொல்லிக் கொள்வேன்," நான் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை ; நான்தான் குதிரை ஏறினேன் என்று சொல்வதைப் போல, பிரதமர் அவர்கள் இவரை அழைக்கவில்லையாம் ; இவர்தான் முன்னாள் பிரதமர் அவர்களை பார்த்துப் பேசினாராம் ". எந்த ஒரு வார்த்தையும் கேட்கவில்லை என்று சொல்கிறார். ஆனால் பாராளுமன்ற செயற் குறிப்பிலே வருவதை உங்கள் அனுமதியோடு இங்கே நான் படிக் கிறேன்.

'The External Affairs Minister Thiru Swaran Singh said in Rajya Sabha today that very detailed consu lations had been held with the Chief Minister of Tamil Nadu Mr. Karunanidhi by the Government of India on the issue of Katchathivu. He added— "I would like to say categorically that we had very detailed consu l-tations with the Chief Minister Mr. Karunanidhi of Tamil Nadu not once but atleast two times."

ஆக தன்னை கேட்கவே இல்லை என்று சொல்லி, தனக்கு எதுவும் தெரியாது என்பதைப்போல சொல்லி, செயலாளர் கேவல்சிங் அவர்கள் இவரை சந்தித்துப் பேசிய நேரத்திலே இது தெரியாது என்று சொல்லி, வெளி விவகாரத் துறை அமைச்சர் சுவரன்சிங் பேசிய நேரத்திலும் தெரியாது என்று சொல்லி, இந்திராகாந்தி அம்மையாரோடு இவர் பேசிய நேரத்திலும் இதைப்பற்றி எனக்குத் தெரியாது என்று முழுமையாக உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லி, கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழக மக்களை ஏமாற்றப் பார்த்து இருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்பு கிறேன். அவர்கள் எல்லாம் என்ன கருத்திலே இருந்தார்கள் என்பதும், கருணாநிதி அவர்களுக்குத் தெரிந்து இருக்க வேண்டும் . உலக மகாகவி தமிழினத் தலைவர், மிகப் பெரிய ராஜதந்திரி, ஒருவர் வந்து பேசும் போது எதைப் பேசுகிறார்கள் என்பது அவருக்குத் தெரிந்தே இருக்க வேண்டும். அதன் அடிப்படையிலே அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப்பேசி, ஒப்பந்தம் ஏற்படும் முன்பாகவே ஒரு எதிர்ப்புப் போராட்டத்திற்கு தமிழகத்தை தயார் செய்து இருக்க வேண்டும். கருணாநிதி அவர்கள், ஆனால் அதைச்



செய்யவில்லை. காரணம் கருணாநிதி அவர்கள் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்க்கும் ஒப்பந்தத்திற்கு உடந்தையாக இருந்து விட்டார்; எதற்கோ சரணாகதி அடைந்துவிட்டார் என்று தான் எண்ணத் தோன்றுகிறது. பிறகு கண்துடைப்புக்காக எதிர்ப்புத் தீர்மானம், பிரச்சாரம் என்று நடத்திக் கொண்டு இருந்தார்கள். ஒப்புக்காக ஒப்பாரி வைத்துவிட்டு ஓய்ந்து விட்ட நிலையை அவர் எட்டிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். தி.மு.க அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு கிடப்பில் போட்ட இந்த கச்சத் தீவு பிரச்சினையை தமிழ் சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத் தோடு இங்கே பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அதை இங்கே தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தக் கொண்டு வந்து இருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து இந்தத் தீர்மானம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்; மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் கொண்டுவந்து இருக்கிற தீர்மானம் துணிவோடு கொண்டுவரப்பட்டு இருக்கிற தீர் மானம்; நாம் கேட்கிற வகையிலே கேட்டால் நிச்சயமாக எல்லாம் கிடைக்கும் என்ற அடிப்படையிலே கொண்டுவந்து இருக்கிற தீர்மானம்; இதற்கு முன்பு கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த அவையிலே கொண்டுவந்த தீர்மானம் ஒரு கண்துடைப்பு தீர்மானம் என்பதை எடுத்துச் சொல்லி, உண்மை என்றும் வெல்லும்; வாய்மையே வெல்லும் என்ற நம் முடைய எண்ணம் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதை இங்கே எடுத்துச் சொல்லி இந்தத் தீர்மானம் ஏக மனதாக இந்த அவையிலே நிறைவேற வேண்டும்; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கச்சத்தீவை மீட்டுத் தந்தார்கள் என்ற பெருமை அவர்களுக்குச் சேருகின்ற வகையிலே இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக ஆதரித்துத் தரவேண்டு மென்று கேட்டு விடைபெறுகிறேன்; நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழந்த கச்சத்தீவை மீட்கின்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை முன்மொழிந்துள்ள தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டி, இந்திய குடியரசு கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். ராணி மங்கம்மாவைப் போல இன்றைக்கு இழந்த அந்தத் தீவை மீட்க நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வீராங்கனையாகப் புறப்பட்டு இருக்கிறார் கள். அவர்களுடைய இந்த முயற்சிக்கு எங்கள் கட்சியி னுடைய ஆதரவையும் பாராட்டுக்களையும் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. செ. கு. தமிழரசன்]

பிற்பகல் 12-10 [1991 அக்டோபர் 3

இந்தத் தீவு ஒரு மிகச் சிறிய தீவு.
இலங்கைக்கும் இடையிலே உள்ள பாக்நீர் இந்தியாவுக்கும்
நீளமும், 9)0 அடி அகலமும் சந்தி 1 மைல்
மைல்கள் பரப்பளவும் ஏறக்குறைய 3.75 சதுர
கூட இது எழில் உள்ள மிகச் சிறிய தீவு.
சொந்தமான தீவு மிகுந்ததீவு. நம்முடைய என்றாலும்
உறுப்பினர்கள் என்பதை மாண்புமிகு தமிழகத்திற்கு
றார்கள். எல்லாம் தெளிவாக சட்டப் பேரவை
தொடர்ந்து 1954-லிருந்து விளக்கிச் சொல்லியிருக்கி
மாண்புமிகு பலமுறை இந்தச் சட்டப் பேரவையில்
றார்கள். கச்சத் தீவைப் பற்றிய பிரச்சினைகளை
லிருந்து சட்டப்பேரவைத் உறுப்பினர்கள் பேசி இருக்கி
வரலாறு வலியுறுத்தி இருக்கிறார்கள்.
பிரச்சினைக்கு இன்றுவரையிலும் நடந்த ஆகவே, 1954-
மானத்தை இருக்கிறது. பேசப்பட்டுக் கொண்டிருக்கிற இந்தப்
மொழிந்து இன்றைக்கு வரலாற்று சிறப்புமிக்க நெடிய
வந்துவிட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி தீர்
இருப்பதன் மூலம் அவர்கள் முன்
என்றே நம்புகிறேன். ஏறக்குறைய ஒரு முடிவுக்கு

அந்தத் தீவு 1947-ல் நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த
போது ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களே,
அந்த ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தை அமல்படுத்து
வதற்கு முன்பாக இராமநாதபுரம் சேதுபதிக்குச் சொந்தமாக
இருந்தது. நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்
பினர் தென்னவன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல
23—6—1880-ல் இராமநாதபுரம் துணைப் பதிவாளர் அலு
வலகத்தில் அந்தத் தீவை அன்றைக்கு இராமநாதபுரம்
சேதுபதி அவர்கள் ஜனாப் அப்துல் காதர் அவர்களுக்கும்,
மரைக்காயர் முத்துசாமிப் பிள்ளைக்கும் ஐந்தாண்டுகளுக்கு
குத்தகைக்கு தந்ததாக அங்கே சான்று இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

அதற்கு பிறகு 19—2—1922-ல் இராமநாதபுரம் திவானாக
இருந்த சுப்பையா நாயுடு அவர்கள் இராஜேஸ்வரன்
சேதுபதிக்கு எழுதிய ஒப்பந்தத்தில் அந்த ஆவணங்களை எல்லாம்
குறிப்பிட்டு தொடர்ந்து குத்தகைக்கு விட்டிருக்கிறார். இப்படி
ஏராளமான சான்றுகள் 1955 வரையிலும் தொடர்ந்து
தம்மிடம் இருந்து கொண்டிருக்கின்றன. இலங்கை
யிடம் இத்தகைய சான்றுகள் ஏதாவது இருக்கிறதா என்றால்
எந்தச் சான்றையும் இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை.
இலங்கைக்கு ஆதரவாக எந்தச் சான்றும் இல்லை. ஆகவே,
இலங்கை முதலில் இதில் எங்கே தலையை நீட்டுகிறது



1991 அக்டோபர் 3] [திரு. செ. கு. தமிழரசன்]

என்றால் 1955-ல் கடற்படை பயிற்சிக்காக அவர்களுடைய இராணுவ வீரர்களை இந்தத் தீவுக்கு இலங்கை முதன் முதலாக அனுப்பி வைக்கிறது. அதற்கு பிறகுதான் அது தனக்கு சொந்தம் கொண்டாடத் தொடங்கியது. இந்தப் பிரச்சினை எழுகிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகள் இன்றைக்கு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மட்டும் அல்ல. பல்வேறு பிரச்சினைகள் உலக அரங்கில் வந்திருக்கிறது. அமெரிக்காவுக்கும்,நெதர்லாந்துக்கும் பார்மஸ் தீவு என்று சொல்லப்படுகிற அந்தத் தீவு யாருக்கு சொந்தம் என்ற வகையிலே ஒரு பிரச்சினை எழுந்து இருக்கிறது. டென்மார்க்கிற்கும், நார்வேக்கும் இடையே கிழக்கு கிரீஸ்லாந்து தீவு யாருக்கு என்ற வகையில் பிரச்சினை எழுந்திருக்கிறது. பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் இடையே மினிபொயஸ் ஏற்றோ என்ற அந்தத் தீவு யாருக்கு என்று அவர்களுக்கிடையே ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. இப்படி உலக நாடுகளுக்கிடையே எழுந்த பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிறபோது உலக அளவில் ஒரு மரபு பின்பற்றப்பட்டிருக்கிறது. அது என்ன மரபு என்றால் வலிவான வரையறையான ஆட்சி நடவடிக்கைகள் அந்த மண்ணின் மீது யாருக்கு இருக்கிறதோ அவருக்கே அது சொந்தம் என்கிற வகையிலே தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் இருக்கிற சான்றுகள் நம்முடைய இந்தியாவுக்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்குதான் அந்தத் தீவின் பேரில் வலிவான வரையறையான ஆட்சி நடவடிக்கைகள் இருந்திருக்கின்றன என்பதை நம்முடைய சான்றுகள் எல்லாம் தெளிவு படுத்துகின்றன.

எனவே, உலக சட்ட வழக்கிலும், உலக மரபு வழக்கிலும் கூட இந்தத் தீவு நமக்கு தான் சொந்தம் என்பது மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. 1974-ம் ஆண்டில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் இதை நாம் இழந்து இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் குறிப்பிட்டதைப் போல அன்றைக்கு இருந்த கருணாநிதி அரசு இதை தாரைவார்த்து கொடுத்து விட்டது. வெறும் கண்டனத் தீர்மானம் என்று கண்துடைப்புத் தீர்மானத்தைப் போட்டு அன்றைக்கு இலங்கை இந்தியா ஒப்பந்தத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு உடந்தையாக இருந்து மாபெரும் மோசடியை தமிழக மக்களுக்குச் செய்து விட்டது.

மாநிலங்கள் அவையில் வெளியுறவு அமைச்சர் ஸ்வரன்சிங் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இரண்டுமுறை நான் தமிழக முதல்வர் கருணாநிதி அவர்களோடு கலந்தாலோசித்துவிட்டு தான் இந்த ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்டேன் என்று அவர்கள் குறிப்பிட்டதைப் போல அன்றைக்கு வெளியுறவுச்

செயலாளராக இருந்த கேவல்சிங் அவர்கள் கருணாநிதி அவர்களோடு பேசியதற்கு பிறகுதான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே கள். அதைவிட வேறொரு செய்தியும் நடந்திருக்கிறது. அதே அமைச்சரவையில் அமைச்சராக இருந்த முத்து அவர்கள், இதே அவையில் திராவிட கழகத்தின் சார்பாக கச்சத்தீவை இழந்தது குறித்து யில் இலங்கைக்கு ஆதரவாக இந்த மன்றத்திலே பேசியிருக்கிறார்கள். ஆகவே, இப்படியெல்லாம் அவர்கள் அன்றைக்கு அதற்கு உடந்தையாக துணை போயிருக்கிறார்கள். அது அவருக்கு தெரியாததல்ல. 1974-ல் இந்த ஒப்பந்தம் பலமுறை அந்த இதையெல்லாம் சொன்னார் சத்யவாணி முன்னேற்றக் பேசகை அவர்கள் கருணாநிதி இருந்து ஏற்படுத்தப்பட்டது.

பிற்பகல் 12.15

1970-லே இந்தச் சட்டப் பேரவையிலே அன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினராக இருந்த திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். என்ன வென்றால், 'கச்சத் தீவிலே இருக்கிற புனித அந்தோணியார் கோயிலுக்கு இங்கேயிருந்து வழிபடுவதற்காகச் சென்ற தமிழர் கள் பலர், அந்த அரசினுடைய ராணுவத்தினால் தடுக்கப் பட்டு, அங்கே கலவரம் ஏற்பட்டது குறித்து இந்த அரசினு டைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்' என்று திரு. மார்ட்டின் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போது 1970-லே கருணாநிதி அவர்கள் 'ஆஹா' இதை நாங்கள் விடுவோமா, மிகத் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம், மத்திய அரசை வலியுறுத்துவோம், என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். 1970 லேயிருந்து, இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. 4 ஆண்டுகாலம் பேசாமல் இருந்துவிட்டு இது குறித்து கேட்காமல் இருந்துவிட்டு 1974-லே இந்த ஒப்பந்தத்திற்கு அவர்கள் துணை போய்விட்டார்கள்.

இந்தக் கச்சத் தீவை இழப்பதால், நாம் ஏதோ ஒரு சிறிய நிலப்பரப்பை இழந்துவிடுகிறோம் என்று நாம் சாதாரண மாக இருந்துவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே குறிப்பிட்டதைப் போல கடலின் அடிப்பரப்பிலே கிடைக்கக்கூடிய அணு உற்பத்தி பொருட்கள் இருக்கிறதே அவைகளைப் பெறுகின்ற அந்த வாய்ப்பை நாம் இழந்து விடுகிறோம். இப்போது கல்பாக்கத்திலே கூட கடலின் அடியில் உள்ள பொருட்களை வைத்து அணுச் சக்தியை நாம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பை நாம் இழந்து விடுகிறோம். இன்னும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குத் தேவைப்படுகிற கனி வளத்தை நாம் இதன் மூலம் இழக்கிறோம். அதுமட்டுமல்ல, எல்லைக்குப்



பாதுகாப்பாக இருக்கிற அந்த இடத்தை இழப்பதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்கே வந்து தன்னுடைய காலை ஊன்றுவதற்கு வழி செய்துவிடுகிறோம். எல்லையைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், வான் வெளி பாதுகாப்பை யும் நாம் இழக்கிறோம். ஆகவே அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்கு வழி கொடுக்கிற ஒரு காரியத்தை நாம் செய்கிறோம். இதைச் செய்வதன் மூலம் இந்திய தேசியத்தினுடைய பாது காப்பிற்கே நாம் ஒரு பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறோம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு விஞ்ஞானிகள் இன்னொன்றை யும் சொல்கிறார்கள். உலக நாடுகளிலே உள்ள கடல் பரப்பில் இருந்து மீன்கள் எல்லாம் மெல்லமெல்ல, அந்த நீரோட்டத்தின் மூலம் தமிழகக் கடல் பரப்பை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்று எல்லாம் சொல்கிறார்கள். எனவே தமிழகக் கடலோரத்திலே நமக்குக் கிடைக்கிற அந்த மீன் வளமும் கிடைக்காமல் போய்விடுகின்றது.

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த இடத்தை நாம் இழப்பதன் மூலமாக நவீன காலனி ஆதிக்கத்திற்கு நாம் வழி செய்து விடுகிறோம். 1983-லிருந்து 1991 வரை, நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 50 மீனவர்களை நாம் இழந்திருக்கி றோம். இது ஒரு சாதாரண இழப்பு அல்ல. எவ்வளவோ ஆயிரக் கணக்கான சொத்துக்களை இழந்திருக்கிறோம். படகுகளை இழந்து இருக்கிறோம். ஆகவே இது தமிழகத்தினுடைய தன்மானப் பிரச்சினையாக அன்றாடம் இருந்து கொண்டிருக் கிற ஒரு சமுதாயப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே இதை மீண்டும் பெறுவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எப்படி காவிரி நீர்ப் பிரச்சினைக்கு மாநிலம் முழுவதும் உள்ள மக்களை தட்டி எழுப்பி, பல சர்வ கட்சிக் கூட்டங்களை நடத்தி, ஒரு பெரிய தமிழக மாநில உணர் வைத் தூண்டி போராடிக் கொண்டிருக்கிறார்களோ, அதைப் போல சர்வ கட்சிக் கூட்டத்தைக்கூட்டி, நம்முடைய அனைத்துப் பிரதிநிதிகளுடைய கருத்துக்களையும் அறிந்து மாநில அள விலே மக்களைத் தட்டி எழுப்பி, மத்திய அரசிற்கு நம்முடைய பிரதிநிதிகளை அழைத்துச் சென்று பிரதமரிடம் பேசி, இதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு, விரைந்து தீர்வு காண்பதற்கு, நீங்கள் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இடம் நம் போர் அச்சங்களைத் தவிர்க்க உதவுகிற இடம். அதுமட்டுமல்லாமல். நாம் அந்த இடத்தை மீண்டும் பெற்றால், நமது கப்பல் படைப் பயிற்சித் தளத்தை அங்கே ஏற்படுத்தலாம். அது ஒரு பெரிய திட்டாக இருப்பதால் அங்கே போர் விமானங்களைஇறக்குகிற ஒரு நல்ல தளத்தை உருவாக்க நாம் முயற்சிக்கலாம். இவைகள் எல்லாவற்றிற்

கும் மேலாக, இன்றைக்கு செய்தித் தொடர்பு சாதனத்திலே ராடார் என்று சொல்கிறோமே, அந்த ராடார் கருவிகளை எல்லாம் அந்த இடத்திலே வைப்பதற்கு ஏற்ற இடமாக அந்த இடம் நன்றாக இருக்கிறது.

இலங்கைக்குச் சாதகமாக இருக்கிற ஒரே ஒரு ஆதாரம் என்ன வென்றால், பொதுவாக என்ன சொல்கிறார்கள் என்றால், எந்த நாட்டுக்கு அருகிலே அந்தத் தீவு இருக்கிறதோ, எதற்கு மிக அருகாமையிலே அது இருக்கிறதோ, அந்த நாட்டுக்குத்தான் அது சேரலாம் என்று ஒரு வாதத்தைச் சொல்கிறார்கள். அப்படியே பார்த்தாலும்கூட, இலங்கைக்கும் கச்சத் தீவிற்கும் இடையிலே இருக்கிற தூரம் 10½ மைல். இந்தியாவிற்கும் கச்சத்தீவிற்கும் இடையிலே இருக்கிற தூரம் 12½ மைல். இரண்டுமைல் வித்தியாசத்திலே தான் அவர்களுக்கு மிக நெருக்கமாக இருக்கிறதே தவிர; மிகப் பெரிய வித்தியாசம் ஏதோ 1 கிலோ மீட்டரிலோ, அல்லது 2 கிலோமீட்டரிலோ மிக நெருக்கமாக அது இல்லை. அப்படித்தான் நெருக்கமாக இருக்கிற நாட்டிற்குத்தான் இந்தத் தீவு சொந்தம் என்று அவர்கள் சொல்கிற வாதம் சரியாக இருக்குமானால், அந்தமானை நாம் கொடுக்க முடியுமா? பர்மாவிற்கு மிக அருகிலே அந்தமான் இருக்கிறது. ஆகவே, அந்தமானை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். நமக்குத்தான் சொந்தம் என்று வாதாடிப் பெற்றிருக்கிறோம். அந்தமான் எப்படி நமக்கு மிகத் தொலைவிலே இருந்தாலும்கூட பர்மாவிற்கு அருகிலே இருந்தாலும் கூட, அது நமக்குச் சொந்தம் என்று பெற்றிருக்கிறோமோ, அதைப்போல, இதற்கும் வாதாடி, பெறக்கூடிய அளவிற்கு, நீங்கள் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நாம் பல்வேறு கால கட்டங்களில் நம்முடைய ஆட்சிப் பரப்பை இழந்திருக்கிறோம். சுதந்திரத்திற்குப் பின்னால், சைனாவிற்கு 40 ஆயிரம் சதுர மைல்களை இழந்திருக்கிறோம். அது வெறும் கற்பாறைகள்கொண்ட இடம் என்று அன்றைக்கு பிரதமர் நேரு அவர்கள் சொல்லி, அந்த இடத்தை விட்டுத் தந்திருக்கிறோம். அதேபோல் ராஜஸ்தானிலே 18 ஆயிரம் சதுர மைல்களை பாகிஸ்தானுக்கு இழந்து இருக்கிறோம். இப்படி தொடர்ந்து ஒவ்வொரு முறையும் இழந்து கொண்டேயிருந்தால், இது இந்தியாவிற்கு பெருமை சேர்க்கிற விஷயம் அல்ல. நம்முடைய எல்லைகளை நாம் போற்றிப் பாதுகாக்கவேண்டும். மிக கவனத்துடன் இதிலே இருக்கவேண்டும். இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத்துணிச்சலாக கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக்கட்சியின் சார்பிலே வாழ்த்தி, பாராட்டி, அவர்கள் எடுக்கின்ற ஒவ்வொரு பணிக்கும் நாங்கள் தோள் கொடுப்போம் என்று சொல்லி, அமைகிறேன், நன்றி, வணக்கம்.





பிற்பகல் 12.20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்று கச்சத் தீவு சம்பந்தமாக
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்
திருக்கிறார்கள். அந்த முன்மொழிவிலே, அந்தத் தீர்மானத்
திலே 1983 வது ஆண்டு முதல் இன்று வரையிலும் தமிழக
கடலோரப்பகுதியில் இருக்கின்ற மீனவர்களுக்கு இத்தகைய துன்ப
துயரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எத்தகைய இழப்பு
கள் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டி
ருக்கின்றன என்பதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதுபோன்ற இழப்புகளும், சேதங்களும், கடலோரப் பகுதி
மக்களுக்கு ஏற்படுவதை யாரும் அனுமதிக்க முடியாது.
அவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு, அவர்களுடைய
பாதுகாப்பிற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு யாருக்
கும் இருவித கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால்
1974, 1976ல் ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த ஒப்பந்தத்தை,
அந்த ஒப்பந்தம் அடிப்படையில் இருக்கக்கூடிய ஷரத்துக்களை—
தமிழகத்திற்கு, தமிழக மீனவ மக்களுக்கு பெற்றுக்கொடுப்ப
திலே மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்பதுதான்
யதார்த்தமான உண்மைகள். அவ்வப்போது கடலோர
மீனவ மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த நிகழ்ச்சிகளை
எல்லாம் மத்திய அரசுக்கு சுட்டிக்காட்டுகின்றபொழுது,
மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுகின்றபொழுது, விரைவாக
தலையிட்டு இலங்கை அந்த ஒப்பந்தத்தை மீறுமேயானால்,
அப்போதே அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கவேண்டும்.

காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் ஏதோ
அதிகாரிகள் கவனக் குறைவாக இருந்ததின் விளைவாகத்தான்
இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் என்று குறிப்பிட்டார்கள். மத்தி
யிலே இருக்கிற அதிகாரிகள் கவனக் குறைவு மட்டுமல்ல.
அதில் யார் கவனக் குறைவாக இருந்தாலும், மத்தியிலே
இருக்கின்ற ஆட்சிதான் அதையெல்லாம் கவனித்து, ஒப்பந்
தத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு, கடைப்பிடிப்பதற்கு,
யார் மீறினாலும் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சி
எடுக்கப்பட்டிருந்தால் இன்றையதினம், ஏற்பட்டிருக்கின்ற
இவ்வளவு பெரிய சேதங்கள், தமிழக கடலோரப் பகுதி
மீனவ மக்களுக்கு ஏற்பட்டிருக்காது என்பதுதான் எங்களு
டைய குற்றச்சாட்டாகும். அந்த வகையிலே இன்றைய
தினம் இந்தப் பிரச்சினை தொடர்ந்திருக்கிறது. இந்தப்
பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு எவ்வளவோ முயற்சி
களை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

[திரு. வே. தம்புசாமி] [1991 அக்டோபர் 3

அது போன்று காஷ்மீர் பிரச்சினையாக இருந்தாலும்,
பிரச்சினையாக இருந்தாலும், சீன எல்லை பர்மா
யாக இருந்தாலும் அந்த பிரச்சினை
எந்தெந்த வகையில் எந்தெந்த பிரச்சினைகளை எல்லாம்
யிலே தீர்ப்பதற்கு தொடர்ந்து அந்த மாநில அரசு ஆலோசனை
கூறினாலும், மத்தியிலே இருக்கக்கூடிய மத்திய அரசு அந்த
ஒப்பந்தங்களை செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே
இந்தப் பிரச்சினை வந்தாலும், பிரச்சினை வருவது என்பது
இயல்பு. இன்று மட்டுமல்ல. நாளைகூட பல்வேறு
பிரச்சினைகள் வரலாம். அந்தப் பிரச்சினைகளை எப்படி
தீர்க்கவேண்டுமென்று புதிய வழிகளைக் கண்டு
பிடிக்க வேண்டும். எனவேதான் இன்றைய தினம்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற
தீர்மானத்தில் அந்தக் கடைசி பாரா 7-வது பாரா என்பது
இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவி செய்யாது என்பது
மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தாகும்.
காரணம், இந்த நல்ல சூழ்நிலைமைக்கு பதில் வேறு ஒரு
சூழ்நிலைமையை ஏற்படுத்துவதற்கு அப்படி வேறொரு சூழ்
நிலைமை இந்திய நாட்டிற்கும் அல்லது இலங்கைக்கும்,
அல்லது தமிழகத்திற்கும் இலங்கைக்கும் அப்படி ஒரு புதிய
பிரச்சினை உருவாகிவிட்டது என்று இன்றையதினம் ஆட்சிப்
பொறுப்பிலே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் எதிர்காலத்தில்
அப்படி ஏற்படக் கூடாது என்பதற்குத்தான் நாங்கள் இன்றைய
தினம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அந்த வகையிலே,
இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே தீர்க்க வேண்டாம்.
இதைக் கைவிட வேண்டுமென்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி
யின் சார்பிலே கேட்டுக்கொண்டு 7-வது பாராவை நீக்கி
மற்றபடி முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற
அந்த விவரங்கள் முழுமையும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு
கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம். ஏற்றுக்கொள்கிறோம்.
எனவேதான் 7-வது பாராவின் மூலம் எதிர்காலத்தில் இந்தப்
பிரச்சினையை தீர்க்க முடியாது. அப்படி தீர்ப்பதிலே பல்வேறு
சிக்கல்கள் ஏற்படும். அந்தச் சிக்கல்களை எதிர்காலத்தில்
நாம் எல்லாம் சமாளிக்கக் கூடிய சூழ்நிலை வரும். இன்றைய
தினம் நாடு இருக்கக்கூடிய யதார்த்த சூழ்நிலைமையில்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற
இந்த தீர்மானத்தின் 7-வது பாராவைக் கைவிட வேண்டுமென்று
மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி அந்தப் பாராவை ஏற்றுக்
கொள்ளவில்லை என்பதை இந்த நேரத்திலே கூறி மற்ற அனைத்
தையும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஏற்றுக்கொள்கிறது.
வரவேற்கிறது என்பதைக் கூறி பேசுவதற்கு அனுமதி தந்த
பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமா
கிறேன், நன்றி, வணக்கம்.



1991 அக்டோபர் 3]

பிற்பகல் 12.25.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ்.வி. சண்முகம்.**

**திரு. எஸ். வி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கச்சத் தீவு சம்பந்தமாக ஒரு தீர் மானத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு எதிரானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு 17 ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றிய ஒரு தீர்மானம் 17 ஆண்டுக்காலம் வாழ்க்கை அனுபவத்தில் என்னென்னவெல்லாம் நிகழ்ந்திருக்கிறது என் பதை எடுத்துக்காட்டி நம்முடைய முதல்மைச்சர் அவர்கள் இந்த தீர்மானத்தின் மீது தன்னுடைய அழுத்தங்களையெல் லாம எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 17 ஆண்டுக்காலத்தில் இந்தத் தீவு நம்மைவிட்டு போனதில் தமிழக மீனவர்களுக்கு எற்பட்ட தொல்லைகள் நடந்த கொலைகள் ஏற்பட்ட இழப்புகள், சகித்துக்கொள்ள முடி யாத சோதனைகள் என்று இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

பொறுப்புள்ள நமக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்ச ருடைய வாதங்களை மேலும் செழுமைப்படுத்தி, அந்த வாதங்களில் இருக்கக்கூடிய நியாயங்களையெல்லாம் மத்திய அரசுக்கு சொலலி மத்திய அரசு அவைகளை பரிவோடு கவனிக்க வைக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு . அதற்குமாறாக இதைப் பயன்படுத்தி மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் மோதலை விளைவிக்கக்கூடிய கருத்துக்களையெல்லாம் சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். இந்திய அரசு என்றாலே தமிழனுக்கு எதிரானது என்றார். உண்மைதானா? அமரர் ராஜீவ்காந்தி அவர்களும் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களும் தமிழகத்தினுடைய நலனுக்காக செய்த தியாகங்கள் கொஞ்சமா? ஈழத் தமிழர் இன்னல் பட்டபோது எடுத்த நிலைகள் குறைவானதா? யாழ்தமிழர் செத்த போது அரிசி யும் பருப்பும் ஆறே மணி நேரத்தில் போயிங் விமானத்தில் கொண்டு போய் கொடுத்தது இந்திய அரசு (மேசையை தட்டும் ஒலி) அதே போல அநாதையாக வந்த வரதராஜபெருமாளை, தமிழ் குடிமகனான வரதராஜபெரு மாளை யாழ்பாணத்தினுடைய முதலமைச்சராக மாற்றியவர் கள் அமரர் ராஜீவ் காந்தி அவர்களும், எம்,ஜி.ஆர். அவர்களும் என்பதை மறந்துவிடக்கூடாது. வாய்ப்பு கிடைக்கும்

போதெல்லாம் மத்திய அரசுக்கு எதிராக வாரிவிட்டு, மத்திய
மாநில உறவுகளை கெடுத்து, தமிழகத்தை ஆறையாட
துடிக்கிற தேச விரோத சக்திகளுக்கு துணைபோகின்ற காரியங்
களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் செய்து விடக்
கூடாது. காவிரி நீர் பிரச்சினையில் கூட மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் மாநில உணர்வுகளையா தூண்டி
விட்டார்கள்? மாநில வளர்ச்சி மாநில நலனுக்காக இருக்
கின்ற நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்கள்.

ஆகவே மாநில அரசுக்கும் மைய அரசுக்கும்
கருத்துக்கள் வேறுபாடு வரும்போதெல்லாம் சில
வைத்து ஏதாவது அரசியல் விளையாட்டு அவற்றை
என்பது நாட்டு நலனுக்கு நல்லது அல்ல, விளையாடலாம்
வித்துக்கொள்கிறேன். கச்சத் தீவு என்பதைத் தெரி
வாழ்க்கை அனுபவத்தில் அது நமக்கு என்பது 17 ஆண்டுக்கால
என்பது நம்முடைய நிலை. மீண்டும் வரவேண்டும்
அவர்கள் கூட சொன்னார்கள், நம்முடைய முதலமைச்சர்
கூடிய அதிகாரிகள் எல்லாம் மத்திய அரசிலே இருக்கக்
வேறு விதமாக வியாக்கியானம் அந்த ஒப்பந்தத்தை திருத்தி
எல்லைப் பிரச்சினைகளையெல்லாம் செய்து அங்கேயிருக்கக்கூடிய
செய்திருக்கிறார்கள். வேறு
எல்லாம் இந்த தீர்மானத்தின் ஆகவே நான் மாதிரியாக
கருத்துக்களை நமது இந்திய மீது கேட்டுக்கொள்வது
இந்திய அரசு என்றால் அரசுக்கு நம்முடைய ஒருமித்த
என்ன? இந்தியாவினுடைய மாற்றிக் கொள்ள தெரிவிக்கவேண்டும்.
இந்தியாவை ஆளுகின்ற அரசியல் முடியாத அரசா
பட்டதுதான். ஆனால் காங்கிரஸ் கட்சியால் சட்டங்கள் கூட
மாறும் என்பதுபோல் காலங்கள மாறும்போது நிறைவேற்றப்
ஏறத்தாழ 72 தடவை இந்தியாவின் அரசியல் கருத்துக்கள்
17 ஆண்டுகளுக்கு முன்பு திருத்தப்பட்டிருக்கிறது. சட்டம் கூட
இன்றைக்கு மாற்ற வேண்டும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம்
உலகின் பல நாடுகளில் என்று கேட்பது நியாயம் ஆகவே
கும் இடையில் ஒரு ஒப்பந்தம் நியூஜிலாந்துக்கும் தைஜீரியாவிற்
ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் திருத்தப்பட்டிருக்கிறது. கிழக்கு
திருத்தப்பட்டிருக்கிறது. இடையில் ஒரு ஒப்பந்தம்
நாடாக மாறிய வரலாறு உண்டு. திருத்தப்பட்டு இரண்டும்
முறையில் நமக்குள்ள ஒரு மாநில அரசு ஒரு
சொல்லுகிறோம். நமது கஷ்டங்களை எல்லாம் என்ற
எடுத்துச் சொல்லுகிறோம். தமிழ் மீனவர்களுடைய எடுத்துச்
நிறைவேற்ற வேண்டும் மத்திய அரசு கஷ்டங்களை
என்று கேட்டுக் பரிவோடு அதை
கொள்கிறேன்.



ஆகவே இந்த தீர்மானத்திலே ஊடே நுழைந்து தேச விரோத சக்திகளுக்கு துணை நிற்கக் கூடிய அந்த வாதங்களுக்கு இடம் தரக்கூடாது, என்பதைக் கேட்டு கொண்டு இன்றைக்கு இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் காங்கிரஸ கட்சியும் சேர்ந்து எடுக்கக்கூடிய நிலைகளிலேதான் தமிழகத்தி னுடைய எதிர்காலம் இருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு . இந்த தீர்மானத்தை நான் சார்ந்திருக்கக்கூடிய ஐக்கிய பொதுஉடைமைக் கட்சியின் சார்பில் வாழ்த்தி வரவேற் கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகின்றபோது மத்திய அரசு அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் அவருக்கும், ஏனைய உறுப்பினர் களுக்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். தலைவர் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் தான் கொன்றார்கள் என்பதைவிட அதற்கு உறுதுணையாக இருந்தவர் பிரேமதாஸாவா என்று தற்போது செய்திகள் வந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அதற்கு உதவியாக இருக் கின்ற, தளமாக இருக்கின்ற நம்முடைய மீனவர்களுக்கு பல் வேறு தொல்லைகளையும், துயரங்களையும் கொடுத்து கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாக்குகின்ற அடிப்படைக் காரணமாக இருக்கின்ற அந்த கச்சத் தீவை மீட்பதில் எங்களுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது என் பதை நான் ஆணித்தரமாக சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அருமைத் தலைவர் வாழப்பாடி அவர்கள் இதற்கு முன்பே அதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த கச்சத் தீவி லிருந்து கொண்டு தான் பல்வேறு கஷ்டங்களை இந்த மீனவர்களுக்கு விடுதலைப்புலிகள் கொடுத்தார்கள். அவர் களுக்கு அவர்கள் ஆதரவு கொடுத்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே தான் அந்த கச்சத் தீவை மீட்பதில் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண் டும் என்பதைத் தெரிவித்து, இந்த அரசு எடுக்கின்ற எல்லா வித முயற்சிக்கும், நடவடிக்கைக்கும் முழு ஒத்துழைப்பையும் இதயப்பூர்வமாக மனப்பூர்வமாக கொடுக்கிறோம், கொடுக்கி றோம் என்று கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டுக்கு கச்சத்
தீவை மீட்க வேண்டும் என்று அரசு கொண்டு வந்துள்ள
சிறப்பு தீர்மானத்தின் மீது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்
கள் தங்கள் மேலான கருத்துக்களை கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள்
பேசும்போது, இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யச் சொல்கிறது
இந்தத் தீர்மானம், இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வது என்பது
தவறான முன்மாதிரியை ஏற்படுத்திவிடும், வேறு நாடுகளுடன்
இந்தியாவிற்கு இன்னும் எத்தனையோ ஒப்பந்தங்கள் உள்ளன
என்பதைச் சுட்டிக்காட்டினார்.

வேறு நாடுகளுடன் இந்தியாவிற்கு பல்வேறு ஒப்பந்தங்கள்
இருக்கின்றன. ஆனால் அந்த ஒப்பந்தங்கள் எல்லாம்கடை
பிடிக்கப்பட்டு வருகின்றன. Those Agreements—Inter
national Agreements are being honoured. ஆனால்
1974 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே
ஏற்பட்ட ஒப்பந்தம் அப்படிப்பட்ட ஒப்பந்தம் அல்ல. மற்ற
சர்வதேச ஒப்பந்தங்கள் எல்லாம் இன்றைக்கு நடைமுறையில்
மதிக்கப்படுகின்றன. அந்த ஒப்பந்தங்கள் குறித்து எவ்வித
பிரச்சினையும் எழவில்லை. ஆனால் 1974 ஆம் ஆண்டு
இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம்
தொடர்ந்து பல ஆண்டுகாலமாக மீறப்பட்டு வருகிறது. இந்த
ஒப்பந்தத்தை தொடர்ந்து இலங்கை அரசு அவமதித்து வருகிறது.
மேலும் இதனால் இலங்கையில் வாழ்கின்ற மக்கள் எந்த வகை
யிலும் பாதிக்கப்படவில்லை. இதனால் நம்முடைய தமிழ்
நாட்டு மக்கள்தான். இந்தியக் குடிமக்களாகிய தமிழக மீனவர்
கள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் நினைவில்
கொள்ளவேண்டும். இன்று இந்த கச்சத்தீவு பிரச்சினையை
நான் எடுத்துரைத்த நாள் தொடங்கி பல்வேறு பத்திரிகை
களிலும், வடநாட்டுப் பத்திரிகைகளிலும் சில இந்திய
பத்திரிகைகளிலும், ஏதோ நான் இந்தப் பிரச்சினையை வைத்து
மத்திய அரசை எதிர்ப்பதாகவும், மாண்புமிகு பாரதப்
பிரதமருக்கு கச்சத் தீவு பிரச்சினையை வைத்து நான் ஒரு
தர்மசங்கடத்தை ஏற்படுத்த விரும்புவதாகவும் பல்வேறு
சர்ச்சைகள் இன்று பேசப்பட்டு வருகின்றன. பத்திரிகை
களில் இத்தகைய செய்திகள், கருத்துக்கள் தொடர்ந்து வெளி
யிடப்பட்டு வருகின்றன. ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்பு
கிறேன். மத்திய அரசை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம்
எனக்கு இம்மியளவும் இல்லை. (மேசையைத் தட்டும்
ஒலி) மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஒரு
எம்பாரஸ்மெண்ட்-ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்த வேண்டும்



ஒன்றை அனைவருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.
இந்த கச்சத் தீவு பிரச்சினை, கச்சத் தீவை மீண்டும் இந்தியாவி
விற்கு மீட்க வேண்டும் என்று நான் சொன்னதை ஏதோ நான்
இன்று ஆட்சிக்கு வந்த பிறகு, புதியதாகச் சொல்லிக்கொண்டி
ருக்கிறேன் என்று சிலர் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்
கள். ஆட்சிக்கு வந்த பிறகு இதனை நான் சொல்லவில்லை.
எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே இதனைத் தெளிவாக
குறிப்பிட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)
நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கச்சத் தீவை மீண்டும் மீட்பதற்கு
எல்லாவிதமான முயற்சிகளையும் எடுப்போம் என்று எங்கள்
தேர்தல் அறிக்கையிலேயே தெளிவாகக் கூறியிருக்கிறோம்
என்பதனை இந்த நேரத்தில் அனைவருக்கும் நினைவுப்படுத்த
விரும்புகிறேன்.

பிற்பகல் 12.35

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பண்ருட்டி இராமச்
சந்திரன் அவர்களும், மற்றும் திரு. செ.கு. தமிழரசன் அவர்
களும் இன்னும் சில உறுப்பினர்களும் இங்கே பேசுகின்ற
போது வேறு சர்வதேச ஒப்பந்தங்கள் மறுபரிசீலனை செய்யப்
பட்டு கடந்த காலத்தில் மாற்றப்பட்டும் இருக்கின்றன
என்பதைத் தெரிவித்தார்கள். அது உண்மைதான்.

அதைப்போலவே கச்சத் தீவு சம்பந்தமாக ஏற்பட்ட
இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவும்,
மாற்றி அமைக்கவும் இன்று நேரம் வந்துவிட்டது. எனவே
தான் இதைப்பற்றி இன்று பேசுகிறோம். இங்கே தமிழ்நாட்டு
மீனவர்கள் தங்களுடைய பிழைப்பை நடத்தவேண்டும் என்றால்
தங்களுடைய ஜீவனத்தை சிரமம் இன்றி நடத்த வேண்டும் என்
றால் அவர்கள் கச்சத்தீவைச் சுற்றி இருக்கின்ற கடலில் மீன்
பிடித்தே ஆகவேண்டும். அதற்கு அவர்களுக்கு அனுமதி
வழங்கப்பட்டே ஆகவேண்டும். ஏன் என்றால் அதற்கு
முற்பகுதியில் உள்ள கடல் மிகவும் ஷேலோவாக, ஆழக்
குறைவாக இருக்கிறது. அங்கே போதிய அளவுக்கு அவர்
களுக்கு நல்ல ரக மீன் வகைகளும் கிடைப்பதில்லை.
கச்சத்தீவின் அருகிலேதான் அவர்களுக்கு நல்ல வகை மீன்
கள் கிடைக்கின்றன. எனவே அங்கே அவர்கள் மீன்
பிடிக்க அனுமதிக்கப்படவில்லை என்றால் அவர்களுடைய
ஜீவனமே பாதிக்கப்பட்டுவிடும். ஒரு லட்சத்திற்கு மேற்
பட்ட மீனவக்குடும்பங்கள் இங்கே இருக்கின்றன, கடலோரப்
பகுதிகளில் வசிக்கின்றன. அவர்களை எல்லாம் அரசே
காப்பாற்ற வேண்டும் என்பது நடைமுறையிலே சாத்தியம்
இல்லாத ஒன்று. அவர்களுக்கு வேறு தொழில் கற்றுக்கொடுக்க

வேண்டுமென்றால் அதுவும் நடக்காத ஒன்று. இந்த ஒரு
லட்சத்திற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடித்
தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்
கள் பேசுகின்றபோது இதைப்பற்றி பாரதப் பிரதமர்
அவர்களிடம் அண்மையில் கேள்வி கேட்கப்பட்டபோது
ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதை நிராகரித்து
விட்டார் என்பதையும், திரு. குமாரதாஸ் அவர்கள் இங்கே
சுட்டிக்காட்டினார்கள். இது எங்களுக்கும் தெரியும்.
பத்திரிகைகளை நானும் படிக்கிறேன். இந்தப்பேட்டியை
நானும் படித்தேன். எங்களுக்குத் தெரியாத விஷயம் அல்ல.
ஆனால் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கே தமிழ
நாட்டிலுள்ள சூழ்நிலையை, நம் மீனவர்களின் அவல நிலையை
யாரும் தெளிவாக எடுத்துச் சொன்னார்களா என்பது தெரிய
வில்லை. எனவே, பிரதமர் ஒரு கருத்தைச் சொல்லி
யிருந்தாலும் அவருடைய கவனத்திற்கு இங்கே நம் மீனவர்
கள் படுகின்ற துயரங்களை, துன்பங்களை எடுத்துச் சென்று
அவரை மறுபரிசீலனை செய்யச் சொல்வதில் எந்தத் தவறும்
இல்லை என்ற அடிப்படையில்தான் (மேசையைத் தட்டும்
ஒலி) இங்கே இந்தத் தீர்மானத்தை இன்று கொண்டு வந்துள்
ளோம்.

1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த Ethnic conflict
எனப்படும் சூழ்நிலை ஒரு பூகம்பம் போல, ஒரு பிரளயம் போல
இலங்கையிலே வெடித்த பின்னர் இதுவரை 50-க்கும் மேற்
பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்
கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று இன்று நாங்கள் கொண்டு
வந்துள்ள தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிறோம். அதிகார
பூர்வமாக எங்களுக்கு வந்த தகவலின்படி 50-க்கும் மேற்பட்ட
மீனவர்கள் என்று குறைவாகக் கூறியிருக்கிறோம். ஆனால்
அதிகாரபூர்வமற்ற முறையில் unofficial estimates
பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. அப்படிப் பார்க்கப்
போனால் மீனவர்களே சொல்லுகின்ற தகவலின்படி 116-க்கும்
மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் இலங்கை
கடற்படையினரால் என்று நமக்குத் தெரிய வருகிறது.
பிற்பகல் 12.40

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தமிழ் நாட்டுக்கு
இரண்டு பிரச்சினைகளில், இரண்டு மிகப் பெரிய, முக்கியமான
ஜீவாதாரப் பிரச்சினைகளில் மிகப் பெரிய தீங்கை இழைத்து
விட்டார். தமிழகத்தின் நன்மைகளை, நலனை அவர் காட்டிக்
கொடுத்துவிட்டார், தமிழகத்திற்கு துரோகம் செய்துவிட்டார்
(மேசையைத் தட்டும் ஒலி) என்றே கூற வேண்டியிருக்கிறது. ஒன்று
காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சனை; இன்னொன்று,
இரண்டாவது பிரச்சினை இந்த கச்சத்தீவு பிரச்சினை.



161607



காவிரி நதி நீர்ப் பிரச்சினையில், அன்று சுப்ரீம் கோர்ட்டில்
தொடுத்திருந்த வழக்கை அன்றைய முதலமைச்சராக இருந்த
கருணாநிதி திரும்பப் பெறாவிட்டால், இன்று தமிழகத்திற்கு
இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டு இருக்காது. (மேசையைத் தட்டும்
ஒலி).

அதைப்போலவே கச்சத் தீவு விஷயத்தில் அன்றைய பிரதமர்
மாண்புமிகு இந்திராகாந்தி அம்மையார் இருந்த போதும்,
அன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஸ்வரன்சிங்
அவர்கள், கருணாநிதி அவர்களை கன்சல்ட் செய்த போது,
ஆலோசனை கேட்டபோது, கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுக்கக்
கூடாது என்று அவர் உறுதியாக கூறியிருந்தால், அன்றைய மத்திய
அரசும் இதை மறுபரிசீலனை செய்து இருக்கக்கூடும். (மேசை
யைத் தட்டும் ஒலி). இத்தகைய ஒரு பரிதாபமான சூழ்நிலை
தமிழகத்திற்கு ஏற்படாமலேயே போயிருக்க வாய்ப்பும் உள்ளது
என்றே கூறத் தோன்றுகிறது.

அன்றைக்கு கருணாநிதி அவர்கள் செய்த இரண்டு பெரிய
பாவங்களுக்காக, இரண்டு பெரிய தவறுகளுக்காக இன்று
நாம் பரிகாரம் தேட வேண்டிய ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்
பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 1974 ஆம் ஆண்
டில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் என்ன கூறுகிறது? அதில்
என்னென்ன விதிகள், என்னென்ன ஷரத்துக்கள், என்னென்ன
கண்டிஷன்கள் கூறப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அனைவரும்
அறிவோம். ஆனால் அந்த ஒப்பந்தம் வெறும் காகிதத்தில்தான்
இருக்கிறது. It is only an agreement on paper. நடைமுறையில்
அந்த ஒப்பந்தத்திலுள்ள சலுகைகள் நம் மீனவர்களுக்குக்
கிடைக்கவில்லை. அவற்றை அவர்களால் அனுபவிக்க
முடியவில்லை. அங்கே அந்தோணியார் சர்ச் ஒன்று இருக்கிறது
என்பதை பல உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்
பிட்டார்கள். ஆண்டுதோறும் அங்கே திருவிழா நடைபெறும்.
அது முந்தைய கதை. கடந்த சில ஆண்டுகளாக அந்தத்
திருவிழா நடைபெறுவதே இல்லை. நம்முடைய மீனவர்கள்
அந்தப் பகுதியை நெருங்க முடிவதே இல்லை. 1984 ஆம் ஆண்டு
நான் முதன் முதலில், ராஜ்யசபை உறுப்பினராக டெல்லிக்குச்
சென்றபோது, அப்போதே மாநிலங்கள் அவையில், ராமேஸ்வரம்
மீனவர்களின் பரிதாப நிலையைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு
பரிகாரம் தேட வேண்டும்; அவர்களுக்கு ஒரு நல்வழி செய்ய
வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திப் பேசினேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

அதன்பிறகு, 1987 ஆம் ஆண்டு, மத்திய அரசின் 'பட்ஜெட்'
மீது நடைபெற்ற விவாதத்தின்போதும், மீண்டும் பாராளு
மன்றத்தில் நான் பேசுகிறபோது, இதே பிரச்சினையை மீண்டும்
எடுத்துரைத்து, நம் மீனவர்கள் படும் அல்லல்களைப் பற்றி

எடுத்துரைத்தேன். இவ்வளவு ஆண்டுகள் கழித்தும், 1991ஆம்
ஆண்டு மீண்டும் இந்த நிலைமை நீடிக்கிறது என்று சொன்
னால் மட்டும் போதாது. இந்த நிலைமை இன்னும் மோச
மடைந்திருக்கிறது என்ற உண்மை, இன்றைக்கு இருக்கிறது
என்று சொன்னால், இது உண்மையிலேயே மிகவும்
வருந்தத்தக்க ஒன்றாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே
பேசுகின்றபோது, ஏழாவது பாராவை கைவிட வேண்டுமென்று
கூறினார். இதனால் இலங்கையுடன் வேறு பல பிரச்சினைகள்
ஏற்பட்டுவிடுமோ, சர்வதேசச் சிக்கல்கள் ஏற்பட்டுவிடுமோ
என்ற ஐயப்பாட்டையும் அவர் இங்கே தெரிவித்தார். ஒன்றை
நான் தெளிவாக்க விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தில் என்ன
சொல்லியிருக்கிறோம். இந்திய அரசு இலங்கை மீது படை
யெடுத்து, கச்சத் தீவைப் பிடித்துத் தாருங்கள் என்று நாங்கள்
சொல்லவில்லை. எங்கள் தீர்மானத்தில், ஏழாவது பாராவில்,
இந்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு, கச்சத்
தீவையும் அதற்கு அருகிலே உள்ள கடற்கரைப் பகுதிகளையும்
திரும்பப் பெறவும், இந்திய நாட்டின் கடற்கரை எல்லைப்
பகுதியுடன் அவைகளை மீண்டும் சேர்க்கவும், எல்லாவித உடனடி
நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டு
மென்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மைய அரசைக்
கேட்டுக் கொள்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள்
இங்கே மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். இது மத்திய
அரசை எதிர்க்கும் தீர்மானம் அல்ல. ஏற்கெனவே எடுக்கப்
பட்ட ஒரு முடிவு. மத்திய அரசால் ஏற்கெனவே எடுக்கப்
பட்ட ஒரு முடிவு, நடைமுறையில் தவறானது என்று நிரூபிக்கப்
பட்ட பிறகு, அந்த முடிவை மாற்றிக்கொள்ள வேண்டு
மென்று மைய அரசை கேட்டுக்கொள்ளும் தீர்மானம்
என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அதுதான் உண்மை.
அதைத்தான் நான் மீண்டும் இங்கே வற்புறுத்திக் கூற
விரும்புகிறேன். மீண்டும், அறுதியிட்டு உறுதியாகச் சொல்
கிறேன். மத்திய அரசை எதிர்க்க வேண்டுமென்ற
எண்ணமோ, மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு ஒரு
தர்ம சங்கடத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமோ
சிறிதளவும் எங்களுக்கு இல்லை. எங்கள் அரசுக்கும் இல்லை.
(மேசையைத்தட்டும் ஒலி) ஆனால் நம்முடைய தமிழக
மீனவர்கள் எவ்வளவு அவல நிலையில் இன்று வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு எத்தனை அல்லல்கள்.
எத்தனை துன்பங்கள் இலங்கைக் கடற்படையால் ஏற்படுத்தப்
பட்டு வருகின்றன என்பதை இங்குள்ள மாண்புமிகு
உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். எனவே, அவர்
களுடைய பிரச்சினைகளுக்கு, அவர்களுடைய துன்பங்களுக்கு,



துயரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; அதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கமாகும். நம்முடைய மீனவர்கள் பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஏற்கெனவே மத்திய அரசு எடுத்த முடிவு, நடைமுறையில் தவறானது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டதால், மத்திய அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக, இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை மீண்டும் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், இந்தத் தீர் மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை எனக் கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறை வேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12.45

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஊ) இந்துசமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1991 (ஆ.இ.).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல், பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1991) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[1991 அக்டோபர் 3

8. சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட
முன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு
இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்
வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1991)''
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா : பிற்பகல் 12-45
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக்
கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1991) ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்
னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்த சட்ட
முன்வடிவினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல
முன் வருகிறேன்.

ஆலய நிர்வாகம். அந்த நிர்வாகத்திற்கு வாரியம்
அமைப்பது உண்மையிலேயே மிகவும் சாலச்சிறந்த ஒன்றா
கும். காரணம் அந்தக் காலத்திலே சொல்வார்கள். நல்ல
மழை பெய்யவும், நிர்வாகம் சிறப்பாக அமையவும், மக்கள்
சுபிட்சமாக வாழவும் மக்களுக்கு எந்தவிதமான நோய்
நொடிகள் இல்லாமல் வாழ-பண்டைய காலத்தில் காலரா,
பிளேக், அம்மை என்ற சூழ்நிலையெல்லாம் இருந்தது. இப்
பேற்பட்ட நிலைமைகள் எல்லாம் நாட்டிலே இருந்து மறைய
வேண்டுமென்பதற்காகத்தான்— நாம் ஆண்டவனை வணங்கி,
அந்த ஆண்டவனுக்கு என்னென்ன காரியங்கள் செய்ய
வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொண்டு வருகிறோம்.
அந்த அடிப்படையிலே, இன்றைய தினம் நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு வாரியத்தை
யும் அமைத்து, அந்த வாரியத்தின் மூலமாக எல்லா கோயில்
நிர்வாகமும் சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக இங்கே

*1—10—1991ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்
றுள்ளது.





கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆதரித்துத்தான் ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் கோயில் நிர்வாகம் சிறப்பாக சீராக இல்லாவிட்டால், அந்தக் கோவில் நிர்வாகத்திற்கு ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சியில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு 'ஏரியா கமிட்டி' என்று இருந்தது. 'அந்த ஏரியா கமிட்டியிலே' நான் அங்கம் வகித்து இருக்கிறேன். பிறகு அறங்காவலர்கள் குழு, அந்த ஆலய அறங்காவலர் குழுவிலேயும்

நான் ஐந்து ஆண்டுகள் பங்கேற்றிருக்கிறேன், பணியாற்றி இருக்கிறேன். அந்த ஐந்து ஆண்டு காலம் பணியாற்றும் போது அங்கே அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் கொஞ்சம் கள்ளம் கபடம் இல்லாமல், அதாவது கோவில் சொத்தை அபகரிக்காமல், கோவில் நிலங்களை குத்தகைக்கு விட்டு அந்தக் குத்தகை பாக்கியை ஒழுங்காக வசூலிக்கக்கூடியவர்கள் ஏதாவது கிரிமினல் குற்றங்களில் சம்பந்தப்படாமல் இருப்பவர்கள்' இப்படிப்பட்டவர்களை ஆராய்ந்து தெரிவுசெய்து போட்டார்கள். அப்படிப் போடும் போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் இன்றைக்கு மக்களால் போற்றிப் புகழப்படுகின்ற அருமைத் தலைவி, நம்முடைய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே நியமிக்கும்போது—ஒவ்வொரு அறங்காவலர் குழுவை, அந்த வாரியத்தின் மூலம் அமைப்பதாக இருக்கின்றது, அப்படி நியமிக்கும்போது—அங்கே ஒரு பெண் உறுப்பினரைக் கண்டிப்பாகப் போடவேண்டும். என்னை அந்தக் காலத்திலே போட்டார்கள். அதேபோன்று ஒரு பெண் உறுப்பினரை நல்லவராகப் பார்த்துப் போட வேண்டும்.

இன்றைக்கு இங்கே 'பழங்குடியினர்' என்று சொல்லப்படுகிறது. பழங்குடியினர் மட்டும் இருக்கக்கூடாது. அதிலே S.C./S.T. இரண்டு பேரையும் உறுப்பினர்களாகப் போடவேண்டும். S.C./S.T. இல்லாமல் சில இடங்களில் பழங்குடியினர் மட்டும் இருக்கிறார்கள். ஏனென்றால், பழங்குடியினர்களில் யார், யார் பழங்குடியினராக வருகின்றார்கள் என்று தெரியாது. ஆகையினால்..

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறும் S.T. என்று அதில் குறிப்பிடவில்லை. எஸ்.சி.,எஸ்.டி. என்றுதான் இருக்கிறது.

பிற்பகல் 12.50

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : அது ஒரு இடத்திலே இருந்தது. அதை நான் தவிர்த்துக் கொள்கிறேன். அந்த மாதிரி அதிலே நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்

சொல்கிறேன். பிறகு கமிட்டி அமைப்பிலே அதோடு இந்த ஏரியாக் கமிட்டியிலே நான் இருக்கும்போது பார்த்து இருக்கின்றேன். உண்மையிலேயே நிலங்களைக் குத்தகைக்கு எடுப்பார்கள். அந்தக் குத்தகைக்கு எடுத்த நபர்கள், கடைசியில் மழை நன்றாகப்பெய்திருக்கும்: வெள்ளாமை நன்கு வந்திருக்கும். அவ்வாறு இருந்தாலும் கூட, அந்தக் குத்தகைப் பணத்தைக் கட்டுவதிலே ரொம்பச் சுணக்கம் காட்டி அதைக் கொடுக்காமல் இருப்பதற்கு என்னவெல்லாம் வழி இருக்கிறதோ அதை எல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நிலைமை நம்முடைய இந்த ஆட்சியில் பூரணமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். விளையாமல் இருந்தால் தள்ளுபடி செய்யலாம்; அது வேறு. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நாங்கள் எல்லாம் பழைய கால எம்.எல்.ஏ. வாக இருந்தபோது, காங்கிரஸ் ஆட்சியிலே எம்.எல்.ஏ.வாக இருந்தபோது கபாலீஸ்வரர் கோயிலுக்கு நிறைய நிலம் இருந்தது சென்னையிலே. இப்போது அந்த நிலம் எல்லாம் எங்கே போனது? யார் எடுத்தார்கள்? கபாலீஸ்வரர் கோயில் சொத்திலே பல வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். குளத்திற்குப் பக்கத்தில் வீடுகளைக் கட்டி, இன்றைக்கு அந்த வீடுகளை எல்லாம் அவர்கள் சொந்தமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நீண்டகால குத்தகைக்கு கோயில் சொத்தை குத்தகைக்கு விடுவதுதான் இதற்கெல்லாம் காரணம். 99 வருஷத்திற்கு கோயில் சொத்தை குத்தகைக்கு விடுவது இருக்கிறதே. அதைக் கட்டாயமாக மாற்றித்தீர வேண்டும். ஒருவர் 99 வருஷத்திற்கு குத்தகைக்கு எடுத்து, அவர் 'சப்-லீஸ்' விடுகிறார். அவர் சப்-லீசுக்கு விட்டு பணத்தை அவரே வசூல் செய்து கொள்கிறார். அந்தக் கோயில் நிர்வாகத்திற்குப் பணம் வருவதில்லை. இதை நாம் கண்கூடாக அறிகின்றோம்.

இன்னொன்று, கோயில் நிலங்களை மொத்தமாகவும் குத்தகைக்கு விடக்கூடாது. 20 ஏக்கர், 30 ஏக்கர் என்று கொடுக்காமல் ஏழை விவசாயிகளுக்கு, சாதாரண விவசாயிகளுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று குத்தகைக்கு விட்டால் அவர்கள் ஒழுங்காக குத்தகை கட்டுவார்கள். கோயில் நிர்வாகமும் நல்லமுறையில் நடக்கச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல கட்டிடங்கள் இருக்கின்றன. இந்தக் கட்டிடத்திற்கு, அதாவது ஒரு குடியிருப்புக்கு அந்தக் காலத்தில் 10 ரூபாய்தான் வாடகை. ஒரு குடியிருப்புக்கு 20, 30 வருஷங்களுக்கு முன்னால் நிர்ணயித்த வாடகை 10 ரூபாய்தான். ஆனால் இன்றைக்கும் அந்த 10 ரூபாய் வாடகைதான் இருக்கிறது. அதைக் கொஞ்சம் மாற்ற வேண்டும். யார் 'பெனிபிஷியரி' யாக இருக்கிறார்களோ அவர்களுக்கும் பாதிப்பு இல்லாமல் கோயில் வருமானத்திற்கும் பாதிப்பு வராமல் அந்த வாடகையை ஒழுங்குபடுத்தி,





குத்தகையை சரியான முறையில் நிர்ணயம் செய்தால் கோயில் சொத்துக்களிலிருந்து ஓரளவு நல்ல வருமானம் வரும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆலயங்களை எடுத்துக்கொண்டால், சில கோயில்கள் நல்ல சிறப்பான வசதி வாய்ந்த கோயில்களாக இருக்கின்றன. சில கோயில்கள் சிறப்பு வாய்ந்த கோயில்களாக இருந்தாலும் பணம் இல்லாமல் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. இப்படி ஏழை கோயில்கள், பணக்கார கோயில்கள் என்று இருக்கின்றன. அந்த ஏழை கோயிலுக்கு இந்தப் பணக்கார கோயில் உதவி செய்ய வேண்டும். சில கோயில்களின் கோபுரங்கள் சாய்ந்து, விழக்கூடிய நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோயில் ஒன்று என்னுடைய தொகுதியிலேயும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து அதுபற்றி சொல்லியிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சொக்காபட்டி என்ற இடத்திலே சக்தி வாய்ந்த விநாயகர் கோயில் ஒன்று இருக்கிறது. அது சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கோயில். அந்தக் கோயில் கோபுரம் வளைந்துகொண்டே வருகிறது. அதைச் செப்பனிட்டு சீர் செய்ய பணவசதி இல்லை. எங்கெங்கே இப்படிப்பட்ட பணம் இல்லாத கோயில், வசதி குறைவான கோயில், ஏழை கோயில் இருக்கிறதோ, அந்தக் கோயிலுக்கு பணக்கார கோயிலிருந்து பணத்தை ஒதுக்கி அந்தக் கோயிலை புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களோடு, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை முழுமனதோடு ஆதரித்து, முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவின்மீது நான் சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக அறநிலையத்துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஆலயங்களுக்கு அதிகமாக நிலங்கள் இருந்த போதிலும் அந்தக் கோயில்களின் பராமரிப்புக்குப் போதுமான வருமானம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கோயிலுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை 100 வருடம், 99 வருடம்,

50 வருடம் என்று குறைந்த குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். 5 ஆண்டுகளுக்கு முன்னால் 10 ரூபாய் என்று திர்ணயம் செய்திருந்தால் 5 ஆண்டுகளுக்குப் பின்னால் அது 1,000 ரூபாயை எட்டிவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீண்டகால குத்தகையினால் வருமான இழப்பு ஏற்படுகிறது. ஆகையால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு 2 ஆண்டு, 5 ஆண்டு அல்லது ஆண்டுக்காண்டு நிலத்தை ஏலத்தில் விடும் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் அந்த நிலம் உங்களுடைய கைவசம் இருக்கும்.

எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சகோதரி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல குத்தகைக்கு எடுக்கிறவர்கள் அந்த நிலத்தைத் தன்னுடைய சொந்த நிலமாகக் கருதிக்கொண்டிருக்கிறார்களே அல்லாமல் அது அரசினுடைய நிலம், கோயில் சொத்து என்று கருதுவதில்லை. கொடுக்கக்கூடிய குத்தகையைக்கூட பாக்கி போட்டுவிடுகிறார்கள். அதனால் அரசுக்கு வரக்கூடிய பலகோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே ஒரு குறிப்பிட்ட குறைந்த ஆண்டை நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டும். 20 ஆண்டு அல்லது 25 ஆண்டுகளுக்கு முன் பாக குத்தகைக்கு விட்ட நிலங்களை சிலர் பட்டா கூட போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீண்டகால குத்தகைக்கு ஏற் கெனவே விட்ட நிலங்களைக்கூட அரசு திரும்ப எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு அரசு முழு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.**

பிற்பகல் 12.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ் அவர்கள் கூறியதில்** ஆரம்பத்தில் இருந்து அவர் பேசிய அனைத்துக் குறிப்புகளும் நீக்கப்படுகிறது.**

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே,**

பிற்பகல்1.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்ன வார்த்தை தவறான பொருள்படுகிற வார்த்தையாகத்தான் ஆரம்பத்திலிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.** டாக்டர் குமாரதாஸ் தாங்கள் அவைத் தலைவரிடத்திலே ஒன்றைச் சொல்லிவிட்டு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இப்படி பேசுவதாக இருந்தால் அதற்கு உங்களை அனுமதிக்க முடியாது. என்னிடம் நீங்கள் அனுமதி கேட்டபடி முழுவதையும் படித்திருக்க வேண்டும். முதல் பாராவை விட்டுவிட்டு, இரண்டாவது பாராவைப் படிப்பது, என்னிடம் அனுமதி பெற்றதற்குப் புறம்பாக நீங்கள் நடந்துகொள்கிறீர்கள் என்று பொருள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





அதற்கு மேல் உங்களிடம் ஆதாரம் இருந்தால் அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒப்படைக்கலாம். (குறுக்கீடு). ** (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள், குமாரதாஸ் டாக்டர் குமாரதாஸ், அவர்கள் என்னிடம் தான் பேசவேண்டும். குமாரதாஸ், இரண்டு, மூன்று முறை மரபுக்கு மாறாக பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து இல்லாத தகவல்களை சொல்லி, அதை நீங்கள் நிலை நாட்ட முடியாதபோது இப்படி பேசிவிட்டுச்செல்வது தவறு. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலை இங்கே கொடுத்து, ** என்று சொல்லியிருக்கிறார்கள். இதை சபைக் குறிப்பிலிருந்து முழுவதுமாக நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

(டாக்டர் தே. குமாரதாஸ் வெளிநடப்பு செய்தார்.)

பிற்பகல் 1.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் என்ன முடிவு ஏற்பட்டது என்ன என்பது தெளிவு இல்லாமல், முழுமையாக இல்லாமல் இருக்கிற காரணத்தால், அதை முழுவதையும் நீக்கி விடுவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்தது போன்று, குமாரதாஸ் அவர்கள் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை எழுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு, என்னிடம் சொன்னபடி எழுப்பாமல் அவருடைய போக்குக்கு எழுப்பி, ஒரு குழப்பத்தை உண்டாக்குகிற முயற்சியிலே ஈடுபட்ட காரணத்தினால் அவர் இதுபற்றி பேசிய அனைத்தும், அதோடு அவருக்கு மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த பதில் உரைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்துப் பேச வேண்டாம். தயவு செய்து நீங்கள் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். இதை நான் அவைக்

திரு. ஜி. பழனிசாமி அவர்களுக்கு இதை நான் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். அவைக் கள் தெரிவித்த கருத்தையும் நீக்கியிருக்கிறேன். அதையொட்டி அவைக்கொண்டு விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) வேறு பிரச்சினை இருந்தால் அதுபற்றி கிளப்பலாம். நான் அவைக் குறிப்பி லிருந்து நீக்கியதற்குப் பிறகு வேண்டாம்.

திரு. ஜி. பழனிசாமி : அவர் சொல்லிய கருத்துக்களை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லிங்க, இல்லிங்க, அதிலே என்னையும் மீறி அவர் பேசியிருக்கிறார். என்னிடம் ஒரு தகவல் சொல்லிவிட்டு, அதாவது முழுமையாக சொல்லாமல் அதைக் குறையாக சொல்வது. அந்தத் தகவலை (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னிடம் ஒரு தகவல் சொல்லிவிட்டு அதை மீறிப் பேசுவது அவையினுடைய மரபுக்கு உகந்ததா என்று நீங்களே தெரிவியுங்கள். என்னிடம் சொன்னபடி அவர் பேச வேண்டுமா இல்லையா? என்னிடம் ஒரு தகவல் சொன்னதை அவர் மீறிப் பேசுகிறபோது நான் இப்படி குறுக்கிட வேண்டிதான் இருக்கும். (குறுக்கீடு) உட்காருங்கள். இந்தப் பிரச்சினை மீது வேண்டாம். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதை ஏற்று நடக்க வேண்டியது தான் ஒரு உறுப்பினருடைய கடமை. அவர் ஆரம்பிக்கிறபோது தவறாக ஆரம்பித்ததனால் தான்**, தவறு அதிலிருந்து தொடர்ந்து தவறுகள் வருகின்றன. ஆகவே தான், அந்தப் பேச்சிலிருந்து தொடர்ந்து வருகிற பேச்சுக் களை இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசி யம் பேரவைத் தலைவருக்கு ஏற்பட்டது. அவருடைய கருத்தைச் சொல்வதிலோ அல்லது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதிலோ எந்தத் தவறும் இல்லை. தொழிற்சங்கம் தீர்மானம் போட்டிருக்கிறது. அப்படி ஒரு தீர்மானம் போடக் கூடாது என்றால், தொழிற்சங்கத்தில் ஈடுபட்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அறிக் கைகள் விட்டு இப்படி ஒரு தீர்மானமே போடக் கூடாது என்று சொல்லுங்கள். அவர்கள் போட்ட ஒரு தீர்மானத் தின் மீது ** ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டாமா? அல்லது தொழிற்சங்கத்தின் தீர்மானங்களை எல்லாம் புறக் கணிக்க வேண்டுமென்று கூறுகிறீர்களா? என்ன செய்ய வேண் டும்?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பிற்பகல் 1.10

** ஆனால் சிலபல உண்மைகளை அவர் மறைத்ததன் காரண மாகத்தான் பேரவைத் தலைவர் அவர்கள் ஆரம்பத்தி லிருந்து கடைசிவரையில் குழப்ப நிலைக்குக் காரணமாக இருப்ப தால், இந்தப் பேச்சுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ..... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலே இருந்து நீக்கியாகிவிட்டது. அதிலே ஒன்றும் வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாமெல்லாம் பேசியதற்குப் பின்னால் என்ன கருத்து வருமென்றால் ஏதோ நீங்கள் பேச அனுமதிக்காத காரணத்தால் அவர் வெளியே போய்விட்டார் என்ற கருத்து வரும். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பிய உடனே அவருக்குக்கோபம் வந்தது. அவர், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களைத் திரும்பிப் பார்த்துப் பேசினார். பிறகு, அவர் வெளியே போன போது சொன்ன சொற்கள்கூட பாராளுமன்ற சம்பிரதாயத் திற்கு உகந்ததல்ல. எனவே அவரைப் பேச அனுமதிக்காத காரணத்தால் அவர் வாக்கவுட் செய்துவிட்டது போன்ற தவறான எண்ணம் வந்துவிடக்கூடாது. நீங்கள் அவரை பேசக்கூடாது என்று சொல்லவில்லை. ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியதால், ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியவர் முதலிலே பேசட்டும் என்றுதான் சொன்னீர்கள். அவர் ஏதோ நீங்கள் பேசவே அனுமதிக்கவில்லை என்பதைப்போல சொல்லிவிட்டுப் போனார். திரு. பழனிசாமி அவர்கள் சொல் வதும் அதுமாதிரி இருப்பதால், பத்திரிகையில் தவறான செய்தி வந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நீங்கள் பேச அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையை எப்படிச்சொல்ல வேண்டுமென்று சொன் னீர்கள். உடனே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டது. ஒழுங் குப் பிரச்சினை எழுப்பக் கூடாதென்ற கோபத்திலே, ஆத்திரத் திலே, அவரால் அதைச் சந்திக்க முடியாத காரணத்தாலே வெளியே போய்விட்டார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டு மென்பதற்காகச் சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
சொல்லியிருக்கிறேன். நான் ஏற்கெனவே
நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. ஜி.பழனிசாமி
தேன். (குறுக்கீடு) நான் பேச அனுமதித்
அரசாங்கத்தின் கவனத்திற்கு ஓர்
சுற்றறிக்கையைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னதற்குப்
பிறகு, அதை முழுமையாகக் கொண்டு வாருங்கள் என்று
சொன்னேன், நான் திரும்பவும் சொன்னேன், முதல் பாராவி
லிருந்து படியுங்கள் என்று சொன்னதையும் மீறி, அதைப்
படிக்காமல், மீறி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது திரு.
பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று
எழுப்பினார். ஒழுங்குப் பிரச்சினை என்று ஓர் உறுப்பினர்
எழுகிறபோது, அவருக்கு நான் வாய்ப்பு கொடுத்து, என்ன
ஒழுங்குப் பிரச்சினை என்று கேட்டதற்குப் பிறகுதான் அடுத்த
நடவடிக்கைக்கு நான் செல்ல முடியும். எனவே அவரைப் பேச
விடாமல் தடுத்துவிட்டு, நான் பேசுங்கள் என்று சொன்னபடியும்
பேசாமல், போனது என்பது (குறுக்கீடு) அதற்கு என்ன பண்ண
முடியும்? விதிமுறைகளுக்குப் புறம்பாகப் பேசி கொண்டி
ருப்பது நீக்க வேண்டியதாகத்தான் இருக்கும். (குறுக்கீடு)
விதி முறைகளுக்குப் புறம்பாகப் பேசியதை
நீக்க வேண்டியதாகத்தான் இருக்கும் விதிமுறைகளுக்குப்
புறம்பாகப் பேசியதை எப்படி அனுமதிக்க முடியும்?
(குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள் மாண்புமிகு
அவைமுன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்த
வரையில் யாருடைய உரிமையையும் மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்கள் மறுக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை.
அவற்றை நீக்கவும் இல்லை. உரிமைகள் உண்டு. முழுவதையும் படி
என்று சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்
காமலேயே மறைக்கிறார் அல்லது வேறு திசை போகிறார் என்
னும்போது, இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன.
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே சொல்லியபடி
நடந்திருந்தால், இந்தப் பிரச்சினைகளே வராது. யாருடைய
உரிமையும் மறுக்கின்ற பிரச்சினை இதிலே எழவேயில்லை என்ப
தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர்
அவர்கள் ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயிண்ட் ஆஃப்
ஆர்டர் எல்லாம் வேண்டாம். அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகி
விட்டது. எனவே இதிலே வேண்டாம் (குறுக்கீடு) நான்தான்
சொன்னேனே. உங்களை ஒழுங்குப் பிரச்சினை எழுப்பவிடாமல்
தடுக்கமுயற்சித்தார். அதை நான் அனுமதிக்கவில்லை. எனவே



வெளிநடப்பு செய்திருக்கிறார். (குறுக்கீடு) அவர் வெளிநடப்பு செய்திருப்பது, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்பிய ஒழுங்கு பிரச்சினைக்கு நான் அனுமதி அளித்து, அவரைப்பேச அழைத்தபோது, அவரைப்பேச அழைக்ககூடாதுஎன்று தெரிவித்து வெளிநடப்பு செய்திருக்கிறார். அவ்வளவுதான். திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் தவறான தகவல் சொல்லும்போது, அந்த இடத்தை வேண்டுமானால் நீக்கலாமே தவிர, தொடர்ந்து பேசிய முழுமையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முழுமையாகப் பேசி இருந்தால் அவைக் குறிப்பிலே எல்லாமே இடம் பெற்றிருக்கும். எனவே, நான் அவரை அனுமதித்த பகுதிகளில், முதல் பகுதியை முழுமையாக விடுத்துவிட்டு, இரண்டாவது பகுதியை ஆரம்பிக்கும்போது, அதற்கு பதிலுரையும் சொல்லுகின்றபோது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது போன்று, மொத்தத்தில் ஒரு குழப்பமாகவே இருக்கும். ஒரு குழப்பமான விவாதம் இந்த அவையிலே நடைபெற்றது என்ற நிலைமை இருக்க வேண்டாமென்பதற்காகத்தான் எல்லாவற்றையும் நீக்கி இருக்கிறேன். திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள். திரு. ஜி. பழனிசாமி, அவர், ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதை அனுமதிக்கவில்லை. இது நாளைக்கு உங்களுக்கும் வரும். நீங்கள் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிளப்பினால்கூட, நாளைக்கு திரு. குமாரதாஸ் அவர்கள் உங்களை அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லுகின்ற உரிமை அவருக்கு எங்கே இருக்கிறது? (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு அந்த வகையில் ஓர் உறுப்பினர் எழுந்து பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிளப்புவதை அவர் எப்படி மறுக்க முடியும்? (குறுக்கீடு) அவர் அதிக நேரம் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) நான் பேசும்போது, நீங்கள் இப்படி பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. திரு. ச. இராமச்சந்திரன்.

பிற்பகல் 1-15

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவில் இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, அரசாங்கத்துறை ஆலயங்களை நிர்வகித்து வருகிறது என்பதற்கு மாறாக வாரியத்தின் மூலம் நிர்வாகம் மேற்கொள்ளப்படுவது; இரண்டாவதாக மாநில

அளவில் அந்த வாரியத்திற்கு முதலமைச்சரே தலைவராக இருந்து
நிர்வாகம் செய்வது. இந்த அடிப்படையைப் பார்க்கிறபோது,
ஜனநாயகத்தில் மதச்சார்பின்மை என்கின்ற அந்த மிக முக்கிய
மான கொள்கை இந்த அமைப்பின் மூலம் புறக்கணிக்கப்படுகிறது
என்றே நான் கருதுகிறேன். சமுதாயத்தில் இந்துக்களும் இருக்
கிறார்கள், இஸ்லாமியர்களும் இருக்கிறார்கள், கிறிஸ்தவர்களும்
இருக்கிறார்கள், பகுத்தறிவாளர்களும் இருக்கிறார்கள். அது
அவரவருடைய தனிப்பட்ட நம்பிக்கையைப் பொறுத்ததாகும்.

மக்களாட்சி முறையில் எல்லோராலும் தேர்ந்தெடுக்கப்படு
கின்ற ஒரு முதல்வர் ஒரு குறிப்பிட்ட மதத்தின் அடிப்படையிலே
இயங்குகின்ற வாரியத்திற்குத் தலைவராக இருப்பது சட்டப்படி
கூட சரியாக இருக்கலாம். ஆனால் எல்லா மக்களின் நம்பிக்கை
யைப்பெறுகின்ற வகையிலே அது அமையுமா என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும்.

முதலமைச்சர் என்கிறபோது, இன்றைக்கு ஒரு முதலமைச்சர்
இருக்கலாம், நாளைக்கு கடவுள் நம்பிக்கையில்லாத ஒரு முதல
மைச்சர் கூட வரலாம். ஆகையினாலே முதலமைச்சர் வாரியத்
திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு ஒரு குறிப்பிட்ட மதத்தின்
அடிப்படையிலே இயங்குகின்ற வாரியத்திற்குத் தலைவராக இருப்
பது சரியல்ல என்றே நான் கருதுகின்றேன்.

அண்மையிலே ஜப்பான் நாட்டில் உச்ச நீதிமன்ற தீர்ப்பு
ஒன்று வந்திருக்கின்றது. அது இந்த விவாதத்திற்கு உதவும்
என்று கருதுகின்றேன். (குறுக்கீடு) பீட்டர் அல்போன்ஸ்
அவர்கள் இங்குள்ளதையே சொல்லுங்களேன் என்கின்றார். அவர்
கொஞ்ச நேரத்திற்கு முன்பு இங்கே பேசுகின்றபோதுதான் நாம்
உலகத்தில் இருப்பவைகளையெல்லாம் நம் கவனத்தில் கொள்ள
வேண்டுமென்று சொன்னார். அதற்காகத்தான் இதைச்சொல்
கிறேன். அங்கேயுள்ள அரச பரம்பரையினர் ஷின்டோ மதத்
தைச் சேர்ந்தவர்கள். அந்த அரசர் அங்குள்ள கோயிலுக்கு நிதி
வழங்கினார். அதை எதிர்த்து அந்த வழக்கு, நீதிமன்றத்திற்குச்
சென்றது. நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அந்த உச்சநீதி
மன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது.

'The Japan Supreme Court : Japan Apex court has barred all
official visits and donations by the Japanese Monarch and top Govern-
ment functionaries to a shinto shrine in Tokyo. such visits were seen
by the court to be violative of the Japanese constitution —
Separation of Government and Religion in principle.

ஆகவே அரசுக்கும் மதத்திற்கும் இருக்கின்ற தொடர்பு தனித்
தனியே அமையவேண்டுமென்கின்ற அரசியல் சட்டத்தின் அடிப்
படையையே அது பறிக்கின்றது. ஆகவே 'கூடாது' என்று



அங்கே தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். ஆகவே நான் எடுத்துச் சொல்ல விரும்புவது வாரியத்திற்கு முதலமைச்சர் அவர்கள் — அதுவும் இந்துமத வாரியத்திற்கு ஒரு முதலமைச்சர் தலைமை வகிப்பது, மதச்சார்பின்மைக் கொள்கைக்கு முரணானது என்றே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வாரியம் அமைப்பதன் மூலம் நிர்வாகம் செம்மைப்படமுடியும் என்று நான் கருதவில்லை. இந்து அறநிலையச் சட்டத்தின்படி தவறான நிர்வாகங்கள் கோயில்களிலே நடைபெறுமானால் அவற்றைத் தட்டிக் கேட்கின்ற உரிமை அரசாங்கத்திற்கு நேரடியாக இருக்கிறது. இப்போது வாரியத்தை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய நேரடியான அதிகாரம் பறிக்கப்பட்டு அந்தக் குழுவிற்கு ஒப்படைக்கப்படுகிறது. சரி, வாரியமே அதை திறமையாக நிர்வகிக்காதா என்றால் — சொல்லலாம், உதாரணத்திற்கு வக்ஃப் வாரியம் கூட இருக்கிறதே என்று சொல்லலாம்.

பிற்பகல் 1-20

ஆனால் இதே சட்டமன்றத்தில் வஃக்ப் வாரியம் சரியாக இயங்கவில்லை. ஆகவே அதனுடைய நிர்வாகத்தை அரசே, தனி அதிகாரியைப் போட்டு, ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இன்னுமொரு சட்டம் இந்த சட்டமன்றத்திலே வரவிருக்கிறது. அதற்கான சட்ட முன்வடிவுகள் எல்லாம்கூட எங்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக வளர்ச்சித் திட்டப் பணிகள், இன்றியமையாப் பணிகள் ஆகிய 'டெவலப்மென்ட் ஒர்க்ஸ்' ஆகியவற்றுக்குத்தான் பொதுவாக வாரியங்கள் அமைக்கப்படுகின்றன. பொதுவாக குடிநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம் போன்ற, டெவலப்மென்ட் ஒர்க்ஸ் 'ஆகியவற்றுக்காக வாரியங்கள் என்கின்ற அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு காரியத்திற்கு, அரசாங்கத்திற்கு வந்துஅமைச்சரைப் பார்க்க வேண்டும் என்று இல்லாமல், பிசினஸ் ஃபிளக்சிபிலிட்டிக்காக' 'ரெகுலேட்டரி பங்க்ஷன்' என்ற முறையில் ஒழுங்குமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று 'ரெகுலேட்டரி ஃபங்ஷன்ஸ்', அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிப்பார்ட்மென்டில் அரசாங்கத்திறுடைய கையில்தான் இருக்க வேண்டும். இந்து அறநிலையத்தின் சார்பில் உள்ள கோவில்களை ரெகுலேட் பண்ண வேண்டுமென்றால் அதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்குத்தான் இருக்க வேண்டும். அதைக் கொண்டுபோய் 'போர்டில் போடுகிறபோது, போர்ட் என்பது 'டெவலெப்மென்ட் பங்ஷன்ஸ் களுக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாமே தவிர ஒருஅரசாங்கம் நடத்தக்கூடிய 'ரெகுலேட்டரி ஃபங்ஷன்ஸ்' களுக்கு அது சரியாக வராது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே உள்ள முறையிலே கூட ஏழை கோவில்களுக்கு, பணக்கார கோவில்கள் உதவுகிற முறை இருக்கிறது. சமுதாயத் திலே சமதர்மம் இல்லையென்றாலும் சாமிகள் விஷயத்திலே சமதர்மத்திற்குப் பஞ்சமில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் கூட சொன்னார்கள், ரொம்ப சக்தி பெற்ற விநாயகர் என்று சொல்லிவிட்டு, இருந்தா லும் அவர் ஏழையாக இருக்கிறார் என்று சொன்னார். · அந்த ஏழை கோவிலுக்கு பணக்கார கோவிலிலிருந்து உதவ வேண்டும் என்று சொன்னார். சக்தி இருந்தும்கூட பாவம் அந்த விநாயகர் ஏழையாகத்தான் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விநாயகரைப் பற்றிச் சொல்லவில்லை. விநாயகர் கோவிலுக்கு மேலே உள்ள கோபுரம் சாய்ந்திருக்கிறது என்று சொன்னார்.

திரு. ச. இராமச்சந்திரன் : ஏதோ சமதர்மக் கொள்கை சாமிகள் விஷயத்திலாவது நிறைவேறுவதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்த அடிப்படை அம்சங்களைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டமுன்வடிவு முரண்பாடாகக் கொண்டுள்ள காரணத்தால் இதைப் பற்றிய விளக்கத்தைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரும்போது நான் முதலிலே ஒரு கருத்தைச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1959 ஆம் ஆண்டு இந்து ரெலிஜியஸ் சேரிட்டபிள் எண்டோ மென்ட் ஆக்ட்-க்குத்தான் இந்த திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது அதை கோவில்களுடைய சட்டமாக மாற்றுவது எந்த அளவிலே நியாயமாக இருக்கும் என்பதைத்தான் நான் முதலிலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பதிலாக '' இந்து ரெலிஜியஸ் சாரிட்டபிள் எண்டோமென்ட் '' என்று போட்டிருந்தால் நன்றாக இருக்கும். '' எண்டோமென்ட் என்று இல்லாமல் அந்த வார்த்தையை மாற்றியது எந்த அளவிற்கு நியாயமாக இருக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரும்போது எனக்கு முன் பேசிய பண்ருட்டி இராமச்சந்திரன்அவர்கள் சொல் லிய கருத்தையே நானும் சொல்ல விரும்புகிறேன். ஒரு முதல மைச்சரே ஒரு இலாக்காவிற்குத் தலைமை தாங்கும் அளவிற்கு இருந்தால் அந்த போர்டில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குறை நிறைவுகளைச் சொல்ல முடியாது. ஆகவே அவர்களே சூப்பர் வைசரியாக இருக்கட்டும். கமிட்டியே நடத்துவது நல்லது என்று





நினைக்கிறேன். மேலும் நம்முடைய நாட்டிலே கிறித்துவ மத மும் இருக்கிறது. இஸ்லாமிய மதமும் இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் தனித்தனியாக போர்ட் அமைத்து தலைமை தாங்க முதலமைச்சர் வருவார்களா என்றெல்லாம் கேட்கப்படுகின்றன.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமியர்களுக்கும், கிறித்து வர்களுக்கும், அவர்களுடைய ஆலையங்களைப் பராமரிக்க இத் தகைய போர்டுகள் அமைக்கப்பட்டால், அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுந்தால், அவற்றையும் அமைக்கத் தயாராக இருக்கிறோம். அந்த வாரியங்களுக்கும் நான் தலைமை ஏற்க வேண்டும் என்று கோரிக்கை வந்தால் தலைமை ஏற்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல,எங்க ளுடைய மதத்திற்கும், கிறித்துவ மதத்திற்கும் அவர்களே தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

· திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. ஏனென்று சொன்னால் பல்வேறு இடங்களில் இந்தப் பிரச்சினைகள் . . . .

பிற்பகல் 1-25

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எங்களைப் போன்ற பகுத்தறிவாளர் மன்றங்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் வந்து தலைமை ஏற்றுக்கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை பலரால் வைக்கப் பட்டால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது முதலமைச்சரின் கடமை ஆகிறது. எனவே, பகுத்தறிவாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி, அவர்கள் ஒரு வாரியமோ சங்கமோ ஏற்படுத்தி அதற்கு நான் தலைமை ஏற்க வேண்டுமென்று சொன்னால் அதற்கும் நான் தயாராகவே இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, பகுத்தறிவாளர்கள் என்று கூறிக்கொண்டு, யாருக்கும் தெரியாமல் தனியாகப் போய் சாமி கும்பிட்டுவிட்டு வருபவர்களுக்கு (சிரிப்பு) எந்த வாரியம் துணைக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

[1991 அக்டோபர் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை
வர் ஒருவேளை அத்தகைய பகுத்தறிவாளரோ என்னவோ எனக்
குத் தெரியாது. ஆனால் ,, . . . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
' நான் கோயிலுக்குப் போய்விட்டு வருகிறேன் ' அவர், நேரடியாக
(குறுக்கீடு) வெளிப்படையாகச் சொல்லிவிட்டு, என்கிறார்.
போய்விட்டு வருகிறேன் என்கிறார் அவர். திரு. பீட்டர் அல் கோயிலுக்கு
போன்ஸ்.

திரு. ச. இராமச்சந்திரன் :
தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வேண்டாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :
தலைவர் அவர்களே, இஸ்லாமிய சமூகத்தினருக்கும் மாண்புமிகு பேரவைத்
மதத்தினருக்கும் அவர்களுடைய ஆலயங்கள், மசூதிகள், கிறித்துவ
கள், பள்ளிவாசல்கள் — அவை பழுதடைந்து இருந்தால் தர்கா
களை மீண்டும் புதுப்பித்துத் தருவதற்கு ஒரு குழு அவை
அதற்கு என்னை தலைமை தாங்கச் சொன்னால் அமைத்து
தயாராக இருக்கிறேன் என்று சொன்ன முதலமைச்சருக்கு அதற்கும் நான்
கத்து சிறுபான்மை மக்கள் சார்பாக நான் நன்றி தமிழ
கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் தெரிவிக்கக்
மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஒலி)
சொன்ன கருத்திலே, எதற்காக இந்து மதத்திற்கு மட்டும் அவர்கள்
என்று கேட்டார். தமிழக அரசிலே இந்து சமய வாரியம்
துறை என்று தனியாக அதற்கு ஒரு துறையை அறநிலைய
நோம். ஆனால் கிறித்துவ மதத்திற்கோ இஸ்லாமிய ஒதுக்கி இருக்கி
அதற்கு தனி அமைச்சரையோ துறையையோ மதத்திற்கோ
(குறுக்கீடு). வக்ஃப் போர்டு என்பது வேறு; ஒதுக்கப்படவில்லை.
வேறு. (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். பள்ளிவாசல் என்பது
பிராபர்ட்டி என்பது இஸ்லாமிய சகோதரர்கள் வக்ஃப்
காலமாக வக்ஃப் நியமித்து அதை இப்படித்தான் ஆண்டாண்டுக்
வேண்டும் என்ற கட்டளைக்காக ஒரு சொத்தை பயன்படுத்த
அதற்காக தனி நிறுவனம் கொடுத்து இருக்கிறார்கள். நிறுவனம் பண்ணி
பள்ளிவாசல் என்பது அவர்கள் மத சட்டப்படியோ ஆனால்
கிறித்தவர்கள் என்கிற முறையிலே எங்கள் மத அல்லது
— அதற்கெல்லாம் தனி வழிமுறைகள் இருக்கின்றன. சட்டப்படியோ
அவர்கள் ஒப்படைக்க நிச்சயம் தயாராக இருக்கமாட்டார்கள். அவைகளை
ஆனால், அதே நேரத்திலே இந்துசமய அறநிலையத் துறை
என்று ஒரு தனி துறையையே நியமனம் செய்து. அது கோடிக்
கணக்கான ரூபாய் பெருமானம் உள்ள சொத்துக்களை நிர்வகிக்க
வேண்டிய பொறுப்பு இருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் இந்த



கடமையை ஏற்றுக்கொள்கிறது. அதைப்போல சர்ச்சுகளையும், பள்ளிவாசல்களையும் கொண்டுவந்து அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கு அந்த சிறுபான்மை மக்கள் தயாராக இருப்பார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கலாம். ஏனென்றால் நாம் பேசுகின்ற விவாதங்கள் வெளியே போகின்ற பொழுது மக்கள் மத்தியிலேயே தவறான வித்துக்கள் விதைக்கப்படும்; விஷ வித்துக்கள் விதைக்கப்படும்; அதற்காகச் சொல்கிறேன். சிறுபான்மை சகோதரர்கள் ,இதற்காக ஒரு தனி வாரியம் அமைப்பதைப் பற்றியோ, அதற்கு நிதி திரட்டுவதைப் பற்றியோ, முதலமைச்சர் அந்த ஆலயங்களைப் பழுது பார்ப்பதற்கு உதவி செய்வது பற்றியோ எங்களுக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. நாங்களும் அந்த நிதிக்கு ஆதரவு தருகிறோம்; அந்தக் கோவில்களில் நன்றாக தெய்வத்தோடு அவர்கள் வழிபட வேண்டுமென்று சிறுபான்மை சமுதாய மக்கள் சார்பாக கேட்டுக்கொண்டு, அந்தப் பணியை நாங்கள் மனதார வாழ்த்துகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை சமுதாயம் என்கிற இந்த வம்பெல்லாம் வரும் என்ற காரணத்திற்காக, எப்படி நாங்கள் ' பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம் ; பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்கமாட்டோம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னாரோ ' அதைப்போல, முதலமைச்சரைப் பொறுத்தவரையிலே இதைப்போன்ற நிறுவனங்களுக்கு தலைமை ஏற்க வேண்டும் என்கிற கருத்தை மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் பேசும் போதே கேட்டீங்களே. திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அது மறு பரிசீலனை என்ற பிரச்னைக்கு இடம் இருக்குமா என்று தெரியவில்லை. அவர்களுடைய கருத்தை தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மேலும் சொல்லும் போது, ' நாமினேஷன் டூ தி போர்டு மெம்பர்ஸ் ' என்று சொல்லும்போது, மாணவர்களுக்கு, பெண்களுக்கு இடம் அளிக்க வேண்டும். அதுபோல் சமஸ்கிருதத்தில் நிபுணர்களாக இருக்கின்றவர்களையும் அதிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டத்தை மனதாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எங்கள் பகுதியில் இருக்கின்ற இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத கோவில்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. அவை கேரளாவிலிருந்து வந்த கோவில்கள். 450 கோவில்கள்

இருக்கின்றன. 1956-லே 13 ஆயிரத்து 500 ரூபாய் கொடுக்க
பட்டது. இன்றும் 13 ஆயிரத்து 500 ரூபாய் தான் கொடுத்துக்
கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் தயவுசெய்து மாண்பு
மிகு முதல்வர் அவர்கள் அந்த கன்னியாகுமரி மாவட்டத்தில்
இருக்கின்ற இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத திருக்கோவில்
களுக்கு திருப்பணிக்காக அதிகம் நிதி சேர்த்துக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்
கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் அனு
மதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.
மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு
இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1991) இப்
பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த சட்ட
திருத்த முன்வடிவின் மீது தங்களின் மேலான கருத்துக்களைத்
தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை
தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டதிருத்த முன்வடிவு
பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்த சீரிய கருத்
துக்கள் குறித்தும் என்னுடைய விளக்கங்களைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
அவர்கள் இங்கே பேசுகிறபோது அமைக்கப்படவிருக்கிற குழுக்
களில் பெண்களை அவசியம் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்
கையை வைத்தார்கள். நிச்சயமாக எல்லாக் குழுக்களிலும்
மாநில அளவிலான குழுவிலும் மாவட்ட அளவில் அமைக்கப்பட
விருக்கிற குழுக்களிலும் பெண்கள் நிச்சயமாக இணைக்கப்படு
வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி.)

கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை 99 ஆண்டுக்காலம்
நீண்டகால லீசுக்கு விடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு சில
உறுப்பினர்களும் இதுபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்தத்
துறையின் மானியக் கோரிக்கையில் நடைபெற்ற விவாதத்திற்கு
நான் பதிலளிக்கும்போதே இதுபற்றி தெளிவாகக் குறிப்பிட்டேன்.
இந்த 99 ஆண்டுக்காலம், 25 ஆண்டுக்காலம், 30 ஆண்டுக்காலம்



என்றெல்லாம் நீண்டகால குத்தகைக்கு விடும் முறையை இனிமேல் நாங்கள் ரத்து செய்யப் போகிறோம் என்பதை நான் அன்றைக்கே தெரிவித்தேன் (மேசையைத் தட்டும் ஒலி). அதிக பட்சம் ஐந்தாண்டுகளுக்கு மேல் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களையோ, சொத்துக்களையோ குத்தகைக்கு விடுவதில்லை என்று ஒரு கொள்கை முடிவை அன்றைக்கே எடுத்து அரசு அறிவித்துள்ளது. அன்றைக்கே இந்த அறிவிப்பை செய்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், இப்படி 99 ஆண்டுக்காலம் நீண்டகால குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை குத்தகைக்காரர்கள் தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள் அல்லது அவற்றை அவர்களாகவே விற்பனை செய்திருக்கிறார்கள் என்பனவெல்லாம் உண்மையாக இருந்தால், இவற்றையெல்லாம் பரிசீலித்து அரசு அந்த சொத்துக்களையும் நிலங்களையும் மீட்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் அன்றைக்கே தெளிவுபடுத்தி இருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது முதலமைச்சர் இப்படி இந்து சமயம் சம்பந்தப்பட்ட ஒரு வாரியத்திற்கு தலைமையேற்கலாமா என்ற ஒரு கேள்வியை இங்கே எழுப்பினார். இது ஜனநாயகத்திற்கு எதிரானது என்றார். மதச் சார்பற்ற கொள்கைக்கு முரணானது என்றார். இது ஜனநாயகத்திற்கு எதிரானதும் அல்ல, மதச்சார்பற்ற கொள்கைக்கு முரணானதும் அல்ல. இந்த ' டெம்பிள் அட்மினிஸ்ட்ரேஷன் போர்டு ' என்பது இந்து சமய கொள்கைகளையோ, இந்து மதப் பிரச்சாரத்தையோ பரப்புவதற்கோ, வளர்ப்பதற்கோ ஏற்படுத்தப்படுகிற ஒரு வாரியம் அல்ல. இந்து அறநிலையத் துறையின் நோக்கமே அதுவல்ல. அதாவது, இஸ்லாமியர்களுக்கு சொந்தமான ஆலயங்களைப் பராமரிப்பதற்கு ஏற்கெனவே அவர்களுக்கு வேறு அமைப்பு இருக்கிறது. அதைப்போல கிறித்துவ சமுதாய மக்களுக்கு அவர்களுடைய ஆலயங்களைப் பராமரிப்பதற்கு வேறு அமைப்புகள் இருக்கின்றன. அதைப்போல அரசுத் துறையாக Hindu Religious and Charitable Endowments Department என்ற துறை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. இதனுடைய நோக்கமே இந்து மதத்திற்குச் சொந்தமான ஆலயங்கள், கட்டடங்கள் இவற்றைப் பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும் என்பதுதானே தவிர, இந்து மதத்தைப் பரப்புவது இதனுடைய நோக்கம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இத்தகைய ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு எப்படி ஏற்பட்டது ? இதை அரசு தானாகச் செய்யவில்லை.

பல ஆண்டுக்காலமாக இந்து அறநிலையத் துறையின் கீழ் இருக்கிற
கோவில்கள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை, சரியான
முறையில் பாதுகாக்கப்படவில்லை. இதற்கு ஒரு பாதுகாப்பு
ஏற்படுத்த வேண்டும் என்று இந்து சமய மக்கள் அனைவரும்
இத்தகைய கருத்துக்களைப் பரவலாகத் தெரிவித்து இருக்
கிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இந்து சமயத்
தலைவர்களும் அரசுக்கு ஒரு கோரிக்கையையே வைத்திருக்கிறார்
கள். இப்படி இந்து சமய மக்கள் அனைவரும் ஒரு கோரிக்கை
வைத்ததன் பேரில் தான் இத்தகைய ஒரு வாரியத்தை அமைக்க
முன்வந்திருக்கிறோம். மீண்டும் சொல்கிறேன். இது இந்து
சமயத்தை, இந்து சமயக் கொள்கைகளை பரப்புவதற்காக ஏற்
படுத்தப்பட்ட ஒரு அமைப்பு அல்ல. இப்படி இஸ்லாமிய சமுதாய
மக்களோ, அல்லது கிருத்துவ சமுதாய மக்களோ,
அவர்களுடைய மதங்கள் சம்பந்தப்பட்ட ஆலயங்களை
பராமரிப்பதற்கு இப்படி அரசு ஒரு குழு அமைக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டால், முதலமைச்சர் என்ற முறையில்
அவற்றுக்கும் நான் தலைமை ஏற்கத் தயாராக இருக்கிறேன்
என்பதை ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். இப்போதும்
சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 1.35

அரசுக்குச் சொந்தமான அதிகாரங்கள் பறிக்கப்பட்டு,
வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன என்று மாண்பு
மிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இங்கே
குறிப்பிட்டார். அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்
என்றே கருதுகிறேன். இங்கே கொண்டு வந்துள்ள சட்டத் திருத்
தத்தில், 7 (பி) (1) என்ற பாராவில், 'ஆணையராலோ, துணை
ஆணையராலோ அல்லது உதவி ஆணையராலோ மட்டுமே நட
வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வெளிப்படையாக இந்தச்
சட்டத்தால் கோரப்பட்டுள்ளவைகளைத் தவிர, ஏனையவை
தொடர்பாக, இம்மாநிலத்திலுள்ள சமய நிலையங்கள் மற்றும்
நிலைக்கட்டளைகள் அனைத்தின் 'பொதுக் கண்காணிப்பானது,
இந்தச் சட்டத்தின் பிற வகை முறைகளுக்கும் இந்தச் சட்டத்தின்
கீழ்ச் செய்யப்படும் விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, கோவில்
நிருவாக வாரியத்தின்பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதாயிருக்கும்.
மேலும் தனது கண்காணிப்பின் கீழ் உள்ள சமய நிலையங்களும்
நிலைக்கட்டளைகளும் உரியவாறு பேணிவரப்பட்டு, கட்டுப்பாடு
செய்யப்பட்டு, நிருவகிக்கப்பட்டு வருவதையும் எந்தக் குறிக்
கோள்களையும் நோக்கங்களையும் கருத்திற்கொண்டு அத்தகைய
சமய நிலையங்கள் உருவாக்கப்பட்டனவோ அல்லது நிலைக்கட்ட
ளைகள் ஏற்படுத்தப்பட்டனவோ அந்தக் குறிக்கோள்களுக்காக
வும் நோக்கங்களுக்காகவும் அவற்றின் வருமானம் உரியவாறு
பயன்படுத்தப்படுவதையும் உறுதிசெய்வதற்காக வேண்டி, இந்த



சட்டத்தின்படி தனக்குள்ள அதிகாரங்களைச் செலுத்திவருவது
கோவில் நிருவாக வாரியத்தின் கடமையாகும்' என்று தெளிவாக
கூறப்பட்டு இருக்கிறது. எனவே, கமிஷனர், ஜாயின்ட் கமிஷனர்,
அஸிஸ்டென்ட் கமிஷனர், இவர்கள் ஏற்கெனவே வகித்து வந்த
பொறுப்புக்களை இந்த வாரியத்திலும் வகிப்பார்கள். அவர்
களுக்கு ஏற்கெனவே இருந்த அதிகாரங்கள் பெரும்பாலும் இப்
போதும் இருக்கின்றன என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு
உட்பட்ட, தமிழகமெங்கும் உள்ள கிராமங்களிலுள்ள சிறு சிறு
புராதனக் கோயில்கள் பல்லாயிரக்கணக்கில் பராமரிப்பின்றி பாழ்
பட்ட நிலையில் இருக்கின்றன. அத்தகைய கோயில்கள் போதிய
நிதிவசதி இல்லாத காரணத்தால் கவனிப்பாரின்றி அழிந்துவிடும்
நிலையை அடைந்துள்ளன. இக்கோயில்களை நல்ல முறையில்
பராமரிக்கவும், அவற்றினுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்கு
தீர்வு காணவும், மேலும் அவற்றின் நிர்வாகத்தை முறையாக
மேற்கொள்வதை உறுதி செய்யவும், 'ஆலய நிர்வாக வாரியம்'
ஒன்றை நிறுவ முற்பட்டு உள்ளோம். இதற்கேற்ப 1959 ஆம்
ஆண்டு இந்துசமய அறநிலையக்கட்டளைகள் சட்டத்தைத்திருத்தி
அமைக்க இச்சட்டத் திருத்தம் அவைமுன் கொண்டு வரப்பட்
டுள்ளது. இவ்வாரியம் தமிழகத்திலுள்ள புகழ்மிக்க திருக்கோயில்
களில் முறையாக பராமரிப்பும் வழிபாடும் நடைபெறுவதற்கு தக்க
நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இது இரண்டு அடுக்கு நிர்வாக முறையைக் கொண்டதாக
அமையும். அதாவது, மாநில அளவில், 'ஆலய நிர்வாக வாரி
யம்' ஒன்றும், மாவட்ட அளவில் ஒரு மாவட்டத்திற்கோ அல்லது
ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கோ ஒரு மாவட்டக் குழு
நிர்வாக அமைப்பாக செயல்படும். முதலமைச்சர், ஆலய நிர்
வாக வாரியத்தின் பதவி வழித் தலைவராக இருந்து வருவார்.
அறநிலையத் துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர், அறநிை
யத்துறை பொறுப்பு வகிக்கின்ற அரசுச் செயலாளர், இந்
சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் மூவரும் பதவி வ
உறுப்பினர்களாக இவ்வாரியத்தில் அங்கம் வகிப்பார்கள்.
இவர்களைத் தவிர, அலுவலர்களும் மற்றும் அலுவலர் சாராத
16 பேர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்களில்
ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவராக
இருப்பார் எனவே, மாண்புமிகு உறுப்பினர் ஏ. எஸ். பொன்னம்
மாள் அவர்கள் எழுப்பிய சந்தேகத்திற்கு இங்கேயே விளக்கம்
இருக்கிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையா
ளர் இந்த வாரியத்தின் செயலாளராக செயல்படுவார்.

வாரியத்தின் அதிகாரங்களும் பணிகளும், ஆலய நிர்வாக
வாரியமானது சொத்துக்களை ஈட்டுவதற்கும் பராமரித்து
வருவதற்கும் வகுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் வரைமுறை
களுக்கும் உட்பட்டு அத்தகைய சொத்துக்களை உரிமை மாற்றம்

செய்வதற்கான அதிகாரத்தைப் பெற்றதாகவும், நிலையான,
தொடர்பற்ற உரிமையையும் முத்திரை சின்னத்தையும் பெற்
றிருக்கின்ற ஒரு கூட்டமைப்பாக இருந்து வரும். இந்து சமய
அறநிலையங்களுடைய நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துதல்,
கண்காணித்தல், நிர்வாக அமைப்பை திருத்தி அமைத்தல் ஆகிய
பணிகள் உள்பட அறநிலைய சமய நிறுவனங்களுடைய பொது
கண்காணிப்பை இவ்வாரியம் மேற்கொள்ளும். ஒவ்வொரு சமய
நிறுவனத்தின் தோற்றம், வருவாய் மற்றும் நோக்கம் ஆகியவை
கள் குறித்ததான தகவல்களை இவ்வாரியம் பராமரிக்கும்.

சமய மற்றும் அறநிறுவனங்களுக்கு, வருவாய் மற்றும் சொத்
துக்கள் எந்த நோக்கத்திற்காக அளிக்கப்பட்டனவோ அந்த
நோக்கங்களுக்காக செலவிடப்படுவதை இது உறுதி செய்யும்.

சிறந்த முறையில் சமய மற்றும் அறநிலையங்கள் நிர்வகிக்கப்
படத் தேவையான ஆணைகளை இவ்வாரியம் பிறப்பிக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கோ அல்லது இரண்டு அல்லது
இரண்டுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கோ ஒரு மாவட்டக்
குழுவை இவ்வாரியம் நியமிக்கும். இந்த மாவட்டக் குழுக்கள்,
சமய, அறநிலையங்கள் மற்றும் கட்டளைகளை நிர்வகிப்பதற்கான
வழிமுறைகளை வகுக்கும். மடங்கள் குறித்த நிர்வாகத்தினை
யும் இவ்வாரியம் கண்காணிக்கும்.

பிற்பகல் 1.40

ஆண்டு வருவாய் ரூ. 1 இலட்சம் மற்றும் அதற்கு மேலும்
உள்ள ஆலயங்களுக்கு அறங்காவலர் குழுவினை இவ்வாரியம்
நியமிக்கும்.

மாவட்டக் குழுக்களின் ஆணையை எதிர்த்து தாக்கல் செய்யப்
படுகின்ற மேல் முறையீடுகளின் மீது இவ்வாரியம் முடிவு எடுக்கும்.
அறநிலையங்களுடைய உபரி வருவாயை, கட்டளை மற்றும் அற
நிலையங்களுடைய நோக்கங்களுக்கு இணங்க, பயன்படுத்துவதற்
கான ஆணைகளை இவ்வாரியம் பிறப்பிக்கும். சமய நிறுவனங்
களின் அசையாச் சொத்துக்களை அவசியம் நிமித்தம் விற்பனை
செய்தல் குறித்து இவ்வாரியம் ஆய்வு செய்து அவசியமிருப்பின்
முன் அனுமதி வழங்கும்.

இந்து சமய அற நிலையங்களின் பொது நல நிதியை இவ்
வாரியம் பராமரிக்கும்.





கன்னியாகுமரி தேவஸ்வம் குழுக்களை இவ்வாரியமே பராம
ரித்து வரும். பொதுவாக, அறநிலையங்கள் மற்றும் கட்டளை
களை நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் கட்டுப்படுத்துவ
தற்கும் தேவைப்படுகின்ற நடவடிக்கைகளை இவ்வாரியம் மேற்
கொள்ளும்.

ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் ஒரு தலைவரும், 11 உறுப்
பினர்களும் இருப்பார்கள். இவர்களில் ஒருவர் ஆதிதிராவிட
அல்லது பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பார். உதவி
ஆணையரோ அல்லது துணை ஆணையரோ இக்குழுவின்
செயலாளராக செயல்படுவார்.

ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் குறைவாக உள்ள
கோவில்களுக்கு அறங்காவலர்களை மாவட்டக் குழு நியமிக்கும்.

ரூ. 10,000-க்கும் குறைவாக ஆண்டு வருவாய் உள்ள ஆலயங்
களை சிறு குழுக்களாகச் சேர்த்து அக்குழுக்களுக்குப் பொதுவான
அறங்காவலர் குழுக்களை அமைக்கும்.

ஆலயத்தின் அசையா சொத்துக்கள் குறித்த பத்திரங்களை
மாவட்டக் குழு ஆய்வு செய்யும்.

மடங்கள் அல்லாத மற்ற ஆலயங்களின் வரவு-செலவுக் கணக்கு
களைக் கேட்டு அறிவதற்கு மாவட்டக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

இக்குழுவிற்கு ஆலயங்களின் சொத்துக்களையும் ஆவணங்
களையும் பார்வையிட அதிகாரம் உண்டு. அறநிலையங்களுக்குச்
சென்று பார்வையிடவும் இக்குழுவிற்கு அதிகாரம் உண்டு. மடங்
கள் நீங்கலாக ஏனைய ஆலயங்களின் வரவு செலவுக் கணக்குகளை
கேட்டறிவதற்கு இக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

இக்குழு நியமித்த அறங்காவலர்களை தற்காலிகமாகவோ
அல்லது நிரந்தரமாகவோ பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம்
உண்டு.

இக்குழுவானது சமய நிறுவனங்களின் ஆண்டு வரவு-செலவு
திட்டத்தை அங்கீகரிக்கும். மேலும் தணிக்கை அறிக்கைகளையும்
ஆய்வு செய்யும்.

ஆலய நிர்வாகக் குழு மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள்
இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்டம் விதி 26-ன்படி
தகுதி குறைபாடுகள் இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

அறங்காவலர் குழுக்களை அமைக்கும் முறையை மாற்றி அமைப்பதற்கும் அறங்காவலர் நியமனத்தில் ஏற்படுகின்ற தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கும் மண்டலக் குழுக்களை அறவே நீக்குவதற்கு இச்சட்டத் திருத்தத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது செயல்பட்டுவரும் மண்டலக் குழுக்கள் மற்றும் பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களின் பதவிக் காலம் இச்சட்டத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

இந்தச் சட்டத் திருத்தத்திற்குப் பின், அரசு பின்வரும் அதிகாரங்களைப் பெறும்.

1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அற நிலையக் கட்டளைகள் சட்டத்தினை எந்த ஒரு சமய நிறுவனத்திற்கும் விரிவுபடுத்துதல் மற்றும் எந்த ஒரு நிறுவனத்திற்கும் சட்டத்தினுடைய எந்த ஒரு விதியிலிருந்து விலக்களித்தல் ;

ஆலய நிர்வாக வாரியத்தின் உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் நீக்குதல் ;

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் எந்த ஒரு குறிப்பிட்ட ஆவணத்தையும் பெற்று அதனை ஆய்ந்து தேவையானால் மறு உத்திரவு பிறப்பித்தல் ;

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் விதிகளை இயற்றுதல் குறித்து நடவடிக்கை எடுத்தல் ஆகியவை ஆகும்.

**ஆணையரின் அதிகாரங்கள் :**

இந்த வாரியம் அமைப்பதன் மூலம் அரசுக்கு உள்ள அதிகாரங்கள் பறிக்கப்பட்டு வாரியத்திடம் ஒப்படைக்கப்படுகின்றன என்ற ஒரு தவறானகருத்தை மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வாரியம் அமைத்த பின்னரும் ஆணையரின் அதிகாரங்கள் யாவை என்பதை இங்கே விளக்க விரும்புகிறேன்.

அறநிலையத்துறை ஆணையர், வாரியத்தின் செயலர் என்ற முறையில் அவ்வாரியம் இடும் ஆணைகளுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு செயல்படுவார். சட்டவியல் மற்றும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பின்வரும் அதிகாரங்கள் அவரிடம் தொடர்ந்து இருந்து வரும்.



மாத ஊதியம் பெறும்செயல் அலுவலர்கள் மற்றும் துறையின் இதர அலுவலர்களை நியமித்தல் ;

மடங்கள் குறித்த நிர்வாக திட்டத்தினை முடிவு செய்தல் மற்றும் மடங்களைச் சார்ந்த குறிப்பிட்ட அற நிறுவனங்களுக்கு நிர்வாக திட்டத்தினை முடிவு செய்தல் ;

துணை ஆணையரின் ஆணை. அற நிறுவனங்களின் நிர்வாகம், திட்டம் குறித்த பல்வேறு விசாரணைகள், அசையாச் சொத்துக்கள் ஆக்கிரமிப்பு சம்பந்தப்பட்ட மேல் முறையீடுகள் குறித்து முடிவு செய்தல் ;

திருக்கோயில்கள் செலுத்த வேண்டிய உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து வசூல் செய்தல் ஆகியவை ஆகும்.

துணை ஆணையர்களைப் பொறுத்தவரையில் இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்டத்தின் பிரிவு எண் 63-ன் கீழ், இந்து சமய நிறுவனத்தினுடைய தன்மை குறித்து முடிவு செய்தல், சமய நிறுவனங்களில் பரம்பரை அறங்காவலரை நியமித்தல், அசையாச் சொத்துக்கள் ஆக்கிரமிப்பு சம்பந்தப்பட்ட மற்றும் நிர்வாக திட்டங்கள் ஏற்படுத்துதல் போன்ற அதிகாரங்கள் தொடர்ந்து துணை ஆணையர்களிடமே இருந்து வரும்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுந்தரதாஸ் அவர்கள் சட்டமுன்வடிவை பேரவையில் ஒரு குழு ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளார். இந்த திருத்தச் சட்டமுன்வடிவின் நோக்கம் கோட்பாடு ஆகியவை எல்லோரும் ஏற்றுக் கொண்டவையாகும். இந்த இந்து அறநிலையங்கள் திறமையாக இயங்குவதற்கும் அவை நல்ல முறையில் பராமரிக்கப்படுவதற்கும் ஒரு தகுதியான அமைப்பு தேவை என்கிற நோக்கத்துடன் இந்த முன்வடிவு பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே தமிழ்நாட்டு திருக்கோவில்களுக்கு நிர்வாகத்திற்கான தனி அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் தெளிவாக்கப்பட்டுள்ளது. இதனை மக்கள் ஏற்றுக் கொண்டனர். சட்டமன்றப் பேரவையும் திருத்தச் சட்ட முன்வடிவினை வரவேற்றுள்ளது.

எனவே சட்டமன்றப் பேரவை இந்த முன்வடிவை ஆய்வு செய்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்றும் பொறுப்புக் குழு ஒன்றிற்கு இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை அனுப்பத் தேவையில்லை என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.
உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் கொடுத்த மாண்புமிகு
ஒவ்வொன்றிற்கும் பதில் சொல்ல வேண்டுமா திருத்தங்கள்
விளக்கமே போதுமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது இந்த

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவற்றை அவரே மூவ்
பண்ணவில்லை.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : ஒன்றை இங்கே
தெளிவாக்க விரும்புகிறேன். மாண்புமிகு திரு. சுந்தரதாஸ்
அவர்கள் கொடுத்த திருத்தத்திலும் இங்கே மாண்புமிகு உறுப்
பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோதும்
இந்த வாரியத்திற்கு முதலமைச்சர் ஏன் தலைமையேற்க வேண்டும்;
வேறு ஒருவரை தலைமை ஏற்கச் செய்யக்கூடாதா என்று கேட்
டார்கள். மாண்புமிகு திரு. சுந்தரதாஸ் அவர்கள் ஒரு யுனிவர்
சிட்டி வைஸ்-சான்சிலர் போன்றவர்களை இந்த வாரியத்திற்கு
தலைவராக நியமிக்கக் கூடாதா என்று கேட்டார். செய்யலாம்.
ஆனால் அவர்களுக்கு அந்த அத்தாரிட்டி இருக்காது. முதலமைச்
சர் இந்த வாரியத்தின் — குழுவின் தலைவராக இருந்தால் அவர்
களுக்கு இருக்கிற அதிகாரங்கள், சிறப்பான அதிகாரங்கள். எல்
லோரும் கட்டுப்படுவார்கள். நல்ல பல காரியங்களை நிறைவேற்
றிட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி). பல ஆண்டுக் கால
மாகவே நம்முடைய திருக்கோவில்கள் சரியான பராமரிப்பு இன்றி
பாழ்பட்ட நிலையில் இருக்கின்றன என்ற உண்மை எல்லோரும்
அறிந்த உண்மை. அந்த நிலைமையை சீர்படுத்த வேண்டும்
என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு வாரியத்தை அமைக்க
வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கிறது. எனவே நல்லமுறை
யில் இந்த வாரியம் செயல்பட வேண்டுமென்றால் முதலமைச்சரே
அதற்குத் தலைவராக இருந்தால்தான், நினைக்கின்ற காரியங்
களை நிறைவேற்றிட முடியும் என்பதால்தான் முதலமைச்சரே
இதற்குத் தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
(மேசையைத் தட்டும் ஒலி). போதுமான விளக்கங்களை அளித்
துள்ளதாக நான் கருதுகிறேன். எனவே, மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை பேரவை நிறை
வேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி.)



சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 65 முடிய திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 65 முடிய சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.35/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி.)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) ஒளிப்பதிவுச் சிறுபேழைப்பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

பிற்பகல் 1.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர். மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1991" மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வீடியோ கேஸட் ரெக்கார்டர்) மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். ஜெயராமன்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சட்டமுன்வடிவுக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கேபிள் வீடியோவினால் சினிமாத்தொழில் அழிந்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பல கோடிக்கணக்கான ரூபாயை கேளிக்கை வரியாக வசூல் செய்து கொடுத்துக் கொண்டிருக்கும் தொழில் தற்போது கேபிள் வீடியோவினால், பெரிதும் பாதிப்பு அடையக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கேபிள் வீடியோவை முழுவதுமாக தடை செய்ய வேண்டும். கர்நாடகாவில் கன்னடப் படங்கள் கேசட்டுகளே இருக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. இதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

*1-10-1991 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





அடுத்தபடியாக கேளிக்கை வரியிலே சென்சாரான தேதியிலிருந்து 5 ஆண்டுகளான தமிழ் படங்களுக்கு கேளிக்கை வரியில் 25 சதவீதமும், 10 ஆண்டுகளான படங்களுக்கு 50 சதவீதமும் கேளிக்கை வரிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் 10 ஆண்டுகளுக்கு முன்னால் வெளியான படங்கள் மீண்டும் ஓடுவதோடு, பழைய படங்கள் வைத்திருக்கும் தயாரிப்பாளர்கள் விநியோகஸ்தர்கள் பெரிதும் பயன் அடைவார்கள். இதனால் சினிமாத்தொழில் காப்பாற்றப் படும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரசர்கள் வாழ்ந்த காலங்களிலிருந்து பொழுது போகும் நிகழ்ச்சியாகவும், அதே நேரத்தில் மக்களுடைய வாழ்க்கையினுடைய உண்மை நிலைகளை எடுத்துணர்த்தும் நிலைகளையும் மக்களைக் காத்து நாட்டை ஆளக்கூடிய முடிசூட்டப்பட்ட மன்னர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்ற நிலைமைகளை தெருக்கூத்துக்கள் என்று அன்றைய பாணியிலே கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினார்கள். அதே கலை, நாளடைவிலே காலத்திற்கேற்றவாறு நாடகங்களாகவும், நாகரிகம் வளர வளர அத்துறை சினிமாக்களாகவும் வளர்ந்தன. ஆனால் தங்களை இந்த கலை வாழ்க்கையிலே ஈடுபடுத்திக் கொண்ட கலைஞர்கள் தாங்கள் எந்த பாத்திரத்தை ஏற்று நடித்துக்கொண்டு இருந்தார்களோ, அதை தங்களுடைய நடைமுறை வாழ்க்கையிலேயும் எண்ணி அற்ப சந்தோஷத்தை அடைந்து தங்களுடைய வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் பாழ்படுத்திக்கொண்டு இன்று வாழ்க்கையிலே பல சிரமங்களுக்கு ஆளாகி வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற ஏழை நாடக நடிகர்களுக்கும், அவர்களோடு ஒத்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற மற்ற கலைஞர்களுக்கும், குடியிருப்பதற்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏழை கலைஞர்களுடைய வாழ்க்கை, இருப்பதற்கு கூட இடம் இல்லாத நிலையிலே இருப்பதால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கருணை கூர்ந்து அந்த ஏழை கலைஞர்களுக்கு வீடு கட்டி கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்திலே என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பினை கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களே, ஒளிப்பதிவுச்

சிறுபேழைப் பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப்
பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்து
தல்) திருத்தச் சட்டமுன்வடிவு ஆய்விலே எனக்குப் பேச
வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கு
கிறேன்.

பிற்பகல் 1.55

வீடியோ மீடியா என்பது ஒரு டபுள் எட்ஜ்டு வெப்பன் என்
பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். இந்த வி.சி.ஆர். மூலமாக டெலிவிஷன்களில்
இந்தப் படங்களை காண்பிக்கின்றபோது நிறைய இடங்களில்
காப்பி ரைட் இல்லாத படங்கள் வீடியோ கேசட் மூலமாக
முறைகேடாக வந்து கொண்டு இருப்பதை அரசின் கவனத்
திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இந்த கேசட்டுகள் கூட இளைய தலைமுறை
யினுடைய ஒழுக்கத்தைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு ஆபாச
கேசட்டுகள் கூட சில வீடியோ லைபரரிகளில் இருப்பதாகக்
கேள்விப்படுகிறோம். ஆகவே, இதுபோன்று இருக்கின்ற
இந்த வீடியோ லைபரரிகளை எல்லாம் சோதனைக்கு உள்
ளாக்கி அங்கே முறையாக காப்பி ரைட் இருக்கக்கூடிய
கேசட்டுகள் இருக்கிறதா என்பதை மிக கவனத்தோடு அரசு
ஆராயவேண்டும் என்பதை என்னுடைய கருத்தாக இங்கே
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் வன்முறைகளை தூண்டுகின்ற விதத்திலே
இருக்கிற வீடியோ கேசட்டுகள் கூட இருக்கின்றன. அதையும்
இந்த அரசு மிகக் கவனத்தோடு பரிசீலனைச் செய்யவேண்
டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இந்த வி.சி.ஆர்.
மூலமாக டெலிவிஷன்களில் படம் காண்பிக்கிற வசதிகள்
இல்லாத காரணத்தால் கிராமங்களில் சிறிய அதாவது
வீடியோ மினி தியேட்டர் என்று சொல்லக்கூடிய திரையரங்கு
களை கிராம மக்கள் பார்க்கிற அளவுக்கு சிறிய அளவில்
அதாவது வீடியோ டெக்குகளிலே டெலிவிஷன் மூலமாக
காப்பி ரைட்ஸ் இருக்கிற படங்களை கிராம மக்கள் பார்ப்ப
தற்கு அனுமதிக்கக்கூடிய வகையிலே வகை செய்தால்
அதிலேயிருந்து அரசுக்கும் ஓரளவுக்கு வருமானம் கிடைக்க
வழியிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோல் நல்ல கருத்துக்கள் செறிந்த படங்களை
உ காரணமாக அரசினுடைய கொள்கைகளைப் பரப்புகிற
ப டங்களை தயாரித்து அதை வீடியோ கேசட்டுகள் மூலமாக



வெளியிடுகிற நிறுவனங்களுக்கு நல்ல முறையில் சிறப்பாக
ஊக்குவிக்கும் வகையில் பல நல்ல பரிசுத் திட்டங்களை
அளிக்க அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கேபிள் டி.வி. பற்றி இங்கே சொன்னார்
கள். இப்போது ஒரு புதிய புகார் கேபிள் டி.வி. பற்றி
வந்திருக்கிறது. அதாவது கேபிள் டி.வி. எந்த எந்த
வழிகளில் செல்கிறதோ அந்த இடங்களில் இருக்கிற வீடு
களில் இருக்கிற தொலைக்காட்சி நிறுவனத்தினரால் முறை
யாக ஒளிப்பரப்பப்படுகின்ற அந்தப் படங்கள் தெளிவாக
தெரிவதில்லை என்ற ஒரு புகார் வந்து கொண்டிருக்கிறது.
இது உண்மைதானா என்பதை ஆராய வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்ஜெட் மானியத்தின் மீது மாண்புமிகு திரு. பீட்டர்
அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்
கள். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பில். மற்றவற்றை
எல்லாம் இதில் பேச முடியாது. சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அசோக மகாராஜா இந்த நாட்டை
ஆண்டதனுடைய நினைவாக அசோகச் சின்னம் இன்
றைக்கு நம்முடைய நாட்டின் சின்னமாக இருக்கிறது; அதே
போல் பரதன் சிறப்பாக ஆண்டதன் காரணமாக இந்த
நாட்டுக்கு பாரத நாடு என்று பெயர் கிடைத்திருக்கிறது;
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டை
சிறப்பாக ஆள்வதன் காரணமாக வரலாற்றில் எதிர்கால
சரித்திரத்தில் அவருடைய ஆட்சி பொற்கால ஆட்சி
என்பது பொறிக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று
கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களால் இங்கே இந்த வி.சி.ஆரினுடைய சட்டமுன்
வடிவினை அறிமுகப்படுத்தி அதன் ஆய்வில் பேசுவதற்கு
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கி
றேன்.

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1991 அக்டோபர் 3

இன்றைக்கு இதை முறைப்படுத்துவதற்கு இந்த சட்டத்தைப் போட்டு இருக்கிறீர்கள். அரசுக்கு வருமான இழப்பை இந்த டி.வி. பெட்டியின் மூலமாக அதாவது வி.சி.ஆர். மூலமாக தொலைக்காட்சிப் பெட்டிகளில் திரைப்படத்தைக் காண்பிக்கும் போது இதில் பல முறைகேடுகள் இந்த துறையினர் செய்து கொண்டு இருப்பதால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டு இருப்பதால் இன்றைக்கு இந்த சட்டத்தைப் போட்டு அதற்கு ஒரு ஆண்டிலிருந்து 3 ஆண்டு வரை கடுமையான தண்டனையையும் போட்டு இருக்கிறீர்கள். இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் கூட நான் இதில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் இந்த வீடியோ கேசட் மூலமாக இந்தப் படத்தைக் காட்டுகிறவர்கள் ஒயர்களை இழுக்கும்போது ஆங்காங்கே உள்ள வழியில் உள்ள வீடுகளை எல்லாம் இழுத்துக்கொண்டுபோய் விடுகிறார்கள். அந்த ஒயர்களை எல்லாம் எப்படி போடுகிறார்கள் என்றால் ஒவ்வொரு வீட்டிலும் போய் சொல்லாமல் அவரவர்கள் தாமாகவே ஒயர்களை போடக்கூடிய சூழ்நிலை எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். ஏன் என்றால் இவ்வாறு அவர்கள் இஷ்டப்படி செய்வார்கள் என்றால் வீட்டுக்காரர்களுக்கு ரொம்ப தொந்தரவுகள் எல்லாம் ஏற்பட்டு விடுகின்றன.

பிற்பகல் 2.00

அதுமட்டுமல்ல: இந்தப் படங்கள் போடும்போது, சில நேரங்களில் 3 படங்கள், 4 படங்கள் என்று போடுகிறார்கள். இப்படி அவர்கள் போடுவதால், குழந்தைகளின் படிப்பு—ஏற்கெனவே டி.வி. வைத்திருந்தால் பிள்ளைகள் அதைப் பார்த்துவிட்டு, படிக்காமல் பல இடங்களில் இருக்கிறார்கள். கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி; பாதிக்கப்படுகின்றன. சமுதாயத்தை இப்போது கெடுக்கக் கூடிய சூழ்நிலையிலே அது இருக்கிறது. அப்படி இருக்கும் போது, சினிமா படங்கள் 3 படம், 4 படம் என்று போட்டார்கள் என்றால், அந்தப் படங்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப் பார்க்கக்கூடிய சூழ்நிலை உள்ளதால், கல்விக்கு மிக இழப்பு ஏற்படும். எனவே, இதை முறைப்படுத்த வேண்டும். அதாவது ஒரு படம் தான், அதுவும் Educative — ஆக இருக்கக்கூடிய முறையான படங்களை அவர்கள் போடுவதற்கு இதில் நீங்கள் குறிப்பிட வேண்டும். இதை முறைப்படுத்த வேண்டும். அதைபோல், 'டி.வி.' யின் இது போன்ற படங்கள் போடுவதால் சினிமா தொழில் நலிந்து கொண்டிருக்கிறது. சினிமா தொழில் நலிந்து கொண்டிருப்பதால், சினிமா தியேட்டர்கள் எல்லாம் இன்றைக்கு கல்யாண



1991 அக்டோபர் 3] [திரு.எஸ். எஸ்.ராமசுப்பு]

மண்டபங்களாகக்கூடிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. பல இடங்களில் தியேட்டர்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. கல்யாண மண்டபங்களாக அதை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் படங்கள் அதிகமாகக் காட்டாமல் மிக Educative ஆன படங்களை போடக்கூடிய அளவிலே இருக்க வேண்டும். கிராமங்களிலே நேரடியாகக் கொண்டுபோய் வி.சி.ஆர்.-ஐப் போடுகிறார்கள். அதிலிருந்து வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்து, படத்தைப் போடும்போது தியேட்டர் தொழிலும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு வருவதும் முறைப்படுத்தப்படவில்லை. அரசாங்கத்திலுடைய கஜானாவுக்கும் அவை வருவதில்லை. அவர்களுக்கு எதாவது ஒரு மினிமம் தொகை வைத்து, இப்படி செய்தால்தான் வி.சி.ஆர்.-ஐ வைத்துப் படம் போடமுடியும் என்ற ஒரு நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்பதை நான் உங்கள் மத்தியில் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், படங்களைக் காட்டும்போது, புதியதாக எடுக்கப் பட்ட படங்களின் வீடியோ கேசட்டை தயார்செய்து, உடனேயே கொண்டுவந்து படம் காட்டுகிறார்கள். இவ்வாறு போடுவதால், சினிமா தொழில் பாதிக்கப்படுகிறது. அரசாங்கத்திற்கு சினிமா தியேட்டர்கள் மூலம் வருமானம் வருகிறது. அந்த வருமானம் குறைந்துவிடக்கூடாது என்பதால் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். முறைப்படுத்தும்போது, 'பேலன்ஸ்' செய்து வரக்கூடிய அளவிலே இருக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். ஏற்கெனவே இது போன்ற பல சிக்கல்கள் வந்துள்ளன. இங்கே கூட போராட்டங்கள் எல்லாம் சினிமா துறையிலேயிருந்து செய்தார்கள். புதிதாக எடுத்தப்படங்களைப் போடுவதால், தங்கள் தொழில் பாதிக்கின்றன என்று போராட்டம் நடத்தினார்கள். எனவே, அவ்வாறு பாதிக்கப்படாத வண்ணம், நீங்கள் இதை முறைப் படுத்த வேண்டும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரிலே பார்த்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். படங்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுப்பதாக இருந்தால், அரசாங்கத்தின் செய்திப் படங்களைக் காட்டுவதற்கு இவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும், நான் இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல், குழந்தைகள் எந்தவிதத்திலும் கெட்டுப்போகாத அளவிற்கு, வருமானமும் நமக்கு வரக்கூடிய அளவிலே இந்தத் துறையானது முறைப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை சொல்லிக் கொண்டு, இதை நீங்கள் முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று வாய்ப்புக்கு நன்றிகூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒளிப்பதிவுக் கருவிகள் (Video Cassette Recorder) மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தச் சட்டத்திருத்த முன் வடிவின் மீது தங்களின் மேலான கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் 'கேபிள் டி.வி.'-யையே தடைசெய்ய வேண்டுமென்றார். கர்நாடக மாநிலத்தில் இப்படி தடை செய்திருப்பதாக அவர் தெரிவித்தார். கர்நாடக மாநிலத்தில் 'கேபிள்' டி.வி.-யை தடை செய்திருக்கிறார்கள் என்பது பற்றி எனக்கு சரியான தகவல் இல்லை. ஆனால், இந்திய அரசியல் சாசனப்படி (Under the Constitution) எந்த ஒரு தொழிலையும், எந்த ஒரு 'டிரேடையும்'-யும் நடத்துவதற்கு இந்தியப் பிரஜைகள் யாராக இருந்தாலும் அவருக்கு உரிமை இருக்கிறது என்று இருக்கிறது. எனவே, இதைத் தடை செய் வதில் சட்டச் சிக்கல்கள் எழக்கூடும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் இங்கே பேசுகிறபோது, 'காபி ரைட்' இல்லாதபடங்களை வீடியோவில் காண்பிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதற்கு ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. இவற்றை தடை செய்ய, இப்படிச் செய்தால் தண்டனை வழங்க சட்டங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே உள்ள சட்டங்களை தீவிரமாக அமல்படுத்துமாறு காவல்துறையினர் வற்புறுத்தப்படுவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2.05

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள் இங்கே பேசுகின்றபோது, கேபிள் டி.வி.-யைக் கட்டுப்படுத்த வேண்டும். இது முறைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறி னார். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு படங்கள் என்று காண்பித்து வருவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என் றார். சட்டப்படி இதை எப்படித் தடை செய்ய முடியும் என்பது புரியவில்லை. ஏனென்றால், வீட்டில் காண்பிக்கிற கேபிள் டி.வி.-யைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் குறிப்பிட்டார். ஆனால் வெளியில் வெளிப்படையாக திரைப்பட அரங்குகளில், சினிமாத் தியேட்டர்களில் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு காட்சிகள் காண்பிக்கிறார்கள். மாணவர்கள் படிப்பைக்



கெடுத்துக்கொண்டு, நாள்தோறும் ஒரு தியேட்டரில் உட் கார்ந்து அங்கே நான்கு காட்சிகளையும் பார்த்தால் அதற்கு எப்படிச் சட்டப்படி தடை விதிக்க முடியும்? எனவே, இதுபற்றி ஆராய வேண்டும். மாணவர்களுடைய படிப்பு கெட்டுப் போகிறது என்பதை நாங்களும் உணர்கிறோம். அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சட்டப்படி இதை எப்படித் தடை செய்ய வேண்டும், எப்படி முடியும் என்பதை ஆராய வேண்டும்.

புதுப்படங்களை, உரிமை பெறாமல் வீடியோவிலே காண் பிக்கிறார்கள். கேபிள் டி.வி. வழியாகக் காண்பிக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டார். இதற்காகத்தான் இப்படி ஒரு சட்டத் திருத்தத்தை இன்று கொண்டு வந்துள்ளோம். ஏற் கனவே இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள் ளது. பல இலட்சக் கணக்கில் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழித்துத் தயாரிப்பாளர்கள் படங்களைத் தயாரிக்கிறார்கள். ஆனால், அவர்கள் திரைப்பட அரங்குகளில் திரையிடும் முன்பே இந்த கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள், தயாரிப் பாளர்களிடம் எந்த ' right ' -யும் ' copy right ' பெறாமல், அவர்களாகவே, 'Video piracy' செய்து இத்தகைய படங்களை அவர்களாகவே திருடி கேபிள் டி.வி. வழியாகக் காட்டுகின்றார்கள். இதையெல்லாம் கட்டுப்படுத்த முறைப்படுத்தத்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் தெரிவித்த கருத்தை ஏற்கெனவே நானே பரி சீலனைக்கு எடுத்துக்கொண்டேன்.

புதிய படங்களைக் கேபிள் டி.வி.-யில் காட்டக் கூடாது என்ற ஒரு விதியை இந்தத் சட்டத் திருத்தத்தில் சேர்க்க முடியாதா, ஒரு ' amendment ' கொண்டுவர முடியாதா என்று கேட்டார். இதை நானே ஏற்கெனவே ' argue ' செய்தேன். நான் கேட்டேன் கடந்த ஒரு ஆண்டு காலத்தில் தயாரிக்கப்பட்ட புதுப்படமாக இருந் தாலும் அல்லது கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் தயாரிக் கப்பட்ட புதுப்படமாக இருந்தாலும் இவற்றைக் கேபிள் டி.வி. வழியாகக் காண்பிக்கக் கூடாது என்று ஒரு' clause 'ஐ இந்த ' amendment ' -ல் சேர்த்தால் என்ன என்று கேட்டேன். இதற்குச் சட்ட நிபுணர்கள் சொல்லு கிறார்கள். சட்டச் சிக்கல்கள் எழக்கூடும் under the Constitution it is not viable. எனவே, இப்படிப்பட்ட ஒரு 'amendment'— ஐக் கொண்டு வந்தால், கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் உடனே கோர்ட்டுக்குச் சென்று ஒரு தடையாணையைப் பெற்று விடு வார்கள் என்று கூறினார்கள். எனவே, இந்தக் கருத்து

ஏறகெனவே, அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆய்வல் இருக்கிறது. மேலும், சட்ட நிபுணர்களைக் 'consult' செய்து கொண்டிருக்கிறோம். கூடுமான வரையில் இத்தகைய ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரமுடியும் என்றால் நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ச்சி பெற்ற அறிவியல் தொழில் நுட்பத்தின் விளைவாகத் தோன்றிய மின்னணுத் துறையின் மலர்ச்சியல் விளைவால் தோன்றியதே கேபிள் டெலிவிஷன் முறையாகும். கேபிள் ஒளிபரப்பு முறையில் படத்தைத் திரையிடுபவர்கள் வரிசையாக பல வீடுகளுக்கு இணைப்பினைக் கொடுத்து அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே காட்சிகளாக் காணும் வகையில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றனர். தொடக்கத்தில் தொலைத்தொடர்பு துறையில் உரிமம் பெற்று 'டிஷ் ஆன்டெனா' மூலம் இந்த ஒளிபரப்பு செய்யப்பட்டது. தற்போது இந்த ஒளிபரப்பு 'டிஷ் ஆன்டெனா' இல்லாமலேயே நடத்தப்பட்டு வருகின்றது.

கேபிள் ஒளிபரப்பைச் சிலர் தொழிலாகக் கொண்டு பெரும்பொருள் திரட்டி வருகின்றனர் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்தப் போக்கு தடையின்றி அனுமதிக்கப்பட்டால் திரைப்படத் தொழிலில் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு இழப்பு ஏற்படுவதுடன் அரசுக்கும் வருவாய் இழப்பு ஏற்படும். கேபிள் வழி ஒளிபரப்புவது தமிழ்நாடு வீடியோ சட்டத்திற்குப் புறம்பானதாகும். எனவே, உரிமமின்றி கேபிள் ஒளிபரப்பு மூலம் திரைப்படங்களை ஒளிபரப்புவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட கேபிள் ஒளிபரப்பாளர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே காட்சிகளைக் காணத்தக்க வகையில் கேபிள் வீடியோ மூலம் ஒளிபரப்புவதால் இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 19(1)(எ), 19(1)(ஜி) பிரிவுகளின்படி சட்டப்பூர்வமான வர்த்தக அல்லது வணிக நடவடிக்கையாகும் என்றும், இதற்காக எந்தவொரு சட்டத்தின் வகைமுறையின் கீழ் உரிமம் அல்லது அனுமதி பெறத் தேவை இல்லை என்றும் காரணம் காட்டி அரசின் நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். இம்மனுவில் மேற்கொண்டு ஆணை பிறப்பிக்கப்படும் வரை மனுதாரர்களின் உரிமை அவர்களுடைய சட்ட வரம்புக்குட்பட்ட கேபிள் வழி ஒளிபரப்புத் தொழில் ஆகியவற்றில் எந்த வகையிலும் தலையிடக்கூடாதென சென்னை உயர்நீதிமன்ற ஆயம் இடைக்காலத் தடை ஆணை பிறப்பித்துள்ளது.


பிற்பகல் 2-10

இதற்கிடையில், திரைப்படத் தொழில் பிரதிநிதிகளின் கூட்டமொன்று கூட்டப்பட்டது. திரைப்படத் தொழிலின் பிரதிநிதிகள் அதிலும் குறிப்பாக வீடியோ திருட்டு பிரச்சினைகள், கேபிள் வழி ஒளிபரப்பு முறை ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டு, திரைப்படப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் ஆய்வுசெய்யப்பட்டன. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ, கேசட், ரெக்கார்டர் மூலம் தொலைக்காட்சித் திரையில் காண்பிக்கப்படும் திரைப் படங்கள் முறைப்படுத்துதல் சட்டத்தில் உள்ள வகைமுறைகளைப் பரிசீலிக்கும் போது கேபிள் வழி ஒளிபரப்பு மூலம் திரைப்படங்கள் காட்டுவதைத் திறம்படத் தடுப்பதற்கு வகைமுறை இல்லை என்று தெரிய வந்தது. எனவே கேபிள் வழி ஒளிபரப்பு மூலம் திரைப்படங்கள் காட்டுவதை முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு 7 ஆம் சட்டத்தைத் தக்கவாறு திருத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. எனவே கேபிள் வழி ஒளிபரப்பு முறையை முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு 7 ஆம் சட்டத்தில் சில பிரிவுகளைத் திருத்த வகை செய்ய இச்சட்ட முன்வடிவு அவைமுன் வைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட முன் வடிவின் முக்கிய அம்சங்களாவன:

கேபிள் வழி ஒளிபரப்பு முறைக்கு உரிமம் வழங்க வகை செய்தல்; உரிமக் கட்டணம் ரூபாய் ஆயிரம் என்று நிர்ணயித்தல்; 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின்படி முதல் உரிமையாளரின் இசைவு பெற்ற பின்னர்தான் எந்த ஒரு திரைப்படத்தையும் கேபிள் வழி காட்ட வேண்டுமென்று கட்டுப்படுத்துதல்; தணிக்கை செய்யப்படாத திரைப்படங்கள் காட்டினால் அவர்களுக்கு 6 மாதத்திற்குக் குறையாமல் ஓராண்டு வரை சிறைத்தண்டனையும் ரூபாய் 25,000-க்கு குறையாமல் ரூபாய் 75,000 வரை அபராதமும் தொடர்ந்து இக்குற்றத்தைச் செய்தால் அவர்களுக்கு அவ்வாறு கேபிள் வழி திரைப்படம் காட்டும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபாய் 10,000 வரை அபராதம் விதிக்கும் வகையில் தண்டனை வகைமுறைகள் இயற்றுதல்; தணிக்கை செய்யப்படாத திரைப்படங்கள் காட்டுவதைத் தவிர வேறு வகையில் இச்சட்டத்தில் யாதொரு வகைமுறையை மீறுபவர்களுக்கு ஓராண்டுக்குக் குறையாமல் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் ரூபாய் 50,000-க்கு குறையாமல் ரூபாய் 1 இலட்சம் வரை அபராதமும் விதிக்கும் வகையில் தண்டனை வகை முறைகள் இயற்றுதல் மற்றும் திருத்தச் சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து 4 வார காலத்திற்குள் கேபிள் வழி ஒளிபரப்பாளர்கள் உரிமம் பெற வகை செய்தல்;

போதுமான விளக்கத்தை அளித்திருப்பதாகக் கருதுகிறேன். எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பேரவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படு
கிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 21 முடிய திருத்தங்கள் இல்லை. பிரிவு
கள் 2 முதல் 21 முடிய சட்டமுன் வடிவின் பகுதியாக
இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு
விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்
வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம்
பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவு
நாடா (வீடியோ கேஸட் ரெக்கார்டர்)
சிறுபேழைப் பதிவுக் கருவிகள் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்
கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1991)
நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத்
தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன்
முடிவுற்று பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4.30 மணிக்குக்
கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.14 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

பிற்பகல் 4.30

பேரவை பிற்பகல் 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத்
தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில்
மீண்டும் கூடியது.

8. சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(இ) நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள்
(திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு
ஆய்வு செய்தல்.

[பேரவைத் தலைவர்]

[1991 அக்டோபர் 3

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்
கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1991)''
மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்
கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவு*
(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1991)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, இங்கே நீதி மன்ற கட்டணங்கள் எல்லாம்
இப்போது அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே ஏழை
எளியவர்கள் குறைந்த செலவில் நீதிமன்றங்களை அணுக
முடியாமல் இன்றும் ரொம்பவும் திண்டாடிக்கொண்டிருக்கி
றார்கள். ஆகவே நீதிமன்றக் கட்டணங்களைக் குறைப்ப
தற்கு அரசு என்ன செய்யவேண்டுமோ அதை
யெல்லாம் செய்து ஏழையெளிய மக்களுக்கு நீதி கிடைக்க
ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாக சட்ட
அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.

அதே போல சிவில் கோர்ட்டுக்கு செல்கிறபோது
அதிகமான கோர்ட் பீ ஸ்டாம்புகளைக் கட்டிவிட்டுத்தான்
நீதிமன்றங்களுக்கு செல்லவேண்டுமென்ற நிலை இன்றைக்குத்
தமிழகத்திலே இருந்துகொண்டு இருக்கிறது. அதைக்கூட
அறவே நீக்கிவிட்டு யாருமே நீதிமன்றத்தை மிக எளிதிலே
அடையலாம் என்ற வகையிலே அரசு ஆவன செய்து ஓரளவுக்
காவது ஏழையெளிய மக்களுக்கு சேவை செய்ய முற்
பட்டால்கூட மிக நலமாக இருக்கும். ஆகவே நீதிமன்றங்
கள் கட்டணங்களை ஏற்றாமல் அரசு ஆவன செய்யவேண்டும்
என்று கூறி வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.
வணக்கம்.

---

* 30-9-1991 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளி
யிடப்பெற்றுள்ளது.



1991 அக்டோபர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவின் நோக்கமே 1887-வது ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்ற சட்டத்தின், சென்ட்ரல் ஆக்ட் 25-ன் பிரிவின்படி மாவட்ட நீதி மன்றங்களுக்கு சீராய்வு அதிகாரம் வரம்பு அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதி மன்றங்களிடம் முன்னிடப்படும், தாக்கல் செய்யப்படும் ஒருவியல் சீராய்வு மனுக்களின் மீது நீதிமன்ற கட்டணங்கள் விதிப்பதைப் பொறுத்த அளவில் நீதி மன்றங்கள் இடர்பாடுகள் அனுபவித்து வருகின்றன, அதனைப் போக்குவதற்காகத்தான் இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதனை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் . தீர்மானம் நிறைவேறியது.

( மேசையைத் தட்டும் ஒலி)

மேசையைத்தட்டி வரவேற்கின்ற உறுப்பினர்கள், தீர்மானம் கடைசியாக நிறைவேறுகிற நேரத்தில் மட்டும் தட்டினால் போதுமானது. ஒவ்வொரு நேரத்திலேயும் தட்டவேண்டியதில்லை. தீர்மானம் மொத்தத்தில் நிறைவேறுகிறபோது தட்டினால் வரவேற்பதாக பொருள் படும்.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமைவழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது

(மேசையைத் தட்டும் ஒலி).



பிற்பகல் 4.35

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(எ) நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. (ஆ.இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1991) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்''.

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

(ஈ) நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்)திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37 / 1991) மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் தொடங்குகிறது. அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு நில உச்ச வரம்பு சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இங்கே அவையின் முன்னாலே இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறேன். இதை நான் குறிப்பிடுகிறபோது, நில உச்சவரம்பு, நில உச்சவரம்பு என்கிற பெயர் இன்று அல்ல, நேற்று அல்ல, இந்திய துணைக் கண்டம் விடுதலை அடைவதற்கு முன்னாலேயே கூட நில உச்சவரம்பு சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. ஜமீன்தாரர்கள் இருக்கிறார்கள், சிற்றரசர்கள் இருக்கிறார்கள், நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். இதற்கு

*1-10-1991 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1991 அக்டோபர் 3
[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

எல்லாம் நில உச்சவரம்பு கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை
இந்தியா விடுதலைப் பெறுவதற்கு முன்னாலே கூட, காங்கிரஸ்
பேரியக்கத்தின் கொள்கைகளிலே ஒன்றாக இது இருந்தது.
காந்தியடிகள் 17 அம்ச திட்டத்திலேயே மிகவும் முக்கியமான
கொள்கை என்று சொல்கிறபோது அவை எவை என்றால் மது
விலக்கும் நிலச் சீர்திருத்தமும் ஆகும்.

அப்படி கொண்டுவருகிற இந்த நேரத்திலே, அனைத்து இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு
முன்பு கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாள
ராக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது அவர்கள் இந்த
நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி 1961 ஆம் ஆண்டிலேயே
இங்கே பேசியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய
உணர்வுகளை புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அதற்கு ஒரு
சட்டமுன்வடிவை கொண்டுவந்து நிறைவேற்றியபோது, இந்த
அவையிலும் மேலவையிலும் நடைபெற்றது பற்றி சொல்ல
வேண்டுமென்றால், இந்தியத் துணைக் கண்டத்தில் எதிர்ப்புகளே
இல்லாத அளவுக்கு, எந்தப் பேரவையானாலும் சரி, எந்த
மாநிலங்களானாலும் சரி, எதிர்ப்புகளே இல்லாமல் ஏகமனதாக,
அறிமுகப்படுத்தப்பட்டு, நிறைவேற்றப்பட்ட சட்டம் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால்
கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். ஆனால்
எந்தக் காரணத்தினாலோ அதற்கு இந்திய குடியரசுத் தலைவ
ருடைய ஒப்புதல் கிடைக்கவில்லை.

மீண்டும் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உணர்வு
களை, மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எண்ணிய எண்ண
த்தை, குறிக்கோளாகக் கொண்டு இன்றைக்கு இச்சட்டமுன்
வடிவை நிறைவேற்றுவதற்காக கொண்டு வந்திருக்கிறார்கள்.
இதைக் கொண்டுவருவதற்கு முன்னாலே, அனைத்து இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச்
செயலாளர் என்ற முறையில் மாண்புமிகு புரட்சித் தலைவி
அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே நில உச்சவரம்புச் சட்டம்
கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே
போல அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றஇரண்டு மூன்று
தினங்களுக்குள்ளாக, 29-6-1991-ல் அரசு அதிகாரிகளை அழைத்து
நில உச்சவரம்புச்சட்டத்தைக்கொண்டுவருவது தான் எங்களுடைய
லட்சியம், முக்கியமான குறிக்கோள், புரட்சித் தலைவருடைய
எண்ணமும் அதுதான் என்று சொன்னார்கள். அதன் பிற்கு
ஆளுநர் உரையில்கூட, 20-7-1991 அன்று இதைப் பற்றி சொல்லி
யிருக்கிறார்கள். அதே நேரத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தை



1991 அக்டோபர் 3] [திரு.எஸ்.டி. சோமசுந்தரம்]

ஆரம்பிக்கிறபோது, அந்த காங்கிரஸ் பேரியக்கத்தில் பெரிய பெரிய தலைவர்கள் இருந்தார்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் காந்திஜி பற்றி சொல்லத் தேவையில்லை. அது போல நேரு பற்றி சொல்லத் தேவையில்லை. பூமிதான இயக்கப் பிதா ஆச்சார்ய வினோபா அவர்கள், ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்கள், ஆச்சார்ய கிருபாளனி அவர்கள், அசோக் மேத்தா போன்றவர்கள் இருந்தார்கள். இங்கே தமிழ்நாட்டில் பி. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் காங்கிரசில் இருந்தார்கள். காங்கிரசுக்குப் பாடுபட்டார்கள். இடையிலே சிலர் காங்கிரசை விட்டு வெளியே போனார்கள். சிலர் காங்கிரசுக்கு உள்ளே வந்தார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கை நில உச்சவரம்பு என்கிறபோது, காங்கிரசில் சேர்ந்தால் தான் நம்முடைய நிலத்தை தக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று சிலர் காங்கிரசில் சேர்ந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு . . . . . (குறுக்கீடுகள்)

பிற்பகல் 4-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது ஒருவர்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தமிழகத்தினுடைய மூத்த அரசியல் வாதிகளில் ஒருவர். காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தோற்றம், அதனுடைய வரலாறு, அதனுடைய பரிணாம வளர்ச்சி இந்த நாட்டினுடைய விடுதலை, இதனுடைய சமூகப் பொருளாதார மாற்றங்கள் இவற்றினுடைய ஒவ்வொரு கட்டத்திலும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும் காங்கிரஸ் பேரியக்கமும் எவ்வளவு இணைந்திருந்தார்கள் என்பதை நம்முடைய நாட்டினுடைய வரலாறு உணர்த்தும். எனவே எங்களுக்கெல்லாம் நீங்கள் அறிவுரை சொல்வீர்கள். ஒரு சட்டத்தைப்பற்றி ஆய்வு செய்கின்றபோது அதைப் பற்றி மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள், வீணாக அரசியல் விவகாரங்களைக் கிளப்பாதீர்கள் என்று வேண்டுகோள் விடுப்பீர்கள். அந்த வேண்டுகோளை அமைச்சர் அவர்களுக்கும் விடுத்து, இந்தச் சட்டத்தினை பொறுத்து மட்டும் தன்னுடைய வாதங்களை முடித்துக்கொண்டால், இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு எல்லாத் தரப்பினரும் உதவி செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முழுவதற்குமே என்னுடைய அந்த வேண்டுகோள் பொருந்தும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :
பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்லவில்லை. மாண்புமிகு
காங்கிரஸ் பேரியக்கம் தோன்றியபோது 11 கொள்கைகள் முக்கிய
மான கொள்கைகளாக இருந்தன. அதிலே நிலச் சீர்திருத்தம்
ஒரு முக்கியமான கொள்கை என்று சொன்னேன். மது விலக்கு
ஒரு முக்கியமான கொள்கை என்று சொன்னேன். 1961-ல் இந்தச்
சட்டமுன்வடிவை இங்கே நிறைவேற்றுகிறபோது, யார் இதை
நிறைவேற்றினார்கள் என்பதைச் சொல்ல வேண்டும். இந்த
நாட்டின் பெரியவர்கள், தமிழ் நாட்டினுடைய பெரியவர்கள்
இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்தின் பெரியவர்கள் எல்லோ
ராலும் போற்றப்பட்டவர், தியாகத்தால் உருவானவர் இந்த
மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார்கள். பேரறிஞர்
அண்ணா அவர்கள் அவர்களைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள்.
அவர் கல்லூரிக்குச் சென்று படிக்கவில்லை. ஆனால் மக்களைப்
பற்றிப் படித்தவர்கள் என்று காமராஜர் அவர்கள் படத்தை
காஞ்சிபுரத்தில் திறந்து வைத்துப் பேசியபோது பேரறிஞர்
அண்ணா அவர்கள் சொன்னார்கள். மக்களைப் பற்றிப் படித்தது
மட்டும் போதும் ஒரு அரசியல்வாதிக்கு என்று சொன்னார்கள்.
1961ல் கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டத்திற்குத்தான் இப்போது
திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். அப்படி எல்லோராலும்
போற்றப்படுகிற காமராஜர் அவர்கள்தான் அப்போது இந்த
நாட்டினுடைய முதலமைச்சர். அதுமட்டுமல்ல, அவர் காலத்
தில் திரு. மாணிக்கவேலு நாயகர் அவர்கள் வருவாய்த் துறை
அமைச்சராக இருந்தார்கள். அவர் வருவாய்த் துறை அமைச்ச
ராக இருந்தபோதுதான் இதைக் கொண்டு வந்தார்கள். இதை
ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினார்கள். ஜாயின்ட்
செலக்ட் கமிட்டியில் யார் யார் உறுப்பினர் என்றால், இன்றைக்கு
இந்தியத் துணைக் கண்டத்தினுடைய குடியரசுத் தலைவராக
இருக்கிற ஆர்.வி. அவர்கள் அப்போது அதில் உறுப்பினர். இன்று
மஹாராஷ்டிர மாநிலத்தில் ஆளுநராக இருக்கிற திரு. சி. எஸ்.
அவர்கள் அதிலே உறுப்பினர். பெரியவர் பக்தவத்சலம்
அவர்கள் உறுப்பினர். அப்போது ஒரே ஒரு கம்யூனிஸ்ட் கட்சி
தான். அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. கல்யாணசுந்தரம்
அவர்கள் அதில் உறுப்பினர். திரு. கருத்திருமன் அதில்
உறுப்பினர். அன்றைக்கு எதிர் கட்சித் தலைவராக இருந்த
வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் அதில் உறுப்பினர்.
திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அதில் உறுப்பினர்.
இப்படி 32 பேர்கள் அதிலே உறுப்பினர்களாக இருந்தார்கள்.
இப்படி 32 பேர்கள் உறுப்பினர்களாக இருந்த அந்த செலக்ட்
கமிட்டி கூட்டங்கள் 39 நாட்கள் நடந்தன. 19-9-1960 ல்
இருந்து 17-12-1960 வரைக்கும் நடந்திருக்கிறது. அந்த
செலக்ட் கமிட்டியிலே எவ்வளவு பேர்கள் மனுக்களைக்
கொடுத்தார்கள் என்றால் 7,600 பேர்கள் மனுக்களைக்
கொடுத்திருக்கிறார்கள். திரு. மாணிக்கவேலு நாயகர்
அவர்களின் பேச்சை எடுத்துப் பார்த்தால், எடுத்த உடனே



சொல்லியிருக்கிறார், 7,600 பேர்கள் மனுக்கள் கொடுத்திருக்
கிறார்கள் என்று அதில் 100 சங்கங்களைச் சார்ந்தவர்கள் கொடுத்
திருக்கிறார்கள். விவசாயிகளினுடைய சங்கங்கள் 206. இப்படி
பல்வேறு சங்கங்கள் எல்லாம் கொடுத்திருக்கின்றன.
இன்றைக்கு நாம் 30 நிமிடமோ, 40 நிமிடமோ,
50 நிமிடமோ பேச இருக்கிறோம். ஆனால் அன்றைக்கு.
பேரவையில் 9 நாட்கள் அதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 4.45

சட்ட மேலவையிலே 14 நாட்கள் விவாதித்திருக்கிறார்கள்.
அப்படி வாதாடுகிறபோது அன்றைக்கு பேரறிஞர் அண்ணா
அவர்கள் இங்கே பேசுகிறபோது, வாதிடுகிறபோது, பலமுறை
அந்த சட்டத்தை விவாதித்த அந்த 9 நாட்களிலும், தினந்
தோறும் அண்ணாவும், அவர்களுடைய சட்டமன்ற உறுப்
பினர்களும் வெளி நடப்பு செய்திருக்கிறார்கள். இது
உச்சவரம்பு அல்ல, இது மிச்ச வரம்பு, ஆகவே எதிர்க்கி
றோம் என்று சொன்னார்கள். நான் முதலிலே சொன்னதைப்
போல பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த உணர்
வுகளை, புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள்
செய்யவேண்டுமென்று நினைத்தவைகளை இன்றைக்கு மாண்பு
மிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் செய்யவேண்டு
மென்பதற்காகத்தான் இதைக்கொண்டுவந்து நிறைவேற்று
கிறார்கள் என்று இங்கே சொல்கிறபோது, நான் . நாடாளு
மன்றத்திலே இருக்கிறபோதும், மற்ற மற்ற புத்தகங்களை
படிக்கிறபோதும் சரி, நிலச் சீர்திருத்தத்திருத்த சட்டங்
களைப் பொறுத்தவரையில், உத்திரப் பிரதேச முதலமைச்
சராக திரு. சரண்சிங் அவர்கள் இருந்தபோதுதான் அதிகமாகக்
கொண்டுவந்தார்கள். ஆனால் இந்தச் சட்டமுன் வடிவு
இங்கே நிறைவேறி, அதற்குக் குடியரசுத் தலைவர் அவர்கள்
ஒப்புதல் கொடுத்துவிட்டால், இந்தியாவிலேயே ஒரு சிறந்த
சட்டம் இதுவாகத்தான் இருக்கும், அதைக் கொண்டுவந்த
புரட்சித் தலைவிக்கு இந்தியா புராவும் பாராட்டுரை அளிக்கும்
என்ற அளவில் கூறி, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்து
வதில் . மகிழ்ச்சியோடு என் முன்னுரையை நான் முடித்து
வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டு தமிழ்
நாடு நிலச் சீர்திருத்தங்கள், நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ண
யித்தல் சட்டத்திற்கு, மேலும் ஒரு திருத்தம் கொண்டுவரப்
பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை

[1991 அக்டோபர் 3

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அறிமுகப் படுத்திய நேரத்தில் இந்தச் சட்டம் காமராஜர் அவர்
கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1961ஆம் ஆண்டு
இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள்.
காமராஜர் காலத்தில்தான் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம்
முதன்முறையாக இங்கே நிறைவேற்றப்பட்டது. காங்கிரஸ்
கட்சியினுடைய கொள்கையாக லட்சியமாக இது இருக்கிறது
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கோடிட்டுக்
காட்டினார்கள். காந்திஜியினுடைய நிர்மாணத் திட்டங்களில்
ஒன்றாக நிலச் சீர்திருத்தம் இருந்திருக்கிறது என்று சொன்
னார்கள்.

1930ஆம் ஆண்டு கராச்சி மாநாட்டில் Land to the tiller
உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற தீர்
மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே சில பேரிடத்திலே
நிலம் குவியக் கூடாது, பிரபுத்துவம் வந்துவிடக் கூடாது
என்ற எண்ணத்தில் 1961 ஆம் ஆண்டு காமராஜர் முதல்
அமைச்சராக இருந்தபோது, இந்தச் சட்டம் இங்கே நிறை
வேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல நல்ல பல சோஷலிசத்
திட்டங்களும் இந்தப் பேரவையில் காங்கிரஸ் ஆட்சியாலே
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிலவுடைமையைப் பொறுத்த
வரையில், Cultivating Tenants' Protection Act.
இந்த அவையில் நிறைவேற்றப்பட்டது. கிராமப் புற விவ
சாயிகள் கடன் சுமையைக் குறைக்கவேண்டுமென்று நோக்கத்
தோடு, கடன் நிவாரணச் சட்டம், 1937ஆம் ஆண்டு காங்
கிரஸ் ஆட்சியால் கொண்டுவரப்பட்டது. அதேபோல
Estates Abolition Act, Zamindari Abolition Act.
எல்லாம் காங்கிரஸ் ஆட்சியால்தான் நிறைவேற்றப்பட்டன.
அமைச்சர் அவர்கள் ஆரம்பித்தபோது, எதைச் சொல்ல
வந்தாரோ தெரியவில்லை, நண்பர்களுக்கு கோபம் கூட வந்தது.
அதற்கு அவசியம் இல்லை. காங்கிரஸ் கட்சியில் பணக்காரர்
கள் இருந்தார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்,
மறுக்கவில்லை. சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்கு
தலைமை தாங்கிய கட்சி என்ற முறையில், காங்கிரஸ் கட்சி
பலரையும் ஈர்த்திருக்கிறது. மகாத்மா காந்தியினுடைய
தலைமை, ஜவஹர்லால் நேரு அவர்களின் கவர்ச்சிகரமான
தலைமை, காங்கிரஸ் கட்சிக்கு பல்வேறு தரப்பாரையும்
ஈர்த்தது என்பதை மறுக்கமுடியாது. ஆனால் காங்கிரஸ்
கட்சியிலே யார் இருந்திருந்தாலும் அவர்களாலே காங்
கிரஸ் கட்சியின் லட்சியத்திற்கு, கொள்கைக்குக் குறுக்கே
நிற்க முடிந்ததில்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்த அவையில் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் நிறை
வேற்றப்பட்டது என்று சொன்னால், வருவாய்த்துறை அமைச்
சருக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் தீர்
மானத்தை முன் மொழிந்தவர், ஜமீன்தார் சுப்பராயன்



1991 அக்டோபர் 3]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அவர்கள்தான். அவர் ஜமீன்தாராக இருந்த காரணத்தாலே அந்தச் சட்டத்திற்கு குறுக்கே நிற்கமுடியவில்லை. அதேபோல, 1969—70 லே மேலும் பல புரட்சிகரமான திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்று இந்திரா காந்தி அவர்கள் அன்றையதினம் பல சட்டங்களை இந்த நாட்டுக்கு அறிமுகப் படுத்தினார்கள்.

பிற்பகல் 4.50

வங்கிகளை தேசியமயமாக்குவேன், மன்னர் மானியத்தை ஒழிப்பேன் என்று சொன்னார்கள். அப்போது கேட்டார்கள், மன்னர் மானியத்தை இந்திரா காந்தி ஒழிக்கப் போகிறாரா? தேர்தலிலே வாக்குகள் வாங்குவதற்காக இந்திரா காந்தியினுடைய வெறும் வாய்ச் சவடால் என்று சொன்னார்கள்.

இந்திரா காந்தி காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே பரோடா மகராஜா இருக்கிறார், கெய்க்வார்ட் இருக்கிறார், அவர்தான் கன்கார்ட் ஆஃப் பிரின்சஸ் களுடைய தலைவர், அவரைக் காரியக் கமிட்டியிலே வைத்துக்கொண்டு மன்னர் மானயத்தை ஒழிப்பது என்பது நடைபெறக் கூடிய காரியம் அல்ல என்று சொன்னார்கள். அவர் காரியக் கமிட்டியிலே இருந்த அதே நேரத்தில் மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டதை யாரும் மறந்துவிட முடியாது.

அதே போல 1970 ஆம் ஆண்டு இந்திரா காந்தி சொன்ன தற்கிணங்க பிளானிங் கமிஷன் தாக்கீது அனுப்பியது. எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியது. புதிதாக நிலச்சீர்திருத்தச் சட்டம், நில உச்ச வரம்பு நிர்ணயிக்கும் சட்டம் கொண்டுவர வேண்டும், ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களில் ஓட்டைகள இருந்தால் அவைகள் அடைக்கப்பட வேண்டும், ஏற்கனவே உச்சவரம்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அதைக் குறைக்க வேண்டும் என்று தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இங்கே 1970ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராக அன்றைய தினம் குறைத்திருக்கிறார்கள். அன்றைய தினம், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பேசிய பலரும் 1960-61 லே இதிலே இருக்கின்ற பல குறைபாடுகளையும் சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் பேசியதை அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். கருநாணாநிதியும் நிறைய பேசியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பேசுவார்கள் என்று தெரிந்

திருந்தால் அதையெல்லாம் நானும் எடுத்து வைத்திருப்பேன். இருந்தாலும் நினைவிலே இருந்து நான் சொல்லுகிறேன். அவர் சொன்னார் பல நில மாற்றங்கள் நடைபெற்றுவிட்டன. எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசி, உங்களிடம் நிலம் இருந்தால் விற்றுவிடு அல்லது மாற்றிவிடு என்று சொல்லி ஒப்படை எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. எனவே இதிலே ஒரு பயனும் வரப்போவதில்லை. காங்கிரஸ்காரர்கள் மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கப் போகிறார்கள் என்று அன்றைய தினம் கருணாநிதி பேசியிருக்கிறார். அண்ணா அவர்கள் ''உச்ச வரம்பு அல்ல, மிச்ச வரம்பு'' என்று பேசியிருக்கிறார். உண்மைதான். அண்ணாவை நாம் விட்டு விடுவோம். ஏனென்றால் அவர் பிறகு இல்லை. ஆனால் கருணாநிதி முதலமைச்சராக இருந்த நேரத்திலேதான் சட்டத் திருத்தம் வந்தது. 30-ல் இருந்து 15 ஆக ஆக்குகிறார். இந்தச் சட்டத்தில் ஓட்டைகள் இருக்கின்றன என்று அவருக்கும் தெரியும், ஏன் அந்த ஓட்டைகளை அடைப்பதற்கு கருணாநிதி அன்றைய தினமே முயற்சிகளை மேற்கொள்ளவில்லை? ஏதோ கருணாநிதி சபையிலே இல்லை என்று பேசுகிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். 1990 ஆம் ஆண்டு இதே சட்டசபையில் இதே சட்டத் திருத்தம் வைக்கப்பட்ட நேரத்தில் கருணாநிதியை வைத்துக் கொண்டே நான் கேட்டேன். உங்களுக்குத் தெரியாதா? தெரியுமே, நீங்களே பேசியிருக்கிறீர்கள் ஏன் அதை அடைக்க அன்றைய தினம் முயற்சிக்கவில்லை? 1960 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டச் சட்டம் 1961-ல் நிறைவேறுகிறது. 9 ஆண்டுக்குள்ளாக ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே அதிலே ஓட்டைகள் இருக்குமானால் அதை அடைக்க அன்றைய தினமே முயற்சிகள் மேற்கொண்டிருக்க வேண்டும். ஏன் முயற்சிகள் மேற்கொள்ளவில்லை என்று அன்றைய தினமே நான் கேட்டேன். இன்றைய தினம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்ட திருத்தத்தை நான் வரவேற்கிறேன். நான் நிறைய பேசி அதற்கு ஒன்றுமே சொல்லாமல் பேசிவிட்டேன் என்று சொல்லிவிடக் கூடாது. ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். 1958-லே இருந்து 1960 வரையிலே இருக்கிற காலக் கட்டத்திலே ஏற்பட்ட எந்த நில மாற்றங்களும் செல்லுபடியாகாது என்று இந்தச் சட்டம் சொல்லுகிறது. அதற்குக் குறிப்பான காரணம் எதையும் அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. சட்டமுன் வடிவில் 'ஆப்ஜெக்டிலே', ஏன் அந்தக் குறிப்பிட்டக் காலத்திலே, அதாவது 1958-ல் இருந்து 1960 வரை ஏற்பட்ட மாற்றங்கள் ஏன் செல்லுபடியாகாது என்று சொல்லப்படவில்லை. ஆனால் ஓரளவிற்கு யூகமே, அந்தக் காலகட்டத்திலே உச்சவரம்பு பற்றி வெளியே வந்துவிட்டது.





யாரோ பேசினார்கள் என்று அதைத்தான் கருணாநிதியால் சொல்ல முடிந்தது. அன்றைக்குப் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வி. கே. கோதண்டராமன் சொல்லியிருக்கிறார். 1958 ஆம் ஆண்டே அதுபற்றி பேசத் தொடங்கிவிட்டார்கள், நிலச் சீர்திருத்தம் வரப்போகிறது என்று ஒரு பேச்சைப் பேசத் தொடங்கிவிட்டார்கள் என்று சொன்னார். அதே போன்று இன்னுமொருவர் பேசியிருக்கிறார். 1952 ஆம் ஆண்டிலேயிருந்து அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவைகளையெல்லாம் அனுபவத்திலே கருத்திலே எடுத்துக் கொண்டு அன்றைய தினம் செய்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யவில்லை. 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு பல திருத்தங்களை கருணாநிதி கொண்டு வந்திருக்கிறார். 1969 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை அவர்தான் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அவர் பல திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார். அவர் காலத்தில் அவர் என்ன செய்தார்? ஏன் அந்த ஓட்டைகள் அடைக்க அவர் முயற்சிக்கவில்லை? அதிலே நிலம் கிடைக்குமானால் அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு ஏன் முயற்சிகளை அவர் மேற்கொள்ளவில்லை என்று நான் கேட்டபோது, சென்ற முறை அவர் பேசியபோது ஒரு வார்த்தைகூட பதில் அளித்திருப்பதாக எனக்கு நினைவில்லை. அதற்குப் பதில் இருக்குமானால் நண்பர்கள் சுட்டிக்காட்டினால் நான் உள்ளபடியே மிகவும் மகிழ்ச்சியடைவேன். நான் இவ்வளவும் சொல்வதற்குக் காரணம் இந்தச் சட்டத்திருத்ததிலே ஓட்டைகள் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான். 1980 ஆம் ஆண்டு ஏற்கனவே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் வருவாய்த் துறை அமைச்சராக இருந்து இதே பேரவையிலே இதே சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார். அதே போல 1990 ஆம் ஆண்டு கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே கூட அந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் முதலமைச்சர் என்கிற முறையிலே தானே அந்தச் சட்டத் திருத்தத்தை அறிமுகப்படுத்தி இந்த அவையிலே நிறைவேற்றி இருக்கிறார். அந்த 2 சட்ட முன்வடிவுகளும் திரும்பத் திரும்ப நம்மிடம் வந்து இருக்கின்றன. நான் அப்போதே, கருணாநிதி இருக்கும் போதே சொன்னேன். அவசர கோலத்திலே தயாரித்து இருக்கிறார்கள் என்று சொன்னேன். இந்த சட்டத்திலே இருக்கிற பல சொற்கள் யூகிக்க வேண்டி இருக்கிறது, அந்த சொற்களிலே என்ன எழுத்துக்கள் என்று யூகித்து பிறகு சொற்களை யூகிக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் சொற்கள் இன்னதாகத்தான் இருக்க வேண்டும் என்று சொற்களை யூகித்துவிட்டு பிறகு எழுத்துக்கள் என்னவாக இருக்க வேண்டுமென்று யூகிக்க வேண்டி இருக்கிறது. எனவே நீங்கள் போதிய கவனம் அதிலே செலுத்தவில்லை என்று நான்

கருதுகிறேன் என்று சொன்னேன். என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், அதை நான் தெளிவாகக் குறிப்பிட்டேன்.

பிற்பகல் 4-55

ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு 4 கட்டங்கள் இருக்கின்றன. ஒன்று '' Gathering Information '' சட்டத்தை யார் எழுதுகிறார்களோ அவர்கள் குறிப்பிட்ட அமைச்சரகத்திலே இருந்து போதிய தகவல்களை முதலிலே சேகரிக்க வேண்டும். அந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலமாக, அந்தச் சட்ட முன்வடிவை கொண்டுவருவதன் மூலமாக எதை நிறைவேற்ற வேண்டும் என்று அந்த அமைச்சரகம் தெளிவாக முதலிலே புரிந்துகொள்ள வேண்டும் அடுத்து 'Intellectual Stage' அந்தக் கட்டத்திலே பல விஷயங்களையும் சேர்க்க வேண்டும். இதை நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதற்கு எது தடையாக இருக்கக்கூடும்? இதற்கு முன்னால் இருக்கக்கூடிய அனுபவம் என்ன? இதற்கு முன்னால் ஏதாவது case law இருந்தால் அந்த case law எதற்கெல்லாம் இடையூறாக இருந்திருக்கிறது என்பதையெல்லாம் அவர்கள் பார்த்து இருக்கவேண்டும்.

மூன்றாவது 'creative stage' drafting stage ' அந்த drafting stage ' -லே முதலிலே கிடைத்த தகவல்கள், இரண்டாவது அவர்களாக சேகரித்த புதிய தகவல்கள், அதோடு சேர்த்து இவர்களுக்கு கிடைத்து இருக்கிற புதிய அனுபவங்கள், சட்ட நிலை இவை அனைத்தையும் கொண்டு அதை உருவாக்கி இருக்க வேண்டும்.

கடைசியாக 'Technical Stage' அதிலே தான் முக்கியமான பல வேலைகள் இருக்கின்றன. எழுதியெல்லாம் கொடுத்ததற்குப் பின்னாலே கொஞ்சம் என்ஜினியரிங் வேலை செய்ய வேண்டும். எந்தெந்த சொற்றொடர்கள் தேவை இல்லையோ அவைகளை எல்லாம் எடுத்து விடலாம். எந்தெந்த சொற்றொடர்களை புதிதாக சேர்ப்பது, எத்தனையையும் சேர்த்துவிட்டு கொஞ்சம் எம்பிராய்டரி வேலையும் செய்யவேண்டும். கொஞ்சம் நகாசு வேலையும் வேண்டும். அப்போதுதான் ஒரு சட்டம் முழுமையான சட்டமாக இருக்கமுடியும். இந்த சட்ட முன்வடிவிலே நான் இப்போது பேசுகிற சட்ட முன்வடிவை சொல்லவில்லை. 1990 ஆம் ஆண்டு பேசியபோதே சொன்னேன். அதே போன்று எல்லா முன் ஏற்பாடுகளையும் முறையாகச் செய்து கொண்டுவந்த சட்ட முன்வடிவாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று சொன்னேன். இப்போது அதே சட்ட முன்வடிவு நமக்கு முன்னாலே வருகிறது. அதையே ஜனாதிபதி



திருப்பி அனுப்பி இருக்கிறார். அதிலே அவர் என்ன சொல்கிறார்? 23 (ஏ) (5) அதிலே இருக்கிற ஒரு பகுதியை திருத்துங்கள். 15-ஐ 30 ஆக ஆக்கி இருக்கிறார்கள். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்பதை 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆக உயர்த்தி இருக்கிறார்கள். அதை திருத்தி மீண்டும் அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் இப்போது என்ன செய்து இருக்கிறார் என்று சொன்னால் அந்த 5-வது கிளாஸ்லை அப்படியே எடுத்துவிட்டார். அந்த 5-வது கிளாஸ் இருக்குமேயானால், பொருள் என்னவாகும் என்று சொன்னால் 1960 ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் அல்லது 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் தான் உச்ச வரம்பு என்று வந்து இருக்கும் அதை மாற்றி இருக்கிறார். அதிலே தவறு கிடையாது அதை மாற்றத்தான் வேண்டும். திடீரென்று 30 ஏன் 60 ஆக வேண்டும்? 60 ஆகக் கூடாது. அப்படி ஏமாற்றி இருந்தால் அவர்கள் அதிலே நிலம் பெற வேண்டும் என்கிற பொருள் கிடையாது. 30க்கு குறைப்பதிலே தவறு கிடையாது. அதோடு நிற்காமல் இந்த சட்ட முன்வடிவில் பல குறைகள் இருந்தன. உதாரணமாக ஃபாமிலி டெஃபனிஷன் இல்லை அதற்கு, ஒரு குடும்பம் என்றால் என்ன என்பது அன்றைய தினம் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இப்போது வரையறுத்து இருக்கிறார்களா என்றால், இப்பவும் வரையறுக்கவில்லை; வரையறுக்காதது மட்டுமல்ல, இன்னும் 2 உட்பிரிவுகளை இன்றைய தினம் நீக்கி இருக்கிறார்கள். கருணாநிதி கொண்டுவந்த சட்ட முன்வடிவிலே அந்த இரண்டு முக்கியமான உட்பிரிவுகள் கிளாஸ் 3 மற்றும் 4. கிளாஸ் 3 என்ன சொல்கிறது என்றால், குடும்பத்திலே ஏற்பட்டு இருக்கிற பாகப் பிரிவினை செல்லுபடி ஆகும் என்று சொல்கிறது. 1958-லே இருந்து 1960-க்குள்ளே இருக்கிற காலக் கட்டத்திலே ஏதாவது பாகப்பிரிவினை குடும்பத்திற்குள்ளும் நடைபெற்று இருக்குமானால் அதைக் கருத்திலே கொண்டு அவர்களுக்கு விலக்கு அளித்துவிடலாம் என்று சட்டமுன்வடிவு சொல்கிறது. அதோடு நிற்காமல், கிளாஸ் 4 என்ன சொல்கிறது என்றால், உண்மையாகவே உழுபவர்களுக்கு நிலம் மாற்றம் செய்யுப்பட்டு இருக்குமேயானால். அவர்ளுக்கு நிச்சயமாக அந்த நிலம் போய் சேர்ந்து இருக்குமேயானால், அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கலாம். இத்தனைக்கும் மேலாக, நிச்சயமாகவே நம்பி, இந்த நிலத்திலே கோளாறு கிடையாது; இது உச்சவரம்புக்கு உட்பட்ட நிலம் அல்ல என்று தெரிந்து கொண்டு—ஏனென்றால் 1960-க்கு முன்னாலே யாருக்கும் நில உச்சவரம்பு வரப்போகிறது; உச்ச வரம்புக்கு மேலே இருக்கிற மிச்சவரம்பு என்று யாருக்கும் தெரியாது. எனவே அவர்கள் நன்னம்பிக்கையிலே வாங்கி இருக்கலாம். அப்படி நன்னம்பிக்கையிலே வாங்கியிருந்தால் அவர்களுக்கு விதி விலக்கு உண்டு என்று கருணாநிதியினுடைய சட்டத் திருத்தம் சொல்கிறது. கிளாஸ் 3, 4 மற்றும் 5-இந்த. மூன்றையும்

இப்பொழுது எடுத்துவிட்டார்கள். It has been deleted
இப்போது புதிதாக வந்து இருக்கிற சட்டத் திருத்தத்திலே
என்ன வந்து இருக்கிறது என்று சொன்னால், புதிதாக வந்து
இருக்கிற சட்டத் திருத்தமும் சரி, கருணாநிதி சொன்ன
சட்டத் திருத்தத்தில் முக்கியமான பகுதிகள் 23-ன்படி, 23(எ)-
படி 1958 ஜனவரியிலிருந்து 1960 ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி
வரையில்—ஏற்கனவே 1960 ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதிக்கு
மேலாக 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேலாக யாரும் வைத்
திருக்கக்கூடாது. உச்சவரம்புக்கு மேற்பட்ட இடம். அதை
போல கருதி இரண்டு வருடம் 3 மாதம் அல்லது 4 மாதக்
காலத்தில் யாரிடத்தில் அதிக நிலம் இருந்து அவர்கள்
விற்றிருந்தாலும், அது செல்லுபடியாகாது. இதை 23 (ஏ)
சொல்கிறது.

பிற்பகல் 5— 00

இதிலே அந்தக் காலக்கட்டத்தில் 1960 ஏப்ரல் 6-லிருந்து
From the commencement of the Act to the Notified date-Sec-
tion 22 takes care After the notified date- Section 23 takes care Now
the present section 23A from clauses 1 to 2.

மூன்றிலிருந்து 5 வரை என்று இருந்தது. இப்போது இரண்
டாக்கிவிட்டார்கள். இரண்டும் என்ன சொல்கிறது
என்றால் ............
It travels beyond the parent Act. It travels beyond the commence-
ment of the parent Act.

அது எந்த அளவுக்கு செல்லுபடியாகும் என்று நாம் பார்க்க
வேண்டும். ஏனென்றால் சட்டதிருத்தம் செல்லுபடியாக வேண்டு
மென்று நான் விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு நிறை
வேறி சட்டமாக வர வேண்டுமென்று விரும்புகிறோம். எனவே
சட்டமாக வருவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை
பார்த்துதான் செய்ய வேண்டும் அதிலே மீண்டும் கோளாறு
கள் குறைபாடுகள் இருந்தது என்று சொல்லி கவர்னர் திருப்பி
யனுப்புவதோ ஜனாதிபதிக்கு போனதற்கு பின்னாலே திருப்பி
யனுப்புவதோ அல்லது ஜனாதிபதியைத் தாண்டி சென்றதற்குப்
பின்னால் கோட் திருப்பியனுப்புவதோ இல்லாமல் பார்த்துக்
கொள்ள வேண்டும்.

இதிலே கஷ்டம் என்னவென்றால் 33 ஆண்டுகளுக்கு முன்
னாலே நடைபெற்ற ஒரு சேல் ஒரு விற்பனை அது செல்லுபடி
யாகாது என்று சொன்னால் 'ஆட்வரஸ பொசஷன்' வராதா
என்று பார்க்க வேண்டும். அதோடு இல்லாமல் 1989 ஆம்
ஆண்டு ஒரு சென்ட்ரல் ஆக்ட் வந்திருக்கிறது. சட்டத்துறை
அமைச்சர் அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்.
(Binami Transfers Act.) என்று ராஜீவ் காந்தி



அவர்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது
உள்ளபடியே அது பினாமி என்று தெரிந்தால் அந்தச்
சட்டத்தின் அடிப்படையில் அதை கையகப்படுத்த முடியும்
அல்லது யாருக்கு அவர்கள் மாற்றி இருக்கிறார்களோ,
அவர்களுக்கு அது போய் சேரும்படியாக செய்ய முடியும்.
எனவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டு, இந்த சட்ட
திருத்தம் நல்லபடியாக நிறைவேற அமைச்சர் அவர்கள் எல்லா
வற்றையும் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று நான் பணி
வோடு தெரிவிக்க விரும்புகிறேன். இரண்டே இரண்டு
கேஸ் லா மட்டும் உதாரணமாக—

Section 23-E, Clause 2

The draft statement prepared under sub-section I shall be dealt with
in the same manner as a draft statement prepared under Sec. I of
Sec. 10 on the provisions of this Act shall apply accordingly...."
என்று இருக்கிறது. இதனுடைய நிலை என்னவென்றால் அந்தத்
தேதியில் 1958 ஜனவரியிலிருந்து 1960 ஏப்ரல் வரையில்
இருந்த நிலைமை என்னவோ அப்படி ஏற்றுக்கொள்ளவேண்
டும். அந்தக் குடும்பத்தில் இருந்த உறுப்பினர்களை ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

1972—Rajagopala Pillai—vs—petitioner

State of Tamil Nadu rep. by the Collector of South Arcot and
another

ஜஸ்டிஸ கைலாசம் ஜட்ஜ்மெண்ட்படி செல்லுபடியாகுமா,
அப்படி கொண்டு வர முடியுமா என்று பார்த்தால் எனக்கு
சந்தேகம் வருகிறது.

"..On the date of commencement of the Act—
Land Ceiling Act.."

இதே ஆக்டில் வருகிறது.

"According to the definitions daughter would be a member of his
family, but on the notified date according to the definition she will not
be a member of the family by the date she becomes married...."
சட்டம் அறிமுகப்படுத்தப்படுகிற நாளில் அந்தப் பெண் அந்தக்
குடும்பத்ினுடைய உறுப்பினர். பிறகு திருமணமாகி அந்தப்
பெண் வெளியே சென்று விட்டால்.

"....She is not a member of that family. so, from the date of the
commencement till the date of notification, she is not a member."
If that can be so, from 1958 January

1958 ஜனவரியிலிருந்து 1960 ஏப்ரல் வரை எவ்வளவோ நடை பெற்று இருக்கலாம். எனவே, அந்தச் சட்டத்தில் ஏதாவது கோளாறு வந்துவிடுமா என்று பார்க்க வேண்டும்.

Section 7, 8 and 10 (2) (a) ——

பற்றிதான் இப்போது படித்தேன். அதுதான் ஜட்ஜ்மெண்ட் அதைப்போல இன்னொரு ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. அதிலே யும் இது செல்லுபடியாகாது என்பதற்கு ஒரு வாதம் சொல் லப்படுகிறது.

Tamil Nadu Land Reforms Act, 1961 Sect.ons 7, 10 and 22.
"sale Deed executeo prior to the commencement of the Act——
Registration of the Deed after the Act came into effect ——

இராமபிரசாத் ராவ் அவர்களின் ஜட்ஜ்மெண்ட்.

"A. Balasubramaniam — Petitioner -vs- The Authorised Officer, Land Reforms

The order of the Tribunal to be set aside on two grounds. Firstly sale Deeds were executed prior to the date of commencement of the ceiling Act. Secondly, the superceding of the Registration of such sale Deed after the Act came in to force would be irrelevant because such registration would make the instrument effective from the date of its execution. Again there is no attack on the alienation on the ground that there is lack of bonafides."

பிற்பகல் 5.05

என்று அவர் முடிக்கிறார். இது இரண்டும் நமக்கு எதிரான வாதங்கள் என்றாலும்கூட நமக்கு சாதகமான ஒரு வழக்கைச் சொல்லவேண்டும் ஏன் என்றால் எதிரானது மட்டுமே சொல்லி விட்டு அமர்ந்துவிட்டார் என்ற குற்றச்சாட்டு வந்துவிடக் கூடாது என்பதால் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட்டிலே,

Justice Krishna Iyer Judgement in the case of Authorised Officer, Thanjavur -vs- S. Naganatha Iyer

அதிலே கொஞ்சம் ஒளிக் கீற்றுகள் தென்படுகின்றன. திரு. இராமநாதன் அவர்கள் சிரிப்பதை பார்த்தால், ஒரு வேளை உறவினராக இருப்பாரோ என்று நினைக்கிறேன்.



A.I.R. 1979 Supreme Court Page 1489 para 3" The Legislature in its realistic anxiety and pragmatic wisdom demarcated a lethals tole vix the period between the two dates stated above when all landlords having land in excess of the ceiling would desparately salvage their surplus by resorting to devies some bonofide some not but all having the effect frustraly the legislative aspects of freezing holdings as on the date of the commencment of the Act and ceasing the surplus in terms of the Act for eventual equitable distribution after the payment of statutory compensation...."

என்று ஒரு இடத்திலே சொல்லியிருந்தாலும் கூட, செக்‌ஷன் 22 என்பது வெறும் பேப்பர் டைகர் அல்ல, அது உங்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று பின்னாலே அவர் சொல்கிறார்.

"....May be in a few cases the owner has real interest. But why sell only on the eve of land legislation? why execute Deeds? Though for good purpose only when the Bills fixing seals round the corner. By and large the strategies of extrication of holdings from the arm of the law is the reason that prompts sudden affection for making gifts, sudden realsation of debts due; sudden awareness of family necessity. The Legislature astute enough cotion not to be outwitted In its objective, puts a blanket ban on trsnsfers which in effect defeat its provision, This may cause hardship to some, but every cause claims martyrs Individual trauma is inevitable while ushering in a new economic order. This is the rationale of section 22 of the Act...."

என்று செக்‌ஷன் 22 ஐ இன்னும் கொஞ்சம் ஆழமாக நீதிபதிகள் பார்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.

கடைசியாக நான் அமைச்சரிடத்திலே சொல்லிகொள்வது, யாரை இந்தக் கமிட்டியிலே போடுவது என்பதைப் பொறுத்த வரையில், இரண்டு சட்டங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது.

செக்‌ஷன் 23(4) அதிலே "1. An officer of the Revenue Department not below the rank of a Deputy Collector, 2. Two landless Agricultural labourers 3. Social workers."

இவர்கள் எல்லாம் சேர்ந்து, இது உள்ளபடியே நியாயமான
மாற்றமா பினாமி மாற்றமா என்று நாளையதினம் திர்ண
யிக்கப்போகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல்

".............such other persons.......................என்று"
சொல்லியிருக்கிறார்கள். இதற்கு என்ன குவாலிபிகேசன் என்று
சொல்லப்படவில்லை. நான் கேட்டுக் கொள்வதெல்லாம்," மக்க
ளாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.
எந்தப் பகுதியாக இருந்தாலும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகளை இந்தக் கமிட்டியிலே கண்டிப்பாக
போடவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோல், நியாயமாக, தெரியாமல் வாங்கியவர்களுக்கு
அது உண்மையான நிலமாற்றமே தவிர வேறு தவறு இல்லை
யாது என்று நம்பி வாங்கியவர்கள் பல பேர்கள் இருப்பார்
கள். அவர்களை இந்தச் சட்டம் பாதிக்காமல் பார்த்துக்
கொள்ளவேண்டும். இதைத் தவிர ஒரு சிலர் கைகளிலே
நிலம் குவிவதை நிச்சயமாக காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.
எனவே இந்தச்சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் வருவாய்த்துறை அமைச்சர்
அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற நிலச் சீர்திருத்த
சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான்
வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். முழுக்க முழுக்க
இந்தச் சட்டத்தை வரவேற்பதிலே நான் மிகவும் மகிழ்ச்சி
அடைகிறேன். காரணம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தொடர்ந்து பினாமி நிலங்களைக் கையகப்படுத்த வேண்டும்
என்பதற்காக தமிழகத்திலே, பல்வேறு இயக்கங்களை நடத்தி
இருக்கிறது. பல்வேறு தொழிலாளர்கள் சிறை சென்றிருக்கி
றார்கள். இந்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும்
என்பதற்காக எங்களைக் கூட அன்றைதினம் இருந்த
காங்கிரஸ் அரசு துப்பாக்கியால் சுட்டார்கள்.** (குறுக்கீடுகள்)**
(குறுக்கீடுகள்)**

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.







திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : ஏதோ பேச
வேண்டுமென்ற நோக்கத்திலே இப்படி கடுமையாகச் சொல்கி
றார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்தச்
சட்டத்தைக் கொண்டு வந்ததே காங்கிரஸ். இந்தச் சட்டத்தை
நிறைவேற்றவேண்டுமென்பது தான் காங்கிரசினுடைய நோக்கம்.
ஆனால் எதையோ நினைத்துக்கொண்டு ** என்ற
சொல்லையும், அதனோடு ஒட்டிப்பேசியதையும் அவைக் குறிப்பி
லிருந்து அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த **
என்பது எல்லாம் நீங்கள் நிரூபிக்க வேண்டிய விஷயம்.
ஆதாரம் இருக்கவேண்டும். நீங்கள் பொதுவாகச் சொன்னீர்
கள். பாருங்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தச்சட்டத்
திற்காக நாங்கள் எதிர்த்தோம் என்பது மட்டும் இருக்கட்டும்.
மற்றவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதாவது
** என்பது
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் யாரையும் குற்றம் சாட்டவேண்டுமென்று
சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி
கொஞ்சம் இருங்கள், திரு. என். பன்னீர்செல்வம் அவர்கள்
பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, காங்கிரஸ் என்பது மக்களை வாழ
வைக்கவேண்டுமென்று சுதந்திரத்தை வாங்கியது. நாட்டை
காப்பாற்றியது. இன்று வரை மக்களை காப்பாற்றிக்கொண்டி
ருக்கிறது. (குறுக்கீடு) அதுபோன்று ஒரு ஒற்றையராக வருபவர்
கள் எல்லாம்—ஒற்றைக் கண்ணர்கள் இப்படிப் பேசுவதை சபை
கண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : நான் அவைக்
குறிப்பிலிருந்து நீக்கியாயிற்று. நீக்கினதற்கு பாயிண்ட் ஆப்
ஆர்டரா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப் பெற்றன.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது ஏதோ இன்றைக்கு இருக்கக் கூடிய சட்டப் பேரவையில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியை நான் சொல்லவில்லை. நான் * * * சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாயிற்று. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகு நீங்கள் அதையே உறுதிபடுத்துவதற்கு** என்று சொல்வதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதையும் நீக்கி ஆகிவிட்டது. இந்தச் சட்டத்திற்குள் வாருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நாட்டிலே இது போன்று மோசடிகளை அம்பலப் படுத்த வேண்டுமென்பதற்காக தேசத்தினுடைய நலனைக் கருதி குவிந்திருக்கின்ற பினாமி நிலங்களை கையகப்படுத்தி, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வினியோகிக்கவேண்டுமென்று போராடியதன் மூலமாகத்தான் தமிழகத்திலும், இந்தியாவிலும் எங்களுக்கு நிலப் பறிக்கொள்ளையர் என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். அதனுடைய பயனாக அன்றைய நேரத்தில் உணர முடியாதவர்கள், அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள். இந்த நேரத்தில் அதை வரவேற்கிறேன் என்று பேசுகிறபோது கூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது எங்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்போது 40 ஆண்டுகளுக்குப் பிறகாவது சிந்தித்து, திருந்திய பிறகே ஏற்றுக்கொள்கிறார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே எங்களுக்கு மகிழ்ச்சி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் நீக்கக்கூடாது. அன்றைக்கு நாங்கள் சொன்னோம் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கு ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று சொல்வதை— ஒவ்வொன்றையும் வரிக்கு வரி இந்த மாதிரி நீக்கக்கூடாது. அதை நீங்களே பேசலாம். உட்காருங்கள். இதிலே என்ன பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. இ. செல்வராஜ் இதிலே என்ன பாய்ண்ட் ஆப் ஆர்டர்?

திரு. இ. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது தேவையில்லை. அவர் சொன்னதற்கு நீங்கள் பதில் சொல்லலாம். நீங்கள் இன்னொரு குற்றச்சாட்டை பாயிண்ட் ஆப் ஆர்டராக சொல்லக் கூடாது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது 40 ஆண்டுகாலம் கழித்து சிந்திக்கத் துவங்கியிருக்கிறார்கள். திருந்தியிருக்கிறார்கள் என்று சொல்வது இதுவரை காங்கிரஸ் பேரியக்கம் 40 ஆண்டுகள் சிந்திக்காமல் இருந்தது இப்போது தான் சிந்திப்பது போல் அவர்கள் உணர்வை ஊட்டுகிறார்கள். அது தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும். தவறான ஒரு கருத்தை அவையில் எடுத்து வைக்கும். எனவே அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நீங்கள் மறுப்பு தெரிவித்துக் கொள்ளலாம். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 1961-ல் உழைப்பவனுக்கு நிலம் என்று 14000 பேர் சிறை சென்று, திருச்சி சிறையில் 4 பேர் @ இறந்தார்கள்.** அன்றையதினம் மரியாதைக்குரிய காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் நடந்ததா, இல்லையா என்பதை அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தம்புசாமி அவர்களே, அவர்கள் சிறைச்சாலைக்குள் இறந்தார்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்? ** என்று வராது. இறந்தார்கள் என்று வேண்டுமானால் மாற்றி கொள்ளுங்கள்,

திரு. வே. தம்புசாமி : அவர்கள் இறந்தார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

@ மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

[1991 அக்டோபர் 3

பிற்பகல் 5.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அதற்காக நாங்கள் சாதாரணமான தியாகங்
களைச் செய்து விடவில்லை. அந்தச் சட்டத்தின் மூலமாகத்
தான் தமிழகத்திலே அன்று மிகப்பெரிய எழுச்சியாக எழுந்து,
அன்றையதினம் 14 ஆயிரம் பேர் சிறை சென்றிருந்தோம்.
ஒருவர் அல்ல இருவர் அல்ல. 14 ஆயிரம் பேர் தமிழகத்திலே
நில உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்த்து சிறை சென்றிருந்
தோம் அதோடு மட்டுமல்ல மாண்புமிகு மரியாதைக்குரிய
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபோது கூட
சொன்னார்கள், மன்னர் மானிய ஒழிப்பு, பாங்குகளை தேசிய
மயமாக்குவது பற்றியெல்லாம் சொன்னார்கள். அன்றைய
தினம் கூட நான் சிறுவனாக இருந்தபோது, பாங்கிற்கு
முன்னால் மறியல் செய்த எனக்கு வயது போதவில்லை
என்பதற்காக பல்லாயிரக்கணக்கான தோழர்களோடு அனுமதிக்
காமல் தனிச் சிறையில் போட்டு வைத்தார்கள். 3 1/2 மாத
காலம் நான் 16 வயதினிலேயே தனிச் சிறையை
அனுபவித்தவன். ஏன் நான் இதை நினைவு படுத்துகிறேன்
என்று சொன்னால் இதுபோன்ற தேச நன்மைக்காக 16 வயதி
லிருந்து ஈடுபட்டவன் என்ற காரணத்தினால் உங்களுக்கு
நினைவு படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக அந்த
எழுச்சியின் காரணமாகத்தான் மரியாதைக்குரிய காமராசர்
அவர்கள் 30 ஸ்டேண்டர்டு ஏக்கர் நிலம் என்னும் சட்டத்
தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் மிச்ச நிலங்களை
காணோம். எடுக்கப்படவில்லை. விடுவிக்கவும்படவில்லை.
ஆனால் அதற்கு பின்னால் 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்
1 ஆம் தேதி முதல் 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம்
தேதி வரையில் பல லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு
ஸ்டாம்புகள் தான் வியாபாரம் நடந்தது. திருத்தி எழுதி
விடுவதற்கான வேலைகள் எல்லாம் நடந்தன. மேய்ச்சல்
நிலங்கள் என்ற பெயரால் பல்லாயிரக்கணக்கான நிலங்களை
பல்வேறு பெயர்களிலே எழுதி வைத்தார்கள். பினாமியாக
எழுதி வைத்தார்கள். கம்பு பண்ணைக்கு எழுதி வைத்தார்கள்.
கோழிப் பண்ணைக்கு எழுதி வைத்தார்கள். மாட்டுப்பண்ணைக்கு
எழுதி வைத்தார்கள். அதேபோல யார் யாரேல்லாம் உயிர்
விட்டிருந்தார்களோ அவர்களுடைய பெயராலே எல்லாம்
எழுதி வைத்தார்கள். வாக்காளர் பட்டியலை வைத்துக்
கொண்டு எழுதி வைத்தார்கள். அப்படிப்பட்ட நிலங்களை
இன்றைய தினம் கணக்கு எடுத்து பார்ப்போம் என்று சொன்
னால் பல லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஸ்டாம்புகள்
வியாபாரம் நடந்தது தெரியும்.





அதற்குப் பின்னாலும் 15 ஸ்டேண்டர்டு ஏக்கர் நிலம்
என்ற சட்டத்தை முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள்
கொண்டு வந்தார்கள். அதிலும் கூட நிலத்தை எடுக்க முடியாத
ஒரு சூழ்நிலை இருந்தது. இருந்த போதிலும் கூட நமது
முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள்
ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இந்த அவையிலே நிறை
வேற்றினார்கள். ஆனால் அந்தச் சட்டத்திற்கு மத்திய
அரசினுடைய அனுமதி கோருகிறபோதுதான், அனேகமாக
நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
குறிப்பிட்டது போல் அந்த 23(ஏ) பிரிவிலே ஏதோ திருத்தம்
செய்ய வேண்டும் என்று சொல்லி திரும்ப தமிழகத்திற்கு அனுப்பி
வைத்தார்கள். இன்றைய தினம் கூட நம்முடைய மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தை
மத்திய அரசினர் மனம் உவந்து ஏற்றுக்கொள்வார்களா
என்ற சந்தேகம் எனக்கிருக்கிறது. அதை முழுவதுமாக
நிறைவேற்றித்தருவார்களா என்பதே எனக்குச் சந்தேகமாக
இருக்கிறது. நிச்சயமாக இந்த அரசுக்கு இந்த சட்டத்தின்
மேல் நில உச்சவரம்பு எடுப்பதிலே நாங்கள் முழுமையான
ஆதரவு கொடுப்போம் ஆதாரங்களைக் கொடுப்போம்
நிலத்தைக் காட்டுவோம் அதற்கான முயற்சிகளிலே நாங்கள்
ஈடுபடுவோம்.

ஆனால் அதே நேரத்தில் அந்த நிலங்களை கண்டு
பிடிப்பதற்காக இங்கே ஒரு குழுவை கூட அமைப்பதாக
23(டி) யின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அதிலே
இருக்கக் கூடியவர்கள் சமூக நல ஊழியர்கள் 3 பேர்,
விவசாயத் தொழிலாளர்கள் அரிசனங்கள் உட்பட 2 பேர்,
அதிகாரிகள் ஒருவர், இதற்கு அரசு ஊழியர்களில் ஒருவரை
தலைவராகப் கூடப்போடலாம் என்ற யோசனை சொல்லப்
பட்டிருக்கிறது. ஆனால் சமூகநல ஊழியர்கள் 40 ஆண்டுக்
காலமாக பினாமி நிலங்களை எழுதி வைத்து எழுதி வைத்து
பழக்கப்பட்டவர்கள். இந்த நிலையிலே இன்றைக்கு
இருப்பவர்கள் அதை எளிதாக கண்டு பிடிப்பார்களா என்ற
சந்தேகம் எனக்கு இருக்கிறது. அதனால் எங்களைப்போன்ற
விவசாயத் தொழிலாளர்கள், அதிலே முழுவதுமாக ஈடுபட்டுக்
கொண்டிருக்கிற எங்களை அந்தக் குழுவிலே போடவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். நிலமற்ற விவசாயத்
தொழிலாளர்களை அந்தக் குழுவிலே போடவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர்
அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி
அவர்கள் பேசுகிறபோது எங்களைப் போன்ற விவசாயத்

தொழிலாளர்கள் என்று பேசினார். அவர் யாரைச் சொல்லுகிறார் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களை சொல்லுகிறார்களா அல்லது சட்டமன்ற உறுப்பினர்களைச் சொல்லுகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கேட்கிற விளக்கம் எங்களைப் போன்ற என்று சொல்லுகிறீர்களே, உங்கள் கட்சியில் உள்ள தங்களைப் போன்ற நண்பர்களா அல்லது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரையும் கருதிச் செல்லுகிறீர்களா என்று கேட்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி : எங்கள் கட்சியினரைத்தான் சொன்னேன். ஆகையினால் இந்த நிலங்களை கையகப்படுத்துவதற்கு முன்பாக முழுவதுமாக ரெவின்யூ அதிகாரிகளை அந்தப் பழைய ரெக்கார்டுகளை எடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். நிலப் பதுக்கல்காரர்களிலே மிகப்பெரிய பெருச்சாளிகள் எல்லாம் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அதிகாரிகளை விலைக்கு வாங்குவார்கள் எல்லாம் சமூக ஊழியர்களைக் கூட விலைக்கு வாங்குவார்கள். இன்றைய தினத்திலே இருக்கக்கூடிய அரசியல் கட்சி தலைவர்களையே விலைக்கு வாங்குவார்கள். அப்படிப்பட்ட நபர்கள் தான் 40 ஆண்டுகாலமாக ஆயிரக்கணக்கான நிலங்களை ஏக்கர் களை இன்றையதினம் தங்கள் கையிலே வைத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5.20

குறிப்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி தந்தால் தஞ்சாவூர் மாவட்டத்தில் நான் பெயர் சொல்ல தயாராக இருக்கிறேன். அநேகமாக இன்றைய தினத்திலே தஞ்சாவூர் மாவட்டத்திலே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி வாங்கிவிட்டுச் சொல்லலாம். என்னுடைய அனுமதியை வாங்கவில்லை. அனுமதி தந்தால் என்று நீங்களாகச் சொல்லிவிட்டால், அனுமதி கொடுத்தாயிற்று என்று அர்த்தம் அல்ல.

திரு. ஜி. பழனிசாமி : இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் அந்த நிலங்களை பினாமி நிலங்களில் இறங்கி அவற்றை கையகப்படுத்த வேண்டும், அரசுக்கு காட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தினோம். எங்கள் பேரிலே ஆயிரக்கணக்கானோர் மீது வழக்குகள் தொடரப்பட்டிருந்தது.

திரு. வெ. பழனிசாமி : தலைவர் அவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர்?

திரு. வெ. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நில மீட்பு கொள்ளைக்காரன் என்ற ஒரு பெயர் வந்ததாகச் சொல்கிறார்கள். இவர்களுடைய போராட்டமே, தனிப்பட்ட ஒருவருடைய........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அதைப்பற்றி பேசி முடித்துவிட்டு இப்போது பேசிக்கொண்டிருக்கும் விஷயமே வேறு. இதை நீங்கள் கடைசியிலே பேசி முடித்ததற்குப் பிறகு பேசலாம். அவர் பேச ஆரம்பிக்கும்போது பேசினதை இப்போது நீங்கள் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்புகிறீர்கள்.

திரு. வெ. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்களுடைய நிலத்திலே, சென்று, கட்சிக்காரர்களை வைத்து ஆக்கிரமிப்பு செய்வதை நிலம் மீட்சி போராட்டம் என்ற ஒரு பெயரைக் கொடுத்தார்கள். அதற்காகத்தான் அந்தப் பெயர் வந்திருக்கிறது. ஆகவே அரசு மூலமாக எடுப்பது என்பது வேறு. இவர்களாகச் சேர்ந்து கட்சித் தொண்டர்களை வைத்து நிலம் மீட்சி போராட்டம் என்று சில கொடிகளைக் கட்டி இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் அந்தப் பெயரைப் பெற்றார்கள் என்பதை நான் பேரவைத் தலைவர் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தனி நபர் நிலங்களிலே கொடிகளை நட்டு விநியோகிப்பதாக நான் சொல்லவில்லை. பினாமி பேராக சில விவசாயிகள் மீது, விவசாயத் தொழிலாளர் மீது நிலங்களை எழுதி வைத்துக்கொண்டு அதை முழுவதுமாக அறுவடைச் செய்கின்றபோது நெல் அளக்கல் என்று தங்களுடைய ஆட்களை வைத்து, சுந்தரப்பெருமாள் கோயிலிலே பழக்கடை என்ற இடத்தில், நூற்றுக்கணக்கான ஆட்களை வைத்து, அடியாட்களை வைத்துக்கொண்டு அந்த நிலங்களை அவர்கள் கையகப்படுத்தினார்கள். இன்றையதினம் வரை கூட அந்த நிலம் யார் பெயரில் இருக்கிறது என்று கூட தெரியவில்லை. பாம்பே என்கிறார்கள், கல்கட்டா என்கிறார்கள். டெல்லி என்கிறார்கள். இப்படி பல்வேறிடத்திலே--- சுந்தரபெருமாள் கோயிலில் இருக்கிறது. கபிஸ்தலத்தில் இருக்கிறது. அதே போன்று பூண்டியிலே இருக்கிறது. அதே போன்று உக்கடையிலே இருக்கிறது. இன்னும் சொன்னால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம். திரு. பழனிசாமி உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே,
பூண்டியிலே, இருக்கிறது, கபிஸ்தலத்தில் இருக்கிறது, சுந்தர
பெருமாள் கோவிலில்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்ன
அந்த இரண்டு ஊர் பேர்களைச் சொல்லவில்லை.
சரி சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே,
அவர் குறிப்பிட்ட ஒரு இடத்தினை ஏதோ ஒரு திட்டமிட்டுச்
சொல்கிறார். அப்படிப்பட்ட இடத்தில்
நிகழ்ச்சி நடக்கவில்லை. உதாரணத்திற்கு ஒன்று, அப்படிப்பட்ட
தெரிந்த வரையில் சொல்கிறேன். எனக்குத்
பட்ட நிலங்களும் இல்லை. பூண்டியிலே அப்படிப்
போராட்டம் இவர்கள் செய்யவும் அப்படிப்பட்ட நிலம் மீட்சி
ஏற்பாடு யாரையும் கொலை செய்யவும் இல்லை. அந்த ஒரு
செய்யவும் இல்லை. பூண்டி ** ** இல்லை. காலி
யும் கல்லூரிக்கு எழுதி வைத்து இன்று நிலங்கள் அத்தனை
கல்லூரி நடந்துக் கொண்டிருக்கிறது. சிறப்பான முறையில்
தலத்திலும்........... இரண்டாவது கபிஸ்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு ஊரைச்
சொன்னவுடன் நீங்கள் ஒரு பேரைச் சொல்லி அவர் இல்லை
என்று சொல்வது அவ்வளவு நல்லது அல்ல. அந்தப்
பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, உண்மைக்கு
மாறான தகவலை அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ்
சொன்னது போல அடிக்கடி பழனிசாமி அவர்களும் குமார
தாஸ் அவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டா
வது சுந்தரபெருமாள் கோயிலிலும் அல்லது கபிஸ்தலத்திலும்
அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கவில்லை. அவர்கள் அறுவடைச்
செய்கின்ற நிலத்திலே இவர்கள் அடி ஆட்களை போல் 100,
200 பேர்களை அழைத்துக்கொண்டு போய் தகராறு செய்த
தால் ஏற்பட்ட விளைவே தவிர எந்தவித விவகாரமும் அங்கு
நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற
பெற்றது.





திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அவைக்கு தவறான தகவலைத் தருகி
றோம் என்று சொல்லியே தவறான தகவல்களை மாண்புமிகு
காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கொடுத்துக்
கொண்டிருக்கிறார்கள். நாங்கள் உண்மையைப் பேசுகிறோம்.
இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டங்களுக்கு ஆதரவாக
பேசுகிறோம். அந்த பினாமி நிலங்களை கண்டுபிடிக்க
வேண்டுமென்று பேசுகிறோம். நான் இந்தச் சபையிலே
இரண்டாவது தடவையாகச் சொல்கிறேன். நிலத்தினுடைய
வட்டங்களை நான் தருகிறேன். நிலத்தினுடைய
சர்வே நம்பரைத் தருகிறேன். நிலத்தைக் காட்டுகிறேன். இந்த
அரசுக்கு ஆதரவாக நான் இருப்பேன் என்று இந்தச் சந்தர்ப்பத்
திலே அழுத்தமாகச் சொல்கிறேன். நான் முன்பே சொன்
னேன். பூண்டிலேயும் சொல்வேன். கோழிப்பண்ணை,
ஆட்டுப்பண்ணை, மாட்டுப்பண்ணை, பள்ளி இதெல்லாம் நிலங்
களை மோசடி பண்ணுவதற்காகவே எழுதி வைக்கப்பட்டன.
அது இந்த 58 லிருந்து 60 க்கு உள்ளாகத்தான் வரும். பள்ளிக்கு
எழுதி வைத்திருந்தாலும் வரும். எவ்வளவு பேருக்கு இலவச
மாகச் செய்கிறார்கள் என்பது வரும். யார் யாருக்கு இலவச
மாக சத்திரத்தில் சாப்பாடு போடுகிறார்கள் என்று வரும்
இதெல்லாம் அடங்கப்பட்டிருப்பது தான், இந்த நேரத்திலே
இந்த அரசு கொண்டு வந்திருக்கிற ஒரு நல்ல சட்டமாக
இது அமைந்திருக்கின்றது.

பிற்பகல் 5.25

ஆகவே இந்த சட்டத்தினுடைய ஓட்டையை அடைப்பதன்
மூலம் அமைகமாக இன்றையதினம் மத்தியில் இருக்கிற
அரசு காங்கிரஸ் கட்சி அரசு இதற்கு ஆதரவு கொடுக்குமா
என்ற ஒரு சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஏனென்று சொன்
னால் இங்கே இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பி
னர்கள் எல்லாம் தொடர்ந்து தன்னுடைய கட்சிக்காரர்
களிடத்தில் இருக்கிற நிலத்தை அவர்களே ஒத்துக்கொள்ளக்
கூடிய விதத்திலே விவாதங்கள் அமைந்து இருக்கின்றன.
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்
சமீபத்திலே பேசுகிறபோது சொன்னார்கள், உண்மையை
மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலங்களை
கண்டுபிடிக்கவேண்டும், இதிலே எவ்வளவு பெரிய சிக்கல்கள்
எல்லாம் இருக்கின்றன. இன்றைக்கு அரசு தயாராக
இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இதில்
தீவிரமாக பேசுகிறபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்
எதிர்த்துப் பேசுகிறார்கள். என்று சொன்னால் முழுமையாக
இருக்கக்கூடிய **என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து காங்கிரஸ்
கட்சியினர் இதை ஏன் எதிர்க்கிறார்கள். என்று மட்டும்
நீங்கள் வினா எழுப்பலாமே தவிர * * *
என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜி.
விசுவநாதன். (குறுக்கீடு) ஒன்றும் புரிக்கவில்லையா, இப்
போது உட்காரப்போனீர்களா, 20 நிமிடங்கள் பேசியிருக்கி
றீர்கள். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, உங்கள் வாயிலாக ஒன்றை சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். இங்கே சட்டத்தில் நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நாளைக்கு தகவல்
கொடுக்கத் தவறினால் 50 ரூபாய் அபராதம் விதிப்பதாக
சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒன்றும் சற்று
2 அடி மேலே போய் நான் சொல்கிறேன், அபராதம் தேவை
யில்லை, ஒரு ஆண்டு ஜெயில் தண்டனைக் கொடுங்கள், அந்த
மாதிரி சட்டத்தை இயற்றுங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.
காங்கிரஸ் என்பது புனிதமான கட்சி, சோசலிசக் கொள்கையை
முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிற கட்சி, என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். நிலமீட்புப் போராட்டம் போன்ற
வற்றைக் கண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
ஆட்சியில் யாராக இருந்தாலும் எங்கே இருந்தாலும் கண்டு
பிடிப்பதற்கான திராணியும் சக்தியும் கொண்ட மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் ஆளுகின்ற இந்த ஆட்சியில் இவர்
கள் எல்லாம் போய் அடையாளம் காட்டுகின்ற அளவில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி 'வீக்காக'
இல்லை என்பதை மட்டும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி சீக்கிரம்
முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள்
குறிப்பிட்டதைப்போல நான் சொல்கிறேன், ஏன் என்று
சொன்னால் தமிழகத்திலே சாராயத்தை ஒழிப்பதற்காக இன்
றைக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு காவல்துறை
அதிகாரிகள், வி.ஏ.ஓ. போன்றவர்களை எல்லாம் சஸ்பெண்ட்
செய்கிறீர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



அதேபோல் 40 ஆண்டு காலமாக நிலங்களை அரசாங்
கத்தை ஏமாற்றி, சட்டங்களை ஏமாற்றி, பதுக்கி வைத்துக்
கொண்டிருக்கக்கூடிய நபர்கள் மீது நீங்கள் கண்டிப்பாக
நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர் எந்த ஒரு நபராக
இருந்தாலும் அவர் அரசியலில் செல்வாக்குப் படைத்த
நபராக இருந்தாலும் நீங்கள் விடக்கூடாது, அதற்குரிய நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி
கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. விசுவநாதன்.

**திரு. ஜி. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நிலச் சீர் திருத்தச் சட்டம் அனேகமாக
நம்முடைய மாமன்றத்திலே அதிகமாக திருத்தப் பட்ட சட்ட
ங்களிலே ஒன்றாக இருக்கிறது. கடந்த 30 ஆண்டு காலத்
தில் 25 முறைகளுக்கு மேலாக இந்தச் சட்டத்தை திருத்தி
யிருக்கிறோம். இப்போது நமக்கு முன்னால் இருக்கின்ற
சட்டமுன் வடிவு இதற்கு முன்பே இரண்டு தடவை இதே
மாதிரி சட்டமுன் வடிவாக இங்கே நாம் இந்த மன்றத்திலே
நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். இரண்டு முறை அது
திரும்பி வந்திருக்கிறது. மூன்றாவது முறையாக இன்றைக்கு
இங்கே இதை சட்டமுன் வடிவாக நிறைவேற்றுவதற்கு தயா
ராக இருக்கிறோம்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1990 ஆம்
ஆண்டு நிறைவேற்றப்பட்டு அனுப்பிய சட்டமுன் வடிவு 3
நாட்களுக்கு முன்னால் தான் திரும்ப வந்திருக்கிறது. நம்
முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் அதை ஆளுநருக்கு
அனுப்பி ஆளுநர் அவர்கள் அதை நமக்கு அனுப்பியிருக்கிறார்
கள்.

'I quote that the State Legislative Assembly that the message
requesting that the House will reconsider the provision contained in
sub-section 5 of section 23 (A) proposed in the Bill seeking to
enhance the ceiling limit retrospectively from 15 standard acres to 30
standard acres'.

குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரே ஒரு கருத்தைக் காட்டி
சென்ற 1990-லே நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்த முன்
வடிவை திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

பிற்பகல் 5.30

அதற்குக் காரணம், உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா
என்று இருந்ததை 30 ஏக்கராவாக மாற்றியது சரியல்ல;
அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று திருப்பி அனுப்பி

யிருக்கிறார்கள். உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக 70-லே மாற்றப்பட்ட போதிலும், 20 ஆண்டுகள் கழித்து கொண்டுவரப்பட்ட சட்டத்தில் ஏன் மறுபடியும் அந்த 30 ஏக்கராவுக்குச் சென்றார்கள் என்ற காரணத்தை அன்றைக்கு இருந்த அரசு சரியாக மக்கள் முன்னால் தெரிவிக்கவில்லை. சட்டமன்றத்திலே, அன்றைக்கிருந்த முதலமைச்சர் பேசும் போது சொல்லியிருக்கிறார்: பெரிய அளவில் சட்டத்தையே மாற்றும் முறையில், நிலங்களை மாறுதல் செய்து, சட்டத் தின் பிடியில் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம் என்று......(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கருணாநிதி கொண்டு வந்த திருத்தத்திலே 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா அல்ல; 30க்கு மேலாக 60 வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார் இடைப்பட்ட இந்த 30 ஆண்டு காலத்தில் ஒன்று அல்லது இரண்டு பரம்பரைகள் உருவாகியிருக்கும். எனவே உச்ச வரம்புக்கு மேல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா வரையில் செய் யப்பட்ட மாறுதல்களை இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டாம் என்று அரசு கருதுகிறது. அதனால்தான் இந்த 'கிளாஸை' அவர் போட்டிருக்கிறார் ஆக it is not 30 standard Acres. It is 60 Standard Acres.

திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I read the concerned portion. 'Sub-clause 5 of section 23 (A): not with standing anything contained in this Chapter while calcu-lating the total extent of land held on 6th day of April 1960 by any person referred to in sub-section 4 in extent in excess of the ceiling area and not exceeding 30 standard acres shall not be deemed to be surplus land' என்றுதான் அந்தச் சட்ட முன்வடிவிலே கூறப் பட்டிருந்தது. எனவே, அந்த விதியின்படி, 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று தான் இருக்கிறது. இன்றைக்குக் கொண்டு வந் திருக்கிற சட்டம் நான் சொல்ல விரும்பியது, செப்டம்பர் 30-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் இருந்து குடியரசுத் தலைவர் அவர்கள் திருப்பி அனுப்புகிறார்கள். ராஷ்டிரபவனிலிருந்து திரும்பி வருகிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு எந்த அளவுக்கு 'ஜெட்' வேகத்தோடு அல்ல; மின்னல் வேகத் தோடு பணியாற்றுகிறது என்பதற்கு, இன்றைக்கு 3 நாட் களுக்குள்ளாக அதற்கு வேண்டிய சட்டத் திருத்தத்தைச் செய்து, இன்றைக்கு அங்கே இதை நிறைவேற்றிக் கொண்டி ருக்கிறோம். இந்த விவாதம் முடிவுற்று, இன்றைக்கு இது நிறைவேற்றப்படும்.



எனக்கு முன்னாலே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இரண்டு முறை திரும்பி வந்தது இந்த மசோதா. இந்த முறையாவது சட்டமாக வேண்டுமென்று நான் விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை வரவேற்றுப் பேசினார்கள். இதே உணர்வோடு மத்திய அரசும் நடந்துகொள்ளவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். எந்தக் குறையை குடியரசுத் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டினாரோ, அந்தக் குறையை இந்த மசோதா, சட்டமுன் வடிவு, நீக்கியாகிவிட்டது. ஆகவே, எந்த சாக்குப் போக்கும் சொல்லி, இன்றைக்கு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெறாமல் நிறுத்தக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். குடியரசுத் தலைவரின் ஒப்புதலே இந்த மசோதாவுக்குத் தேவையில்லை என்பது என்னுடைய வாத மாகும். காரணம், 'லேண்ட்' என்பதைப் பொறுத்தமட்டில், இது முற்றிலும் மாநிலத்திற்குட்பட்டது. 7-ஆவது செட் யூல், ஸ்டேட் லிஸ்டில், ஐட்டம் நெம்பர் 8-இல், 'that is to say, the rights in or over land; land denotes including relation of landlord and tenants and the collection of rents, transfer and alienation of agricultural land. Land improvement and agricultu-ral loans, colonisation, etc.' ஆக, 'லேண்ட் டிரான்ஸ்பர்'' என்பது மாநில அரசின் முழு அதிகாரத்திற்குட்பட்டதாகும். ஆக, இதிலே மத்திய அரசுக்கு 'கன்கரன்ட் லிஸ்ட்'டிலே இருந்தால் தான் போக வேண்டும்; அல்லது வேறு சட்டத்தை இது பாதிப்ப தாக இருந்தால்தான் குடியரசுத் தலைவருக்கு அனுப்பவேண்டுமே தவிர ,இது குடியரசுத் தலைவருக்குப் போகத் தேவை யில்லை. நம்முடைய ஆளுநர் அவர்களே இதற்கு அனுமதி யளிக்கலாம் என்பது என்னுடைய வாதம். இதை நிச் சயமாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள் வார்கள் என நான் எதிர்பார்க்கிறேன். எற்கனவே அவர்கள் சொன்ன குறை நீக்கப்பட்டுவிட்டது. 6 மாத காலத்திற்குள் ளாக திரும்ப அனுப்ப வேண்டுமென்று நமக்குச் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால், எனக்குத் தெரியும் நம்முடைய மாமன்றத்தில் நிறைவேற்றிய பல தீர்மானங்கள் போனால் டெல்லியிலே இருந்து திரும்பி வருவதே கிடையாது. எவ்வளவு நாட்களானாலும் திரும்பி வருவதே இல்லை. அரசியல் சட்டத்திலே அப்படி ஓட்டை இருக்கிறது. வேறு யாருக்கும் இல்லாத அந்த அதிகாரத்தை, ஏனோ நம்முடைய அரசியல் சட்டத்திலே வைத்திருக்கிறார்கள். அமெரிக்காவிலே இருக்கின்ற ஜனாதிபதிக்குக் கூட அப்படிப்பட்ட அதிகாரம் கிடையாது. 'Veto Power' மாநிலத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டத் டத்தை, மத்திய அரசு தள்ளி விடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் என்று அமெரிக்காவிலே கிடையாது. ஆஸ்தி ரேலியாவினுடைய கவர்னர் ஜெனரலுக்கும் அப்படிப்பட்ட அதிகாரம் கிடையாது. ஆனால் இந்தியா ஒரு 'ஃபெடரல்

ஸ்டேட்' என்று சொல்லிக் கொண்டு, இங்கே நாம் நிறைவேற்றிய தீர்மானம் மட்டுமல்ல; குடியரசுத் தலைவருக்குச் சென்று அவர் திருப்பியனுப்பி, மறுபரிசீலனை செய்து நாம் மறுபடியும் அனுப்பினால், அந்தச் சட்டம் வரலாம்; வராமலும் போகலாம். எதுவுமே தெரியாமலும் போய்விடும் அப்படிப்பட்ட The constitution is silent on the subject. இதை மாற்றவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தச் சட்டத்தை, சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையில் எல்லாக் குறைகளையும் நீக்கி இருக்கின்றோம். இங்கே நாம் எதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோமோ அந்த அருமையான சட்டத்தினை 'பினாமி' நிலத்தைக் கையகப் படுத்துகின்ற சட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கொண்டுவந்து இருக்கிறது. இதை இன்று ஏகமனதாக நிறைவேற்றி அனுப்ப நம்முடைய ஆளுநர் அவர்கள் ஒப்புதல் தந்து விரைவாக இதைச் செய்ய வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளை விடுத்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, இந்த நில உச்சவரம்பு சட்டம் இப்போது கொண்டு வந்திருக்கின்ற நேரத்திலே, நிலத்தை மட்டுமே ஒரு சொத்தாக எண்ணி ஒரு சட்டம் வருவதைப்போல, ஏன், மற்ற சொத்து உடைமைகளுக்கு உச்ச வரம்பு கொண்டுவரக் கூடாது என்பதையும் இந்த நேரத்திலே இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்தைப் பொறுத்த வரையில் இந்த 30 ஆண்டு காலத்திற்கு முன்பு வேண்டுமானால் நிலம் என்ற சொத்தின்மீது ஆசைப்பட்டு, நிறைய விவசாய நிலங்களை வைத்துக் கொள்ளலாம். என்ற விருப்பம் இருந்திருக்கலாம். ஆனால், தற்போது விவசாயம் செய்வது என்பதே தண்டனையாக இருக்கின்ற இந்த நேரத்திலே, ஒரு பெரிய பெரிய அளவிலே நிலத்தை யாரும் வைத்துக்கொண்டிருக்கவில்லை. சொல்லப் போனால், மற்ற அனைத்துச் சொத்துக்களை விட, இன்று நிலம்தான் ஒரு அளவுக்கு எல்லோருக்கும்





பகிர்ந்து அளிக்கப்பட்டு ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருக்கின்ற ஒரு சொத்தாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த முறையிலே ஏதோ ஒரு சிலர், பெரிய மனிதர்கள் நிலத்தை அதிகமாக வைத்து இருக்கிறார்கள். பினாமி பெயரிலே எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அந்த நிலத்தை உண்மையிலேயே நிலம் கிடைக்கிறது, விலைக்குக் கிடைக்கிறது என்பதற்காக, 1958 ஜனவரிக்கும் 1960 ஏப்ரல் 5-ம் தேதிக்கும் முன்பாக, நிலத்தை உண்மையிலேயே விலை கொடுத்து வாங்கிய எத்தனையோ அப்பாவி விவசாயிகள் அந்த நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள். அப்படி நிலத்தை உழுது கொண்டிருப்பவர்கள் அந்த நிலத்தின் மீது ஏராளமாக முதலீடு செய்திருக்கிறார்கள். அந்த நிலத்தினுடைய வடிவத்தையே மாற்றியிருக்கிறார்கள். அதிலே கிணறுகளை வெட்டியிருக்கிறார்கள். பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார்கள். அந்த நிலத்திலே வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். இப்படி நிலத்தை வாங்கி, உழுது பயிர் செய்து கொண்டிருப்பவர்களுடைய நிலையை எண்ணியாவது இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருகின்றபோது சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவன் 12 ஆண்டுக்காலம் அந்த நிலத்திற்கு அவன் நிலவரியைச் செலுத்தி, மற்ற செலுத்தவேண்டியவைகளையெல்லாம் செலுத்திக் கொண்டிருக்கிறபோது, அவனுக்கு அனுபவபூர்வமான உரிமை வந்துவிடுகிறது. அப்படி நிலத்தை 30 ஆண்டுக்காலம் உழுது, நிலவரி செலுத்தி, மற்ற வரிகளையெல்லாம் செலுத்திக் கொண்டிருப்பவர்களுடைய உரிமையை இந்தச் சட்டம் மாற்றுகிறதா என்பதையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த அளவுக்கு நிலத்தை வாங்கி அந்த நிலத்திலே இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களுடைய நிலையைப்பற்றி இந்தச் சட்டம் எதுவுமே சொல்லவில்லை. எனவே, அந்த நிலத்தை வாங்கி விவசாயம் செய்பவர்களுக்குச் சட்டத்திலே ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா என்பதை இந்தச் சட்டம் கொண்டு வருகின்றபோது சற்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த நிலத்தை வாங்கியவர்கள் அந்தக் காலக் கட்டத்திலே வாங்கியவர்கள் வீடுகளைக் கட்டியிருக்கலாம். அந்த இடத்திலே தொழிற்சாலை கட்டியிருக்கலாம். கோவை நகரம் போன்ற இடங்களிலே 10, 15 கிலோமீட்டருக்கு நகரங்கள் வளர்ந்து இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே இந்தச் சட்டத்திலே என்ன செய்யப்போகிறார்கள் என்பதை

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 அக்டோபர் 3

சொல்லவில்லை. அத்தோடு இன்று நிலம் மட்டும்தான் ஒரு
பெரிய சொத்தாக வைக்கப்பட்டு வரவில்லை.
ஒரே கட்டிடத்தில் பல கம்பெனிகள் பினாமி பெயரிலே
வைத்திருக்கிறார்கள். வரியை ஏமாற்றுவதற்காக வைத்தி
ருக்கிறார்கள். பல்வேறு பொய்யான கணக்கை எழுதிக்
கொடுப்பதற்கு ஆடிட்டர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள்
balance sheet போட்டுக் கொடுக்கிறார்கள்.
ஆனால் நிலத்தை வைத்துக் கொண்டு இருப்பவர்களினால்
ஏமாற்ற முடியாது. பதுக்கி வைக்க முடியாது. நிலத்தை
பதுக்கி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நாட்டிலே
'parallel' economy, ஒன்று இருக்கிறது என்றால் அது
கருப்புப் பணத்தின் மூலமாகத்தான், பெரிய தொழிலதிபர்கள்
மூலமாகத்தான் இந்த நாட்டிலே 'parallel economy' இருக்
கிறதே அல்லாமல் நிலத்தை வைத்திருப்பதன் மூலமாக
இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

அதே நேரத்திலே இன்று நிலத்தை வைத்துக் கொண்டு,
அதில் முதலீடு செய்து நிலத்தின் மூலமாகத் தன்னை வளர்த்
துக் கொள்ள முடியாது என்கிறபோது, அந்த நிலத்திலே
வருமானம் பெறுகின்றவர்கள் வேறு பகுதிகளுக்குச் செல்லக்
கூடிய வாய்ப்பு ஏற்படும். நிலத்தைப் பொறுத்தவரையில்
நிலத்தை உழுது பயிர் செய்தால்தான் விவசாயம் செய்ய
முடியும்.

பிற்பகல் 5.40

அப்படி செய்கிறபோது கூட விவசாயத்தில் இலாபம்
வரவில்லை என்றுதான் விவசாயம் செய்பவர்கள் இன்று
அரசாங்கத்திலிடத்திலே கடனைத் தள்ளுபடி செய்யுங்கள்,
மின்சாரத்தை இலவசமாகக் கொடுங்கள் என்று கோரிக்கை
வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நிலத்தைப்
பொறுத்தவரையில் பல்வேறு சட்டங்கள் ஏற்கனவே இருக்
கின்றன. நிலவரி வசூல் சட்டம், கட்டாயக் கொள்முதல்
சட்டம், அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் என்று இப்படி
பல சட்டங்கள் விவசாயிகளைக் கட்டுப்படுத்துகின்ற சட்டங்
கள் இருக்கின்றன. ஆனால் தொழில் துறைக்கு சட்டங்
களிலிருந்து விலக்களித்துக் கொண்டு இருக்கிறார்கள். மானோ
பலி ரெஸ்ட்ரிக்டிவ் ட்ரேட் ப்ராக்டிசஸ் ஆக்ட் என்ற அந்த
பெரிய முதலாளிகளை எல்லாம் கட்டுப்படுத்துகிற சட்டம்
கூட இன்று தளர்த்தப்படுகிறது. இந்த நேரத்தில் விவசாயத்
தொழிலுக்கு அதிகமான சட்டங்களைக் கொண்டு வந்தால்
இந்தத் தொழிலில் உற்பத்தி குறையும் உணவுத் தட்டுப்பாடு
வரும். எனவே இந்தத் தொழிலுடைய உற்பத்தியை
எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இந்தச் சட்டம் கொண்டு
வரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1991 அக்டோபர் 3] [திரு. நா. சா. பழனிசாமி]

வெள்ளாமை ஜென்மப் பகை என்று சொல்
செட்டிக்கு விவசாயம் செய்பவர்கள் வேறு எந்த வியாபாரம்
வார்கள். மற்ற தொழில்களைச் செய்தார்கள் என்றால் அப்போது
அல்லது விவசாயம் அடிபட்டுப் போகும். அப்படி விவசாயத்
அந்த பாதுகாப்பு இல்லாத நேரத்தில் வேறு தொழி
திற்குப் செல்வார்கள். அப்படி வேறு தொழிலுக்குச் செல
லுக்குச் விவசாய உற்பத்தி குறைகிற வாய்ப்பு இருக்கிறது.
கிறபோது நிலத்திற்கு மட்டும் சட்டம் கொண்டுவருவது என்றால்
எனவே சமூகத்தில் உள்ள எல்லாவற்றுக்குமே உச்சவரம்பு
லாமல் சமூக நீதியை எல்லா சொத்துக்கும் கொண்டு
கொண்டுவந்து என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு
வரவேண்டும் விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.
நன்றி தெரிவித்து

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற
பினாமி நில ஒழிப்புச் சட்ட மசோதாவின் மீது பேசுவதற்கு
அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தில் 1958 ஜனவரி 1 முதல் 1960 ஏப்ரல்
6-ஆம் தேதி வரையிலும் உள்ள இடைப்பட்ட காலத்தில்
விற்பனை, நன்கொடை, ஒப்படைப்பு, பாகப்பிரிவினை, அறக்
கட்டளை உள்ளிட்ட உறுதி மாற்றம் செய்யப்பட்ட அனைத்
தும் செல்லாது எனக் கூறி கொண்டுவரப்பட்டுள்ள இந்தத்
தமிழ் நாடு நில உச்சவரம்புச் சட்டத்திற்குத் திருத்தச்
சட்ட முன்வடிவு கொண்டுவந்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்
யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். இப்படிப்பட்ட
ஒரு சட்ட முன்வடிவு வருவது என்பது இந்தச் சட்ட மன்றத்
திற்கோ அல்லது தமிழகத்திற்கோ புதிதல்ல. முன்னாள்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தின் ஆட்சியில் மாண்புமிகு அமரர் எம். ஜி. ஆர். அவர்கள்
இருந்த காலத்தில் இந்த அவையிலே ஒரு பினாமி ஒழிப்பு
மசோதா கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்
பட்டது. அந்தச் சட்டம் அமல்படுத்தப்படுவது குறித்து அன்றைய
தினம். ஆட்சி நடத்திக் கொண்டிருந்த மத்திய அரசுக்கு
அனுப்பப்பட்டது. ஆனால் அது கையெழுத்துப் போடப்
படாமலே கிடப்பிலே போடப்பட்டு அமலுக்கு வராமலே
போய்விட்டது.

அதற்குப் பிறகு தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழக
ஆட்சி ஏற்பட்ட போது கலைஞர் அவர்கள் முதலமைச்சராக
இருந்தபோது இதே அவையில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு
வரப்பட்டு அனுப்பப்பட்டது. அதுவும் நிறைவேறாமல் கிடப்பில்
போடப்பட்டுவிட்டது. இப்போதும் அந்த பினாமி நில ஒழிப்புச்
சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இது எதிர் காலத்
தில் என்ன ஆகும் என்று தெரியவில்லை. எனவே இப்போது

[திரு. வே. தம்புசாமி] [1991 அக்டோபர் 3

நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். இனிமேலாவது காலம்
கடத்தாமல் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும்.
இங்கே எனக்கு முன்னாலே பேசிய போது மாண்புமிகு காங்
கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் குறுக்கிட்டு பல்வேறு
விவரங்களைச் சொன்னார்கள். இப்போது என்னுடைய
வேண்டுகோள் மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சி
காங்கிரஸ் கட்சி ஆட்சி என்பதால் அந்த ஆட்சியிலே
வேகமாக இந்த சட்டத்தை அமல்படுத்துவதற்காக
அவர்கள் தரப்பிலே முயற்சி எடுக்கப்பட்டு விரை
வாக இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு அவர்கள் உதவி
செய்வார்கள் என்று நான் இந்த நேரத்திலே நம்புகிறேன்.
அதேபோல ஒரு சட்ட முன்வடிவை இப்போது கொண்டு
வந்துள்ளோம். முன்னால் வந்த இரண்டு சட்டங்களுக்கு
ஏற்பட்ட நிலை மீண்டும் இந்தச் சட்ட முன்வடிவிற்கும்
ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான் எங்களுடைய நிலை
யாகும். இந்தச் சட்டங்களுக்கு இந்த நிலைமை ஏற்படு
வதற்குக் காரணம் தமிழகத்தில் உள்ள நிலப்பிரபுக்கள்
சட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சந்து பொந்துக்களை பயன்
படுத்தி ஏமாற்றி நிலங்களைத் தங்களுடைய கைவசம்
வைத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது அரசைவிட
அவர்கள் வலியவர்களாக இருக்கின்றார்கள் என்பது தான்
யதார்த்த உண்மையாக இருக்கிறது அதை நம்மால் புரிந்து
கொள்ள முடிகிறது. எனவே, எதிர்காலத்தில் அத்தகைய
நடவடிக்கைக்கு இடம் கொடுக்காமல், இந்த சட்டத்தை
விரைவாக அமல்படுத்துவதற்கு தமிழக அரசு கடுமையான
முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 5.45

இப்போது இந்த சட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம்
வரக்கூடிய நிலங்களை
தமிழ்நாட்டிலே நிலமற்றவர்களுக்கு கையகப்படுத்தி,
வழங்கினாலும்கூட இந்த சட்டம் வழங்கலாம்.
என்று சொல்லமுடியாது. ஒரு முழுமையான சட்டம்
இருக்கக்கூடிய மூலச்சட்டத்தை காரணம் அப்படி
இருக்கின்றது. இந்த திருத்த அடிப்படையாக
போதுதான் யதார்த்தமாக மூலச்சட்டத்தைத் வேண்டியதாக
இலட்சம் ஏக்கர்களை தமிழகத்திலே திருத்துகின்ற
சட்டத்தை எப்படி அரசு எடுக்கமுடியும். ஏறத்தாழ 20
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் திருத்தவேண்டும் என்பதற்காகத் இந்த மூல
மன்றத்தில் ஒரு தனி நபர் கட்சியின் சார்பில் தான்
பெயரால் நாங்கள் தீர்மானம் திரு. 9-வது சட்ட
வகையிலே மூலச்சட்டத்தைத் கொடுத்திருக்கிறோம். விரையன் அவர்கள்
எவ்வளவு நிலம் கிடைக்கும், திருத்தினால் எந்தெந்த
அது எப்படி தமிழகத்திலே
தமிழக மக்களுக்கு



1991 அக்டோபர் 3] [திரு. வே. தம்புசாமி]

உதவிகரமாக இருக்கும் என்பதை
நிலமற்றவர்களுக்கு அந்தச் சட்டத்தை அரசு
யும் புரிந்து கொள்கிற வகையில் கேட்டுக்கொள்கிறேன். அதே
பரிசீலிக்க வேண்டும் என்று நிலங்கள் எவ்வளவு
மாதிரி தமிழ்நாட்டிலே விவசாய கையகப்படுத்த வேண்டும்.
இருக்கிறது என்று பார்த்து அதை நிலங்கள் ஒரு குடும்பத்
அப்படி கையகப்படுத்துகிற போது 15 ஏக்கர் என்று வரம்பு
திற்கு நஞ்சையாக இருந்தால் 25 சாதாரண
வைக்கவேண்டும். அது புஞ்சையாக இருந்தால் இப்படி உச்ச
ஏக்கர் என்று வரம்பு கட்ட வேண்டும். மூலம்தான் மீதி
வரம்பைத் திருத்துவதன் ஏறத்தாழ 20 இலட்சம்
இருக்கிற நிலங்கள் பூராவும் சுமார் வாய்ப்பு இருக்கிறது.
ஏக்கர் தமிழகத்திலே கிடைப்பதற்கான நிலமற்ற ஏழைகளுக்கு,
இப்படி கிடைக்கும் உபரி நிலத்தை பல இலட்சக்கணக்கான
விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் அதிகரிக்கும். உணவு
குடும்பங்களுடைய வருமானம் இரண்டு மடங்கு அதிகமாக
உற்பத்தி இன்று இருப்பதைவிட தமிழகத்திலே உற்பத்தி
உயரும். 50 இலட்சம் டன் சாதாரண ஏழையெளிய
ஆகிறது என்று சொன்னால் அது ஏற்படுகிறபோது ஒரு
மக்கள் கையிலே அந்த நில மாற்றம் அது மாறும்.
கோடி டன் உற்பத்தி, உணவு உற்பத்தியாக இருக்கக்கூடிய இந்த
இதை செய்யாமல், தமிழகத்திலே ஒரு அடிப்படை
மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் முடியாது என்று
யான மாறுதலை கொண்டு வந்துவிட மேற்கு வங்காள ஆட்சியில்
நான் நம்புகிறேன். இது மாதிரி சாதாரண மக்கள்
அனுபவம் உண்டு. இப்போது இந்த இன்றைய தினம்
மத்தியிலே அந்த நிலம் மாறுகிறபோது, பினாமி
உற்பத்தி அதிகரிக்கிறது. இந்த அடிப்படையிலே சட்டத்தை
நிலத்தை எடுப்பதற்கு கொண்டு வரப்பட்ட அமல்படுத்துகிறபோது
நான் வரவேற்கிறேன். இதை அரசு சார்பில் முழு
அதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
ஆதரவு உண்டு.

அதே மாதிரி கிராமப்புறங்களிலே இந்த நிலங்களைக்
கண்டு பிடிப்பதற்கான கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும்.
அந்த கமிட்டியிலே அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்
களும் உறுப்பினர்களாக இருந்து அந்தந்த கிராமத்திலே
இருக்கின்ற பினாமி நிலங்களைக் கண்டு பிடிப்பதற்கான
வழிவகைகளை அரசு செய்யுமானால் நிச்சயம் இந்த
நிலத்தை விரைவாகவும் வேகமாகவும் எடுக்கமுடியும். எந்த
நன்மைக்காக யாருக்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு
வந்திருக்கிறோமோ அந்த மக்களுக்கு அடிப்படையான ஒரு
வருமானத்தை உயர்த்துவதற்கு உதவி செய்யும். அப்படி
கிராமங்களிலே இருக்கின்ற பினாமி நிலங்களை எடுப்பதற்கு
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் இந்த அரசுக்கு
உறுதுணையாக இருக்கும் என்பதைக் கூறி வாய்ப்பு அளித்த
தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

[1991 அக்டோபர் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
வாய்த் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு வரு

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்
வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான்
சொல்கின்றபோது, நான் விவரமாக அதிகமாக எதுவும்
சொல்லாவிட்டாலும், இந்த சட்டத்தைப் பற்றி பல்வேறு
ஆண்டுகளாக தமிழகத்தில் பேசிப்பேசி
எல்லோருக்கும் இதைப் பற்றி நன்றாக தெரியும் என்பதால் நம்
தான் இதைப் பற்றி நான் அதிகமாக சொல்லவில்லை.
இருந்தாலும் இதைப் பற்றி சொல்கிறபோது, இந்த
மூலச்சட்டம் வருகிறபோது, தமிழகத்தைப் பொறுத்த
வரையில் அரசியலிலே எந்த அளவுக்கு முக்கியம் வாய்ந்
தவர்கள் காங்கிரஸ் கட்சியிலே மிக முக்கியமான பொறுப்பிலே
இருந்தவர்கள், விடுதலை இயக்கத்திற்காக பாடுபட்டவர்கள்,
அதிலேயும் இன்றைக்குச் சொல்லப்போனால், நான் முதலி
லேயே சொல்லியபடி, இந்த நாட்டினுடைய முதல் குடி
மகனாக இருக்கின்ற குடியரசுத் தலைவர் அவர்கள் கூட
அன்றைக்கு பொறுக்கு கமிட்டியிலே இருந்தார்கள்.

பிற்பகல் 5-50

அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இருந்து, கொண்டு
வந்த சட்டத்தை, இன்றைக்கு அதிலே இருக்கின்ற சில
குறைபாடுகளை திருத்த வேண்டுமென்று, இங்கே கொண்டு
வந்து திருத்துகிறபோது, இதைப்பற்றி எதிர்க் கட்சித்
தலைவர் பேசுகிறபோது, இந்தச் சட்டத்தை வரவேற்கிற
அதேநேரத்தில் இதிலே ஓட்டை உடைசல்கள் இல்லாமல்
கொண்டு வந்தால் நல்லது என்று அவர்கள் சொன்னதற்
காக நான் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதேபோல அவர்கள் சொல்கிறபோது இந்தச் சட்டத்தை
1—1—1958-க்கு கொண்டு போக வேண்டுமென்ற
எண்ணத்தைச் சொல்லவில்லை என்றும் சொன்னார்
கள். அதற்கு என்ன காரணம் என்றால் ஏறக்குறைய 30
ஆண்டுகளுக்கு முன்னாலே, 32 ஆண்டுகளுக்கு முன்னாலே
செய்யப்பட்ட நில மாற்றங்கள் செல்லாது என்று இங்கே
சொல்கிறபோது, 32 ஆண்டுகள் என்று சொல்கிறபோது
இங்கே இருக்கின்ற பல சட்டமன்ற உறுப்பினர்கள்கூட
இதை விட சிறிய வயதில் தான் இருப்பார்கள். 32
வயதுக்குக் குறைவாக தான் இருப்பார்கள். ஆகையினால்
1—1—1958-லேயிருந்து ஏன் இதை கொண்டு வர வேண்டும்
என்று சொல்கிறபோது, அந்தக் காலத்தில் இதற்கு என்று



1991 அக்டோபர் 3] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கூட்டுப் பொறுக்குக் குழு
ஜாயின்ட் செலக்ட் கமிட்டி, நான் முதலிலேயே சொன்னது
ஒன்றை போட்டார்கள். பேர்கள், 7 ஆயிரத்
மாதிரி அதிலே பலலாயிரக்கணக்கான எண்ணங்களைத்
திற்கு மேற்பட்டவர்கள் வந்து தங்கள் கொண்டு
தெரிவித்தார்கள். 1—1—1958-க்கு இதைக் அளித்தவர்கள்
போகும்போது, அப்போது சாட்சியம் கூட
எல்லோரைப் பற்றியும் நான் சொல்லாவிட்டாலும் சட்ட
இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை, எல்லாம்
மன்ற உறுப்பினர்களாக எண்ணாமல் உங்களை இந்த
நீதிபதிகளாக எண்ணிக்கொண்டு சொல்கிறேன். சாதாரண
வழக்கை உங்கள் முன் வைத்து வாதாடுகிற
வழக்கறிஞராக உங்கள் முன் இதை நான் வைக்கிறேன்.
ஒரு சாதாரண நல்ல வழக்கு இது. வழக்கறிஞரும் சிறந்த
வர். அதே நேரத்தில் விவரம் தெரிந்த நீதிபதிகளாக
நீங்கள் இருப்பதால் இதைப்பற்றி நான் அதிகம் இங்கே
சொல்லாவிட்டாலும் நீங்கள் தான் நல்லபடி தீர்ப்பு அளிக்க
வேண்டுமென்று சொல்லி, கூட்டுப் பொறுக்குக் குழு இருந்த
போது அதில் இரத்தினசபாபதி அவர்கள் சொல்கிறபோது,
இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன்னும் பின்னும்
நிலச் சீர்திருத்தம் பற்றி பேசப்பட்டு வந்திருக்கிறது.
அதற்குப் பிறகு, இந்த நாடு விடுதலை அடைந்ததற்குப்
பிறகும், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற பல்வேறு
மாநிலங்களிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலும் காங்கிரஸ்
ஆட்சியிலும் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆட்சியில்
உள்ளவர்களே நிலச் சீர்திருத்தம் விரைவிலே வர இருக்கிறது
என்று சொன்னதனால் அவர்கள் இங்கே ஒரு பொறுக்குக்
குழுவை அமைத்து, அதிலே மக்கள் சாட்சியளிக்கின்ற
போது, 94 சதவிகித நிலம் இன்றைக்கு உறுதியாக இருக்
கிறது, மீதி இருப்பது 6 சதவிகிதமோ 4 சதவிகிதமோ தான்
என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அவர்களைப் போல நான் குறைகளை இங்கே சொல்லா
விட்டாலும், திரு. டி. ஆர். விஸ்வநாதன், விவசாய
சங்கத்தைச் சார்ந்தவர், அவர் சொல்கிறபோது ஏன் இதை
1958-க்கு கொண்டு வர வேண்டுமென்று எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள் கேட்கிறார்கள், ஆனால் 1960 ஆம்
ஆண்டிலேயே, விவசாயச் சங்கத்தைச் சார்ந்த திரு. விஸ்வ
நாதன் அவர்கள் சொல்கிறபோது 1955-க்கு இந்தச் சட்டத்
தைக் கொண்டு போக வேண்டுமென்று சொல்லியுள்ள
துடன், அப்போது தான் அரசுக்கு நிலம் கிடைக்கும்
என்றும் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதுபோல விவசாயச் சங்கத்தின் செயலாளராக இருந்த
திரு. ஜெயராமன் அவர்கள் 1956-க்குச் கொண்டு போக
வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் சார்ந்திருந்த

இயக்கத்தைச் சார்ந்த, திராவிட இயக்கத்தைச் சார்ந்த
சிதம்பரத்தை சேர்ந்த புலவர் ஆறுமுகம் அவர்கள் கூட 1955-க்குக்
கொண்டு போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.
திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் 1948-க்கு, இன்னும் தள்ளி
கொண்டு போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.
அதுபோல திரு. ராமதாஸ் அவர்கள் 1955-க்குக் கொண்டு
போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.
சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் பிரஜா
கட்சியின் சார்பிலே சொல்லும்போது அன்றைக்கு. அந்தக்
சட்டத்தை எந்த அளவுக்கு நிலச் சீர்திருத்தச்
முடியுமோ அந்த அளவுக்கு பின்னாலே கொண்டுபோக
வேண்டுமென்று சொல்லுகிறபோது பின்னாலே தள்ளிப்போட
போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 1947-க்குக் கொண்டு
திரு பழனிசாமி, அவர் ஆதிதிராவிட அப்போது
சேர்ந்தவர், எஸ். பழனிசாமி சாட்சி சொல்லுகின்றபோது இயக்கத்தைச்
1955-க்குக் கொண்டுபோக வேண்டுமென்று
கிறார். கோபால்சாமி, பிரஜா சோசலிஸ்ட் சொல்லியிருக்
லாளர் 1940 என்று சொல்லியிருக்கிறார். கட்சிச் செய
ராஜன் அவர்கள் இந்தச் சட்டத்தைக் என். ஆர். தியாக
உங்களுக்கு நிலமே கிடைக்காது என்று சொல்லியிருக்கிறார். கொண்டுவந்தால்

பிற்பகல் 5.55

இப்படி பல்வேறு கருத்துக்களை எல்லாம்
தான் இன்றைக்கு 1958-க்கு நாங்கள் சொன்னதால்
கிறோம். அது மட்டுமல்ல, 1960 ஆம் கொண்டுவந்திருக்
வரம்புச் சட்டத்தைக் கொண்டு ஆண்டு நில உச்ச
பெரியவர் இப்படிப்பட்ட வருகிறபோது நிலங்களினால் அன்றைக்கு
விதமான பயனும் கிடைக்காது உங்களுக்கு எந்த
அது மட்டுமல்ல. அமைச்சர்களே என்று சொல்லியிருக்கிறார்
போது உதாரணமாக நான் அன்றைக்குச் சொல்லுகிற
சொன்னால் அன்றைக்கு சொல்ல வேண்டுமென்று
அவர் எதிர்க்கட்சித் தலைவர் சி. கே. இராமசாமி முதலியார்-
இருந்தவர். காங்கிரஸ் முதலில் காங்கிரஸ் கட்சியை
சுதந்திராக் கட்சிக்குச் சென்றார். விட்ட பின்னால் கட்சியில்
சட்டம் வரும் என்று முன்பே அவர் இப்படிப்பட்ட
திலேயே சொல்லி இருக்கிறார். தெரியும் என்று சட்டமன்றத்
சொல்லியிருக்கிறார் சட்டம் வரும் என்று. செலக்ட் கமிட்டியிலே
வரம்பு எவ்வளவு என்றால் 30 அதுவும் உச்ச
வரும் என்று முன்பே ஸ்டாண்டர்டு
இருக்கிறார். சட்டம் வரும் தெரியும் என்று ஏக்கரா—
பிரித்துக் கொண்டோம். எங்களுடைய தெரிந்தால் சொல்லி
காப்பாக இருக்கிறது என்று நிலம் எல்லாம் நாங்கள்
இந்தச் சட்டம் வந்து வெகுளியாக பேசியிருக்கிறார். பாது
எதுவும் செய்யாது என்று



30-4-1960-ல் சொல்லியிருக்கிறார், என்றால் அதற்குப்
பிறகு ஏன் இப்போது கொண்டுவருகிறோம் என்பதற்கு
இதைவிட வேறு காரணம் தேவையில்லை என்று கருது
கிறேன்.

திரு. கல்யாணசுந்தரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்தவர்- அன்றைக்கு ஒரே கட்சிதான். அவர் இப்படிப்
பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவருகிற
போது, இதைச் சொல்லி, சொல்லி நிலம் எல்லாம் பிரிக்கப்
பட்டிருக்கிறது ; அதனால் 1955-க்கே கொண்டுபோக
வேண்டுமென்று சொல்லி இருக்கிறார். அவர் சொல்லு
கின்றபோது தமிழ்நாட்டிலே எத்தனையோ சட்டங்கள்
வந்திருக்கின்றன. 1950-ல் பண்ணையாள் பாதுகாப்புச்
சட்டம் வந்திருக்கிறது ; நியாயவாரச் சட்டம் வந்திருக்கிறது ;
இந்தச் சட்டங்கள் எல்லாம் வந்திருக்கிறபோது
இப்படிப்பட்ட ஒரு சட்டம் வரும் என்று தெரியும் ; ஆகை
யால் நீங்கள் பின்கூட்டி போட வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறார்.

அதைப்போல, காங்கிரஸ் இயக்கத்தில் பாடுபட்டவர்,
ஜெயிலுக்குச் சென்றவர் ; மறைமுகமாகச் சென்றவர்.
பி. இராமமூர்த்தி அவர்கள். அவர் 1952-லே பேசும்போது
இந்தச் சட்டத்தை நீங்கள் 5 ஆண்டுக்கு பின்னாலே அல்ல,
1951-க்கே கொண்டுபோக வேண்டுமென்று சொன்னார்.
பி. இராமமூர்த்தி விவரம் தெரியாதவர் அல்ல ; காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவர். அதற்குப் பிறகு கம்யூனிஸ்ட்
கட்சியில் சேர்ந்தார். அவர் 1950-க்கே கொண்டுபோக
வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படிக் கொண்டு
போனால்தான் இந்த சட்டத்தினால் ஓரளவுக்கு ஏதாவது
கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார். இது எல்லாம்
அந்தக் குழு உறுப்பினர்கள் சொன்னது.

அது மட்டுமல்ல. மற்றக் கட்சிக்காரர்கள் சொன்னது.
அமைச்சர்களே சொன்னது. அமைச்சர்கள் என்கிறபோது,
பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் இந்தச் சட்டமன்றத்
திலே இந்தச் சட்டம் வருகிறபோது நிலத்தை வைத்திருப்
பவர்களுக்கு விற்பதற்கும் பிரிப்பதற்கும் உரிமை உண்டு ;
அதை யார் தடுத்து நிறுத்துவது என்ற கேள்வியை இங்கே
கேட்டிருக்கிறார். இந்தச் சட்ட முன்வடிவு வருகிறபோது
நிலங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு
அவைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால்
அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் வரும், அதற்கு நஷ்ட
ஈடு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை எல்லாம்
மாற்றிக்கொண்டதால் அரசினுடைய வேலை குறைந்து
விட்டது என்று சொல்லியிருக்கிறார்.

நான் இந்தச் சட்ட முன்வடிவுக்கு திரு. பக்தவத்சலம் அவர் களை சாட்சியாக வைத்து, அவர் சொன்னதை இங்கே சொல்கிறேன். இந்தச் சட்டமன்றத்திற்கு திரு. இராமமூர்த்தி அவர்களை அழைத்துவந்து சாட்சியாக சொன்னதை இங்கே சொல்கிறேன். நீதிபதிகளாக இருக் கிற நீங்கள் அதை எல்லாம் கவனித்து 1958-ல் இருந்து நாங்கள் போட்டது, அரசு போட்டது சரியா இல்லையா என்று நீங்கள் தீர்ப்புக் கூறவேண்டும்.

அதைப்போலதான் அன்றைக்கு மாணிக்கவேல் நாயக்கர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, மொழிந்து, நிறைவேற்றினார். அவர் சொல்லுகிறபோது முன் இவை எல்லாம் முன்பே நடந்திருக்கின்றன; இனிமேல் மிச்ச நிலம் அதிகமாக வராது என்று சொல்லியிருக் கிறார்கள்.

பிற்பகல் 6.00

நான் முதலிலே சொல்கிறபோது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பற்றி— காந்தியைப் போன்றவர்கள், நேருவைப் போன்றவர்கள் பற்றிச் சொன்னேன். நேருவிடம் எனக்கு அதிகமான மதிப்பு உண்டு. இளம் வயதில் அவர்கள் 20 வருடங்கள் ஜெயிலுக்குச் சென்றார்கள். இளம் வயதில் அவர்கள் ஜெயிலுக்குச் சென்றதால் அவரிடம் மதிப்பு என்றாலும், கொள்கை என்று வரும்போது, நேரு அவர்கள் இங்கே வந்தபோது கறுப்புக் கொடி பிடிக்கச் சென்றவர் களில் நானும் ஒருவன் என்னும்போது அது வேறு. ஆனால் அவர்களிடத்திலே மதிப்பு உண்டு. நேரு அவர்கள் நாடாளு மன்றத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால், I want it to be known by everybody concerned that eviction in any part of the country is a crime.

இந்த நாட்டிலே எங்கே இருந்தாலும் சரி, அவர்களை நிலத்திலே இருந்து வெளியே அனுப்பினால் அது சட்டத் திற்கு விரோதமானது, அது குற்றம் என்று நாடாளுமன்றத் தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நான் முதலிலே சொல்கிறபோது அமைச்சர்கள் சொன்னதைச் சொன்னேன். அதற்கு முன்னாலே உறுப்பினர்கள் சொன் னதைச் சொன்னேன். அரசியல் தலைவர்கள் சொன்னதைச் சொன்னேன். அது மட்டுமல்ல, கவர்னர் சொல்லியிருக்கிறார் கவர்னர் அவர்களுடைய உரைதான் ஆளுகின்ற கட்சியி னுடைய கொள்கை. ஆளும் கட்சியினுடைய கொள்கையைத் தான் கவர்னர் அவர்கள் சொல்கிறார். அப்படிச் சொல் கிறபோது, 1-8-1955 ல் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சொல் கிறபோது A Bill on Cultivating Tenants பண்ணை



சட்டம் வந்து இருக்கிறது; A Bill on Fair Rent வந்து விட்டது. 1955-ல் கவர்னர் அவர்கள் சொல்லு கிறார்கள். அவர் சொல்வதுதான் ஆளுங் கட்சியினுடைய கொள்கை. A Bill on cultivating Tenants பண்ணையாள் சட்டம், நிலத்திலிருந்து வெளியேற்றுவதை தடுக்கும் சட்டம் வந்து விட்டது. A Bill on Fair Ren— நியாய குத்தகைச் சட்டம் வந்துவிட்டது. பாக்கி என்ன இருக்கிறது? A Bill on the implemen-tation of fixation of ceiling on lands என்று 1955-ல் சொல்கிறார்கள். ஏன் 1958 என்று போட்டீர்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். 1955-ல் இருந்து என்று போடவில்லையே என்றுதான் அவர் சொல்லி இருக்க வேண்டும். 1955-ல் இருந்து போட வேண்டுமென்பதற்கு அத்தாரிடி இருக்கிறது.

கவர்னர் அவர்கள் இதே மன்றத்தில் சொல்லியிருக் கிறார்கள். A Bill on the implementation of Fixation of ceiling on lands நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவர வேண்டும் என்று ஸ்ரீ பிரகாசா அவர்கள் சொல்லியிருக்கிறார். அதைத்தான் பி. இராமமூர்த்தி அவர்கள் 1955-ல் இருந்து போட வேண்டு மென்று சொல்லியிருக்கிறார். கல்யாணசுந்தரம் அவர்களும் சொல்லியிருக்கிறார். பிரஜா சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். நான் சிறு வயதாக இருந்த போது அவர்களை எல்லாம் காங்கிரசில் பார்த்திருக்கிறேன். ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு 1947-ல் வந்தபோது நான் சிறுவன். அவர்கள் எல்லாம் சொன்னது, 1958, 1955, 1952. ஆகவே 1958 என்று ஏன் போட்டோம் என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் மதுரையிலே ஆழ்ந்து யோசித்து, சட்டங்களை எல்லாம் படித்து, அவர்கள்தான் அந்தத் தேதியைச் சொன் னார்கள். 1-1-1958 என்று அவர்கள்தான், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் சொன்னார்கள். அவர்கள் ஏன் அதைச் சொன்னார்கள் என்றால், திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் கவர்னராக இருந்தபோது இதையேதான் சொன்னார்கள். 3 விதமான நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். 2 கொண்டு வந்தாகிவிட்டது. மீதி இருப்பது நில உச்ச வரம்பு. அது மிக விரைவில் வருகிறது. அரசு அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிற போது ஏன் இப்படிப் போட்டீர்கள் என்று கேட்டார்கள். இந்தக் காரணங்களால்தான் அதைப் போட்டோம் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

பிற்பகல் 6.05

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது,' that has not been explained in the Statement of objects and reasons. ஜனவரி 1, 1958 என்பது ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதை விளக்கி இருக்க வேண்டும். நிச்சயமாக நாளைய தினம் விளக்கியாக வேண்டும். எனக்கு இங்கே விளக்கம் சொல்வது போதாது. நாளைய தினம் இது வரப் போகிறது. The Bill travels beyond the Principal Act. Principal Act என்பது 1961-ல்தான் நிறைவேற்றப்படுகிறது. இருந்தாலும் சட்டம் இப்போது பின்னோக்கி இழுப்பதாக இருக்கக் கூடாது. 1960 ஏப்ரல் 6 க்கு அழைத்துச் செல்கிறது. ஏனென்று சொன்னால், அந்தத் தேதியில் சொல்லியிருக்கிறார்கள் சட்டம் வரப்போகிறது என்று. இந்த சட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறபோதே சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தேதிக்குப் பின்னால் வருவது செல்லுபடியாகாது என்று சொல்லியிருக்கிறார்கள். தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதேபோல அதற்கு 2 வருடம் 3 மாதத்திற்கு முன்னாலே அழைத்துச் செல்லும்போது என்ன சொல்லவேண்டும்? அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று வரிசையாக விளக்கிக் கொண்டு வந்தார்கள். வி. கே. கோதண்டராமன் பேசியிருக்கிறார். 1955 ஆம் ஆண்டிலிருந்து வரவேண்டு மென்று சொன்னார் என்று நானே சொன்னேன். அதே போல இன்னொரு உறுப்பினர் 1952 என்று சொல்லியிருக் கிறார் என்றும் சொன்னேன். காங்கிரஸ் கட்சியின் கொள்கை என்று எடுத்துக் கொண்டால் 1930-ம் ஆண்டி லேயே உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று கராச்சி தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறோம். இதிலே நீங்கள் விளக்கியிருக்கவேண்டும். அது விளக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் வாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதற்கு நன்றி. இதைச் சொல்வதற்குக் காரணம், 1958-ல் இதைப் போடாததற்குக் காரணத்தைச் சொன்னேனே தவிர காரணம் நமக்கு எழுத்து பூர்வமாக சட்டத்துறையாலே எழுதப்பட்டிருக்கிறது. இந்த சட்டமுன் வடிவை நிறைவேற்றி அனுப்புகிறபோது இந்த விளக்க கடிதத்தை வைத்துதான் முன்பும் அனுப்பியிருந்தோம்.



இப்போதும் இதை வைத்துத்தான் அனுப்ப இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதெல்லாம் சட்ட மன்றத்தின் பதிவேடுகளில் அப்படியே தப்பில்லாமல் பதியப் படுகிறது. அதில் எந்தவிதமான தவறுமே இல்லாமல் பதியப் பட்டிருக்கிறது. அதை அனுப்பும்போது அதையும் சேர்த்து அனுப்புகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சட்டத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள், சொல்கிறபோது 1990 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவுதான் என்று சொன்னார்கள். 1990 வது ஆண்டு சட்டமுன்வடி வுக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இந்தச் சட்டத்தை புதிதாகத்தான் கொண்டுவந்திருக்கிறோம். அப்படி இந்த அரசாங்கத்துக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அரசியல் சட்டம் ஆர்ட்டிகள் 200 படி இந்த சட்டத்தை திருப்பியனுப்பியிருந்தார்கள். அப்படி திருப்பியனுப்பப்படுகிறபோது ஆர்ட்டிகிள் 201 படி, நாம் என்ன செய்ய வேண்டுமென்றால் 6 மாதத்திற்குள் அந்தச் சட்டத்தை மீண்டும் அப்படியே அனுப்பலாம். திருப்பி யனுப்பலாம். 6 மாதம் கழித்துவிட்டால் செல்லாது என்றுதான் 201-ல் இருக்கிறது. ஆகவே இதைத் திருப்பி யனுப்பவேண்டுமென்று விதி இருந்தாலும் அந்த விதி பூரா வும் இதில் இல்லை. புதிதாக சட்டம் கொண்டு வருவதற்கு இந்த அரசுக்கு பூரணமான அதிகாரம் இருக்கிறது. நிலத்தைப் பொறுத்தவரைக்கும் பூரணமான அதிகாரம் மாநில அரசுக்குத்தான் இருக்கிறது. மத்திய அரசுக்கு என்று எந்த நிலமும் கிடையாது. ஆகவே இந்த சட்டத் தைக் கொண்டுவருவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசுக்கு நிலத்தைப் பற்றி சொந்தமே இல்லை. எல்லா நிலங்களும் Vested with the State Government என்றுதான் இருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. 201-ல் அப்படி அதிகாரம் இருக்கிறபோது அந்தச் சட்டத்தை உதறித் தள்ளிவிட்டு புதிதாக ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். 1990-ல் கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கும் இப்போது புரட்சித் தலைவி ஆட்சி கொண்டு வந்திருக்கிற சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அதிகாரம் இருக்கிறது என்று சொல்லுகிறபோது அப்படி நான் சொன்னால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களோ இல்லையோ என்பதற் காக சுப்ரீம் கோர்ட்டில் நடந்த ஒரு வழக்கைப் பற்றி 2 வரிகள் படித்துக் காட்டுகிறேன். புருஷோத்தமனுக்கும் கேரளா அரசுக்கும் இடையே ஒரு வழக்கு நடந்தது.

AIR 1962/SC/684 in case பதிலே ஜட்ஜ் சொல்கிறார் :

In our opinion there is nothing in the proviso to Article 201 which is inconsistent with the basic concept of democratic Govern-

ment in asking the successor-House, the successor-House to reconsider the Bill with the amendments suggested by the President, because of the proviso makes it perfectly clear that it is open to the successor-House.

பிற்பகல் 6-10

"It is open to the successor-House to throw out the Bill all together."

அங்கே வந்திருக்கிற, 1990 ஆம் ஆண்டு இதை நிறைவேற்றிய முன்னாள் அரசு— "It is open to the successor-House to throw out the Bill all together." என்று கூறியிருக்கிறது. மேலும் "It is only if the Bill is passed by the successor-House that the stage has reached to present it to the Governor or the President for his assent or otherwise."

ஆகவே இந்தச் சட்டத்தை, 1990 ஆம் ஆண்டு சட்டத்தை நாங்கள் அப்படியே தள்ளிவிட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லுகிறேன். "There is no legal bar to the introduction of a fresh Bill or to reconsider the Bill with necessary modifications." புதிதாக சட்டத்தைக் கொண்டு வரலாம். அதிலே மாடிஃபிகேஷனைச் செய்யலாம். ஆகவே நாங்கள் புதிதாக இங்கே சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே உள்ளேயும் சொன்னார்கள். முதலமைச்சராக வருவதற்கு முன்பும் சொன்னார்கள். சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பற்றி அல்ல. எண்ணங்களைப் பொறுத்து இருக்கிறது. அவர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும் அவர்கள் சொல்லுவது நல்லதாக இருந்தால் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னார்கள். அதைத்தான் நான் சொல்லுவதற்கு முன்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 1990 ஆம் ஆண்டுச் சட்டத்தை நாங்கள் தள்ளிவிடுவதற்குக் காரணத்தைச் சொன்னார்கள். மூலச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் எல்லோரும் வைத்துக்கொள்ளலாம் என்பதுதான். ஆனால் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்துள்ளவர்கள், அதற்கு மிகுதியாக உள்ள நிலத்தை விற்றவர்கள், பாகப்பிரிவினை செய்து கொண்டவர்கள், நில மாற்றம் செய்தவர்கள், 30 ஏக்கருக்கு மேலே உள்ளவர்கள்— 15 ஏக்கர் வைத்திருப்பவர்கள். செய்தால் அவர்களை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது— ஆனால் 30 ஏக்கருக்கு மேலே உள்ள



வர்கள் செய்த நில மாற்றங்கள் செல்லுபடியாகாது என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய ஷரத்தாகும். அதையும் 1970-லே கொண்டு வந்த சட்டத்தையும் ஒன்றோடு ஒன்றைப் போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சட்டம் வேறு. அந்தச் சட்டத்தின்படி உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர். அந்த 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது இன்றைக்கும் செல்லுபடியாகும். இந்தச் சட்டம் அந்தச் சட்டத்தை பாதிக்காது. 1961 ஆம் ஆண்டு சட்டத்தில், 1958 சனவரியிலிருந்து 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி வரையிலும் நடைபெற்ற நில மாற்றம் மட்டும்தான் செல்லாது என்பதைத் தவிர அதற்குமேல் 15 ஏக்கரா அல்லது 30 ஏக்கரா என்ற கேள்வியல்ல. 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான். இங்கே அந்தச் சட்டத்தை நாம் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணமாக அந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதில், இன்றைக்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேலே வைத்திருப்பவர்கள் செய்த நில மாற்றங்கள் செல்லாது என்பதுதான் இந்தச் சட்டம். ஆனால் கருணாநிதி கொண்டு வந்த சட்டத்தின்படி 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை செல்லும், அதற்கு மேல் உள்ள நில மாற்றங்கள்தான் செல்லாது என்பதுதான். அதற்காகத்தான் நாங்கள் அதை எடுத்துக் கொள்ளவில்லை.

அதுமட்டுமல்ல. முதலிலே கொண்டு வருகிறபோது, யாராவது உண்மைக்குப் புறம்பான தகவலைக் கொடுத்தால் ஐயாயிரம் ரூபாய் அபராதம் என்று சொன்னார்கள். ஆனால் கருணாநிதி அவர்கள் பெருந்தன்மையாக, பணத்தின் விலை குறைந்துவிட்டது என்று இரண்டாயிரம் ரூபாய் என்று சொன்னார்கள். நாங்கள் மீண்டும் ஐந்தாயிரம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறோம். 1990 ஆம் ஆண்டு சட்டத்திற்கும் 1991 ஆம் ஆண்டு சட்டத்திற்கும் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதால் அந்தச் சட்டம் மக்களுக்குப் பயன் அளிக்காது என்பதால், உச்சநீதி மன்றத்தினுடைய டைரக்ஷன்படி அப்படியே அதைத் தூக்கிப்போட்டுவிட்டு இந்தச் சட்டத்தைப் புதிதாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6.15

அப்படி இந்தச் சட்டம் கொண்டு வரும்போது அன்றைக்கு 60, 30 என்று இங்கே நம்முடைய அருமை சகோதரர், எதிர்க்கட்சித் தலைவர் சொல்லும்போது சொன்னார்கள்.

இன்றைக்கு அந்த சட்டப்படி 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேலே உள்ளவர்கள் செய்த நில மாற்றங்கள் மட்டுமே செல்லாது. அதுவரையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றால் அதற்கு பிறகு 1970 ஆம் ஆண்டு சட்டப்படி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் எல்லோரும் வைத்துக்கொள்ள லாம் என்பதுதான் இந்தச் சட்டம் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது ஒன்றைச் சொன் னார்கள். இன்றைக்கு பலவற்றை சொல்லும்போது ஒன்றைச் சொன்னார்கள். 1988 ஆம் ஆண்டு பினாமி சட்டம் என்று சொன்னார்கள். அந்த பினாமி சட்டம் என்பதும் குறிப்பாக நிலத்திற்காக கொண்டுவரப்படவில்லை. 'இம் மூவபிள்', 'மூவபிள்'— கண்ணிலே பார்ப்பது. பார்க்க முடியாதது— இப்படி அதற்கு ஒரு அளவே இல்லாமல் கொண்டு வந்து இருக்கிறார்கள். கண்ணாலே பார்ப்பது, பார்க்க முடியாதது இப்படிப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட பினாமி என்றால், யார் பினாமியாக வைத்து இருக்கிறார் களோ, நான் இந்த நிலத்தை இன்னாருக்காக பினாமியாக வைத்து இருக்கிறேன் என்று நானே வந்து சொன்னால் தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் இன்றைக்கு பினாமியாக வைத்து இருப்பவர்கள் நானே வைத்து இருக் கிறேன் என்று யாரும் சொல்ல வரமாட்டார்கள். அந்தச் சட்டம் இப்போது பயன்பெறாது என்பதனாலே தான் அதையும் நான் எழுதி வைத்து இருக்கிறேன். சாதாரணமாக இன்றைக்கு இதிலே எந்தவிதமான தவறும் இருக்கக் கூடாது; எல்லாம் சரியாக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒவ்வொன்றாக அலசிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஒரு note வந்து இருக்கிறது. Regarding the scope of the Benami Transactions Act 1988 M R desires that it may be examined and a report given about the above Act of 1988. நான் கேட்டு இருக்கிறேன். இப்படி இதிலே நான் முடிந்த வரை யிலும் இந்த அளவுக்கு இவைகளை எல்லாம் கொண்டு வந்து இருக்கிறேன் என்று உங்களுக்கு தெரிவித்துக்கொள் கிறேன். இதிலே யார் யாரை போட வேண்டும் என்கிற பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, சட்டமன்ற உறுப்பினர்களைப் போட வேண்டும் என்று கொள்கை அளவிலே தான் எல்லோரும் சொன்னார்கள் என்று நினைக் கிறேன். அதிலே நாம் போடுகிறபொழுது, பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்கள்,



சமுதாயத் தொண்டர்கள் என்கிறபொழுது, சமுதாயத் தொண்டர்களிலே நாம் வந்துவிடுவோம் என்பதற்காகத் தான் அதைச் சட்டமன்றம் என்று போட்டுவிட்டோம். அதற்கு பிறகு பஞ்சாயத்து யூனியன் என்றால், பஞ்சாயத்து யூனியன் தலைவர் போட வேண்டும் என்பதற்காகத்தான் பொது வாகப் போடப்பட்டு இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே போல மற்றொன்றைச் சொல்லும்போது நம் முடைய விஸ்வநாதன் கூட சொன்னார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். அதிலே 15 ஸ்டாண்டர்டு ஏக்கரை, 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் 'ரெட் ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். அதை கவர்னர் திருப்பி அனுப்பினார்கள் என்று சொல்லும்போது அது சரியாக மைய அரசிலே பார்க்கவில்லை என்றுதான் சொல்லுகிறோமேயொழிய, அந்தச் சட்டத்திலே இருக்கிற, 1990 ஆம் ஆண்டு சட்டத்தில் இருக்கிற குறைபாடே— நான் சொன்ன குறைபாட்டை தவிர வேறு ஒரு குறைபாடும் அதில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

இப்படி பல்வேறு விவரங்களை நான் சொல்கிறபோது இப்படி எல்லா நிலங்களையும் எடுக்கும்போது நீங்கள் எல்லாம் எப்படி எப்படி நினைக்கிறீர்களோ அதற்கேற்ற வாறு, யாரும், அதை உண்மையாக வாங்கி வைத்துக்கொண்டு இருக்கிற உண்மையானவர்கள், நியாயமானவர்கள் பாதிக்கப் படாத விதத்தில்— யாருக்கும் நாம் கெடுதல் செய்யவில்லை சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்றால், யாருக் காவது கெடுதல் செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல; நியாயத்தை உண்டாக்க வேண்டும்: நியாயத்தை விளக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறோம்.

அப்பாவி விவசாயிகள் நிலை என்னாவது என்று பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட அப்பாவி விவ சாயிகள் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லி இந்த சட்டமுன்வடிவில் உங்களுடைய உணர்வுகளை நான் புரிந்துகொண்டு இருக்கிறேன். நீங்கள் சொன்னவைகளை எல்லாம் இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. புரட்சித் தலைவி அரசு இதை நியாயமான முறையில பயன்படுத்தும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம் (மேசையைத் தட்டும் ஒலி.)

**திரு. வி. தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் சொல்லிவிட்டார்.

பிற்பகல் 6.20

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சியிலே கொண்டு வந்த இந்த நில உச்சவரம்பு மசோதா 1962 ஏப்ரல் 13 ஆம் தேதி குடியரசுத் தலைவர் அவர்கள் கையெழுத்திட்டு, 1962 மே 2 ஆம் தேதி அரசாணை மூலமாக அமலுக்கு வந்தது. அப்போது 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஒரு குடும்பத்திற்கு வைத்திருந்தார்கள். 1970 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராக குறைத்த போது ஐந்து பேருக்கு மேலே ஒரு குடும்பத்தில் இருந்தால், ஒவ்வொருவருக்கும் ஐந்து ஐந்து ஏக்கர் என்று சொல்லி ஒரு ஓட்டை போட்டார்கள். அப்போது ஒரு குடும்பத்தில் 10 பேர் இருந்தால் 15 க்கு மேலே, ஐந்து ஐந்தாக இருபத்தைந்து வரும்போது 40 ஏக்கர் வந்துவிடுகிறது. அது அப்படியே இருக்கிறதா? குடும்பத்தினுடைய அளவு என்ன? அந்த நிர்ணயம் என்ன? இது ஒன்று, தெரியவேண்டும். இன்னொன்று, காங்கிரஸ் கட்சி காலத்தில் 13 இனங்களுக்கு விதிவிலக்கு வைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவர்கள் வந்தவுடன் மேய்ச்சல் நிலத்தையும், கரும்புத் தோட்டத்தையும் எடுத்து விட்டார்கள். இப்போதும் அது இருக்கிறதா, இல்லையா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இதையேதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டு இருந்தார்கள். குடும்பம் என்பது என்ன என்று? மூலச் சட்டத்தில் குடும்பம் என்று எதைக் குறிப்பிட்டு இருக்கிறோமோ அந்தக் குடும்பம் அப்படியே இப்போதும் இருக்கிறது. அதற்கு மூலச்சட்டத்தில் எந்த மாற்றமும், திருத்தமும், கொண்டு வரவில்லை. மூலச் சட்டத்தில் ஒரு குடும்பம் ஐந்துபேர், வயதுக்கு வந்த ஐந்து பேர்— அதற்குமேல் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர்— மூலச் சட்டத்தில் ஐந்து ஏக்கர் என்றால் மொத்தமாக 60 ஏக்கருக்கு மேல் போகக்கூடாது என்பது அப்போது. ஆனால் 1970 வது சட்டத்தில் அதே குடும்பம்தான். அதிலே 30 ஏக்கருக்கு மேல் போகக் கூடாது என்பது தான். இவைகள் எல்லாம் முன்பே மூலச் சட்டத்தில் இருக்கிறது. அடுத்தபடியாக விதிவிலக்கு எதற்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. லட்சுமணன்.



*திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் என்பது ஒரு பிரதானமான சமதர்ம நடவடிக்கை சொத்தின் மீதும் அதைத் தொடர்ந்து வருமானத்தின் மீதும் கொண்டு வருகிற ஒரு உச்சவரம்பு. இதை நிறைவேற்றுகிற போது நிறைய உபரி நிலங்கள் கிடைக்கும். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்கிறபோது, வெறும் குத்தகைதாரர்களை மட்டும் உழுபவர்களாகக் கருதாமல், அந்த நிலத்தை உண்மையாக உழுபவர் யார் எனக் கண்டு, அவருக்கு மட்டும் உபரி நிலத்தை வழங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையாக உழுபவர்கள் யார் என்று கண்டுபிடிப்பது மிகக் கடினமாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் பெயராலே தண்ணீர்த்தொகை இருக்கும், வாய்தா இருக்கும். அவர்கள் வரப்பு பக்கமே போய் இருக்க மாட்டார்கள். ஆகவே, அவர்களுடைய நிலம் இல்லையென்று சொல்ல முடியாது. சிலபேர் அவர்களே உழுவார்கள். அவர்களுக்கு நிலம் இருக்காது. கூலிவேலை மட்டும் செய்து கொண்டிருப்பார்கள். இது சங்கடமான ஒன்று. இருந்தாலும், அதையெல்லாம் இந்த அரசு யோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி.)

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

நான் முதலிலேயே சொல்லி இருந்தேன், சட்ட முன்வடிவு ஏற்கப்படுகிற நேரத்தில் நீங்கள் ஆதரவு தெரிவித்தால் போதும்.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 37/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கபெற்றது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6.53

(உ) வேளாண் வருமானம் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1991). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டுதமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

*30-9-1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிட பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 12 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை என்க'' (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவு 13. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'In clause 13, in sub-clause (1), for "the date of the publication of this Act", substitute "the the date of the commencement of this Act.",

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 13 திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவுகள் 14 மற்றும் 15 திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 14 மற்றும் 15 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' ''என்க'' (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்மிபுகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(மேசையைத் தட்டும் ஒலி).

(ஊ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1991). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ். இருக்கையில் இல்லை.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

*30-9-1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 7 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவு நிறை வேற்றப்பெற வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடி விற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6.30

(எ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.38/1991). மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச்சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இ. செல்வராஜ்.

திரு. இ. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவினை ஆதரித்துப் பேச வாய்ப்பினை கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் மூலம், இன்று தமிழகத்தில் பல பிரிவுகளாக விவசாயக் கூட்டுறவு வங்கி, விவசாய பிரதம நில வள வங்கி, கூட்டுறவு விற்பனையாளர்கள் சங்கம் என செயல்பட்டு வருகிறது. இதில் விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் மானிய விலைக்கு உரம் வினியோகிக்கும் போது, உரங்களை கையிருப்பில் வைத்துக்கொண்டே இல்லை என்று கூறிவிட்டு மறைமுகமாக அதிக விலைக்கு உரங்களை கள்ளத்தனமாக விற்கிறார்கள். அதைத் தடுக்கும் விதத்தில் கூட்டுறவு மாவட்டத் தலைமை நிலையம் மூலம் ஒரு பட்டியல் போட்டு ஒவ்வொரு கிராமக் கூட்டுறவு நில வள வங்கியின் மூலம் எந்தெந்த தேதிகளில் மாதந்தோறும் வினியோகிக்கப்படுகின்றது என்பதை முறையாக மாவட்ட கூட்டுறவு வங்கிகளே தேதிகளை அறிவித்து விவசாயிகள்

---

*1-10-1991-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



முறையாக உரங்களை வாங்கிக் கொள்ளும்படி, இப்படி தவறான முறையில் விற்பவர்களைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்திப் பொருள்களை கூட்டுறவுத் துறையின் மூலம் நேரடியாக ஒரு விலையை நிர்ணயித்து வாங்கி, மாவட்ட வாரியாக தலைமை கூட்டுறவு சங்கங்கள் வெளிமார்க்கெட்டுகளுக்கும் நியாய விலைக் கடைகளுக்கும் விநியோகிக்க வேண்டுகிறேன். அப்படி விலை நிர்ணயித்து கூட்டுறவு சங்கமே வாங்கி விற்கும்போது தமிழகம் முழுவதும் ஒரே விலையில் உணவுப் பொருட்களை பொதுமக்கள் பெறமுடியும், உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தை தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு அரசு மானிய விலையில், விதைகள், பூச்சி மருந்துகள், உரங்கள் வழங்கி அவர்களின் விவசாய பராமரிப்பு பணிக்கு முன் பணமாக கடன் வசதி செய்து கொடுத்து, அவர்களின் விவசாய விளைச்சல் பயிர்களை நோய் தடுக்க விவசாய பரிசோதனை அதிகாரிகளை அரசு நியமித்து, விவசாயிகளின் விளைபொருட்கள் உற்பத்தியை உயர்த்தும் விதத்தில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தவேண்டுகிறேன்.

குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் துடியலூரில் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் என்ற ஒரு ஸ்தாபனம் மிகச் சிறப்பாக தமிழகத்தில் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அங்கே நகைக் கடன், உரக்கடன், வீட்டு வசதிக் கடன், நிலக் கடன், கிணறு தோண்டக் கடன், விவசாய விளை பொருட்களுக்கான பூச்சி மருந்துக் கடன், நிலம் உழும் டிராக்டர், வாகன வசதிகள், சொந்தமாக உரம் பூச்சி மருந்து தயாரித்தல், நியாய விலைக் கடைகள், பெட்ரோல் டீசல் விற்பனை நிலையம், பூவிலிருந்து வாசனைப்பொருள் தயாரித்தல், இப்படி எல்லா வசதிகள் கொண்ட கூட்டுறவுச் சங்கம் துடியலூரில் கோடிக்கணக்கான ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இதுபோன்று மாவட்டந்தோறும் ஒரு பெரிய கூட்டுறவு சேவா சங்கத்தை அரசு நிறுவி, அந்தச் சங்கத்திற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை, பெரிய அதிகாரிகளை பொறுப்பாக நியமித்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிறுவனங்களில் செயல்பட்டு வரும் கூட்டுறவு விநியோக மையங்களில், பல பொருட்களைக் குறைந்த விலையில் வாங்கி, அரிசி, துணி போன்ற பொருட்களை தனியாரிடம் வாங்கி, அவரவர்கள் சௌகரியத்திற்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் அதிகமான விலைக்கு விற்று வருகிறார்கள். அவர்கள் அதிகமான விலைக்கு விற்கும்பொழுது

[திரு. கி. செல்வராஜ்] [1991 அக்டோபர் 3

சில தவறுகள் நடக்க ஏதுவாக உள்ளது. தங்களுக்கு என கமிஷன் வைத்து வாங்குகின்றார்கள். இப்படிப்பட்ட பொருட்களைத் தடுப்பதற்காக கூட்டுறவுத் துறையின் மூலம் தனியார் நிறுவனங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கே எல்லா பொருட்களையும் விநியோகித்து விற்பனை செய்ய வேண்டுகிறேன்.

அத்தோடு கூட்டுறவு நியாய விலைக் கடைகளில், அரிசி, மண்ணெண்ணெய் போன்றவைகளை ரேசன் கார்டுகளுக்கு வழங்கும்போது அளவு குறைவாக வழங்குவதும் வாங்காத கார்டுகளுக்கு வாங்கியதாக பதிவு செய்துவிட்டு, அந்த நியாய விலைக் கடை ஊழியர்களே அந்தப் பொருட்களை அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்கள். அத்தோடு நியாய விலைக் கடை ஊழியர்களே, போலி ரேசன் கார்டுகளை வைத்துக்கொண்டு, ரேசன் கார்டுதாரர் பொருட்கள் வாங்கியதாக பதிவு செய்துவிட்டு பொருட்களை திருட்டுத்தன மாக விற்கிறார்கள். அதைத் தடுக்க கூட்டுறவுத் துறையில் நடக்கும் தவறுகளைக் கண்டுபிடிக்க மாவட்டவாரியாக ஒரு கண்காணிப்புக் குழுவை நியமிக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 6.35

இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாது, தனி அதிகாரிகள் செயல்பாட்டில் அது வருவ தால். அவர்கள் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்க முடிவதில்லை. ஆதலால் உடனடியாக கூட்டுறவுச் சங்கங் களின் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தேர்தல் நடக்கும் வரை கூட்டுறவு சங்கங்களைக் கண்காணிக்க மாவட்ட வாரியாக சட்டமன்ற உறுப்பினர் களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி சிறப்பாக செயல்பட்டு வந்தது. கடந்த ஒரு ஆண்டுகாலமாக சோடிக்கணக்கான ரூபாய்கள் தவறு நடந்திருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டன. பொருள் கள் வாங்காமல் வாங்கியதாகவும் வாங்கும் பொருள்களை அதிக விலைக்கு விற்பதாகவும் பில்கள் போடப்பட்டு தவறு கள் நடந்தன. அந்தத் தவறுகளைக் கண்டு பிடித்து அங்கு பணியாற்றி வந்த குமாஸ்தாக்களையும் அதிகாரிகளை யும் கைது செய்து விசாரணை நடத்தினார்கள். இதுவரை யில் அந்த விசாரணையின் முடிவு என்ன என்பது தெரிய வில்லை. அந்த முடிவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



1991 அக்டோபர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு .ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்க சட்டமுன்வடிவினை ஆதரித்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கிற தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி எனக்கு முன்பாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல இன்றைக்கு கூட்டுறவு மக்களுடைய நாட்டுறவாகி மக்களுடைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒரு சங்கமாக விளங்குகிறது. வியா பாரிகளுடைய விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டு மென்று சொன்னால். சரியாக இருக்க வேண்டு மென்று சொன்னால் நம்முடைய கூட்டுறவுத் துறை யிலே வழங்கக்கூடிய பொருட்களின் மூலமாகத்தான் அந்த விலைகளை இன்றைய தினம் கட்டுப்படுத்த முடியும். அதோடு மட்டுமல்ல அன்றாடம் மார்க்கெட்டுகளை கூட நிர்ணயிக்கின்ற வகையில், விவசாயிகளின் புஞ்சை தானிய மாக இருந்தாலும் கொள்முதல் செய்வதிலே விநியோகம் செய்வதிலே கூட, அரசாங்கம் கூட்டுறவு முறையிலே நிர்ண யிக்கின்ற விலைதான் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு தங்க ளுடைய இஷ்டம்போல் வர்த்தகத்தை நடத்த இயலாமல் சரியாக நடத்துவதற்கு கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பாக இருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர் கள் கூட்டுறவுச் துறையிலே இந்த அவையிலே பல்வேறு கேள்விகளுக்கு பதில் சொல்லுகிறபோது, கூட்டுறவுத் துறை யிலே சிறிய சிறிய தவறுகளை போக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி போக்க வேண்டுமென்றால் அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஏற்கெனவே நடந்து முடிந்திருக்கிற கூட்டுறவுத் தேர்தலில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று சொல்லி இன்றைய தினத்திலே மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட கூட்டுறவுத் தலைவர்கள் உறுப்பினர்கள் கலைக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் தனி அலுவலர்களை நியமிப்பதற்கு சட்டமுன்வடிவு கொண்டு வருகின்றபோது, காலத்தோடு கூட்டுறவுத் தேர்தல்களை நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிலே அங்கம் வகித்தால்தான் அதிலே நடைபெறுகிற தவறுகளை களைய முடியும். மக்களுடைய தேவைகளை அரசினு டைய கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும். அந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்புகளை ஏற் படுத்தித் தர முடியும். ஆகையினால், அலுவலர்களை நீங்கள் நியமிக்கின்ற இந்த நேரத்தில் உடனடியாக விரை விலே கூட்டுறவு தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் சங்கங்களுக்கு தமிழ்நாட்டிலே கடந்த 10, 12 ஆண்டுக்காலமாக தேர்தலே நடைபெறாமல் இருந்தது. அந்த தேர்தல் நடைபெற்று அந்தந்த கூட்டுறவு சங்கங்களுடைய உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலிலே கூட்டுறவு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படி ஒரு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த கூட்டுறவுச் சங்கங்களை தமிழக அரசு கலைத்திருக்கிறது. அப்படி கலைப்பதற்கு அடிப்படையான காரணம் தவறு நடந்திருக்கிறது என்று கூறுகிறபோது, சில இடங்களில் அவ்வாறு தவறுகள் நடைபெற்றிருக்கலாம். நான் இல்லை என்று சொல்லவில்லை. அப்படி தவறுகள் நடந்த இடங்களை கண்டுபிடித்து அதன் மீது நடவடிக்கை எடுத்து ஒழுங்கு படுத்துவதற்கு பதிலாக நாடு முழுவதும் தவறு நடந்து போச்சு என்று சொல்வது பொருத்தமாக இல்லை. அதிலே சில தவறுகள் நடந்திருக்கிறது. எதிலே? நியமன உறுப்பினர்களை நியமிக்கின்றபோது.... (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பிற்பகல் 6.40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியமன மெம்பர்களை அந்த மெம்பர்களாக ஆக்கி சொஸைட்டியைக் கைப்பற்றினார்களே அது நியாயமா? ஓட்டு போட விடாமல் தடை செய்தது நியாயமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குமாறு நான் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி அவர்கள் தொடர்ந்து சட்டமுன்வடிவின் மீது பேச வேண்டும்.

திரு. வே. தம்புசாமி : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக யாருக்கோ வக்காலத்து வாங்குகிறேன் என்று தயவு செய்து நினைத்துக் கொள்ளக் கூடாது. அண்ணா தி.மு.க. வும், தி.மு.க.வும் இரண்டும் சேர்ந்தே நாங்கள் வரக் கூடாது என்று எதிர்த்த பல இடங்கள் உண்டு. அதனால் நான் அதைச் சொல்லவில்லை. அப்படி நிறைய சொல்ல முடியும். அப்படி நிறைய அனுபவங்கள் இருக்கின்றன. அதற்கெல்லாம் போகவில்லை. ஆனால் நான் என்ன சொல்



கிறேன் என்றால் பொதுவாக நாடு முழுமையும் ஒரே
நேரத்தில் தவறு நடந்துவிட்டது என்பது அல்ல. நியமன
உறுப்பினர்கள் நியமித்ததிலே தவறு நடந்து இருக்கிறது. ஆனால்
இதே மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலே அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசு இருக்கின்றபோது நியமன
உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். தேர்தல் நடக்காத
காலத்திலே நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.
இப்போது அதே நடைமுறைதான் இந்த கூட்டுறவுச் சங்கத்
திலேயும் அந்த நியமன உறுப்பினர்கள் (குறுக்கீடு) அதைத்
தான் சொல்கிறேன். இப்பவும் அந்த நியமன உறுப்பினர்
கள் தலைவர் தேர்தலுக்கு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நியமித்தது
நியமன குழு உறுப்பினர்கள். நியமித்தோம். ஆனால் அன்றைய
அரசு தேர்தல் என்ற முறையில் ஜனநாயகத்தில் நம்பிக்கை
இருக்கிறது என்று சொல்லி ஜனநாயகத்திற்கு குழி தோண்டு
கின்ற வகையில் உறுப்பினர்கள் அல்லாதவர்கள், அந்த
கிராமத்திலே இல்லாதவர்கள், அந்த சரவுண்டிங்ஸ் என்று
சொல்லப்படுகின்ற இடத்திலே இல்லாத பல இடங்களுக்கு
அப்பாற்பட்டிருக்கின்றவர்களை எல்லாம் உறுப்பினர்களாகச்
சேர்த்து அந்தத் தேர்தலை நடத்தி வெற்றிகரமாக முடித்த
தாகச் சொல்லி ஜனநாயகத்திற்கு குழி தோண்டியிருக்கி
றார்கள். ஆகவே, அதைத்தான் நாங்கள் குறிப்பிட்
டோமே தவிர நீங்கள் சொல்வதற்கும் அதற்கும் வேறு
வித்தியாசம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : துணைத் தலைவர் அவர்களே,
10, 12 ஆண்டுகளாக தனி அதிகாரி கையிலே இந்த
நிர்வாகம் இருந்தது. அப்படி இருக்கின்றபோது அந்த நிர்
வாகத்திலே எவ்வளவு பெரிய ஊழல்கள் எல்லாம் நடந்தது
என்பது அனைவரும் அறிந்த உண்மை. எனவே இப்போ
தும் காலம் கடத்தாமல் விரைவாக தேர்தல் நடத்தப்பட
வேண்டும். ஏனென்றால் இன்னும் சில இடங்களில்
கடன் பெறுவதிலே, உரங்கள் பெறுவதிலே பல்வேறு பிரச்சி
னைகள் இன்றையதினம் இருக்கின்றன. அந்தப் பிரச்சி
னைகளை எல்லாம் விரைவாக தீர்த்து எந்த நோக்கத்திற்
காக இந்த கூட்டுறவுச் சங்கம் இருக்கிறதோ அந்த நோக்
கத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே அரசு விரைவாக

அந்த தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். நீண்டகாலம்
ஒரு தனி அதிகாரி கையிலே இந்த ஜனநாயக முறைப்படி
இருக்கக்கூடிய இந்த நிர்வாகத்தை ஒப்படைப்பதற்குப் பதி
லாக ஒரு ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில்
அந்த சங்கத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் மிகக்
குறைந்த சம்பளங்களிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் பரிந்துரைகளை எதிர்காலத்திலே பரிசீலித்து
குறைந்த பட்சம் அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கக்கூடிய
வகையில் அவர்களை அங்கீகரித்து அரசு ஊழியர்களுக்கு
கிடைக்கக்கூடிய சம்பள விகித அடிப்படையில் அதே
மாதிரி அரசு ஊழியர்களுக்கு கிடைக்கக்கூடிய பல்வேறு
சலுகைகள் அடிப்படையிலே அவர்களுக்கு சம்பளம் வழங்கு
வதற்கு அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கவேண்டுமென்றுகேட்டுக்
கொள்கிறேன். இன்னும் சில இடத்திலே இந்தச் சங்கம்
தேர்ந்தெடுத்த பிறகு, அந்த சங்கத்திலே பணியாற்றக்
கூடிய அந்த சங்கத் தலைவருக்கும் அந்த நிர்வாகத்திற்கும்
அதிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் அந்த சம்பள
விகிதத்திலே சில இடைக்கால ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்
கின்றன. அந்த ஒப்பந்தம் என்பது கலைக்கப்பட்ட பிறகு
செல்லுபடியாகாது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த
ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து, அந்த ஒப்பந்த அடிப்படை
யிலே அந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் பெரும்
பகுதியான இடங்களில் அந்த அணாவாரி சர்ட்டிபிகேட்
வழங்காமல் காலம் கடந்துக் கொண்டிருக்கிறது. உதாரணத்
திற்குச் சொன்னால் வேதாரண்யம் தாலுக்கா, தலைஞாயிறு
மூணாஞ்செட்டி கூட்டுறவு வங்கியில் மாவட்ட ஆட்சித்
தலைவர், வட்டாச்சியர், அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள்
முழுவதும் இந்த விவசாயம் கடுமையாக இரண்டு தடவை
யும் பாதிக்கப்பட்டுவிட்டது. அப்படி பாதிக்கப்பட்ட இந்தப்
பகுதிகளுக்கு நீங்கள் அணாவாரி சர்ட்டிபிகேட் வழங்கலாம்
என்று கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கிக்கு சிபாரிசு
செய்திருக்கிறார்கள். அப்படி செய்தும் கூட இன்று வரை
யிலே அணாவாரி சர்ட்டிபிகேட் வழங்காத காரணத்தால்
அந்த சங்கத்தில் இருக்கின்ற சங்க உறுப்பினர்கள் இப்போது
கடன் பெறமுடியாத ஒரு சிக்கலிலே நின்றுகொண்டு இருக்கி
றார்கள்.

பிற்பகல் 6.45

அங்கே கடைமடைப் பகுதிகளில் தண்ணீர் வந்து கொண்டிருக்
கின்றன. ஆகவே இப்போது சாகுபடி செய்யக்கூடிய விவ
சாயிகள் கடன் பெற முடியாமல் உரம் பெற முடியாமல்
ஒரு சிக்கலான பிரச்சினையில் அவர்கள் இருக்கிறார்கள்



ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக
பரிசீலித்து அந்த கிராமங்களுக்கு மேல் அதிகாரிகள் வழங்கிய
அந்த சான்றிதழ்களின் அடிப்படையிலே அணாவாரி
சான்றிதழ் வழங்குவதற்கு கொஞ்சம் விரைவாக நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) எனவே
இந்தக் கூட்டுறவுத் துறையில் தேர்தலை ஒரு 6 மாத காலத்
திற்குள் ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தி; அந்த
தலைவர்கள் தேர்தலை நடத்தவேண்டுமென்று இந்த நேரத்
தில் கேட்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு
நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர்.
சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டமுன்வடி
விலே பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கத்
தேர்தலைப் பொறுத்த வரையில் இங்கே மாண்புமிகு உறுப்
பினர்கள் இரண்டு சாமிகளும் சொன்ன கருத்துக்களை ஒட்டி
நான் அவர்களுக்கு பதில் சொல்லுகின்றபோது சென்ற தேர்தல்
ஒழுங்கீனமாக நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொண்டார்
கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்
துக்கொள்கிறேன். அதே போல் கூட்டுறவுச் சங்கங்களிலே
ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தவேண்டுமென்றுதான்
நாம் எல்லோரும் அன்று கோரிக்கைக் கொடுத்தோம், சட்ட
மன்றத்திலே பேசினோம். ஆனால் ஜனநாயகத்தைப் படு
கொலை செய்கின்ற அளவிலே அந்தத் தேர்தல் நடை
பெற்றது என்பதற்கு நான் ஒரு சில வார்த்தைகளால்சுட்டிக்
காட்ட ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்கின்றவர்
கள் ஒன்று அவர்கள், விவசாயிகளாக இருக்க வேண்டும்;
ஆனால் விவசாயிகளாக இல்லாதவர்கள் எல்லாம் நம்
முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்
கள் சொன்னது போல் எங்கேயோ இருந்து கொண்டு வந்து
இங்கே உறுப்பினர்களாக சேர்ந்து, நிரம்ப உறுப்பினர்களைச்
சேர்த்து தேர்தலைச் சந்தித்தார்கள். தேர்தலைச் சந்திக்
கின்றபோது கூட்டுறவு கடன் பாக்கி இருக்கின்றவர்கள்;
அந்தச் சங்கத்தைக் கட்டிக்காத்தவர்கள்; சங்கத்தை ஆளாக்கி
யவர்கள், சங்கம் நன்றாக இருக்கவேண்டுமென்ற உணர்
வோடு இருப்பவர்கள், நீண்ட பல வருடங்களாக இந்தச்
சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு எல்லாம்
தேர்தலில் நிற்கின்ற வாய்ப்பு இல்லை. ஏன் என்றால்

அவர்கள் கடன் பாக்கி இருப்பவர்கள். ஆகவே திமுர் என்று புதிய உறுப்பினர்களை மட்டும் சங்கத்திலே சேர்த்து அந்தத் தேர்தலை நடத்தினார்கள். தி.மு.க.வைச் சேர்ந்த வர்கள் அல்லது அவர்களுடைய ஆதரவைப் பெற்றவர்களை மட்டும்தான் உறுப்பினர்களாகச் சேர்த்து அந்தத் தேர்தலை நடத்தினார்கள். ஆகவே, பழைய உறுப்பினர்கள் 10 சதவீதம் கூட அதில் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் நடைபெற்று சில இடங்களில் காங்கிரஸ் அனைத திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி வெற்றிப் பெற்றாலும் அவர்களை வரவிடாத அளவுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதுதான ஜனநாயக படுகொலைச் சட்டம், அந்தச் சட்டத்திலே ஒரு 5 பேர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—— காங்கிரஸ் கூட்டணியில் வெற்றிப் பெற்றாலும் ஒரு 3 பேர் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் வெற்றிப் பெற்றாலும் மேற் கொண்டு 5 பேரை நாமினேஷனாகப் போட்டு ஆக தி.மு.க. உறுப்பினர்தான் தலைவராக வரவேண்டும் என்று ஜனநாயகப் படுகொலைச் சட்டத்தை அவர்கள் போட்டார் கள். அதைத்தான் நான் கடுமையான ஆட்சேபிக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நீங்கள தேர்தலை நடத்தும்போது அந்தத் தேர்தலை ஜாக்கிரதையாக, உன்னிப்பாக கவனித்து சில கோரிக்கைகளை நான் சொல்கிறேன், அதை ஏற்றுக் கொண்டு தேர்தலை நடத்தவேண்டும். சாதாரணமாக தேர்தலை நடத்தக்கூடாது. ஏன் என்றால் அங்கே சேர்க்கப் பட்டு உள்ள பினாமி உறுப்பினர்களை எல்லாம் நீக்க வேண்டும். அந்த பினாமி உறுப்பினர்களை எல்லாம் நீக்கி விட்டு புதிய உறுப்பினர்களை புரட்சித் தலைவர் ஆட்சி யிலே இங்கே அறிவித்ததைப் போல பெண்களை உறுப் பினர்களாகச் சேர்த்து, ஏனைய விவசாயிகளை உறுப்பினர் களாகச் சேர்த்து அருமை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சார்பாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங் களின் கடன்களை தள்ளுபடி செய்துவிட்டு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைத் தலைவர் சார்பாகவா? வழியாகவா?

திரு. ஆர் சிங்காரம் : அவர் வழியாக, கூட்டுறவுச் சங்கங்களின் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்துவிட்டு அந்த விவசாயிகளை எல்லாம் நிரபராதிகளாக ஆக்கிவிட்டு



அதன்பிறகு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்ினால் உண்மையில் ஜனநாயகர்தியாக நல்ல தேர்தலாக அமையும் என்று கேட்டுக்கொண்டு தமிழகத்திலே ஒரு சில இடங்களில் தான் நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே அப்படிப்பட்ட முறை கேடுகள் எல்லா இடங்களிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங் களில் தேர்தலில் நடைபெற்றது. வேண்டும் என்றே திட்ட மிட்டு நூற்றுக்கு நூறு தி.மு.க. தலைவர்கள் தான் வரவேண்டும் என்ற அடிப்படையில் நடந்த தேர்தலை நீங்கள் தள்ளுபடி செய்வது மிகவும் நியாயம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மாநிலத்திலுள்ள குறிப்பிட்ட சில தொடக்க நிலை சங்கங்களுக்கு தனி அலு வலர்களை நியமிப்பதற்கு வகை செய்வதற்கான சட்ட முன் வடிவின் விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு கிடைத்து இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தினை தாங்கள் தந்த மைக்கு நான் நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்,

பிற்பகல் 6.50

நான் இந்த சட்டமுன்வடிவின் மீது விவாதத்திலே கலந்து கொண்டு பேசுகிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்களிட மிருந்து ஒரு சிறிய விளக்கத்தை நான் எதிர்பார்க்கிறேன். Section 4 (1)(a) 'notwithstanding anything contained in the Cooperative Societies Act or in any other law for the time being in force or in any degree or order of any Court, Tribunal or other authority, on and from the appointed day the Government shall appoint a person as Special Officer to manage the affairs of any primary society' என்று இருக்கிறது. ஒரு நபருக்கு என்று இருக்கிறதே, அந்த ஒரு நபர் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரியா? அல்லது வேறு யாராவது ஒரு பொதுநல ஊழியர்கூட, அதிலே தனி அதிகாரியாகப் போடுவதற்கு இந்த சட்டமுன்வடிவு தயார் செய்யப்பட்டிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். அப்படி, 'a person' என்று போட்டால் சில கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய சங்கங்களாக இருக்கின்றன; கோடிக்கணக்கான ரூபாய்கள் புழங்குகிற அந்தச் சங்கங் களிலே ஸ்பெஷல் ஆபீசராக வேலை பார்ப்பதற்கு அவருக்கு சில தகுதிகள் வேண்டாமா? அந்த தகுதிகள் இந்த சட்டமுன் வடிவிலே குறிப்பிடப்படவில்லை என்று நான் அமைச்சர் அவர் களிடத்திலே சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால். உதாரணமாக

இன்றைய தினம் அமுதம் சிறப்பங்காடியை வைத்திருக்கிறோம். காமதேனு, சிந்தாமணி, காவேரி இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டொன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை வரவு, செலவு நடத்துகிறது. அதிலே a person ஒரு நபர் என்று சொல்லி, தகுதியில்லாத அல்லது பொதுப்பணத்தை திறமையாகக் கையாள்வார் என்று நாம் எதிர்பார்க்க முடியாத நபர்கள் அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகளாக வருவார்கள் என்று சொன்னால், மீண்டும் இந்தக்கூட்டுறவுச் சங்கங்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவது பெரிய கஷ்டமாகி விடும். எனவே........

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போடப்பட்டிருக்கிற சட்டத் தின்படி, தனி நபர் என்பதல்ல; அவர் அநேகமாக அதிகாரி யாகத்தான் இருக்க வேண்டியதாக இருக்கும். ஏனென்றால், சமீபத்தில் எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் கலைக்கப்பட்டி ருக்கின்றன. அதிகாரிகளின் கீழ் கொண்டுவந்துதான் எல்லாக் கட்சிகளையும் உறுப்பினர்களாகச் சேர்த்து, கூட்டுறவை, கூட்டுறவாக ஆக்குகிற தன்மையிலேதான் நடை முறைப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, அதிகாரிகளைப் போடுகிறபோது அவர்களுக்கு அந்த நிறுவனத்தை நடத்த சக்தி இருக்கிறதா இல்லையா என்பதெல்லாம் பிரச்சினை அல்ல; அவர்கள் அந்த ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அப்போது, அந்தச் சட்டத்தில் shall appoint an officer of the Co-operative department என்று வார்த்தைகள் இருக்குமென்று சொன்னால் அது there will not bɔ any ambigurity அதில் குழப்பங்கள் இல்லாமல். இந்தச் சட்டம் இன்னும் சற்று அதிகமாக தெளிவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் நாம் சில மாறுதல்களைச் செய்கிற போது, சட்டச் சிக்கல் ஏற்படும் என்ப தற்காக 'a person' என்று போடப்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதற்குப் பிறகு, section 5 (1) 'notwithstanding anything contained in the Co-ooperative, Societies Act, the Government may appoint an Advisory Board consisting of not more than five non-official members to advise such Special Officer'



Section 5(3) 'the Advisory Board shall be consulted by the Special Officer on all matters relating to the affairs of the primary society' என்று இருக்கிறது. இந்த அட்வைசரி போர்டு மெம்பர்களுக்கு என்ன தகுதி இருக்க வேண்டும் என்பது சட்டத்திலே குறிப் பிடப்படவில்லை. ஆனால், சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கிறவர்கள்தான் அதிலே, அட்வைசரி போர்டு மெம்பர் களாக இருப்பார்களா; அல்லது அந்தச் சங்கத்திற்கு சம்பந்தம் இல்லாமல் வெளியிலே இருப்பவர்களைக்கூட கொண்டுவந்து, ஆலோசனைக் குழுவிற்குள் போட முடியுமா?.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழு என்பது இரண்டு கூட்டுறவு சிறப்பங்காடிகளைச் சார்ந்த அதிகாரிகள் அல்லது மூன்று, நான்கு சிறப்பங்காடிகளைச் சார்ந்த அதிகாரி கள் சேர்ந்து, அந்த ஆலோசனைக் குழுவை வைத்துக் கொண்டு, அதன் மூலமாக விலைகளைக் கட்டுப்படுத்துகிற தன்மையில் சாமான்களை வாங்குவதற்காக, அப்படிப் பட்ட ஆலோசனைக் குழு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. ஏனென்றால் ஒருவரே ஒரு முடிவு எடுத்தால், அதில் தவறுகள் வந்துவிடும். அந்தத் தவறுகள் வராமல் இருப்பதற்காக நான்கு, ஐந்து பேர்களைச் சேர்ந்த ஒரு குழுவாக இயங்குவதற்கு அந்த வகையிலே சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கருத்தைப் புரிய வைக்க என்னால் இயலவில்லை என நினைக்கிறேன். ஆலோசனைக் குழு அமைப்பதைப் பற்றி நான் என்னுடைய கருத்தைத் தவ றாகச் சொல்லவில்லை. ஆனால், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் என்ன தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும்? அவர்கள் அந்தச் சங்கத்திலே உறுப்பினர் களாக இருக்க வேண்டுமா? அல்லது சங்கத்திற்கு சம்பந்தம் இல்லாத நபர்களெல்லாம்கூட, அப்படிப்பட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக நியமிக்க முடியுமா? அவர்களுக்கு வேறு தகுதி ஏதாவது நீங்கள் வைத்திருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி அமைக்கப்பட்ட ஆலோ சனைக்குழு—அதிலே ஒரு வார்த்தை இருக்கிறது. 'Shall be consulted by the Special Officer'. என்று இருக்கிறது. 'shall be consulted' என்று சொன்னால், அதை மாற்றி இந்த ஸ்பெஷல் ஆபிஸர் என்று சொல்லக்கூடிய அதிகார வர்க்கம் தாங்கள் ஆலோசனை செய்துவிட்டதாக

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1991 அக்டோபர் 3

பதிவு செய்துவிட்டு, தாங்கள் நினைத்ததைச் செய்வார்கள் அதற்குப் பதிலாக shall act all the advice of the Advisory Board என்று மாற்ற முடியுமா என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், shall be consulted -க்கும் Shall act at the advice of the Advisory Board-க்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.

பிற்பகல் 6-55

நான் நினைக்கிறேன். நீங்கள் கூட்டுறவுத் துறை சரியாக வேலை செய்ய வேண்டும் என்று, அரசுக்கு இருக்கிற எண் ணத்தைப் பாராட்டுகிறேன். அதற்காக நீங்கள் எந்தக் கருத்திற்காக இந்த ஆலோசனைக் குழுவை நியமனம் செய்து இருக்கிறீர்களோ அந்தக் கருத்து இந்தச் சட்டத்தின் மூல மாக நிறைவேறுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே இன்னொரு முக்கியமான கட்டம் என்ன என்று சொன்னால் பிரிவு 4-க்கு நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

'The Government may fix the remuneration payable to the special Officer or appointed person and the amount shall be payable from the funds such primary society' என்று இருக்கிறது.

கூட்டுறவு சங்கத்தைக் கொல்வதற்கு 4-வது பிரிவைத் தவிர வேறு பிரிவு இருக்கவே முடியாது. கூட்டுறவுச் சங்கம் நலிந்து, மெலிந்து வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற உறுப்பினர்கள் நாள் தோறும் தேய்ந்து தேய்பிறையாக இருக்கின்ற நேரத்தில் இந்தப் பெரிய சுமையைக் கூட்டுறவுச் சங்கங்களின் மேல் சுமத்துவது.......

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்னை தற்போது வந்தது. தாங்க முடியாத அளவிற்குத் தனி அலுவலர்களுடைய சம்பளம் இருக்கின்றன. அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆகவே, நாங்கள் என்ன செய்திருக் கிறோம் என்று சொன்னால், இரண்டு மூன்று சங்கங்களுக்குச் சேர்ந்து ஒரு தனி அலுவலரை நியமிக்கிறோம். சில சங்கங்கள் சம்பளத்திலேயே நொடித்துப் போய்விடக்கூடிய சிரமம் இருக்கிறது. உறுப்பினர் சொல்வதைப் பற்றி நான் அப்படியே முழு மனதாக ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே, அந்த வகையில் சம்பளத்தின் காரணமாக, அல்லது செலவின் காரணமாக அந்தச் சங்கங்கள் நொடித்துப் போகாத முறை யில் தற்போது ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வரு கின்றன.



1991 அக்டோபர் 3]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய விளக்கத்தைத்தர விரும்புகிறேன். அவர்கள் மூன்று சங்கங்களைச் சேர்த்து இருப்பதாகச் சொல் கிறார்கள். அந்த மூன்று சங்கங்களை எப்படிச் சேர்க்கிறார் கள் என்று சொன்னால் இலாபமாகப் போகக் கூடிய ஒரு சங்கத்தை நட்டத்திலேயே ஓடக்கூடிய இரண்டு சங்கங்களைச் சேர்த்து, எந்தச் சங்கம் இலாபத்திலே ஓடுகின்றதோ அதி லேயிருந்து சம்பளம் கொடுக்கச் சொல்கிறார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்ல முடியும். என்னுடைய சட்ட மன்றக் தொகுதியிலே திருக்குற்றாலநாதர் தேவஸ்தானம் கோவில் நிலத்தில் பாடுபடுகின்ற விவசாயம் செய்கின்ற விவ சாயிகளுடைய கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் ஐந்து Farming socie.ies இருக் கின்றன. கூட்டுறவு விவசாய சங்கங்களிலே ஒரு சங்கம் மட்டும்தான் இலாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தச் சங்கத்திலே எனக்கு ஒரு தனிப்பட்ட தொடர்பு உண்டு. நாங்கள் பல நாட்களாக பாடுபட்டு 50,000 ரூபாய் இலாபம் சேர்த்து வைத்திருக்கிறோம். எங்களுடைய நீண்டநாளைய ஒரு ஆசை என்னவென்று சொன்னால், அந்தப் பண்ணைச் சங்கத்திற்கு Farming Society -க்கு ஒரு டிராக்டர் வாங்க வேண்டுமென்று சொல்லி 50,000 ரூபாயை தேடி முடித்த உடனேயே சங்கம் கலைக்கப்பட்டது. Special Officer was nominated. உடனேயே என்ன செய்து விட்டார்கள் என்று சொன்னால் நாங்கள் டிராக்டர் வாங்கு வதற்காகக் கொடுத்திருந்த கடன் மனுவிற்கு Advance Deposit ஆகக் கட்டச் சொல்லி 40,000 ரூபாய் கட்டச் சொன் னார்கள். The Special Officer is more concerned about his pay. அந்த 40,000 ரூபாய் கட்டப்படவில்லை என்று சொன்னால் அவர் சம்பளம் வராது. நானும் கீழிருந்து D.R. லிருந்து J.R. வரைப்போய் Registrar ஐக் கூடப் பார்த்துச் சொல்லி விட்டேன்.

Sir; it is a life long ambition of a Co-operative Society to by a Tractor, After 7 years......" அந்தச் சங்கத்தில் அவ்வளவு பேரும் ஹரிசனத் தோழர்கள் உறுப்பினர் களாக இருக்கக்கூடியவர்கள் 50,000 இலாபம் ஈட்டி, ஒரு டிராக்டர் வாங்க வேண்டுமென்று பணம் வைத் திருந்தால், நீங்கள் ஒரு அதிகாரியை நியமனம் செய்து சம் பளம் கொடு என்று சொல்லுகிறீர்கள். அப்படிச் செய்தால் கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி வளரமுடியும்...

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒரு நிறுவனத்தை பற்றிச் சொல்லுகிறீர்கள். ஒரே ஒரு சங்கம்தான் லாபத்தில் நடக்கிறது. மற்ற இரண்டு சங்கங்களும் நட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இலாபத்தில்

மற்ற சங்கங்கள் ஏதாவது நடந்தால் அதை இணைந்து அந்த அதிகாரிக்குச் சம்பளம் வழங்கும் தன்மையிலே செய்து மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்தை நிறைவேற்றலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் ஒரு மாதிரிக்குத் தான் சொன்னேன். அதாவது இலாபத்திலே ஓடுகின்ற சங்கங்களுக்கு ஒரு தண்டனை போல் ஆகக் . கூடாது. எப்படியெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் நடந்தது என்பதற்கு நான் உதாரணத்திற்குச் சொல்லமுடியும். இப்பொழுது நாளடைவில் கூட்டுறவுச் சங்கம் என்றால் 'ரேஷன் கடை' என்கிற ஒரு எண்ணம் நம் மக்கள் மத்தியிலே வளர்ந்து இருக்கிறது. கூட்டுறவு என்பது ரேஷன் கடை நடத்துவது மட்டுமல்ல. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று சொல்லி நம்முடைய நாட்டை உண்டாக்கிய நம்முடைய நாட்டுத் தந்தையர்கள் சிந்தித்து சிந்தித்துச் ஒரு அருமையான கூட்டுறவுத் தத்துவத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுடைய பணி என்ன என்று சொன்னால், காலையிலே ஆறு மணியிலிருந்து இரவு 12 மணிவரை இந்த ரேஷன் கடைகளைப் போய்ப் பார்த்து கொண்டுதான் இருக்கிறார்களேயொழிய உண்மையான கூட்டுறவு நடவடிக்கை எந்த மாநிலத்திலேயும் நடக்கிறதா என்று சொன்னால், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கு விட்டுவிடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

எனவே, கூட்டுறவு இயக்கம் என்பது உண்மையிலேயே செயல் படவேண்டுமென்று சொன்னால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதாவது, 'ரேஷன் கடை' Ration shop இதைப் பார்ப்பதற்காக அதிகாரிகள் தனியாக இருக்க வேண்டும். கூட்டுறவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து, கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த கடனை வசூல் செய்து திரும்பக் கடன் வழங்குவதற்கான பணிகளை மேற்பார்வை செய்வதற்கான அதிகாரிகள் தனியாக இருக்க வேண்டும். அதை நமது நிறைந்த அனுபவம் வாய்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள புரிந்து கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். இந்த Ration shops take most of the time of all co-operative officials. அவர்களுக்கு வேறு வேலையே இப்போது கிடையாது.

பிற்பகல் 7-00

காலையிலிருந்து சாயங்காலம் வரை ஒவ்வொரு ரேஷன் கடையாகப் போய்ப் பார்ப்பது; அதிலே இன்னும் அதிகமாகச் சொல்லப்போனால் அதற்குச் சில காரணங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள பார்ப்பதால அவர்கள் பயன் பெறுகிறார்கள். ஆகவே, அதில்தான் They are more concentrading



கூட்டுறவு நடவடிக்கைகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதி
ல்லை. எனவே அதை இரண்டாகப் பிரித்து ரேசன்
கடைகளைப் பார்ப்பதற்கு ஒரு தனியான அமைப்பும் கூட்டுறவு
நடவடிக்கைகளை ஏற்பதற்கு ஒரு தனியான அமைப்பும்
வைக்கவேண்டும். எனவே நீங்கள் அட்வைசரி போர்டு
போடுகிறபோது, நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்
வேன். இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம்
ஆட்சி தமிழ் நாடடில் தோற்றது என்றால் அதற்கு ஒரு
முக்கியமான காரணம் கூட்டுறவுச் சங்கங்களிலே கொண்டு
வந்து அரசியலைப் புகுத்தியது. கூட்டுறவுச் சங்கங்களில்
அவர்கள் எதேச்சாதிகார மனப்பான்மையுடன் கூட்டுறவு
இயக்கத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களை எல்லாம் உறுப்
பினர்களாக ஆக்கி கூட்டுறவுச் சங்கங்களைக் காலி செய்தது
தான் காரணம். அதனால்தான் அவர்கள் மக்கள் மத்தியில்
அவ நம்பிக்கை அடைந்தார்கள். நான் இந்த அரசை எச்சரிக்க
விரும்புகிறேன். அவர்கள் எந்தப் பாவத்தைச் செய்தார்
களோ அந்தப் பாவத்தை நாமும் செய்யக் கூடாது. நாம்
மக்கள் வாக்குகளை அதற்காகப் பெறவில்லை. எனவே இந்த
அட்வைசரி போர்ட் என்ற ஆலோசனைக் குழு நியமனம் செய்
கிறபோது அரசியல் கட்சி என்ற ஒரு அடிப்படையில் மட்டும்
சிந்திக்காமல் கூட்டுறவு இயக்கத்திற்கு சம்பந்தம் உள்ளவர்கள்
கூட்டுறவு இயக்கத்தின்பால் நாட்டம் கொண்டவர்கள்,
அரசியலுக்கு அப்பால் இந்த இயக்கம் நாட்டை வளர்க்கிற
ஒரு நல்ல இயக்கம் என்ற சிந்தனையுடைய அரசியலுக்கு
அப்பாற்பட்ட நபர்களை இந்த ஆலோசனைக் குழுக்களிலே
சேர்க்கவேண்டும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களை
சேர்க்கவேண்டுமென்று சொன்னால் எல்லா அரசியல் கட்சிக்
காரர்களுக்கும் அதிலே வாய்ப்புக் கொடுத்து ஒரு உண்மையான
ஜனநாயக அமைப்பாக இயங்கச் செய்ய வேண்டும் என்று
நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு
இந்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில் கலந்து கொள்
வதற்கு வாய்ப்புக் தந்த உங்களுக்கு நன்றி சொல்லி இந்தச்
சட்ட முன்வடிவை ஆதரித்து விடைபெறுகிறேன். நன்றி,
வணக்கம். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு தனி அலுவலர் பற்
றிய சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. செல்வராஜ், திரு. பழனிசாமி, திரு.
தம்புசாமி, திரு. சிங்காரம், திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகி
யோர் கலந்துகொண்டு நல்ல பல கருத்துக்களை நல்கி இருக்
கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றியினை முதற்கண் தெரி
வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. பீட்டர்
அல்போன்ஸ் அவர்கள் பேசுகிற போது கூட்டுறவு நடைமுறை
கள் மீண்டும் பழையபடி கொண்டுவரப்பட வேண்டும் என்ற

சிறந்த கருத்துக்களை வலியுறுத்தியிருக்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் சடந்த பல ஆண்டுகாலமாகவே கூட்டுறவு முறைகள் மாற்றப்பட்டு அனேகமாக அரசியல்வாதிகள் கைகளுக்குப்போய் அதன் காரணமாக கூட்டுறவு மனப்பான்மை தமிழ் நாட்டில் குறைந்து கொண்டிருக்கிறதோ என்ற எண்ணம் தான் எனக்கு இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பெல்லாம் கூட்டுறவு இயக்கத்தில் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், படித்தவர்கள், தன்னலமற்ற தங்களுடைய பெயருக்காகவே உழைப்பவர்கள் எல்லாம் ஏராளமாக பணியாற்றிக் கொண்டிருந்தார்கள. அதன் மூலமாக கூட்டுறவுத் துறையில் விலையைக் கட்டுப் படுத்தியிருக்கிறார்கள். இலாபத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாட்டு மக்கள் மத்தியில் நல்ல பெயரை நிலைநாட்டியிருக்கிறார்கள. அதெல்லாம் கடந்த கால வரலாறாகவே இருக்கிறது. இன்றைக்குக் கூட சமீபத்தில் பல கூட்டுறவுச் சங்கங்களில் கிராமப்பகுதிகளில் பெரியவர்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன்.

ஆனால் கடந்த கால ஆட்சியினர் செய்த தவறுகள் காரணமாக எல்லாவற்றையும் கலைக்கவேண்டிய துர்பாக்கியமான நிலமை இந்த அரசுக்கு ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்களாக விரும்பி இந்த வேலையைச் செய்ய வேண்டிய நிலமை கூட வரவில்லை. நண்பர் சிங்காரம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். நியாயம் அற்ற முறையில் கடந்த கால ஆட்சி நடந்து கொண்டதை மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஏற்றுக் கொண்டதற்காக நன்றி என்று கூடச் சொன்னார்கள். அதையெல்லாம் ஒன்றும் நான் பார்க்கவில்லை. இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களைப் பார்த்தால் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காரணம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய வேகமான சுற்றுப் பயணம் என்பதோடு கூட இந்தக் கூட்டுறவுத் துறையில் கடந்த கால ஆட்சிக்காரர்கள் செய்த முறைகேடுகள் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப் பட்ட முறைகேடுகள் மீண்டும் வராமல் இருப்பதற்காகத்தான் எல்லா சங்கங்களும் கலைக்கப்பட்டு அதன்மூலமாக புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்கிற ஆணை இன்றைக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையை நிறைவேற்றுகிற வகையில் மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள தமிழகத்தில் இருக்கிற எல்லா கிராமங்களிலும் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களானாலும் சரி, மத்திய கூட்டுறவு வங்கி போன்றவைகளானாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்



போல பல்வேறு தரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலே எல்லாம் உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்ப்பதில் அக்கறை காட்ட வேண்டும்.

பிற்பகல் 7.05

அதைக்கூட வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கடசிக்காரரை சேர்த்துத்தான் ஆகவேண்டும் என்றில்லை. பொதுவாக உள்ளவர்களையும் சேர்த்தால்தான் இந்தக் கூட்டுறவுச் சங்கம் சிறப்படையும் என்பது என்னுடைய எண்ணம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 30 சதவிகிதம பெண்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலே இருக்கிறார்கள். அதுபோலவே 18 சதவிகிதம் மலைச்சாதியினர், தாழ்த்தப்பட்டவர்கள், ஆதிதிராவிடர்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற அந்த எண்ணத்திலே இருக்கிறார்கள். இது வரையில் கூட்டுறவிலே பல இடங்களில் மலை சாதிக்காரர்கள் தலைவராகவோ, ஆதிதிராவிடர்கள் தலைவராகவோ வந்ததாக நமக்குத் தெரியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட முறையில் எல்லா சமுதாயத்தினரும் கூட்டுறவுத் துறையிலே பயன்பட வேண்டுமென்ற தன்மையிலும், அவர்கள் பணி ஆற்றவேண்டுமென்ற தன்மையிலேயும், நாம் பாடுபட்டாகவேண்டும்.

திரு. செல்வராஜ் அவர்கள் குறிப்பிடுகிறபோது, உர விலைகளை எல்லாம் நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதிலே ஒத்த கருத்து இருக்கிறது எனக்கு. என்னவென்றால் உரங்களை நாம் விவசாயிகளுக்கு தருவதற்காக மானிய விலையிலே, நியாயமான விலையிலே தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகிறோம். அப்படி வருகிறபோது, நியாயமற்ற முறையிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைத்தான் சென்ற வாரம் இந்த மாமன்றம் சந்தித்தது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியில் உரத்தை திருட்டுத்தனமாக வைத்திருந்து, அதை வெளியிலே எடுத்துக்கொண்டு போகிற நேரத்திலே அங்கே இருக்கின்ற விழிப்புணர்ச்சி உள்ள மக்கள அதைத் தடுத்தபோது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் டிராக்டர் ஏறி இறந்து போனது பற்றி நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதற்காக மாண்புமிகு புரட்சி தலைவி அவர்கள் 10 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு நன்கொடையாகக் கொடுத்ததையும் நீங்கள் அறிவீர்கள். ஏனென்று சொன்னால் இதை ஏன சொல்கிறேன் என்று சொன்னால், அப்படிப்பட்ட விழிப்புணர்ச்சியை நாம் மக்களிடையே உருவாக்கியாக வேண்டும்.

நான் விவசாயத் துறை அமைச்சராக இருந்தபோது,
ஒரு சிரமத்தை அனுபவித்தேன். அன்றைக்கு விவசாய
விதைகள் எல்லாம் 2 கோடி ருபாய்க்கு மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் சிறு, குறு விவசாயிகளுக்குத் தந்தார்கள்.
அதிலே எல்லாம் ஆங்காங்கே கிராமத்தில் இருக்கின்ற விவசாய
சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. சிறு,
குறு விவசாயிகளுடைய பட்டியலும் ஒவ்வொரு அலுவலகத்
திலேயே இருக்கிறது. ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் வைத்
திருப்பவர்களுக்கு எல்லாம் விவசாய விதைகள இலவசமாக
வழங்கப்பட்டன. ஆனால் நான் வந்து பார்த்தபோது,
என்னுடைய தொகுதியிலே நான் போய்க் கேட்டேன். அப்பா
விவசாய விதைகள் வழங்குகிறார்களா என்று கேட்டேன்.
அப்படி ஒன்றும் தகவலே இல்லை என்று சொன்னார்கள். அதற்கு
அப்புறம் நான் எவ்வளவு பேர்களை மாற்றுவது? மாற்றினால்
யாராவது சிபாரிசுக்கு வந்துகொண்டே இருப்பார்கள்.
தண்டனையும் தரமுடியாமல், வானொலியின் மூலமாக
அவற்றை அறிவித்தேன் இன்ன கிராமத்தில் இன்ன
விதையை சிறு, குறு விவசாயிகளுக்கு இன்று வழங்கப்படு
கிறது என்றும் கிராமங்களில் உள்ள மக்களுக்கு தரப்படுகின்றன
என்றும் செய்தி அறிவிக்கப்பட்டது. அதே போல, இப்போது
கூட நான் அரசாணை ஒன்றை பிறப்பிப்பதாக இருக்கிறேன்.
உரங்கள் எந்தெந்த கிராமங்களுக்கு கொண்டு செல்லப்பட்
டிருக்கிறது? எந்தெந்த கிராமங்களிலே இன்றைக்கு உரம்
வினியோகிக்கப்படுகிறது? என்ன வகை உரம் வினியோகிக்கப்
படுகிறது என்பதை மாலை 7¼ மணிக்கு விவசாயி
களுக்கான தகவல் தருகிற அந்த வானொலி மூல
மாக அறிவிக்கலாம் என்று நான் கருதுகிறேன். அப்படி
அறிவித்தால்தான் ஏழைகள், கிராமத்தில் இருப்பவர்கள்
எல்லாம் நிறைய வானொலி செய்திகள் கேட்கும்
போது அறிந்துகொள்வார்கள். தெரிந்தவர்
கள் மற்றவர்களுக்குச் சொல்கிறார்கள். அதன் மூலமாக
கள்ள மார்க்கெட் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவும்
முடியும். அதை நாம தடுக்க முடியும் என்று நான் கருது
கிறேன். ஏனென்றால் விலைகளைப் பொறுத்த வரையில்
மத்திய சர்க்காரும் மாநில அரசும் நிரம்ப உதவிகளை செய்து
கொண்டு வருகிறது. ஆகவே அந்த வகையில் இப்போது
இருக்கிற தனி அலுவலர்கள் அதிலே சிறப்பாக ஏற்பாடு
செய்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கட
மைப்பட்டிருக்கிறேன்.

நியமன உறுப்பினர்கள் காலத்திலே தவறுகள் நடந்
திருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். நிறைய அதிலே
வந்த விவகாரம் என்னவென்று சொன்னால், நியமன உறுப்
பினர்கள் எப்படியாவது தாங்கள் அந்த தலைமை பதவியைப்
பிடிக்கவேண்டும் என்பதற்காக தேவைக்கு அதிகமாக நியமன
உறுப்பினர்களை நியமித்தார்கள். விவசாய சங்கத்திலே



விவசாயி அல்லாதவர்களை நியமித்தார்கள். நெசவாளர் சங்கத்திலே நெசவாளி அல்லாதவர்களை நியமித்தார்கள். கூடை முடைவோர் சங்கத்திலே, கூடைமுடைவோர் அல்லாத வர்களை நியமித்தார்கள். இப்படியெல்லாம் நடைபெற்ற தவறின் காரணமாக இந்தத் தனி அலுவலர்கள் நியமிக்க வேண்டிய நிலைமை இந்த அரசுக்கு ஏற்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

நம்முடைய உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசும்போது கூட 'ஊழியர்கள் சம்பளம்' பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். அதிலே ஏற்கனவே சில ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதை எல்லாம் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஊழியர் களுக்குச் சம்பளம் தருவது பற்றி நான் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறேன். அதிலே ஒன்றும் இல்லை.

பிற்பகல் 7.10

நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிடுகிற போது கூட கூட்டுறவு என்றால் நியாய விலைக் கடை, ரேஷன் கடையே என்று மக்கள் கருதுகிற தன்மையில் அதி காரிகள் அங்கேயே போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பலாப்பழம் இருக்கிற இடத்திலேதான் ஈ போய் மொய்க்கும். ஆகவே அது எல்லாம் தெரிந்தது. அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள். அதிலே கொஞ்சம் லாபமும் இருக்கிறது. நடுவிலே ஒரு வார்த்தையைச் சேர்த்து சுலபமாகவே சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டார்கள். அவருக்கு நல்ல திறமை இருக்கிறது. ஆகவே அவர் வாதாடுகிறார். அதிகாரிகளிடத்திலே அதிக அளவில் கோபித்துக் கொள்ளக் கூடாது என்ற ஒரு வார்த்தையை இடைச் செருகலாக அவர் இங்கே சொல்லியிருக்கிறார். அது உண்மை. 21 ஆயிரம் கடைகள் இருக்கின்றன. 21 ஆயிரம் கடைகளையும் பார்க்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நடுத்தரக் குடும் பத்தைச் சார்ந்தவர்கள், உயர்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ரேஷன் கடையிலே போய் பொருள்களை வாங்குவதில்லை. இந்தப் பொருள்களை எல்லாம் வாங்குகிறார்கள் என்றுதான் எப் படியோ போய்க்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கண் காணிக்க வேண்டிய நிலையில் ஆட்சியாளர்களுக்கு கொஞ்சம் சிரமங்கள் எல்லாம் இருக்கின்றன. இதை எல்லாம் நீக்கத் தான், கூட்டுறவுத் துறையை நல்ல முறையில் நடத்த வேண்டு மென்றுதான், மேற்கு வங்காளத்திலே ஜோதிபாசு அவர்கள் ஒரு நல்ல வேலையை செய்திருக்கிறார்கள். நியாய விலைக் கடைகள் பூராவையும் தனியாருக்கே கொடுத்திருக்கிறார் கள். அவர்கள் கம்யூனிசம் பேசுகிறவர்கள், நாம் பேசுவது சோஷலிசம். ஆனால் நம்மை விட வேகமாக இருக்கிற கம்யூனிஸ்டுகள் இன்றைக்கு ஒழுங்காக நியாய விலைக் கடை களை எல்லாம் தனியாரிடத்தில் கொடுத்துவிட்டு ஜாம் ஜாம் என்று உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி சம்பளத்தையும் கேட்க வேண்டியதில்லை. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் திருட்டுப் போனது பற்றி கேட்க வேண்டியதில்லை. மற்ற அதிகாரிகள் தவறு செய்தது பற்றி நாமும் கேட்க வேண்டியதில்லை. அவன் ஆயிற்று, வியாபாரம் ஆயிற்று, என்று ஒழுங்காக உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமைக்கு நாம் வந்தால் அதற்கு ஒருகிளர்ச்சி வந்துவிடும். ஆகவே, 21 ஆயிரம் கடைகள் அதிகாரிகள் மட்டத்தில் இருந்தவைகளை எல்லாம் எடுத்து இப்படி செய்து விட்டீர்களே என்று அந்தக் குறைபாடு வந்துவிடும். ஆனால் கேரளாவில் அப்படி செய்திருக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் அப்படி செய்திருக்கிறார்கள். அங்கேயுள்ள குறைபாட்டைப்பற்றி இங்கே நம்முடைய கம்யூனிஸ்ட் நண்பர்கள் பேசவில்லை. ஆக, அவர்கள் எல்லாம் தமிழ் நாட்டு கம்யூனிஸ்ட்டுகள் ஆக இருப்பதைப் பொறுத்தவரையில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அகில இந்திய கம்யூனிஸ்ட் என்கிறார்களே, அகில இந்திய கம்யூனிஸ்ட்டில் இருப்பவர்களைப் பற்றி இவர்களுக்குத் தெரியுமோ என்னவோ, அகில இந்தியாவில் இருப்பவர்கள் எந்த அளவில் இருக்கிறார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். ஆகவே அவர்கள் எல்லாம் தனியாருக்குதான் சலுகைகளை செய்திருக்கிறார்கள். ஆனால் நாம் இந்த கூட்டுறவுத் துறையை அப்படியே வைக்க வேண்டுமென்று தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

பினாமி உறுப்பினர்களை எல்லாம் நீக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் சொன்னார். புது உறுப்பினர்களை நாம் ஒழுங்காக சேர்ப்போமேயானால் பினாமி என்ற பெயர் அடிபட்டு போய்விடும். அதற்குரிய நிலைமைகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களது ஆதரவு எப்போதும் வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சிந்தாமணி. இந்த சிந்தாமணி கூட்டுறவு மார்க்கெட்டில் தவறு நடந்ததை மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் இந்த கூட்டுறவு சிறப்பங்காடி பற்றி சொல்வது என்று சொன்னால் சங்கடமாகத்தான் இருக்கிறது. ஆகவே, ஒழுங்காக தனியார் ஒருவரை தலைவராக போட்டிருந்தபோது, திரு. வ. ஆர்.கே. ராவ் அவர்கள் தலைவராக இருந்தபோது, ஆசியா கண்டத்திலேயே மிகச் சிறந்த கூட்டுறவு சிறப்பங்காடியாக சிந்தாமணி இருந்தது. இன்றைக்கு அதிலே 2½ கோடி ரூபாய் நஷ்டம். அவ்வளவுதான் முடிந்திருக்கிறது. அதற்கு மேலே எடுக்க முடியவில்லை. ஆகவே, இப்படியெல்லாம் இருப்பதை மாற்ற வேண்டும். மாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதை எல்லாம் இப்போது அதிகாரிகளை வைத்து வேலை வாங்கிக் கொண்டிருக்கிறோம்:





விலையை கட்டுப்படுத்துவதில் மிக ஜாக்கிரதையாக இருக்கிறோம். விலையை எல்லோரும் சேர்ந்து உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். முதலில் காய்கறிகளின் விலையைப் பற்றி சொன்னார்கள். காய்கறிகளின் விலையை இன்றைக்கு கட்டுப்படுத்தியாகிவிட்டது. இப்பொழுது பருப்பு, அரிசி இன்னும் மற்றவைகளின் விலைகளை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளையும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் இன்றைய தினம் இந்தக் கூட்டுறவுத் துறையிலே நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, காலத்தோடு தேர்தலை நடத்த வேண்டுமென்ற கருத்தை இங்கே அனைவருமே வற்புறுத்தியிருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் கூட நமக்கு 6 மாதக் காலத்தை தந்திருக்கிறார்கள். உங்களுக்கு இது பற்றி சொல்ல வேண்டுமென்றால், எவ்வளவு விரைவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக உறுப்பினர்களை சேர்த்தாக வேண்டும். 3 மாத காலத்திலிருந்து வேகமாக வேலை செய்யலாம் என்றுதான் கருதுகிறோம். மீண்டும் கூட்டுறவுத் துறை நல்ல தலைவர்களைப் பெற்று எப்படி தமிழகம் ஏற்கனவே முன்மாதிரியாக இந்தியாவில் இருந்ததோ அது போல—ஏன் என்றால் இராமநாதன் செட்டியார் போன்றவர்கள், டாக்டர் நடேசன் போன்றவர்கள், கனகசபாபதி போன்றவர்கள், சாமியப்பா போன்றவர்கள், என் மாவட்டத்தைச் சார்ந்த நாச்சியப்ப கவுண்டர் போன்றவர்கள் எல்லாம், மிகச் சிறப்பாக இந்தத் துறையில் பணியாற்றியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் அவர்கள் ஜமீன்தார்களாக இருந்தவர்கள். இன்றைக்கு அவர்களுடைய குடும்பம் எல்லாம் மிகச் சாதாரணமாக ஆகியிருக்கிறது. அந்த அளவிற்கு இந்தத் துறையிலே பாடுபட்டு, செலவு செய்துவிட்டுதான் மடிந்து போயியிருக்கிறார்களே தவிர மற்றபடி இல்லை. நம்முடைய வடிவேலுடைய மருமகன் கூட என்னை உற்றுப் பார்க்கிறார். அவருடைய மாமனாருடைய மாமனார், என் ஜில்லாக்காரர் திரு. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் கூட ஒரு பெரிய கூட்டுறவாளர். அப்படி எல்லாம் பெரிய அளவிற்கு கூட்டுறவுத் துறையிலே பெயர் பெற்று பாடுபட்டவர்கள் வாழ்ந்த மண் இது. ஆகவே, அந்தமுறையிலே கூட்டுறவுத் துறை நடக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் இதை நான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. லட்சுமணன்.**

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது புதிதாக உறுப்பினர்கள் சேர்ப்பது பற்றி பல முறை சொன்னார்கள். சென்றமுறை நடைபெற்ற கூட்டுறவு தேர்தலிலே புதிதாக உறுப்பினர்களை சேர்த்ததிலே தான் கோளாறே வந்தது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : point cf order என்று சொன்னார்கள். இது என்ன On a point of order அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு விளக்கம் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், இந்த மா மன்றத்தை உற்றுப் பார்த்தால் தெரியும். ஏராளமான இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். எனவே இளைய தலைமுறையினருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். டென்மார்க் நாட்டைப் போல கூட்டுறவுத் துறையில் அவர்கள் பங்கு கொள்ள வேண்டும். பணியாற்ற வேண்டும். லாபத்தைக் கொண்டுவரவேண்டும். இன்னும் 4, 5 வருடங்களில் கூட்டுறவுத் துறை ஒழுங்குபடுத்தப்பட்டு, டென்மார்க் நாட்டைப் போல இந்தியாவும் மற்ற நாடுகளுக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு வளர வேண்டும். அதுதான் கூட்டுறவுத் துறையின் தத்துவம். டென்மார்க் இன்றைக்கு 16 கோடி ரூபாயை இலவசமாகத் தந்து, என்னுடைய மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் 400 மருத்துவ மனைகளைக் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் அந்த அளவுக்கு கூட்டுறவு அமைப்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புதிய உறுப்பினர்கள் வந்தாக வேண்டும். நான் மாணவப் பருவத்திலே இருந்து கூட்டுறவுத் துறையிலே பங்கேற்று வந்திருக்கிறேன். அதுவல்ல பிரச்சினை. இப்போதிருக்கும் இளைய தலைமுறை கூட்டுறவுத் துறைக்கு வரவேண்டும். நிறைய படித்தவர்கள் இருக்கிறார்கள். எனவே அது சம்பந்தப்பட்டவர்கள் முன் வரவேண்டும். 10 ரூபாய் சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர வேண்டும். எப்படி ஓட்டு உரிமை மக்களுக்கு இருக்கிறதோ, அதைப் போன்ற நிலைமை கூட்டுறவுத் துறையில் ஏற்பட வேண்டும். அந்த எண்ணத்திலே தான்.....

பிற்பகல் 7.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.



*திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நடைபெற்ற தேர்தலில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் மிகுதியாக உறுப்பினர்கள் ஆகியுள்ளார்கள். சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் குடியானவர்கள் உறுப்பினர்களாகி, அந்தச்சங்கத்திற்கு தலைவராகும் அளவுக்கு உயர்ந்துள்ளார்கள். எந்த நோக்கத்தோடு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திலே ஈடுபாடுஉடையவர்கள் தான் உறுப்பினர்கள் ஆக வேண்டும். சம்பந்தம் இல்லாதவர்கள் உறுப்பினர்களானால் அந்தச் சங்கம் நல்ல முறையில் செயல்பட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன், நெசவாளர் சங்கத்திலே நெசவாளர்கள் அல்லாதவர்கள், விவசாயிகள் சங்கத்திலே விவசாயிகள் அல்லாதவர்கள், கூடைமுடைவோர் சங்கத்திலே கூடை முடைவோர் அல்லாதவர்கள், இப்படி எல்லாம் வந்து சேர்ந்தார்கள். அது எனக்குத் தெரியும். அதனால்தான் கலைக்கப்பட்டது. அந்தத் தவறுகள் மேலும் நடக்காமல் தனி அதிகாரிகள் பார்த்துக்கொள்வார்கள். ஆனால் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீண்டகாலமாக இருக்காது. தனி அதிகாரிகள் வேகமாக வேலைகளை முடித்து, மக்கள் மத்தியிலே கூட்டுறவு நடமாட வேண்டும். அதற்கான தேர்தல்கள் நடக்க வேண்டும். புதிதாக கூட்டுறவுச் சமுதாயம் தமிழகத்தில் மலர வேண்டுமென்பதற்காகத்தான், இந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்து, தனி அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். ஏற்கெனவே இருக்கிற சங்கங்கள் நொடித்துப் போகாமல் பார்த்துக்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லும்போது, செலவு அதிகமாக ஆகக் கூடாது என்று சொன்னார்கள். எல்லா வருவாயும் சம்பளத்திற்கே போய்விடக்கூடாது என்பதில் எனக்கு அக்கறை இருக்கிறது. எந்த இலாக்காவைப் பார்த்தாலும் சம்பளப் பட்டியல்தான் அதிகமாக இருக்கிறது. வரவுக்கு மேலேகூட சில நேரங்களில் இருக்கும். அதை எல்லாம் தவிர்க்க வேகமாகச் செயல்படலாமென்று கருதுகிறேன். அதற்காக முழு ஒத்துழைப்பை உறுப்பினர்கள்தான் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் 1½ லட்சம்

மக்களுக்கு உறுப்பினர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய கிராமப் பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து, நல்லவர்கள் கூட்டுறவு அமைப்புகளுக்கு வரும் ஏற்பாடுகளைச் செய்தால் சிறப்பான கூட்டுறவு அமைப்பை நம்மால் உருவாக்க முடியுமென்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1991) நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1991). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

பிற்பகல் 7.20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு சட்ட முன்வடிவின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரை ஆற்ற வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேக்சி கேப்ஸ் என்று சொல்லப்படுகிற வேன்கள் இன்றையதினம் கிராமங்களில், சிறிய நகரங்களில், படித்த வேலைவாய்ப்பில்லாத பட்டதாரிகள் அனேகம் பேர்களால் ஓட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பெரிய பஸ்கள் ஓடாத இடங்களில், அதிலும் நடுத்தர வர்க்கத்துக் குடும்பங்களைச் சேர்ந்த திருமணங்கள் போன்ற விசேடங்களுக்கு இந்த மேக்சி கேப்-களைத்தான் வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பயன் அடைகின்றார்கள். அதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரி ரூ. 1,500 என்பது உண்மையிலேயே தாங்க முடியாத வரிச்சுமையாகும். இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் மேக்சி கேப் வேன்களை ஓட்டிக்

*30-9-1991ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



கொண்டிருக்கிற டிரைவர்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக இன்றையதினம் உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியான ஈரோட்டிலிருந்து எனக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள். எங்கள் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகி இன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறோம், இருந்தாலும் அவர்கள் கேட்க வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள், நீங்கள் சொல்லக் கூடிய இடத்தில் இருக்கிறீர்கள், சொல்ல வேண்டிய இடத்தில் அவர்கள் இல்லை, ஆகவேதான் உங்களுக்குத் தந்தி அடிக்கிறோம் என்று சொல்லி, எனக்குத் தந்தியடித்து சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள், மிக வறியவர்கள் வங்கியில் கடன் வாங்கி மிகுந்த வட்டிச் சுமையோடு நடத்திக் கொண்டிருக்கிற தொழிலுக்கு இவ்வளவு பெரிய வரி போட்டிருக்கத் தேவையில்லை, அந்த வரியைத் தாங்கள் தயவுசெய்து குறைத்து அந்த ஏழை எளிய மக்களின் பெரிய சுமையினை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மேக்சி கேப்-களின் வரி 1,500 ரூபாயாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றாலும் நாம் மற்ற மாநிலங்களையும் பார்க்கவேண்டும். இதற்கு கர்நாடக மாநிலத்தில் ரூ. 2,000 மும், கேரளாவில் ரூ. ரூ. 2,324-ம், அதேபோல் பம்பாயில் ரூ. 5,610 என்ற அளவிலும் வரி போடப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே உழல்கின்ற மக்களுடைய துயரங்களைத் துடைக்கவேண்டுமென்ற அரசின் தலையாய கொள்கையின் காரணமாக, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையில் உறுதி தந்ததைப்போல 50 சி.சி. இரண்டு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவோருக்கு முழு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்திய நாட்டின் வரலாற்றிலேயே எந்தவொரு மாநிலத்திலும் செய்யாத ஒரு சாதனையை செய்து அந்த வரிவிலக்கின் மூலம் இன்றையதினம் 4.5 இலட்சம் குடும்பங்கள் அந்த வாகனத்தைப் பயன்படுத்து

பவர்கள் இப்போது பயன்பெற்றிருக்கிறார்கள். அதன் மூலம் அரசுக்கு ஏறத்தாழ 7.45 கோடி வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது இந்தியநாட்டின் இமாலய சாதனை என்று புரட்சித் தலைவி அவர்களை பாராட்டுகிறார்கள். இதனால் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் பயன்பெறுகிறார்கள். ஆகவே ஏழை மக்கள், அடித்தளத்தில் உழைத்துக்கொண்டிருப்பவர்கள், பள்ளிக்குச் செல்கின்றவர்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கிராமப்புறங்களில், நகரப்புறங்களில் உள்ள பெரும்பாலானவர்கள் இந்த 50 சி.சி. இருசக்கர வாகனத்தைப் பயன்படுத்துகிற காரணத்தால் இதற்கு வரிவிலக்கு அளித்ததன் காரணமாக, அதற்கு மேல் சி.சி. உள்ள வார்திகளுக்கு இன்றைக்கு சிறிது வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு பல்வேறு சலுகைகளை செய்கிறபோது வசதி பெற்றவர்களிடமிருந்துதான் வரியைப் பெற்றாக வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே வசதி படைத்தவர்கள் என்றில்லாவிட்டாலும் கூட, மேக்சி கேப் போன்ற வாகனங்களைப் பயன்படுத்துகிறவர்களிடமிருந்து உரிமையாளர்கள் அதற்கேற்றவாறு கட்டணத்தை உயர்த்தி வசூல் செய்கிறார்கள்.

பிற்பகல் 7-35

ஆகவே வேறு மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது மிகவும் பெரிதல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இந்த சட்டமுன் வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



பிரிவு 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே,

" 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1991) நிறைவேற்றப் பெறவேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "1991ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1991). மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

*1-10-1991ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





[பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவு ஏற்கப்பெற வேண்டும் என்று கேட்டதற்குப் பிறகு ஒலி எழுப்பினால் போதும்.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைசட்ட முன்வடிவு எண். 39/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1991) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை ச ட்டமுன்வடிவு எண். 40/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் ."

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தண்டாயுதபாணி.

---

*1-10-1991 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



பிற்பகல் 7-30

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றி நான் ஏற்கனவே பேசி இருந்தாலும் இந்த மாமன்றத்திலே இரண்டு மூன்று முறை விவசாயிகளுக்கு உள்ள பிரச்சினைகளைப் பற்றி சொல்லி இருந்தாலும் வருகின்ற 7 ஆம் தேதி என்னுடைய தொகுதியிலே மட்டு மல்லாமல் குடியாத்தம் தாலுக்காவிலே இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள் 1981 ஆம் ஆண்டு புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக தக்காவி லோன் வாங்கினார்கள். அதிலே 2,500 ரூபாய் தான் ஒவ்வொரு விவசாயிக்கும் கொடுத்தார்கள். ஆனால் அந்த 2,500 ரூபாயில் குடியாத்தம் தாலுகாவிலே இருந்த தாசில் தார் 500 ரூபாய், 500 ரூபாய் என்று லஞ்சம் வாங்கிக் கொண்டு எல்லா விவசாயிகளுக்கும் 2 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தார். அந்த லஞ்சம் வாங்கிய செய்து தெரிந்து விட்ட காரணத்தாலே........

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது கூட்டுறவிலே வரும். கடன் கொடுப்பது என்றால் வேளாண்மைத்துறை அமைச்சருக்கு சம்பந்தப்பட்டது அல்ல ; விவசாயத்தில் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவசாயிகளினுடைய கஷ்டத்தைச் சொல்கிறார்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி : அதை கூட்டுறவிலேயாவது கொடுக்கட்டும் ; அல்லது ரெவின்யுவிலேயாவது கொடுக் கட்டும்: அல்லது வேறு எங்கேயாவது கொடுக் கட்டும். ஆனால் விவசாயிகளினுடைய பிரச்சினைகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த 2,500 ரூபாயில் 500 ரூபாய் லஞ்சமாக போய்விட்டது. அது தெரிந்துவிட்ட காரணத்தாலே அந்த தாசில்தார் இரயில் முன்னாலே பாய்ந்து தற்கொலையே செய்து கொண்டார். 1981 ஆம் ஆண்டு புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே இந்தக் கடன் கொடுக்கப்பட்டது. இப்போது, 10 வருடம் கழித்து ஜப்தி செய்கிறார்கள். அந்த ஜப்தி எதற்காக என்றால், மனிதன் வாங்கிய கடனுக்காக மாட்டை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். அதுவும் பசுமாட்டை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். கன்றை தனியாகப் பிரித்துவிட்டார்கள். பசுமாட்டை தனியாக ஓட்டிக்கொண்டு போய்விடடார்கள். அது போகும்போது அம்மா...... அம்மா......என்று கத்திக்கொண்டே போனது. புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே 2 ஆயிரம் ரூபாய் தான் கொடுக்கப்பட்டது. அதற்காக பசுமாட்டை பவுண்டிலே

[திரு. வி. தண்டாயுதபாணி] [1991 அக்டோபர் 3

கொண்டுபோய் வைத்துவிட்டு, முந்தாநாள் வந்து தண்டோரா போட்டார்கள், 'இதனால் சகலவிதமான பேருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், எம்.எல்.ஏ.-களுக்கு மட்டுமல்ல, அங்கே ஊரிலே இந்த மாடு 7 ஆம் தேதி ஏலம் விடப்படுகிறது.; வந்து வாங்கிக்கொண்டு போங்கள்' என்று சொன்னார்கள். இந்த விவசாயி எங்கே போவான்? இந்த பசுமாட்டை எந்த கடனிலே இருந்து வாங்கி இருக்கிறார்கள் தெரியுமா? கறவைமாட்டு லோன் மூலம் பசுமாட்டை வாங்கி இருக்கிறார்கள். அப்படியென்றால், அந்த கடனை கொடுத்த ஆள் வந்து எதை ஜப்தி பண்ணப் போகிறார் என்று தெரியவில்லை. இந்த விவசாய கடன் நிவாரண சட்டத்தை நான் ஏற்கனவே சொல்லியது போல கொஞ்சம் ஊன்றிப் பார்த்து ஆராய்ந்து அதை நீங்கள்—விவசாயிகளுக்கு ஏற்கனவே புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியபடி, 'கடனிலே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து, கடனிலேயே 'இறக்கின்ற ஏழை விவசாயிகள்'—'பொல்லாத சேயையும் தாய் தள்ளல் நீதமோ, புகலிடம் பெரிதும் உண்டோ!' என்று தாயுமானவர் சொன்னார்; தாயுமானவர் சொன்னதையும இங்கே நான் சொல்லுவதற்குக் காரணம் விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களையும் பட்டுககொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்துல் மாட்டை ஜப்தி பண்ணிவிட்டு போய் இருக்கிறார்கள். எனவே அதற்கு அமைச்சரவை கூடி அந்த கடனை ரத்து செய்ய வேண்டுமென்று நாங்கள் கோருகிற அதேநேரத்தில், அதைப்பற்றி நீங்கள் விரைவில் கூடி முடிவு செய்யுங்கள். ஆனால் அனுத்துப் போய் இருககின்ற அந்த ஆடு மாடுகளை எலலாம் அந்த விவசாயிகளா திருப்பி அழைத்துச் செல்வதற்கும் அந்த ஜப்தி நடவடிக்கையை நிறுத்துவதற்கும் உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எங்கேயோ சுற்றி, வேளாண் விளைபொருள் வாணிப திருத்தச் சட்ட முன்வடிவுக்கு வந்தால் சரி; அங்கே வராமல நடுவில் நின்றுவிடாதீர்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, விவசாயம் செய்தால் தானே அவன் போட்டதற்கு பொருள் வரும்; விலையும் வரும். ஆனால் அவனுக்கு ஒன்றுமே இல்லையே! கிணறு வெட்டுவதற்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள்; ஆனால், கிணற்றை ஆழப்படுத்த முடியவில்லை; தண்ணீரும் வரவில்லை; அப்படி இருந்தால் அவன் எங்கே இருந்து விவசாயம் பண்ணுவது? விளை பொருள்



1991 அக்டோபர் 3] [திரு ,வி. தண்டாயுதபாணி]

வருவது? ஒன்றுமே கிடையாது. இந்த மாடுகளை எல்லாம் 7 ஆம் தேதி ஏலம் போடுவதாக தண்டோரா போட்டு இருக்கிறார்கள். அதை தடுத்து நிறுத்தி, ஜப்தி நடவடிக்கையை முதலிலே நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஜப்தி செய்யப்பட்டு இருக்கின்ற ஆடு மாடுகளை எல்லாம் திருப்பி விவசாயிகளிடத்திலே கொடுத்துவிட வேண்டும். இதிலே ஒரு குறை என்னவென்று நான் சொல்வேன் என்றால், விவசாயிகளுடைய கடன் நிவாரண சட்டத்தை நீங்கள் திரும்ப மறுபரிசிலனை செய்து அது விவசாயிகளுக்கு நலன் கிடைக்கும் வகையிலே செய்ய வேண்டும். 10 ஆயிரம் ரூபாய் கடனையே ரத்து செய்து விட்டார்கள். ஆனால் 2,000 ரூபாய் கடனை ரத்துச் செய்வதிலே என்ன ஆட்சேபனை இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே தயவுசெய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, 1981 ஆம் வருஷம் கொடுத்த தக்காவி கடனை நிச்சயமாக நீங்கள் ரத்துச் செய்ய வேண்டுமென்று அன்பாகக் கேட்டுக்கொண்டு அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 7.35

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம். இந்த 'பில்' மீது உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்.

*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிரச்சினை தான். நான் சென்ற முறை சட்டமன்றத்தில் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கேள்வியை கேட்ட போது—நெட்டை குட்டை தென்னை சம்பந்தமான ஒரு கேள்வி. விவசாயிகளுடைய பிரச்சினை. அதற்கான அலுவலகம் பட்டுக்கோட்டையில் இயங்கி வருகிறது. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் அந்த அலுவலகம் தொடங்கப்பட்டு அதனுடைய நான்கு கிளைகளும் (குறுக்கீடு) விவசாயப் பிரச்சினைதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவசாயப் பிரச்சினை பூராவும் அதில் வந்து விடாது.

திரு. ஆர். சிங்காரம்: கடைசியில் வந்து விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேளாண் விளை பொருள் வாணிபம் குறித்த சட்டமுன்வடிவு இது....

*திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே, எதையும் அனுமதிக்கிற பேரவைத் தலைவர் அவர்களும், எதற்கும் பதில் சொல்லக்கூடிய சக்தி படைத்த அமைச்சர் அவர்

களும் இருக்கிற இந்த அவையில் நான் கேட்கிறேன். பதில்
சொல்லக்கூடிய அமைச்சர் இருக்கிறார். ஆகவே இந்த அலுவலகத்தை மூடுவிழா
சொல்கிறார். அவர் பதில்
செய்வதை தடுக்க முடியுமா என்று கேட்டபோது புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மூடுவிழா என்ற
பேச்சுக்கே இடமில்லை என்று அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். இன்று அங்கே மூன்று அதிகாரிகளையும்
வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அந்த அலுவலகத்திற்கு
மூடுவிழா செய்யப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். இத
னுடைய நான்கு கிளைகளில் சுமார் 50 தொழிலாளர்கள்
இன்றைக்கு வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக
கேள்விபட்டேன். இதுகுறித்து உடனடியாக அமைச்சர்
அவர்கள் நடவடிக்கையெடுத்து—பலமுறை முயற்சி செய்வ
தாகச் சொன்னார்கள். ஆனால் அங்கொன்றும் இங்
கொன்றுமாக நிலைமை இருப்பதாக அறிகிறேன். தயவு
செய்து அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.
விவசாயிகளுடைய நலன் கருதி இந்த கோரிக்கையை
நான் விடுக்கிறேன். இத்தோடு என்னுடைய உரையை
முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்
மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு
உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்கள் வேளாண்மை
செய்யக்கூடிய விவசாயிகளுடைய கால்நடைகளை—அதுவும்
குறிப்பாக பசுவும் கன்றுமாக ஓட்டிக்கொண்டு செல்கிறார்
கள் என்று சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் தெளி
வாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகள்
எந்தக்காலகட்டத்திலும் பாதிக்கப்படுவதற்கு இந்த அரசு
உறுதுணையாக இருக்காது என்பதை இந்த நேரத்தில்
கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

விவசாயிகள் கடன் பெறுவதற்கு பல்வேறு வழிமுறை
கள் இருக்கின்றன. வங்கியிலிருந்து கடன் பெறலாம்.
வருவாய்த் துறையிலிருந்து தக்காவி கடனாகப் பெறலாம்.
அல்லது கூட்டுறவுத் துறையிலிருந்து கடன் பெறலாம்.
எனவே, எந்தத் துறையிலிருந்து பெற்றிருக்கிறார்கள்
என்பதை குறிப்பிட்டு சொல்வார்களேயானால் நான்
அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களோடு
கலந்து பேசி, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களிடத்தில் கொண்டு சென்று, விவசாயிகளுடைய நலன்
நிச்சயமாக காக்கப்படும் என்பதை புரட்சித் தலைவி அவர்
களின் சார்பாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் ஒன்றைச்
சொன்னார்கள். வேளாண்மைத் துறை மானியக்கோரிக்கை
விவாதத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டேன். நெட்டை,
குட்டை தென்னை மரப்பண்ணையை அங்கேயிருந்து
எடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். அந்த நேரத்தில்
சொல்கிறபோது நான் சொன்னேன். புரட்சித் தலைவி
அவர்களுக்கு கொடுத்து தான் பழக்கமே தவிர, எடுத்து
பழக்கம் இல்லையென்று சொன்னேன். அதை இன்றும்
வலியுறுத்துகிறேன். என்றும் வலியுறுத்துவேன். திரு. சிங்காரம்
அவர்களுக்கு சொல்வது அங்கேயிருக்கிற வேளாண்மை
அதிகாரிகளை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு
மாற்றியிருக்கிறோமே தவிர, அந்தப் பண்ணையை மாற்ற
வில்லை. அந்தப் பண்ணையில் வேலை செய்துகொண்டிருந்த
தொழிலாளர்களை நாங்கள் மாற்றவில்லை. அவர்களுக்கு
வேலை இல்லையென்று சொல்லவில்லை. எண்ணெய்
வித்துத் துறையை வேளாண்மைத் துறையோடு இணைத்து
இருக்கிறோம். இந்த இணைப்பின் காரணமாக சில
அதிகாரிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்களே
தவிர, அந்தப் பண்ணை அங்கே தான் இருக்கும். அங்கே
பணிபுரிபவர்களுக்கு வேலை உத்தரவாதத்தை இந்த அரசு
தரும் என்பதைச் சொல்லி இந்த வேளாண்மை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த 'பில்'லை பற்றி
எந்த கருத்தும் இல்லை. ஆகவே, ஏகமனதாக நிறைவேற்றித்
தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன் வடிவை
ஏற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்
பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

" சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (4-10-1991) முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்

பின்னர் பேரவை பிற்பகல் 7-40 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

126. 1989—90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

127. 1989-90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

146. 1991—92 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

147. 1991—92 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் மீதான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

148. 1991—92 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

149. பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை, 1991—92.

150. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1991—92.

151. பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை, 1991—92.

152. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை, 1991-92.

D 1 N92
V211,31 N92
N91 .13-1

161607

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 R. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jeganathnam Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.